# பொன்விழா-2005

## கிளி/இராமநாதபுரம் மேற்கு
## அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை
## வட்டக்கச்சி.

கற்றனைத்தூறும் அறிவு

### நோக்கு (VISION)

தமிழர்தம் கலாச்சார, விழுமியங்கள், நியமங்கள் தாழ்வுறா வகையில் கற்றல்-கற்பித்தல் செயன்முறையை முன்னெடுத்தலூடாக, எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுக்கும் சமுகத்தைத் தோற்றுவித்தல்.

### போக்கு (MISSION)

பாடசாலையின் அகத்தேயும் புறத்தேயும் உள்ள மனித, பௌதீக வளங்களை உரிய முறையில் முகாமைத்துவப்படுத்தி, மாணவர்களின் கற்றல்-கற்பித்தல் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதன் ஊடாக அறிவைக் கட்டுருவாக்கம் செய்யும் மாணவ சமுகத்தை உருவாக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த
நிலமடந்தை கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத்
திகழ் பரத கண்டமதில்
தக்க சிறு பிறை நுதலும்
தரித்த நற் திலகமுமே
தெக்கணமு மதிற் சிறந்த
திராவிட நற் திருநாடும்
அத்திலக வாசனை போ
லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ் மணக்க
இருந்த பெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோ
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களி தெலுங்குங்
கவின் மலையாளமுந் துளவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போ லுலகவழக்
கழிதொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே.

-மனோன்மணியம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து





வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வானமளந்த தனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர் மொழி வாழியவே.!

-மகாகவி சுப்பிரமணிய பாரதியார்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கீதம்

இராகம்:- மோகனம்

தாளம்:- ஆதி

வாழ்க இராமநாதபுர வித்தியாலயம் என்றும்
வாணி உள்ளம் மகிழ்ந்து வாழும் நித்தியாலயம்
சூழ்க கலை கல்வி வளம் சுந்தராலயம்
எங்கள் சோபனக் கலைமகளின் மந்திராலயம்

இராமநாத புரமேற்கில் நாமகள் கோவில்
அது இனியகலை கல்வி தரும் அன்னையின் வாயில்
தேமதுர செந்தமிழின் தேவி எம் தாயின்
மக்கள் தேடி வந்து ஞானம் பெறும் தெய்வீகச்சாயல்

எண்ணுடனே எழுத்து எமக்கு என்றுமே தந்து
எம்மை ஏற்றமுடன் வாழ வைப்பாள் அன்னை முன்வந்து
கண்ணிரண்டு போல கல்வி கலைகளை ஈந்து
எம்மை கண்ணியமாய் வாழ வைப்பாள் நெறிகள் பல்லாண்டு

கல்விச் செல்வம் ஈந்த அருள் குருவினைப்போற்றி
எங்கள் கலாசாலை துதி வணங்கி பாடுவோம் ஏற்றி
நல்லொழுக்கம் கல்வி ஞானம் வீரம் நாட்டியே
பாரில் நிலை புகழ சுடர் பரப்பி வாழ்வோம் சத்தியம்

சமரசமே வாழ்க்கையிலே நல்கிடும் நெறி உடல்
திடநிலையும் உள உயர்வும் காட்டிடும் செல்வி
எமது இராமநாத புரவித்தை முதல்வி பாரில்
ஏற்றமுடன் வாழ்க நலன் வாழ்க வாழ்கவே! வாழ்க வாழ்கவே!

- இயற்றியவர்:- வீரமணிஐயர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்




அழகுறு கலைமகள்

வளமுடன் உறையும்

கல்விக்கூட

வளர்ச்சியில் நன்றாய்

ஆயிரம் ஆயிரம் உளங்கள்

உழைத்தன

அன்றும் இன்றும் என்றும்

உழைக்கும் கல்விப்புலத்தின்

கலங்கரை விளக்குகள்

திருவடி தனிலே

இந்நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழா
# அட்டைப் படக் கவிதை

பொன் மணியாளாம் எம் விழி ஒளியே
அறிவெனும் சுடரை அன்புடன் ஏந்தியே
மன்னுயிர் யாவும் உன்னதம் பெற்றிட
இன்புடன் இருகரம் கொண்டுமே தாங்குவோம்!

கறங்கு போல் சுழலும் இப்பெரும் பூமியில்
உறக்கம் மறந்துமே உழைப்பவர் வாழ்க்கையில்
நெல்மணியெல்லாம் இன்புகழ் பாடிட
நல்மணிகள் வளர் கலைக்கூடம் வாழ்கவே!

ஆயகலைகள் அறுபத்து நான்கிலுயர்
மேயபெரும் பேறே தேசியப் பெரும்புகழே!
பெற்ற வெற்றி கண்டதனால் மூவேந்தர் வாழ்த்திசைக்க
பாரிலுயர் பட்டங்கள் பெற்று நிற்பாள் வாழியவே!

தனை மறந்து பாடுபட்ட பொன்மணியாள் வாழியவே
பனையளவு பயன்தந்த பெருமகளே வாழியவே
யாழெடுத்து மீட்டியே உனது வெற்றி பாடிடுவோம்
பாடுபட்ட பொன்மகளே பாரில் உனை நாட்டுவோம்.


அங்கே கைவண்ணம் :- ச.நந்தகுமார்
இங்கே கவிவண்ணம் :- எம்.கே. அகிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்




## திரு.சி.பாலகிருஷ்ணன்

**B.Ed. (N.I.E), Maths. Trd.(Palaly) S.L.P.S-2II**

**D.S.M. (N.I.E)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா மலர்

# GOLDEN JUBILEE

## 1955 - 2005





**கிளி/இராமநாதபுரம் மேற்கு**
**அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை - வட்டக்கச்சி.**

**KN / RAMANATHAPURAM WEST**
**GOVERNMENT TAMIL MIXED SCHOOL - VADDAKKACHCHI.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழா மலர்க்குழு

காப்பாளர் :- திரு. சி.பாலகிருஷ்ணன் (அதிபர்)

மலராசிரியர் :- திரு. எம்.கே.அகிலன்

<u>மலர்க்குழு</u>

தலைவர் :- திருமதி. நளாயினி ஜெயபாலசிங்கம் (பிரதி அதிபர்)

செயலாளர் :- திரு. இ.பரமசிவம்

பொருளாளர் :- திரு. இ.விக்கினேஸ்வரன்

உறுப்பினர்கள் :- திருமதி. ஜெ.சேதுகாவலர்

திருமதி. ம.பாலகிருஷ்ணன்

திருமதி. ச.சிவபாலன்

திருமதி. சி.சூரியகுமார்

செல்வி ந.பாமினி

ஆலோசனைக் குழு :- திருமதி. செ.செல்வரத்தினம்

திருமதி.ச.சின்னத்தம்பி

திருமதி.க.முத்துலிங்கம்

திருமதி.சி.நித்தியானந்தன்

திரு.சி.சிறிதரன்

திரு.நி.ஜோன் ஜெகநாதன்

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் வழங்கிய அருளுரை

அன்பு சால் பெருந்தகையீர்,

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை இன்று தனது ஐம்பதாவது ஆண்டுஅகவை அடைந்திருப்பதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.ஐம்பது ஆண்டுகள் கல்வி வளர்ச்சிக்காக கிளிநொச்சி வாழ் மக்களின் கல்விப் பணியிலும் ஏனைய பணிகளுக்காகவும் இப்பாடசாலை பணியாற்றி இன்று தலைநிமிர்ந்து நிற்பது அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. மனித வாழ்வை மேல்நிலை அடையச் செய்வது கல்வியாகும். கல்வி இல்லாதவனுடைய வாழ்க்கை இருட்டறையில் நிற்பது போன்றதாகும். இதனை வள்ளுவரும்

*" உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்றும்*
*கற்றார் கடையரே கல்லாதவர் "*

இதனை உணர்ந்தே பாடசாலைகள் அனைத்தும் கல்விக்கான பணிகளை நிறைவாகச் செய்து கொண்டு வருகின்றது. இந்த வரிசையில் இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையும் ஐம்பது ஆண்டுகள் பணியாற்றியமை பெருமைக்குரிய செயலாகும். பணியைச் செய்த அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், ஆசிரிய சங்கத்தினர், பழைய மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றோம். இன்று போல் என்றும் பல நூற்றாண்டுகள் வளர்ச்சி அடைந்து கல்விக்கும் ஏனைய துறைகளுக்கும் நன் மாணாக்கனை உருவாக்கி நாட்டிற்கும் மதத்திற்கும் நற்பணியாற்ற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

" வாழ்க வளமுடன்"
" என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாயவனூர் சிவன் ஆலய
# பிரதமகுரு சிவஸ்ரீ சிவ சங்கரக் குருக்கள்
# வழங்கிய அருள் ஆசிச்செய்தி


கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையின் ஐம்பதாண்டு நிறைவை முன்னிட்டு பொன்விழாக்காணும் இவ்வேளையில் நூல் ஒன்றினை வெளியிட முன் வந்துள்ளதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ்வெளியீடு பெரிதும் பயன்தர வல்லதும் மிகவும் உபயோகமான பல கருத்துக்களை தன்னகத்தே கொண்டுள்ளதும் எனலாம்.

இப்பாடசாலை மென்மேலும் வளரவேண்டும், பல கல்விமான்களை உருவாக்க வேண்டும், என்பதை இந்நாளில் குறிப்பிடுவதோடு இவ்வெளியீடு சிறந்த முறையில் அமைய எங்கள் தெய்வங்கள் எல்லாவற்றினதும் அனுக்கிரகம் வேண்டிப் பிரார்த்தித்து இம்முயற்சியை செய்யமுன் வந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவரையும் பாராட்டி கணபதீஸ்வர சிவனை வேண்டி எனது நல்லாசியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஈசான சிவாச்சாரிய மணி**
**சிவஸ்ரீ பா.சிவசங்கரக்குருக்கள்**
பிரதமகுரு
கணபதீஸ்வர ஆலயம்
வட்டக்கச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வட்டக்கச்சி பங்குத் தந்தை அருட்திரு. அ. அ. றொக் அடிகளார் வழங்கிய அருளாசிச்செய்தி

கல்விப்பணியின் ஐம்பது ஆண்டுகாலப்பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்து மகிழ்ந்திருக்கும் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையை மனதார வாழ்த்துகின்றேன்.

கடந்தகால நெருக்கடிமிக்க சூழலிலும் தேசத்தின் கல்விப் பணியில் ஆழமாகக் காலடி பதித்திருக்கும் இப்பாடசாலை இன்னும் பல காலம் தனது மேன்மையான சேவையைத் தொடரவும், பாதி நூற்றாண்டு காலக் கல்விப் பணியில் தங்கள் அர்ப்பணிப்பு நிறைந்த பங்களிப்பை நல்கிய அனைத்து நல்ல உள்ளங்களிலும் இறையருள் நிறைந்திருக்கவும், அவர்கள் வாழ்வு சிறப்புறவும் இப் பொன்விழா நிகழ்வில் இறையாசி வேண்டிப்பிரார்த்திக்கின்றேன்.

நன்றி!

**தங்கள் சேவையிலுள்ள**
**அருட்தந்தை அ. அ. றொக்**
பங்குத்தந்தை-வட்டக்கச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமிகு. தி. இராசநாயகம் அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

அரை நூற்றாண்டின் வழித்தடத்தில்............

நெல்விளையும் இயற்கை வனப்புடன் விளங்கும் வட்டக்கச்சியின் புகழ்பரப்பும் கல்விச்சாலைகளில் ஒன்றாக விளங்கும் இராமநாதபுரம் மேற்குஅ.த.க பாடசாலையின் பொன்நாள் நிறைவையிட்டு உவகை கொள்ளும் உள்ளங்களுடன், நானும் ஒருவனாக கலந்து பெருமையடைகின்றேன். வரண்ட வலய விவசாய குடியேற்றமுறையின் கீழ் செயற்படுத்தப்பட்ட குடியான்கள் குடியேற்றத்திட்டமான வட்டக்கச்சியின் விவசாயக்குடிமக்களது குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி, உருவாக்கப்பட்ட இப்பாடசாலையானது, கடந்த அரை நூற்றாண்டு காலம் அப்பகுதி மாணவர்களுக்குரிய அறிவு, திறன் உளப்பாங்கு மாற்றங்களை நிலை நிறுத்துவதில் அர்ப்பணத்தோடு செயற்பட்டு வந்திருப்பது பாராட்டத்தக்கது. இப்பாடசாலை உருவாக்கிய பலமாணவர்கள் சமூகத்தின் நற்பிரஜைகளாகவும், சமூக வளர்ச்சியில் பங்கேற்கும் ஆவலும், அனுசரிப்பும் கொண்டவர்களாகவும் செயற்படுவது இப்பாடசாலையின் சாதனையாகும்.

வன்னிப் பெரும் பரப்பின் வளம் மிக்க இப்பகுதியில் நல்ல சமூக உருவாக்கத்திற்குரிய கல்வித் தேவைகளை கடந்த அரை நூற்றாண்டு காலம் போல போட்டிமிக்க எதிர்கால தேவைக்கான உள்ளீடுகளுடன் தன்னைத் தயார்படுத்தி சேவைக்காக உருமாற்றி செயற்பட இந்நிறுவனம் நல்ல அதிபரையும், ஆசிரிய குழுமத்தினையும் கொண்டிருக்கின்றது. இந்த நம்பிக்கை இம்மாவட்டத்தின் வளர்ச்சியிலும், காத்திரம் மிக்கது. இவ்வகையில் பாடசாலைச் சமூகத்தினை இம்மாவட்ட மக்கள் சார்பில் வாழ்த்தி மனநிறைவடைகின்றேன்.

"வாழ்க வளமுடன்"

**தி. இராசநாயகம்**

மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்
கிளிநொச்சி மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திருமிகு. ஆர். தியாகலிங்கம் அவர்களின் வாழ்த்துச்செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை ஆற்றி வரும் கல்விப் பணி மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை வட்டக்கச்சிப் பிரதேசத்தின் சமுகம் கடந்த ஐம்பது ஆண்டுகளாக அனுபவித்து வருகின்றது.

ஐம்பது ஆண்டுகள் என்பது சாதாரண வெறுமை நிறைந்த நாட்களாக மட்டும் கழிந்திருக்க முடியாது. கடந்த ஐந்து தசாப்தங்களாக பல ஆயிரக்கணக்கான பல்வேறுபட்ட ஆளுமை நிறைந்த மனிதர்களை உருவாக்குவதற்குக் கிடைத்த பொருள் பொதிந்த காலமாகும்.

கிளிநொச்சி வட்டக்கச்சியில் தனித்துவமான கல்விச் செயற்பாடுகளினூடாகத் தன்னை வளர்த்துக் கொண்டு வந்த இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, இன்று தனது ஐம்பது அகவையை நிறைவு செய்து, இன்னுமொரு புதிய சகாப்தத்தில் காலடி எடுத்து வைப்பதற்குத் தயாராகின்றது.

அந்த வேளையில் இப்பாடசாலையின் ஐம்பது ஆண்டு கால வளர்ச்சியில் தம்மை ஆகுதியாக்கி அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அதிபர்களும் ஆசிரியர்களும் நினைவு கூரப்படுவதனூடாகப் பாடசாலையின் பாரம்பரியத்தின் தொடர்ச்சியை பேணிக்கொள்ள முடியும்.

அந்த வகையில் ஐம்பது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதற்கான முயற்சியினை எடுத்துவரும் அதிபரையும், ஆசிரியகுழுவினரையும், மாணவர்களையும், பெற்றோர்களையும், பழைய மாணவர்களையும் பாராட்டி மேலும் அவர்களது பணி இப்பாடசாலையின் வளர்ச்சிக்குத் தொடர்ந்தும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையின் பொன்விழா நிகழ்வுகளும் அது தொடர்பாக வெளியிடப்படும் சிறப்பு மலரும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**ஆர். தியாகலிங்கம்**
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலயக் கல்விப் பணிப்பாளர் திருமிகு. த. குருகுலராசா அவர்களின் ஆசிச்செய்தி

சிறந்த பாடசாலை ஒன்றில் கற்பது மாணவர்களுக்குக் கிடைக்கும் ஒரு வரப்பிரசாதம். பாடசாலைச் சூழல், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சகபாடிகள் இவை அனைத்தும் தான் ஒரு சிறந்த பாடசாலையைத் தீர்மானிப்பதாகும். அந்த வகையில் கடந்த 25 வருடங்களாக கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை ஒரு சிறந்த பாடசாலையாக மிளிர்வதனை அவதானிக்க முடிகின்றது.

1955ம் ஆண்டு முதல் பணியாற்றிய அதிபர்களில் எனக்குத் தெரிந்த அதிபர்களான திருமதி.செ.செல்லையா, செல்வி. திரவியம் வேலுப்பிள்ளை பதினொரு வருடங்கள் அதிபராகப் பணியாற்றிய திரு.கனக மகேந்திரா மற்றும் திரு.ஆ.கருணாநிதி ஆகியோர் ஆசிரியர்களினதும், சமுகத்தினதும் அங்கீகாரத்தைப் பெற்று சிறந்த பாடசாலையாக வழிநடத்தினர்.

வெறுமனே சிறந்த கல்விப் பெறுபேறுகளுடன் அமையாது, மாணவர்களின் முழு ஆளுமையை வளர்த்தெடுக்கும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணாக்கரை ஈடுபடுத்திய வகையிலும் இப்பாடசாலை சிறந்த பாடசாலையாக மிளிர்கின்றது.

தமிழ் மொழிக் கலைத்திறன் போட்டிகளில் சிறப்பிடங்கள், உடற்பயிற்சிப் போட்டியில் இப்பாடசாலையின் பெண்கள் அணி தொடர்ந்தும் ஒப்பாரும் மிக்காரும் இன்றியிருந்தல், கரப்பந்தாட்ட போட்டியில் ஈடுபாடு, சிறந்த ஆசிரியர் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டிருத்தல் போன்ற சகல துறைகளிலும் ஈர்ப்பைப் பெற்ற பாடசாலையாகத் திகழ்கின்றது.

இப்பாடசாலையின் கல்வி அடைவுப் பெறுபேறுகள் ஓரளவு சிறப்பாக அமைவதற்கு இவர்கள் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் அக்கறை காட்டுவதும் ஒரு காரணமாக அமையலாம். இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மிகுந்த விளைதிறனையும், வினைத்திறனையும் அளிக்கும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவன் நான்.

கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சமநிலை பேணி வெளியேறும் இப்பாடசாலை மாணவர்கள் நிச்சயமாக தமது எதிர்கால வாழ்வில் தமக்கும் நாட்டுக்கும் பயனுள்ள பிரஜைகளாக பிரகாசிப்பர் என்பதில் ஐயமில்லை, அதற்கு என் வாழ்த்துக்களும் நல்லாசிகளும்.

தற்போதைய அதிபரின் தலைமையில் ஒன்றிணைந்து மேலும் பல சாதனைகள் புரிந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டுமென இப்பொன்விழா நாளில் வாழ்த்துகின்றேன்.

**திரு. த. குருகுலராசா**
வலயக்கல்விப்பணிப்பாளர்
வலயக் கல்விப் பணிமனை - கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திருமிகு. வெ. இளங்குமரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

எமது தாயக விடுதலைப்போருடன் சமவேளையில் தமிழர்களின் அழிக்கமுடியாத செல்வமாகத் திகழும் கல்விச்செல்வத்தை தொடர்ச்சியாகப் பேணிப் பாதுகாத்து அதனை மேலும் மெருகூட்டி வரும் எமது தாயகப்பள்ளிகளில், கற்றல் கற்பித்தலுடன் மட்டுமல்லாது பாடத்துறை சாராத ஏனைய இணைப்பாடச் செயற்பாடுகளிலும் கூடிய அக்கறை கொண்டு எமது எதிர்காலச் சிறார்களின் தேவையைப் புரிந்து கொண்டு அதன்படி செயற்பட்டு வருகின்ற பள்ளிகளில், கிளிநொச்சி மாவட்டத்தில் தரம் 2 நிலைப்பள்ளியாக இருக்கின்ற கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பள்ளி தனது செயற்பாட்டில் முன்னிலை பெற்று வருகின்றது.

இத்தகைய செயற்பாடுகளில் கல்வியிற் சிறந்த பெறுபேற்றினையும் பொதுத்தேர்வு, உடற்பயிற்சி மற்றும் கவின்கலைப் போட்டிகளில் கோட்ட, மாவட்ட, இலங்கை மட்டங்களிற் கூட வெற்றி இடங்களைப் பெற்று தமிழ் மாணவர்களின் பெருமையை வெளிக்காட்டியிருப்பது உளமகிழ்வை ஏற்படுத்தக் கூடியது. இப்பள்ளியில் கற்று இத்தேச விடுதலையின் பால் ஈர்க்கப்பட்டு தாம் பிறந்த மண்ணின் விடுதலைக்காக இந்த மண்ணிலேயே வித்தாகிப்போன 40 இற்கும் மேற்பட்ட மாவீரர்களை நினைவில் கொள்கிறேன்.

இத்தகைய செயற்பாடுகளுக்காக காலங்காலமாக உழைத்த பள்ளி முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இன்னும் பள்ளிசார்ந்த சுற்றத்தினர் அனைவரையும் பாராட்டுவதோடு எதிர்காலங்களிலும் இப்பள்ளி தொடர்ந்து தனது பணியில் முன்னின்று உழைத்துச் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**வெ. இளங்குமரன்**
பொறுப்பாளர்
தமிழீழக் கல்விக்கழகம்
தமிழீழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரைச்சி பிரதேச செயலாளர் செல்வி. க. சுலோஜனி அவர்களின் ஆசியுரை

## இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையின் பொற்கால மகிழ்வும் நிறைவும்

இன்று தனது பொன் விழாவைக் கண்டு பெருமை கொண்டு நிற்கின்ற இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையானது கிராமத்தின் பழமைக்கும், வரலாற்றிற்கும் சான்றாக அமைந்துள்ளது. நகரில் இருந்து நீண்ட தொலைவில் அமைந்திருந்தாலும் பெருவளர்ச்சி கண்டு பல்வேறு அரிய செயற்பாடுகளைக் காலத்துக்குக் காலம் செயற்படுத்தி வருவது போற்றுதற்குரியதாகும். இவ்வளர்ச்சிக்காக உழைப்பை வழங்கிய இப்பள்ளியின் கல்விசார் சமூகத்தினர் அனைவரும் போற்றுதற்குரியவர்கள்.

கல்விப் பெறுபேறுகளுடன் கலைத்துறை, விளையாட்டு போன்ற இணைப்பாட செயற்பாடுகளிலும் பள்ளி காலத்திற்குக் காலம் வெளிப்படுத்தி நிற்கின்ற துலங்கல்கள் சிறப்பிற்குரியன.

அறிவு, திறன், உளப்பாங்கு மாற்றங்களிற்காகப் பணிபுரியும் இலக்குடன் பிணைக்கப்பட்டுள்ள பாடசாலைச் சமூகம் நன்கு செயற்படுவதற்கு எனது பாராட்டுக்கள். இப்பாடசாலையின் பணிக்குத் துணையாக இருக்கும் முதல்வர், ஆசிரிய சமூகம் ஆகியோருக்கு கரைச்சிப் பிரதேசச் செயலாளர் என்ற முறையில் எனது வாழ்த்துக்கள்.

பொற்கால நிறைவின் மகிழ்வில் நானும் உங்களுடன் பகிர்ந்துக்கொண்டு உளமார வாழ்த்துகின்றேன்.

**செல்வி. க. சுலோஜனி**
பிரதேசச் செயலாளர்
கரைச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் திருமிகு. பொன் நித்தியானந்தன் அவர்களின் வாழ்த்துரை

வட்டக்கச்சியிலமைந்துள்ள இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை ஐம்பது வருடங்கள் பூர்த்தியடைந்தமையினைக் குறித்து நடாத்தப்படும் பொன்விழா ஞாபகார்த்தமாக வெளியிடும் மலரிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

வட்டக்கச்சிக்கிராமம் 1953ம் ஆண்டளவில் விவசாயக்குடியேற்றத் திட்டமாகவும் படித்த வாலிபர் திட்டமாகவும் அரசினால் உருவாக்கப் பெற்றது. இக்கிராமம், தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி, பொருளாதார, சமூக வளர்ச்சியில் மிகவும் முன்னேற்றமடைந்துள்ளது. இக்கிராம மக்களின் பிள்ளைகள் வைத்தியம், பொறியியல், விஞ்ஞானம், நிர்வாகம் ஆகிய துறைகளில் பதவி வகித்து பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றனர். இப்பாடசாலை மாவட்டத்தில் மாகாணத்தில் மாத்திரமின்றி தேசியத்திலும், விளையாட்டுத் துறையில் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளது.

இப்பாடசாலை மென்மேலும் சிறப்புற இறையருள் கிடைப்பதாக; பொன்விழாவும் மிகவும் சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றேன்.

இப்பாடசாலையில் சேவையாற்றும் அதிபர், ஆசிரியர்களை அன்புடன் பாராட்டுகின்றேன்.

**பொன் நித்தியானந்தன்**

சிறப்பு ஆணையாளர்
பிரதேச சபை, கரைச்சி,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலையின் பழைய மாணவரும் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திருமிகு. கி. சின்னராசா அவர்களின் வாழ்த்துச்செய்தி

**நல்ல பல ஆற்றல்களைச் சமூகத்திற்கு வழங்கி வான் ஓங்கிப் புகழ்பெற வாழ்த்துக்கள்**

கிளிநொச்சி மாவட்டத்தின் வளம் மிகு வட்டக்கச்சிக் கிராமத்தின் கிழக்குக் கரையில் உள்ளதே எம்பள்ளி. நீர்வளம், நிலவளம், பயன்தரு மரச்சோலை வளம், நன்மக்கள் வளம் போன்ற பல வளமும் கொண்ட கிராமத்தில் அமைந்த இப்பள்ளி ஆரம்பித்த காலத்தில் இருந்தே அப்பகுதி மக்களின் குழந்தைகட்கு அறிவூட்டி நெறிமுறைப்படி வாழ வழிகாட்டி வருகிறது.

அரிவரிமுதல் க.பொ.த சாதாரண வகுப்புவரை கற்றுப் பரீட்சையில் சித்தி பெற வைத்த எம் பள்ளி என்னை மட்டுமல்ல எம் போன்ற பலரையும் பல்வேறு அறிவாற்றல்களையும் வழங்கி சாதனை படைக்க வழிசமைத்துள்ளது. குடும்ப சூழலில் இருந்து விடுபட்டு, பல்தளவயப்பட்ட சமூகநடைமுறை அனுபவங்களையும், சமூக விழுமியங்களையும், திறன்களையும் ஊட்டி வளர்த்த பெருமைக்குரிய கல்விக்கூடம் என்றால் மிகையாகாது.

பள்ளியின் வளர்ச்சிக்கு உடல் உள உழைப்புக்களை வழங்கிய உன்னத தலைமை ஆசிரியர்களையும், ஆசிரியர்களையும் கொண்டு வளர்ந்த இப்பள்ளி, இன்று பல நல்லதிபர்களையும், ஆசிரியர்களையும், கல்விசார் நிபுணர்களையும் உருவாக்கி வருவது ஒரு சிறந்த பண்பாகும்.

மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பல்வேறு செயற்பாடுகளிலும் தன்னை வெளிக்காட்டிய பெருமை கொண்ட இப்பள்ளியால் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் ஆகிய நாமும் பெருமையடைகின்றோம்.

காலத்தின் தேவைக்கு அமைய கல்வி வழங்க வேண்டும், அதற்கு தன்னை மாற்றிக்கொண்டு வரும் இப்பள்ளி பொன் விழாக் கண்டதையிட்டு புளகாங்கிதம் அடைகின்றேன். மென்மேலும் தன்பணியில் உயர்ந்து சிறந்தோங்க வாழ்த்துகின்றேன்.

**திரு. கி. சின்னராசா**
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)
வலயக் கல்விப் பணிமனை
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரைச்சிக்கோட்ட கல்வி அலுவலர் திருமதி. இ. அரியரத்தினம் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை

களனிகளும் கவின்கனி மரங்களும் சூழ்ந்த இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையானது காத்தல் கடவுளாம் கண்ணன் ஆலயமும் வீரத்தின் தெய்வமாம் மாவடி அம்மன் ஆலயமும் வயலூர் முருகன் ஆலயமும் நாற்புறமும் புடைசூழ அமைந்த கல்விக் கூடமே இராமநாதபுரம் மேற்கு அரசினர் வித்தியாலயம். படித்த வாலிபர் திட்டத்தில் முதல் ஆரம்பமான இவ்வித்தியாலயம் தனது பொன்விழா காணுகிறது என்றால் அதன் பெருமை சாலச் சிறப்பு வாய்ந்தது. கற்றலுக்கான அடித்தளம் அமைக்கப்பட்டு பண்பாட்டு விழுமியங்களுடன் பின்னிப் பிணைந்த ஓர் வித்தியாலயம் என்றால் மிகையாகாது.

வருடா வருடம் தமது திறமைகளைத் தென் பகுதிக்குப் பறை சாற்றி நிற்பதை நாம் அறிவோம். கிளி மாவட்டத்தில் கல்வியிலும், இணைப்பாடச் செயற்பாடுகளிலும் முன்னணியில் நிற்கின்ற ஓர் வித்தியாலயம் என்றால் அது இவ்வித்தியாலயமே. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் என ஒருங்கிணைந்து செயற்படுவதை இங்கே காணமுடியும். கிராமத்தின் முக்கிய படிக்கல்லாக அமைந்துள்ள இப்பாடசாலையின் வளர்ச்சி ஊர் மக்களின் வளர்ச்சியில் தங்கியுள்ளது. இவ்வித்தியாலயம் பல அதிபர்களைக் கண்டுள்ளது; பலர் வித்தியாலயத்தில் தடம் பதித்துள்ளார்கள். இதே போல் ஆசிரியர்களும் அருகிருந்து தேவைக்கேற்ப கல்வியை வேளை அறிந்தூட்டி பெருமை தேடித் தந்துள்ளனர். அவர்களையும் நாம் மறந்துவிட முடியாது. இவையாவற்றிலும் பெற்றோர் பங்களிப்பு மேலும் புதுப் பொலிவுடன் மெருகூட்டப்பட்டு, வலுவடைந்திருப்பது காணக் கூடிய தொன்றாகும்.

அறியாமை இருளகற்றும் ஆசான்களுக்கு, மதிப்பளிக்கும் பெற்றோர், தம்பிள்ளைகளின் கல்வி இணைப்பாடச் செயற்பாடுகளுக்கு அதிபர், ஆசிரியர்களுடன் இணைந்து செயற்படுவதை காணமுடிகின்றது. அதனால் தான் இவ்வித்தியாலயம் பொன் விழா காணுவது பெருமைக்குரியது அதை வாழ்த்துவதில் கோட்டக் கல்வி அலுவலர் என்ற முறையில் நானும் பெருமை அடைகின்றேன்.

வாழ்க இவ்வித்தியாலயம் ;

வளர்க கல்விப் பணி ;

மாணவச் செல்வங்கள் சிறந்தோங்க வேண்டும் என வாழ்த்தும்

**திருமதி. இ. அரியரத்தினம்**
கோட்டக் கல்வி அதிகாரி
கரைச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் வழங்கிய வாழ்த்துரை

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை பொன்விழா கொண்டாடுவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். அரைநூற்றாண்டினை நிறைவு செய்துள்ள இப்பாடசாலையின் செயற்பாடுகளை, சாதனைகளைப் பதிவு செய்யும் வகையிலே மலர் ஒன்று வெளியிடுவது பாராட்டிற்குரியது.

வட்டக்கச்சிக் கிராமத்தின் கல்வி வளர்ச்சியிலே இப்பாடசாலை அளவிடற்கரிய பணியை ஆற்றியிருக்கின்றது. ஐம்பதாண்டுகளுக்கு இக்கிராமத்தின் சூழ்நிலையை பௌதிக வளங்களை அவற்றைப் பயன்படுத்தி உழைப்பால் உயர்ந்த மூத்த தலைமுறையினரை இந்த நாளிலே நன்றியுடன் நினைவு கூரவேண்டும். இன்று "தெங்கம் பொழில் சூழ்ந்தும்" "மாவின் கனிதூங்கும்" பதியாகவும் விளங்கும் இப்பகுதியை இப்படி உருவாக்க உழைத்த அந்த மானுடங்களை மனமொழி மெய்களாலே வணங்க வேண்டும்.

'தொன்மை மறவேல்' என்ற அறக்கருத்தின் அத்திவாரத்தை இன்றைய தலைமுறை நினைவிலே இருத்த வேண்டும். காடழித்துக்களனியாக்கிக் "கட்டைபிரட்டி" வான்பயிர் வைத்து வாழ்ந்த சமுகத்தின் கல்விச் செயற்பாடுகளுக்காக நிறுவப்பட்ட இப்பாடசாலை, இன்று வானுயர வளர்ந்து நிற்கின்றது. இந்த வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அதிபர்களையும், ஆசிரியர்களையும், பாடசாலை அபிவிருத்திக் குழுவினரையும் என்றும் மறத்தல் ஒல்லாது.

இன்று இப்பகுதியிலே படித்தவர்கள் என்று இருப்பவர் யாவரும் இப்பாடசாலையின் பழைய மாணவர்களே எனலாம். மாதா, பிதா, குரு இவர்களே தெய்வம் என்ற மகத்தான கருத்து நிலைக்குச் சொந்தக்காரர்கள் நாங்கள். "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்று எழுதி வைத்தவர்கள் நமது முன்னோர்கள்.

இப்பாடசாலையின் மாணவர்கள் பலர் பல்கலைக்கழகப்பட்டம் பெற்று இன்று ஈழத்தின் பல பாகங்களிலும் வெளிநாடுகளிலும் பணியாற்றுகின்றனர். அவர்களின் ஆளுமை விருத்திக்கு அத்திவாரம் இட்ட பெருமை இப்பாடசாலையைச்சாரும். தமக்குக் கல்வியமுதூட்டிக் கவின் பெற உயர்த்திய கல்லூரித்தாயின் நன்றியை இவர்கள் என்றும் மறத்தல் நன்றல்ல "நன்றி மறத்தல் நன்றல்ல" என்று குறள் கூறும்.

எல்லாவகையிலும் இப்பாடசாலை இன்னும் இன்னும் செழிப்புற்று வளர வேண்டும் என்று வாழ்த்தி வணங்குவோமாக.

**பேராசிரியர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா**

தலைவர்
தமிழ்த்துறை - யாழ் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்வரின் அறிமுக உரை

இலங்கைத் தீவிலே வடமாகாணத்தின் ஒரு பகுதியாக வன்னிப் பெருநிலப்பரப்புக் காணப்படுகிறது. இந்த வன்னி நிலத்திலே முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கிளிநொச்சி உள்ளது. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள எமது வட்டக்கச்சிக் கிராமம் நகரிலிருந்து 12 கிலோ மீற்றர் தொலைவில் கிழக்குத் திசையில் அமைந்துள்ளது. நீர்வளம், நிலவளம் பொருந்திய இடமாக எமது கிராமம் உள்ளது.

தென்னை, மா, பலா, வேம்பு முதலான ஓங்கி வளர்ந்த மரங்களும் பச்சைப் பசேலென காட்சியளிக்கும் வயல்வெளிகளும், நீரோடும் வாய்க்கால்களும், இடையிடையே அமைந்திருக்கின்ற சிறு குளங்களும், சிவன், முருகன், அம்மன், மாயவன் முதலான சைவ ஆலயங்களும், தேவாலயங்களும், ஒன்பது அரச பாடசாலைகளும் இப்பிரதேசத்தின் வனப்பில் பங்கேற்கின்றன. இப்பிரதேசத்தின் கிழக்கெல்லை கல்மடு, மேற்கெல்லை பன்னங்கண்டி, வடக்கெல்லை பெரிய குளம், தெற்கெல்லை கனகாம்பிகைக்குளம் ஆகும். இந்தப் பிரதேசத்தின் மத்தியிலே சில்வா வீதியில் அமைந்திருக்கின்றது எமது பாடசாலை.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பொன் விழாவைக் காண்கிறது. ஆரம்பகாலத்திலே இப்பாடசாலையின் பெயர் வட்டக்கச்சி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என வழங்கிற்று. பின்னர் எக்காரணத்தினாலோ இதன் பெயர் இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என வழங்கி வருகிறது. இப் பெயர் மாற்றத்துக்கான காரணம் யாதெனப் பதிவேடுகள் எவற்றிலும் காணப்படவில்லை.

தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை இப்பாடசாலையிலே வகுப்புகள் உண்டு. 539 மாணவர்கள் இங்கு கல்விகற்றுக் கொண்டிருக்கின்றனர். 28 நிரந்தர ஆசிரியர்களும் 4 தொண்டர் ஆசிரியர்களும் 2 பணியாளர்களும் ஒரு நிதி உதவியாளரும் சேவையாற்றிக் கொண்டிருக்கிறோம்.

மாணவர்களில் 70% இற்கு அதிகமானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள்; 10% ஆன மாணவர்கள் தந்தையை இழந்தவர்கள்; 40% ஆன மாணவர்கள் இடம்பெயர்ந்து வந்து இங்கு வாழ்கின்றனர்.

6 ½ ஏக்கர் பரப்பளவைக்கொண்ட இப்பாடசாலையைச் சுற்றிவர வேலிகள் உண்டு. 130'x25', 90'x 20' அளவுள்ள இருநிரந்தர கட்டடங்களும், 80' x 30', 60' x 20', அளவுள்ள தற்காலிக கொட்டகைகளும் வகுப்பறைகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. 40' x 20' அளவான விஞ்ஞான கூடமும் 40' x 25' அளவான நூலகமும் உண்டு. அதிபர் விடுதியும் ஒன்று உள்ளது. 400 மாணவர்களுக்குரிய தளபாடவசதிகள் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழாய் நீர் வசதி, மலசலகூட வசதிகள் என்பன உண்டு. 200 மீட்டர் ஓடுபாதை அமைக்கக் கூடிய விளையாட்டு மைதானம் உண்டு. சிறு தென்னந் தோட்டமும் உண்டு. 3 கணனிகள், டீசல் மின் பிறப்பாக்கி, தொலைக்காட்சிப் பெட்டி என்பனவும் உண்டு.

இப்பௌதீக வளங்கள் மாணவர்களுக்கு போதாமல் உள்ளமையை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

(1) விளையாட்டு மைதானம் வடிகாலமைப்புச் செய்யப்பட்டுத் திருத்தியமைக்கப்பட வேண்டியுள்ளது.

(2) 110' x 25' அளவுள்ள மாடிக் கட்டடமொன்றும், 100' x 20' அளவுள்ள கட்டடமொன்றும் வகுப்பறைகளுக்கு அவசியமாகத் தேவைப்படுகிறது.

(3) செயற்பாட்டு அறை, விவசாய அறை, பல்நோக்கு அறை, அழகியல் பாட அறைகள் என்பன தேவையாக உள்ளது.

(4) கணனிகளும், கணனி அறையும் தேவையாக உள்ளது.

(5) விளையாட்டு உபகரணங்கள், பாண்ட் வாத்தியக் கருவிகள் தேவையாக உள்ளது.

(6) விளையாட்டு முற்றம் தேவையாக உள்ளது.

(7) சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் தேவையாக உள்ளது.

(8) தொலைபேசி வசதி, மின்சார வசதி என்பனவும் அத்தியாவசியமாகவுள்ளது.

பாடசாலையிலே முகாமைத்துவக்குழு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கட்டாயக் கல்விக்குழு, ஆசிரியர் நலன்பேண் ஒன்றியம் என்பன வினைத்திறனுடன் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

பாடசாலைக்கும், சமூகத்திற்கும் இடையே நல்லுறவு காணப்படுகிறது. ஆசிரியர் மாணவர் உறவு சிறப்பாக உள்ளது. எமது பாடசாலைக்கும் கல்விப் பணிமனைகளுக்கும் இடையே நல்ல தொடர்பு பேணப்படுகிறது. எமது ஆசிரியர்கள், பணியாளர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகிறார்கள். மாணவர் இருந்து கற்பதற்கேற்ற வகுப்பறைக் கட்டடம் போதியளவு இல்லாமலிருந்தாலும், அதிபர் கனக மகேந்திரா அவர்களின் காலத்தில் நாட்டப்பட்ட மர நிழல்கள் இருப்பதால் ஈரலிப்பான காற்றோட்டமுள்ள தற்காலிக கொட்டகைகளில் கூட மாணவர்கள் மனமகிழ்வுடன் கற்கின்றனர். எனவே முழுமையாக நோக்குகையில், எமது பள்ளியில் சிறந்த ஓர் கவிநிலை (Climate) நிலவுகிறது என்று கூறலாம். குறைவாக உள்ள வளங்களைக் கொண்டு வினைத்திறனுடன் (Efficiency) காரியமாற்றி உச்ச விளைதிறனைப் (Effectiveness) பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்றால் யாராலும் மறுக்க முடியாது.

இவ்வாறான சிறந்த முகாமைத்துவத்தின் வெளிப்பாடாகப் பல காட்டிகள் (Indicators) உள்ளன. பொதுப் பரீட்சைகள், மெய்வல்லுநர் போட்டிகள், பெருவிளையாட்டுப் போட்டிகள், தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகள், திருக்குறள் போட்டிகள், சைவநெறித் தேர்வுகள் போன்ற யாவற்றிலும் எமது மாணவர்கள் கோட்ட மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், அகில இலங்கை மட்டத்திலும் திருப்தியான பெறுபேறுகளைப் பெற்றுப் பலராலும் பாராட்டப்படுகிறார்கள். குறிப்பாக 2002ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தொடர்ச்சியாக உடற்பயிற்சிக் குழுவின் பெண்கள் பிரிவு அகில இலங்கைப் போட்டிக்காக கொழும்பு சென்று பங்குபற்றி வருவதும், 2002ம் ஆண்டு 30 மாணவிகள் தங்கப் பதக்கங்கள் பெற்றமையும், 2004ம் ஆண்டு 30 மாணவிகள் வெங்கலப்பதக்கங்கள் பெற்றமையும் பாடசாலையின் தரக் குறிப்பு (Benz Mark) ஆகும். இதற்காகப் பாடுபட்ட ஆசிரியர்கள் திருமதி.ஜெ.நளாயினி, செல்வி. ந.பாமினி ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் எமது மாணவர்கள் க.பொ.த (சா/த) வகுப்பில் சித்தி பெற்று வேறு பாடசாலைகளில் கற்கும் போது கல்வியிலும் ஏனைய செயற்பாடுகளிலும் துலங்குகிறார்கள். ஜீ.ரீ.எம்.எஸ். மாணவர்கள் நல்லவர்கள், வல்லவர்கள் என எமது காதில் இனிய வார்த்தைகள் அடிக்கடி ஒலிக்கும்.

மாணவர் முறையாகக் கல்வியைக் கற்பதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தல், மாணவர் மத்தியில் நல்ல பழக்கவழக்கங்களையும் அவர்களது பாரம்பரிய விழுமியங்களையும் வளர்த்தல், தலைமைத்துவப் பண்புகளை வளர்த்தல், நற்பயன் தரக்கூடிய பொழுது போக்குகளை ஏற்படுத்திக் கொடுத்தல், தேசப்பற்று, சமூகப்பற்று, தன்னடக்கம், ஒற்றுமையுணர்வு முதலான சிறப்புப் பண்புகளை வளர்த்தல் இவைகளே பாடசாலையின் முக்கிய பணிகளாகக் கொள்ளப்படுகின்றன.

இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு ஆசிரியரினதும் செயற்பாடுகளுக்கிடையில் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

ஆகவே ஆசிரியரும், பெற்றோரும் நலன் விரும்பிகளும் கல்வி அதிகாரிகளும் ஒருங்கிணைந்து பாடசாலை அபிவிருத்தித் திட்டத்திலே இணைந்து செயற்பட்டுப் பாடசாலையைக் கட்டி எழுப்புவோம் என அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று இந்த விழாவை நடாத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியவர்களுக்கும், விழா மலர் வெளியிட உதவியோருக்கும், விழா ஏற்பாடுகளுக்கான நிதி உதவிகளை வாரி வழங்கிய பெற்றார், பழைய மாணவர்கள், புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

எனக்கு முன்னர் பல அதிபர்கள் இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய வகையில் அரும்பணியாற்றியிருக்கிறார்கள். ஆயினும் அவர்களுக்குக் கிடைக்காத ஓர் அரும்பெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. அதாவது விழாக் காலத்திலே சேவையாற்றி இவ்விழாவிற்குத் தலைமை தாங்கிப் பாடசாலையை வாழ்த்தக்கூடிய அதிஸ்டமாகும். இதற்காக இறைவனுக்கு நன்றி பகர்கிறேன்.

*"வாழ்க இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை*
*வளர்க பாடசாலைச் சமூகத்தின் பணி"*

**திரு.சி.பாலகிருஷ்ணன்**
அதிபர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதி முதல்வர்
# திருமதி. ந. ஜெயபாலசிங்கம் அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை பொன்விழாக் காணும் இந்நந்நாளில் பெருமையையும், தனித்துவத்தையும் தனக்கென்றதொரு பண்பாட்டையும் கொண்டதாக நிமிர்ந்து நிற்பதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன். கல்வியின் பால் அக்கறை கொண்ட சமூகம், சிறந்த ஆளுமை கொண்ட தலைமைத்துவங்கள், செயலூக்கம் கொண்ட ஆசிரியர்கள், கற்றலில் ஆர்வம் கொண்ட மாணவர்கள் ஆகியோரினால் கட்டி எழுப்பப்பட்ட இப்பாடசாலை மேலும் தனது வளர்ச்சிப்பாதையில் முன்னேறிச் செல்ல பாடசாலையில் பற்றுக் கொண்ட அனைவரும் பாடசாலை நிர்வாகத்தோடு கைகோத்து பாடசாலையின் உயர்ச்சிக்காகப் பாடுபடுதல் காலத்தின் தேவையாகவும் சமூக அபிவிருத்திக்கு அவசியமாகவும் உள்ளது.

நல்லதொரு சமூகத்திற்குப் பொருத்தப்பாடுடையவர்களாக பல்வேறுபட்ட தொழில்களிற்கு வழிநடத்திய எமது பாடசாலையையும் அவற்றின் தேவைகளையும் சிலர் மட்டுமல்லாது ஒவ்வொரு பழைய மாணாக்கரும் ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்பின் பாடசாலையின் வளர்ச்சி துரிதமாக்கப்படும் என்பதை இந்நேரத்தில் நாம் மறந்துவிடலாகாது. எதிர்கால சமூகத்தை உருவாக்கும் சிறுவர்கள் அவர்கள் கல்வி தொடர்பாக பெற்றோர்கள் அதிக கவனம் எடுக்கும் இக்காலகட்டத்தில் பாடசாலையின் பால் அதிக அக்கறை கொண்டவர்களாக செயற்பட வேண்டிய தேவை பெற்றோருக்கு ஏற்பட்டுள்ளது. எனவே அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் ஒன்றிணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்குப் பாடுபடுவதுடன் உறுதுணையாகவும் இருக்க வேண்டும்.

தரம் II வகைப் பாடசாலையாக 539 மாணவர்களைத் தன்னகத்தே கொண்டு கல்வியிலும், இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் ஏனைய உயர்தரப் பாடசாலைகளிற்கு ஈடாக வலயத்தில் சிறந்து விளங்கும் இப்பாடசாலை மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

**திருமதி. ந.ஜெயபாலசிங்கம்**
பிரதி அதிபர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் வாழ்த்துரை

'*கடுகு சிறிது எனினும் காரம் பெரிது*' எனும் முதுமொழிக்கேற்ப இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையானது ஓர் சிறிய பாடசாலையாக இருந்தாலும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் எத்தனையோ சான்றோர்களையும், வீரர்களையும் எமது தேசத்துக்குப் பெற்றுத் தந்ததுடன் மேலும் பல அறிவாளிகளையும், விளையாட்டு வீரர்களையும் உருவாக்குவதில் முன்னணி வகிக்கின்றது. இப்பாடசாலையில் கல்விகற்ற பலர் வெளிநாடுகளில் வசித்தாலும் இப்பாடசாலையை நன்றியுடன் நினைவு கூறுவதனைக் கேட்கும்போது பேருவகை மனதில் ஏற்படுகின்றது.

ஊரின் மத்தியில் இப்பாடசாலை இருப்பதனால் எந்தவகை விழாவாக இருப்பினும், பொது நிகழ்வாக இருப்பினும் இப்பாடசாலையைத் தேர்ந்தெடுப்பதில் பெருவிருப்புக் கொள்கின்றனர். இப்பாடசாலையில் கடமையாற்றிய முன்னைய அதிபர்களாயினும் சரி ஆசிரியர்களாயினும் சரி இப்பாடசாலையை முன்னணிக்குக் கொண்டுவருவதில் பெரும் பங்காற்றியிருக்கின்றனர். அத்துடன் இப்பிரதேச வாழ் மக்களும் இப்பாடசாலையின் வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்களாக இருப்பதால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இப்பாடசாலை வளர்ந்து வருவதையிட்டு மனம் பூரிப்படைகின்றது.

எதிர் காலத்தில் இப்பாடசாலை மென்மேலும் வளர்ந்து எமது தேசத்துக்குப் பெரும் அறிஞர்களையும், வீரர்களையும் பெற்றுத்தர வேண்டுமென்று இப்பாடசாலையின் அபிவிருத்திச் சங்க செயலாளர் என்ற வகையில் வாழ்த்துகின்றேன்.

**திரு. நிக்கலஸ் ஜோன் ஜெகநாதன்**
(கிராம அலுவலர்)
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டக்கச்சி இராமநாதபுரம் ஒன்றியம் சுவிற்சர்லாந்து
## Vaddakachchi Ramanathapuram Organisation Switzerland (VOR Swiss)

www.vroswiss.com vroswiss@hotmail.com

கிருஷ்ணபிள்ளை உதயகுமார்
தலைவர்

சிவசிதம்பரம் சிவகரன்
உபதலைவர்

சிவநேசன் குவேனி
செயலாளர்

மணியழகன் சிவராசமலர்
உபசெயலாளர்

குணரட்ணம் சுதாகரன்
பொருளாளர்

வைத்திலிங்கம் விக்கினேஸ்வரன்
போசகர்

செயற்குழு உறுப்பினர்கள்
பரம்சோதி கலியுகவரதன்
லிங்கநாதன் ரதிதேவி
கனகரட்ணம் சதானந்தராஜன்
சொர்ணலிங்கம் சாந்தகுமார்
இராமலிங்கம் உதயகுமார்
பவானந்தன் ஜெயானந்தன்
குமாரசாமி புவனேஸ்வரன்
கோவிந்தபிள்ளை குணபாலசிங்கம்
சிவகுரு கணேஸ்
பரநிருபசிங்கம் கோவிந்தராஜன்
சுப்பிரமணியம் அருள்வண்ணன்

எமது வித்தியாலய பொன்விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்கக்கிடைத்த வாய்பிற்கு வித்தியாலய பழைய மாணவனாகவும் புலம் பெயர்தேசமொன்றில் எமது பிரதேச நலன் சார்ந்த நிர்வாகத்தின் பிரதிநிதியாகவும் பெருமகிழ்வு அடைகின்றேன்.

வட்டக்கச்சி இராமநாதபுரம் கிராமங்களில் குடியேற்றம் தொடங்கிய காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என்ற நாமத்துடன் நீண்டகாலம் எம்மவர்க்கு எண்ணெழுத்து அறியத்தந்த எமது பாடசாலையின் பொன்விழா மலரானது பிரதேச கல்வி வரலாறு அனுபவத்தொகுப்பாகவும் ஆற்றலின் வெளிப்பாடாகவும் இலட்சியங்களின் பதிவாகவும் வெளிவரவேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

அரைநூற்றாண்டுகால வரலாற்றின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் முகம் கொடுத்து பல சாதனைகளை பதிவு செய்த எமது வித்தியாலய வளர்ச்சிக்கு உழைத்த ஆற்றல்மிகுந்த அதிபர்களையும், ஆசிரியர்களையும், கல்விச்சமூக ஆர்வலர்களையும் நெஞ்சார வாழ்த்திப்பாராட்டி இவர்களது சீரியபணியின் வெளிப்பாடாக சிறந்த கல்விமான்களும், நிர்வாகிகளும் தொழில்சார் நிபுணர்களும் தாயகத்திலும் புலம்பெயர்தேசங்களிலும் வலம்வருவதுகண்டு பெருமிதம் கொள்கின்றோம்.

தொடர்ந்துவரும் காலங்களிலும் எமது வித்தியாலயம் மென்மேலும் வளர்ந்து சாதனை படைக்க வித்தியாலய கல்விச்சமூகத்துடன் பெற்றோர், பழைய மாணவர்கள், பிரதேசநலன் கொண்ட சிந்தனையாளர்கள், கல்விமான்கள், நிர்வாகிகள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் பழைய மாணவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து தமது காத்திரமான பங்களிப்பை வழங்க முன்வரவேண்டிநிற்கின்றோம்.

.......................
கிருஷ்ணபிள்ளை உதயகுமார்
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலா் ஆசிரியரின் மனதில் இருந்தவை

## பேனா முனையில்

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் பொன்னகவை மலரின் மலர் ஆசிரியர் என்ற வகையில் உங்களுடன் பேசுவதில் உவகையடைகின்றேன். நான் இப்பொறுப்பை ஏற்கும்போது நூல் வெளியீடு புழுதி ஆடிய குழந்தையைப் போலவே காணப்பட்டது. அக்குழந்தையை ஒருவாறு வளைத்துப் பிடித்து நீராட்டுவதில் தாய்க்கு ஏற்பட்ட சலிப்பு ஏற்பட்டது உண்மையே. தாய்க்கு குழந்தையால் ஏற்படும் சலிப்பு சுகமான சுமை. அது மகிழ்ச்சியையே ஏற்படுத்தும். அவ்வாறே இன்று இம்மலர் உங்கள் கரங்களிலே தவழுகின்ற பொழுது பேரானந்தம் அடைகின்றேன்.

இம்மலரானது பல்துறை சார்ந்த அறிஞர்களின் கட்டுரைகளையும் எமது பாடசாலையின் பழைய மாணவர்களினதும், தற்போது பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களின் ஆக்கங்களையும் தாங்கி கனதியான ஒரு மலராக வெளிவருகின்றது.

இவற்றைவிட பாடசாலையின் ஐம்பதாண்டுச் சாதனைகளும் வெற்றிகளும் அவற்றுக்குக் காரணமான அதிபர்களினதும், ஆசிரியர்களினதும் விபரங்களும், பரீட்சைப் பெறுபேறுகளும், அட்டவணைகளும், புகைப்படங்களும் இம்மலரை அலங்கரிக்கின்றன.

இம்மலரை சிறந்த முறையில் வெளியிடுவதற்கு என்னோடு ஒத்துழைத்த அதிபர், பிரதி அதிபர், ஏனைய ஆசிரியர்கள், மலர்க்குழுவினர் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் மலருக்குரிய ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள் வழங்கிய சமயப்பெரியார்கள், அரச அதிகாரிகள், கல்வியியலாளர்கள் ஆகியோருக்கு மலர் ஆசிரியர் என்ற வகையில் நன்றி பகர்கின்றேன்.

துறைசார் கட்டுரைகளை வழங்கிய பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொன்னகவை மலருக்குரிய நிதி மூலத்தைத் தந்துதவிய புலம் பெயர்ந்த நாடுகளில் வாழுகின்ற எமது பாசத்துக்குரிய கல்லூரித்தாயின் குழந்தைகளை மலர் வெளிவருகின்ற இவ்வேளையில் நன்றியுடன் நினைவிற் கொள்கின்றேன்.

மேலும் அட்டைப்படத்தை எண்ணத்திற்கேற்ப வரைந்துதவிய எனது நண்பனும் சக ஆசிரியருமான திரு.ச.நந்தகுமார் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

மலரினை அழகுற சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்துதவிய ஸ்ரீரங்கன் பிரின்டஸ் நிறுவனத்தினர்க்கும் அதன் உரிமையாளர் திரு.செ. ஆனந்தகுமார் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

இந்தப் பொன்னகவை மலரின் நிறைவுகளை அன்புக்குரிய இதயங்களுடன் பேசுங்கள் விமர்சனங்கள், ஆலோசனைகள் இருப்பின் அவற்றை முன்வையுங்கள்! அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை மனம் நிறைந்த நன்றிகள்.

**திரு. எம். கே. அகிலன்**
B.A.(Cey) SP.Trd (Primary)
மலர் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை ஆளணி விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. சின்னத்தம்பி பாலகிருஷ்ணன் | - | B.Ed, SP.Trd (Maths), D.S.M. (N.I.E.) |
| 2. | திருமதி. நளாயினி ஜெயபாலசிங்கம் | - | B.Ed, SP.Trd (Science) |
| 3. | திருமதி. மலர்மதி பாலகிருஷ்ணன் | - | SP.Trd (Tamil) |
| 4. | திருமதி. சந்திரகுமாரி சிவபாலன் | - | SP.Trd (Primary) |
| 5. | திரு. இராசநாயகம் பரமசிவம் | - | SP.Trd (Hinduism) |
| 6. | திருமதி. இராஜகுமாரி மணிநாதன் | - | SP.Trd (Primary) |
| 7. | திருமதி. சிவரூபவதி சிவபாலசுந்தரம் | - | SP.Trd (Music) |
| 8. | திருமதி. கமலரஞ்சினி அகிலநாயகம் | - | B.A. (Cey) Dip.in.Ed. |
| 9. | திருமதி. ஜெகதாம்பிகை சேதுகாவலர் | - | SP.Trd (Hinduism) |
| 10. | திருமதி. செநற்தமிழ்ச்செல்வி தவராசா | - | SP.Trd (Tamil) |
| 11. | திருமதி. கார்த்தியாயனி யசோதரன் | - | SP.Trd (English) |
| 12. | திருமதி. சிவதேசினி சூரியகுமார் | - | SP.Trd (Tamil) |
| 13. | திருமதி. விஜயராணி அன்ரனிராஜ் | - | SP.Trd (Agriculture) |
| 14. | திருமதி. சுவாதினிகௌரி குமரதாசன் | - | SP.Trd (Primary) |
| 15. | திருமதி. தயாரதி கௌரிபாலன் | - | SP.Trd (Primary) |
| 16. | திரு. இளையதம்பி விக்கினேஸ்வரன் | - | SP.Trd (Primary) |
| 17. | திருமதி. லூசியா சேகரன் | - | B.Sc(Ag) Dip.in.Ed. |
| 18. | செல்வி சுபாசினி சுப்பிரமணியம் | - | Dip.in.Science |
| 19. | செல்வி நவரத்தினம் அருளீஸ்வரி | - | B.A.(Cey) |
| 20. | திரு. சுப்பிரமணியம் இந்திரதாஸ் | - | Dip.in.Phy.Ed |
| 21. | திரு. குமாரசாமி அகிலன் | - | B.A.(Cey). SP.Trd (Primary) |
| 22. | திரு. சண்முகம் நந்தகுமார் | - | B.F.A.(Cey).Hons (Art & Design) |
| 23. | திருமதி. சுகந்தினி சுதாகரன் | - | B.A.(Cey) |
| 24. | திரு. சுகுமார் சகீகரன் | - | B.A.(Cey) |
| 25. | செல்வி. தவச்செல்வி சுப்பிரமணியம் | - | H.N.D.A. |
| 26. | திருமதி. சிவலோகபதி சத்தியமூர்த்தி | - | SP.Trd. (Maths) |
| 27. | திருமதி. அனுசூயா விந்தன் | - | SP.Trd. (English) |
| 28. | திருமதி. பரிமளகாந்தி ஜோன்ஜெகநாதன் | - | SP.Trd. (Primary) |
| 29. | திரு. நாகமணி பாலசிவராம் | - | SP.Trd. (Primary) |
| 30. | செல்வி. காயத்திரி நித்தியானந்தம் | - | B.Sc |
| 31. | செல்வி. பாமினி நவரத்தினம் | - | G.C.E. (A/L) |
| 32. | செல்வி. ஜெயதீஸ்வரி கைலாய பிள்ளை | - | G.C.E. (A/L) |
| 33. | திருமதி. ஜெயகௌரி வைரவநாதன் | - | G.C.E. (A/L) |
| 34. | செல்வி. மனோகரன் சுவர்ணா | - | G.C.E. (A/L) |
| 35. | திரு. சதாசிவம் ஸ்ரீகரன் | - | H.N.D.A. |
| 36. | திரு. சங்கரன் திருவருட்சந்திரன் | - | காவலாளி |
| 37. | திரு. கதிரவேற்பிள்ளை கலைவண்ணன் | - | பாடசாலைப் பணியாளர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் 2005



1-ம் வரிசையில் அமர்ந்திருப்போர்

செல்வி.ந.பாமினி, திருமதி.நா.விக்கினராஜா, திருமதி.வி.அன்ரனிராஜ், திருமதி.சி.சூரியகுமார், திருமதி.ச.சிவபாலன், திருமதி.இ.மணிநாதன், திருமதி.சி.சிவபாலசுந்தரம்,

2-ம் வரிசையில் அமர்ந்திருப்போர்

திருமதி.ம.பாலகிருஷ்ணன், திருமதி.ந.ஜெயபாலசிங்கம், திருமதி.க.முத்துலிங்கம், திரு.சி.பாலகிருஷ்ணன், திரு.மா.அகிலநாயகம், திரு.இ.பரமசிவம், திரு.வி. ஜெயமெலானியூஸ்

3-ம் வரிசையில் நிற்பவர்கள்

திரு.நா.பாலசிவராம், திரு.ச.திருவருட்சந்திரன், திருமதி.ப.ஜோன்ஜெகநாதன், செல்வி.த.யோகேஸ்வரி, திருமதி.ய.இராமமூர்த்தி, திருமதி.ஜெ.சேதுகாவலர், செல்வி. க.ஜெயதீஸ்வரி, திருமதி.ஆ.இராஜபூபதி, செல்வி.ந.நித்தியா, திருமதி.சு.குமரதாசன், திரு.பொ.பரமேஸ்வரன், திரு.க.கலைவண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் 2006



1-ம் வரிசையில் அமர்ந்திருப்போர்

திருமதி.ச.சிவபாலன், திருமதி.த.கௌரிபாலன், திருமதி.ம.பாலகிருஷ்ணன், திருமதி.செ.தவராசா, திரு.சி.பாலகிருஷ்ணன், திருமதி.ந.ஜெயபாலசிங்கம், திருமதி.இ.மணிநாதன், திருமதி.க.அகிலநாயகம், திருமதி.சி.சிவபாலசுந்தரம்.

2-ம் வரிசையில் நிற்பவர்கள்

செல்வி.சு.தவச்செல்வி, செல்வி.ந.அருளீஸ்வரி, ம.சுவர்ணா, திருமதி.சு.குமரதாசன், திருமதி.ய.கார்த்தியாயனி, செல்வி.க.ஜெயதீஸ்வரி, செல்வி.சு.சுபாசினி, செல்வி.ந.பாமினி, திருமதி.ஜெ.சேதுகாவலர், திருமதி.வ.ஜெயகௌரி, திருமதி.சி.சூரியகுமார், திருமதி.சு.சுகந்தினி.

3-ம் வரிசையில் நிற்பவர்கள்

திரு.சு.சசிகரன், திரு.க.கலைவண்ணன், திரு.இ.விக்கினேஸ்வரன், திரு.ச.சிறீகரன், திருச.திருவருட் சந்திரன், திரு.சு.இந்திரதாஸ், திரு.இ.பரமசிவம், திரு.ச.நந்தகுமார், திரு.கு.அகிலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 2005



**அமர்ந்திருப்போர்**

திரு.மு.சிவமோகன்
திரு.சொ.இராசேந்திரம்
திரு.நி.ஜோன் ஜெகநாதன்
திரு.சி.பாலகிருஷ்ணன்
திருமதி.மு.இராசமலர்
திருமதி.த.கௌரிபாலன்
திருமதி.வ.ஜெயகௌரி

**நிற்பவர்கள்**

திரு.வே.நவரத்தினம்
திரு.ச.மகேந்திரன்
திரு.இ.விக்கினேஸ்வரன்
திரு.மா.அகிலநாயகம்
திருமதி.வி.சுபாசினி
திருமதி.கௌ.மதியழகன்
திருமதி.பி.புஸ்பராணி
திருமதி.ச.விஜயலீலா

# மாணவ தலைவர்கள் 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை உயர்ச்சியில் பங்காற்றிய அதிபர்கள்



திரு.பா.கனகசபை
13-05-1955
30-06-1955



திரு.ச.செல்லத்துரை
01-07-1955
30-08-1955



திரு.இ.இராசையா
01-09-1955
30-06-1956



திரு.வி.பொன்னையா
01-07-1956
08-10-1957



திரு.வே.சிவஞானசுந்தரம்
09-10-1957
31-01-1958



திரு.பெ.ஏ.த.ஐயாத்துரை
01-02-1958
28-03-1964



திரு.சி.கந்தப்பு
01-04-1964
31-12-1970



திருமதி.செ.செல்லையா
01-01-1971
28-07-1971



திரு.ந.மகாலிங்கம்
03-08-1971
19-06-1972



திருமதி.செ.செல்லையா
20-06-1972
31-08-1972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.பொ.சுப்பிரமணியம்
01-09-1972
21-01-1974



திரு.சி.பே.சூசைப்பிள்ளை
22-01-1974
31-12-1976



திரு.பொ.சுப்பிரமணியம்
01-01-1977
29-03-1979



திரு.என்.கே.தருமலிங்கம்
30-03-1979
19-02-1981



திருமதி.செ.செல்லையா
20-02-1981
18-06-1981



திரு.இ.இராசரத்தினம்
19-06-1981
17-01-1982



செல்வி.தி.வேலுப்பிள்ளை
18-01-1982
22-06-1989



திரு.கனக மகேந்திரா
23-06-1989
30-05-1999



திரு.ஆ.கருணாநிதி
01-06-1999
05-01-2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகுமுக விழா








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் மாணவர்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னகவை மலரில் மலர்கின்ற மலர்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆசியுரைகள், வாழ்த்துரைகள் | i - xxv |
| 2. | கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையின் அழியாத வரலாற்றுக் கோலங்கள் | 1 |
| 3. | கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையில் 40 வருடங்களுக்கு முந்திய அனுபவம் | 3 |
| 4. | ஐந்து தசாப்தங்களில் வட்டக்கச்சி | 7 |
| 5. | பாடசாலைத் தலைமைத்துவம் | 13 |
| 6. | நவீன ஆசிரியத்துவமும் நலம்மிகவாக்கற் செயற்பாடுகளும் | 17 |
| 7. | வன்னிப் பிரதேசத்தில் கால்நடை அபிவிருத்தி | 19 |
| 8. | பிள்ளைப் பருவத்து உளப்பிரச்சினைகள் | 22 |
| 9. | ஈழத்து நவீன தமிழ்க்கவிதை வளர்ச்சி (1940ஆம் ஆண்டு வரை) | 25 |
| 10. | வீணான காலங்கள் | 30 |
| 11. | இந்துக் கோயில் அமைப்பு | 31 |
| 12. | விசர் நாய்க்கடி நோய் | 33 |
| 13. | நாடகப் பட்டறை ஒழுங்குபடுத்தும் முறைமை | 35 |
| 14. | கல்வி வளர்ச்சியில் பொருளாதாரத்தின் தாக்கம் | 41 |
| 15. | மருத்துவப் பெயர்பெற்ற கீழ்க்கணக்கு நூல்கள் | 43 |
| 16. | சாரணீயமும் மாணவனும் | 45 |
| 17. | இந்துக்களின் வாழ்வில் திருமணம் | 47 |
| 18. | Blue Tooth | 52 |
| 19. | கலைகளின் தோற்றமும் வளர்ச்சியும் | 54 |
| 20. | ஓசோன் படை சிதைவடைதல் | 57 |
| 21. | எமது பாடசாலையின் உடற்பயிற்சி விளையாட்டு அனுபவங்கள் | 59 |
| 22. | விழித்தெழுந்திடு மாணவ சமூகமே | 61 |
| 23. | குடியைக் குடி கெடுக்கும் | 62 |
| 24. | ஆயுர்வேத மருந்திருக்க ஆங்கில மருந்தை நாடுவதேன்? | 64 |
| 25. | இணையம் | 66 |
| 26. | அத்திபாரக் கல்லாய் விளங்கும் ஆரம்பக்கல்வி | 68 |
| 27. | குழந்தையும் பெற்றோரும் | 69 |
| 28. | தமிழர் வாழ்வும் சைவசமயமும் | 70 |
| 29. | புதிய உலகம் (சிறுகதை) | 71 |
| 30. | புதிதாய்ப் பிறப்போம் | 76 |
| 31. | மாணவரின் ஆக்கங்கள் | 77 -108 |
| 32. | பின்னிணைப்பு | 109-123 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையின் அழியாத வரலாற்றுக் கோலங்கள்

வட்டக்கச்சி என்ற வளம் கொழிக்கும் பிரதேசம், 12-10-1953 இல் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத் திட்டமாகும். இப் பிரதேசத்திலே குடியேறிய மக்களின் குழந்தைகளுக்கான, கேடில் விழுச்செல்வமாம் கல்விச் செல்வத்தினை வழங்க வேண்டியது அவசியமானதாகவிருந்தது. இதன் பொருட்டு காணி அபிவிருத்தித் திணைக்களத்தால் ஆறு ஏக்கர் காணி, விளையாட்டு மைதானம் ஆகியன ஒதுக்கப்பட்டதுடன் அதில் அழகானதும் உறுதியானதுமான 130' X 25' அளவுடைய மண்டபம் ஒன்றும், குடிநீர்க்கிணறு ஒன்றும், அதிபர் விடுதி ஒன்றும் அமைக்கப்பட்டு அறிவாலயம் மணம் வீசத் தொடங்கியது. ஆம் 13-05-1954. இல் வட்டக்கச்சி கிழக்கு அ.த.க பாடசாலை என்னும் அழகான பெயர் பெற்றது. 19 மாணவர்களுடன் தன் பணிக்காக காலடி எடுத்து வைத்தது எனலாம். அவ்வேளையில் உயர்திரு க.கனகசபை அவர்கள் பதில் தலைமை ஆசிரியராகவும், செல்வி.க.கௌரியம்மா உதவி ஆசிரியராகவும் கடமையாற்றிய சிறப்புக் குரியவர்கள் ஆவர்.

27.05.1955 அன்றைய நாள் குடியேற்றத்திட்டத்தின் பொன்னான நாள். அன்றுதான் அதிகார பூர்வமான பாடசாலையாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. அக்காலப் பகுதியில் கிராம சங்கத் தலைவராக விளங்கிய திரு. வீரகத்தியார் சிதம்பரப்பிள்ளை அவர்களின் தலைமையில் திறப்பு விழா கோலாகலமாக ஆரம்பமாகியது. அன்றைய வட மாநில வித்தியாதிபதியால் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது.

இங்கு குடியேற்றத்திட்டமானது அந்நாளில் சாவகச்சேரித் தேர்தல் தொகுதிப் பிரதேசத்தில் இருந்தது. ஆதலால் இத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராகக் கடமையாற்றிய திரு.வி.குமாரசாமி, வடமாகாண அரசாங்க அதிபர் திரு.ம.சிறீகாந்தா, உதவி அரசாங்க அதிபர் திரு. பத்மநாதன், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

ஆரம்பத்திலே முதலாம் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே அமைந்திருந்த பாடசாலை, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்பிறை என வளர்ந்து, 1961ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பு வரை கொண்டதாக உயர்வடைந்தது. இலவச மதிய உணவு, பாடசாலைச் சீருடை போன்றன மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, கல்வியில் சிறந்திட ஊக்குவிப்பு வழங்கப்பட்டது. இதில் சிறப்பு என்னவென்றால் மதிய உணவாக தோசை வழங்கப்பட்டது எனலாம்.

ஆளுமை மேம்பாடடைந்த அதிபர்களாக திரு.பே.ஏ.த. ஐயாத்துரை, திரு.சீ.கந்தப்பு ஆகிய அதிபர்கள் ஒவ்வொருவரும் சுமார் ஆறு ஆண்டுகள் வரை தொடர்ச்சியாகப் பணியாற்றினர். பாடசாலையின் வளர்ச்சி கண்டு மக்கள் பூரிப்படைந்தனர்.

1960 ஆம் ஆண்டு, 5ஆம் தரப் புலமைப் பரீட்சைக்கு முதல் தடவையாக மாணவர்கள் தோற்றினர்கள். 1962இல் முதன் முறையாக இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றதுடன், கலைவிழா ஒன்றும் பாரியளவில் நடாத்தப்பட்டது.

1966இல் திரு.சி.கந்தப்பு அதிபராக இருந்த காலத்தில், இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை என்ற பெயரைப் பெற்றது. இக் காலப் பகுதியில்த்தான் மாணவர்கள் சிலர் உயர்தர வகுப்பிற்கு தகுதி பெற்றனர். மாணவர் தொகை வளர வளர ஆசிரியர் தொகையும் அதிகரிக்கபபட்டு வந்த சிறப்பைக் காணலாம்.

சிறந்த தலைமைத்துவமும் பாடசாலை முகாமைத்திறனும் கொண்ட திருமதி. செ. செல்லையா திரு.நா.மகாலிங்கம், திரு.பொ.சுப்பிரமணியம், திரு.என்.கே.தர்மலிங்கம், திரு.இ.இராசரத்தினம், செல்வி.தி.வேலுப்பிள்ளை, திரு.கனகமகேந்திரா, திரு.ஆ.கருணாநிதி, திரு.சி.பாலகிருஷ்ணன் ஆகிய பல தலைமையாளர்களின் வழிகாட்டுதலிலும் அர்ப்பணிப்பான சேவை மனப்பாங்கினாலும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் கலைக்கூடம் வளர்ச்சி கண்டு, அகில இலங்கை வரை தன் புகழ்மணம் பரப்பி பெருமை அடைந்துள்ளது என்றால் தவறிருக்க முடியாது.

1982இல் செல்வி தி.வேலுப்பிள்ளை அவர்கள் அதிபராக பதவியேற்ற காலப்பகுதியில்தான் பான்ட் வாத்தியக் கருவிகள் பெறப்பட்டு பான்ட் வாத்திய அணி முதன் முதல் உருவாக்கப்பட்டது. மேலும் ஐந்து தட்டெழுத்து இயந்திரங்கள் பாடசாலைக்குக் கிடைத்த சிறந்ததொரு தலைமைத்துவத்தினால் பாடசாலை வளர்ச்சிப் பாதையில் வீறுநடை போட்டுக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் 1989-06-23இல் திரு. கனகமகேந்திரா அவர்கள் அதிபராக கடமையைப் பொறுப்பேற்றார். எப்பழுவையும் சுமந்து கல்விக் கூட வளர்ச்சியிலும் மாணவர் வளர்ச்சியிலும் தீவிர ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். இவரது காலத்தில் 6.5m அகலமும் 1.5m உயரமும் உடைய தற்காலிக அரங்கானது மண்டபவழி அரங்காகவும் திறந்தவழி அரங்காகவும் பாவிக்கக் கூடிய வகையில் அமைக்கப்பட்டதுடன் தற்காலிக கொட்டகைகளுடன், அதிபர் விடுதிக்கான கிணறும் அமைக்கப்பட்டது. பாடசாலை வரலாற்றிலேயே தொடர்சசியாகப் பத்து ஆண்டுகள் பணியாற்றிய பெருமையைப் பெறும் அதிபர் இவரன்றோ.

பாடசாலையானது இவர் பதவியேற்ற காலம் முதல் இசை, நடன, நாடகப் போட்டிகள் வலைப்பந்து, எறிபந்து, தாச்சிப் போட்டிகள், ஆங்கில தின போட்டிகள், விவசாய பொது அறிவுப் போட்டிகளிலும் கோட்ட, மாவட்ட மட்ட பரிசில்களை வென்றெடுத்துக் கொண்டது. 1991ஆம் ஆண்டிலிருந்து உடற்பயிற்சிப் போட்டியில் தொடர்ச்சியாக மாவட்ட மட்ட பரிசில்களை வென்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

1989 இலிருந்து தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் தொடர்ச்சியாக சித்தியடைந்து வருகின்றனர். அந்த வகையில் 1996 இல் ம.ரூபவண்ணன் என்னும் மாணவன் 163 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் 1ஆம் இடத்தைப் பெற்று பெருமை சேர்த்தான்.

கல்வி அமைச்சின் புள்ளி விபரப்படி 1992இல் க.பொ.த சாதாரணப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் அதி சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்று, பெருமையால் பெருமகிழ்வு கொண்டது. 1995 க.பொ.த சாதாரண பரீட்சையில் தோற்றிய 25 பேரில் 19 பேர் க.பொ.த உயர்தரத்திற்கு தகுதி பெற்றனர்.

திரு.கனகமகேந்தரா அதிபர் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல 04.06.1999இல் இருந்து திரு. ஆ. கருணாநிதி அவர்கள் அதிபராக கடமையை ஏற்றுக் கொண்டார். கடமையேற்ற ஆண்டிலேயே மாணவர்களுக்கான கல்விச்சுற்றுலா ஒன்று ஒழுங்கமைக்கப்பட்டு, மாணவர்களின் புறச் செயற்பாட்டிற்கு ஊக்கமளித்தார். காலத்திற்கேற்ற வகையில் வீறுநடைபோட்டு வளர்ச்சிப் பாதையை நோக்கி முன்னேறிய எமது பாடசாலை, எங்கெங்கு போட்டிகளும் பரீட்சைகளும் நடக்கின்றனவோ அங்கெல்லாம் தடம் பதித்துக் கொண்டது.

கல்வி, கலை, விளையாட்டு போன்ற பல்துறை வளர்ச்சியில் மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க பாடசாலையாக மிளிர்ந்து வந்தது. 05.01.2003 இல் திரு.ஆ.கருணாநிதி இடம் மாற்றம் பெற்றுச் செல்ல 06.01.2003 இல் திரு.சி.பாலகிருஷ்ணன் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதிபர் திரு.சி.பாலகிருஷ்ணன் அவர்களின் ஆளுமையாலும், தலைமைத்துவத்தின் சிறப்பினாலும், வழிகாட்டலினாலும் இன்றுவரை பாடசாலையானது பல்வேறு துறைகளில் முன்னேற்றம் கண்டு வருகின்றது. பாடசாலைக் கலைத்திட்டம், இணைப்பாட விதானச் செயற்பாடுகள் என்பவற்றில் திறம்பட பாடசாலை திகழ்கின்றது. விளையாட்டுக்களில் கோட்ட, மாவட்ட, தேசிய மட்டங்களிலும் கலைத்திறன் போட்டிகளிலும் வெற்றி வாகை சூடி வீறு நடைபோடுகின்றது.

பாடசாலையின் பழம்பெரும் பெருமைகளைப் பேணி, சமூகத்திலும் மாவட்டத்திலும் ஏன் தேசியத்திலும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய பாடசாலையாகவும் பல புத்தி ஜீவிகளையும் நல் மாணாக்கர்களையும் உருவாக்கிய பாடசாலை என்ற பெருமிதத்துடன் பொன்னகவையில் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

* * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு.மா.கணபதிப்பிள்ளை** (பழைய மாணவன்)
B.A. Econ M.A. (Pol.sc) Dip.in Edu.PG DEM
S.L.P.S - I
பிரதி அதிபர்
றோயல் கல்லூரி - கொழும்பு 07.

# கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையில் 40 வருடங்களுக்கு முந்திய அனுபவம்

எமது பாடசாலை கற்றல்கற்பித்தல் பணியிலும், புறக்கிருத்திய இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும், 50 ஆண்டுகள் தன் சேவையைச் செய்து தலைநிமிர்ந்து நிற்பது கண்டு புளகாங்கிதம் அடைகின்றேன். பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்குப் பின், ஆறாம் தரத்தில் 1966ஆம் ஆண்டு இப்பாடசாலையில் மாணவனாகச் சேர்ந்து, க.பொ.த (சா/தரம்)வரை கல்வி கற்ற காலத்து அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல், ஒரு வரலாற்றுப் பதிவாக இருக்கலாம் என்பதால், இத்தலைப்பில் எழுதலாம் எனத் தீர்மானித்தேன்.

**அறிமுகம் :**

வட்டக்கச்சிக் குடியேற்றத்திட்டம், 1953ஆம் ஆண்டு இரணைமடுக் குளத்தின் நீர்ப்பாசனத்தை மையமாகக் கொண்டு வழங்கப்பட்டது. இக் குடியேற்றத்திட்டத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள 13 D.R.O பிரிவுகளில் இருந்து வந்து மக்கள் குடியேறி இருந்தனர். புதிய குடியேற்றம் கொடுக்கப்பட்டு 5 ஆண்டுகளின் பின் படித்த வாலிபர் திட்டம் வழங்கப்பட்டது. அக்காலத்தில் பேரூந்து சேவையில்லை. தட்டிவான் ஒன்று, இரண்டு தடவைகள் கிளிநொச்சிக்கும், இராமநாதபுரத்திற்கும் ஓடும். சனிக்கிழமைகளில் கிளிநொச்சியில் சந்தை. அங்குதான் பெரும்பாலான பொருட்கள் விற்றல், வாங்கல் நடைபெறும். தெருக்கள் எல்லாம் கிறவல் வீதிகள் தான்.

வாய்க்காலில் எந்நேரமும் இரணைமடுக் குளத்தில் இருந்து நீர் பாய்ந்து கொண்டு இருக்கும். இன்று மாயவனூர் என்று அழைக்கப்படும் இடமெல்லாம் அடர்ந்த காடுகள். வாய்க்கால் கரையோரங்களும் காடகத்தான் இருந்தன. பின்னர் அயலில் உள்ள காணிச் சொந்தக் காரர்கள் பலாத்காரமாக, இக்காடுகளை அழித்து, தமது காணிகளுடன் சங்கமமாக்கிக் கொண்டனர்.

மாலை நேரத்தில் நுளம்புச்சத்தம் தான். மழையற்ற காலத்தில் பனி தொடர்ந்து பெய்து கொண்டிருக்கும். யானைகள் அடிக்கடி வந்து கிராமத்து தென்னைகளையும் வாழைகளையும் நாசம் செய்யும். பகலில் குரங்குகளின் தொல்லை. மாமரங்களோடும், தென்னை இளநீரோடும், காய்கறிகளோடும் அவை விளையாடும். பாம்புகள் நிறைந்த பகுதி; விஷப்பாம்புகள் கடித்துப்பலர் இறந்தனர்.

இத்தனை பிரச்சினைகளுக்குள்ளும் குருவிகளின் ரீங்காரமும், கால் நடைகளின் ஓசைகளும், கேட்ட வண்ணம் இருக்கும். அக்காலத்தில் வாழ்ந்த நாங்களும் பிரச்சினைக்குரியவர்கள்தான். வீடுகளில் வீதியோரத்தில் நிற்கும் மாமரங்களுக்கு கல்லால் எறிந்து காய் பறித்தல், கொய்யாக்காய் பறித்தல், மகிழங்காய், பாலைப்பழம், விளாம்பழம் பறிக்க எனப்பல பகல்நேரங்களில் தெருக்களில் அலைந்து திரிவோம். வீடுகளுக்கு ஒரே தொல்லை; எல்லாத் தொல்லைகளிலும் இன்பம் கண்டிருந்த ஊர் அது.

**மக்கள் :**

பலபிரதேசங்களில் இருந்து வந்திருந்த போதும், ஒருவரை ஒருவர் நேசித்து ஒருவருக்கொருவர் உதவி வாழ்ந்தனர். கூட்டுறவு அடிப்படையில் கிணறு கிண்டுதல், அரிவி வெட்டுதல், கொத்துதுல், காடழித்தல், சூடடித்தல் , கட்டை பிடுங்கல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு இருந்தனர். ஆரம்பக் காலங்களில் தங்கள் தங்கள் சொந்த ஊரை நேசித்து, அங்குள்ள ஆலயங்களில் திருவிழாக்கள் வைபவங்களுக்கு சென்ற மக்கள் படிப்படியாக வட்டக்கச்சிக் கிராமத்தில் கோயில்களை அமைத்துக்கும்பிட்டனர். வட்டக்கச்சி முருகன் கோவில், சில்வா வீதி ஐயனார் கோயில், பன்னங்கண்டிப் பிள்ளையார் கோயில், குளக்கட்டுப் பிள்ளையார் கோயில், சோதி என்ற பெரியவரால் ஏற்படுத்தப்பட்ட தகரப்பிள்ளையார் கோவில் கட்சன் வீதியில் உள்ள கத்தோலிக்க தேவாலயம், சிவசுந்தரம் வீதியில் உள்ள முஸ்லீம் பள்ளி வாசல் போன்றவை அக்காலத்தில் வழிபாட்டுத் தலங்களாகின. வடடக்கச்சிக்கு வந்த வெவ்வேறு கிராமிய மக்கள் திருமண பந்தங்களாலும் இணைந்தனர். இதனால் ஒரு தாய் பிள்ளைகள் போல் வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தான் பங்கீட்டு அடிப்படையில் பொருட்களை வழங்கும். கூப்பன் முறையில் அரிசி, மா, சீனி போன்ற பொருட்கள் வழங்கப்பட்டன. கட்ஷன் வீதியில் உள்ள சங்கக் கடை எனப்படும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இக்கிராமிய மக்களின் தேவையை நிறைவு செய்தது. இதே சந்தியில் இருந்த அப்பாக் குட்டியாரின் கடை (அன்பு நண்பன் யோகராசாவின் தந்தையார்) ஒன்றுதான் அங்கிருந்தது. சிவசுந்தரம் வீதி சில்வா வீதிகளில் சில கடைகள் இருந்தன. சில்வா வீதி உள்வீதியில் ஒரு ப.நோ.கூ. சங்கக்கடையும், ஆறுமுகம் வீதியில் ஒரு சங்கக்கடையும் பின்னர் திறக்கப்பட்டன. இக்காலத்தில் இங்கு கட்ஷன் வீதியில் ஒரு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, அடுத்தது சில்வா வீதியில் அமைந்திருந்த இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, இன்னொரு பாடசாலை குளக்கட்டுப் பகுதியில் படித்த வாலிபர் திட்டம் கிடைத்ததன் பின் உருவாக்கப்பட்டு இருந்தது. வட்டக்கச்சியில் ஒரு உபதபாலகமும் குடியேற்ற அதிகாரி அலுவலகமும் (C.O.Office) ஒரு கிராமிய வைத்தியசாலை என்பன கட்சன் வீதிச் சந்திக்கு அண்மையில் அமைந்திருந்தன. ஏனைய இடமெல்லாம் காடாகத்தான் இருந்தது. பன்னங்கண்டி என்று சொல்லப்படும் கனகராயன் ஆற்றுக்கு மேலாகப் போடப்பட்டு இருந்த பாலம் அப்போதிருக்கவில்லை. மழைகாலத்தில் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டு இருக்கும். இவ்வளவு வளர்ச்சி அடைந்த நிலையிலும் பன்னங்கண்டியில் ஒரு மேம்பாலத்தை அமைக்கமுடியவில்லை. அக்காலத்தில் க.பொ.த(சா/த) பரீட்சை கிளிநொச்சி மகாவித்தியாலய பரீட்சை நிலையத்திற் தான் நடைபெறும். நாங்கள் டிசம்பர் மாதம் பன்னங்கண்டியால் பயணம் செய்யமுடியாது இருபுறமும் அடர்ந்த காடு திருவையாறு போன்ற குடியேற்றத் திட்டங்கள் கொடுக்கப்படாத காலம். இரவு நேரப் பயணம் என்பது நினைத்துப் பார்க்க முடியாது.

இத்தகைய பிரச்சினைகளையும் தாங்கிக் கொண்டு மிகச் சந்தோஷமாக மக்கள் வாழ்ந்தனர். மிக நேர்மையாக இருந்தனர். பொய்ச்சாட்சி சொல்லமாட்டார்கள், மிகப்பலம் பொருந்தியவராக இருந்தாலும் அவர்முன் சரியானதை சரியென்று வாதிடும் இயல்புடையவர்களாக இருந்தனர். ஒரு மங்கள வைபவமா? அது அந்தக் கிராமத்தின் மங்கள வைபவம் தான். ஒரு துக்க நிகழ்வா? அது அந்தக் கிராமத்தின் துக்கமாக இருந்தது. இத்தகைய பண்புடைய மக்களைத் தன்னத்தே கொண்டு வட்டக்கச்சிக் கிராமம் உயிர்ப்புற்று நின்றது.

கறுப்பி குளம், குஞ்சு மிசாக் குளம், மம்மில் குளம் என்ற மூன்று குளங்கள், வாய்க்கால்கள் தான் இங்குள்ள நீர்த்தடாகங்கள். மதகுகளில் இருந்து பாய்ந்து வாய்க்கால் நீரோடு ஓடி, நீரடித்து விளையாடிய அந்த நாட்கள் எல்லாம் மனதில் இன்பம் தருபவை.

கௌரவ பாலசிங்கம் (A.I) அவர்கள் திருவள்ளுவர் விவசாயக் கழகத்தை நிறுவி, விவசாயப் போட்டிகளில் எங்களை பங்கு பற்ற செய்து, அகில இலங்கை ரீதியில் அவ்விவசாயக் கழகத்தினை பேரெடுக்கச் செய்தார். அவர்தான் எங்களில் பலருக்கு கிளிநொச்சிக்கு வெளியில் உள்ள இலங்கையில் மத்திய, மேல் மாகாணங்களுக்கு கூட்டிச் சென்று காட்டி எமக்கு விழிப்புணர்வூட்டினார். கரந்தக் கொல்ல கோழிப்பண்ணை, பால் உற்பத்தி நிலையங்கள் எல்லாம் பார்த்தபோது தான் நாம் முன்னேற இன்னும் பல படிகள் இருப்பதை உணர்ந்தோம். அத்தகைய சுற்றுலாக்களை இன்று அந்தப் பெரியவரின் மனப்பாங்கோடு எத்தனை பேர் செய்கிறார்கள். சமூகம் என்பது அங்குள்ள பெரியவர்களின் வழிகாட்டலிற்தான் தங்கியிருக்கும் என முன்னோர் வழிகாட்டினார்கள். நாம் அனுபவித்தோம். நம்பிள்ளைகள் அனுபவிக்க நாம் என்ன செய்யப் போகிறோம் என்பது இன்றைய சவாலாகி உள்ளது.

**என் அனுபவம் :**

ஆறாம் தரத்தில் நான் பாடசாலையில் சேர்ந்த போது 1966ஆம் ஆண்டு கௌரவ சி.கந்தப்பு அவர்கள் (கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்) அதிபராக இருந்தார். இதற்கு சிறிது காலத்துக்கு முன்தான் கௌரவ (குல்லா) ஐயாத்துரை மாஸ்ரர் அவர்கள் அதிபராக இருந்து இளைப்பாறி இருந்தார். திரு.திருமதி கந்தப்பு பண்பட்ட சைவக் குடும்பத்தினர். வேட்டி, நசனல், சால்வை அணிந்து திருநீறு நெற்றியில் துலங்க வருவார். இச்சையின்றி எல்லோரும் கையெடுத்துக் கும்பிடும் பண்பினர். இன்று பல ஆசிரியர்களின் ஆதங்கம் தம்மை மாணவர்கள் மதிப்பதில்லை என்பதாகும். மாணவர்கள் மதிக்கத்தக்க வகையில் நாம் எவ்வாறு நடந்து கொள்ளலாம் என்ற நுட்பங்களைத் தெரிந்து அவர்களை கவர்தலும் ஆசிரியத்துவத்தின் பண்புகளில் ஒன்றாகும். அவ்வகையில் அக்காலத்தில் மாணர்களின் உள்ளங்களைக் கவர்ந்தவராக அதிபர் செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பாடசாலையில் சேர்க்க, எனது தாயாருடன் எனது அன்பிற்குரிய மாமனார் திரு.காராளசிங்கம் (முன்னாள் கிராம சபை உறுப்பினர், வட்டக்கச்சி) அவர்களும் வந்திருந்தார். அதிபர் என்னிடம் நீ ஏன் நெடுந்தீவில் படிக்காமல் இங்கு வந்தாய்? என்று கேட்டார். நானும் சற்றுத் துணிவுடன் அம்மாவுக்குத் துணையாக இருக்க வந்துள்ளேன். என்று பதில் சொன்னேன். அந்தப் பதில் அவருக்கு சந்தோசத்தை தந்திருக்க வேண்டும். கெட்டிக்காரன் என்று முதுகில் தட்டினார். அன்றே சேர்க்கப்பட்டேன். அன்று என்னுடன் என்வகுப்பு மாணவர்கள் அன்புடன் பழகினார்கள். அவர்கள் எல்லோரையும் எனக்கு நினைவு இருக்கின்றது. பெயர்களில் சில தடுமாற்றம் இருந்த போதும் அன்பிற்குரிய நடேசபிள்ளை (நடேசு), குணம், தனபாலசிங்கம்(கிராமசேவகர்), பரமானந்தன், வேலாயுதம், செல்வி.கோகிலராணி, காலஞ்சென்றவர்களான ஞானி, பரமலிங்கம், இரத்தினம், அம்பலவாணர் போன்றவர்களுடன் அன்பு நண்பன் மர்கூம் ஆகியோர் நாமங்கள் நினைவில் நிற்கின்றன.

இக்காலத்தில் எனக்கு முதல் வகுப்பில் அன்பிற்குரிய கி.சின்னராசா (பிரதிக் கல்விப்பணிப்பாளர்), கம்பர், சிவபாதம், இராசலிங்கம், சுப்பிரமணியம், சின்னப்பிள்ளை அக்கா (திருமதி, பொன். நித்தியானந்தம்) சந்திரா அக்கா, மங்கயற்கரசி அக்கா, பதுர்நிசா, முபீனா, போன்றவர்கள் கல்வி கற்றார்கள். இப்பாடசாலையில் பல முஸ்லீம் மாணவர்கள் கல்வி கற்றார்கள். இப்பாடசாலையை அண்மித்து முஸ்லீம் குடிகள் பலர் இருந்தனர். இந்து, கத்தோலிக்க, கிறிஸ்தவ, இஸ்லாமிய மாணவ மாணவிகள் மிகச் சந்தோசமாகக் கல்வி கற்றார்கள்.

இக்காலத்தில் கற்பித்த ஆசிரியர்கள் மறக்க முடியாதவர்கள் தன் நெஞ்சறிய பொய்யாது மாணவர் நலனில் அக்கறையுடன் செயற்பட்டவர்கள் கௌரவ சிவராசா, காலஞ்சென்ற கௌரவ செல்லையா, திருமதி. செல்வரத்தினம், திருமதி, தங்கம்மா, திருமதி இமானுவல், திருமதி சின்னத்தம்பி, செல்வி. சின்னத்துரை, திரு.பாருக். திருமதி.கந்தப்பு, திரு.லத்டீப், திரு.அபுசாலி, செல்வி.பரமேஸ்வரி, ஆகியோர் என் நினைவில் என்றும் பசுமையுடன் உள்ளனர். ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் தான் எவராலும் மறக்கமுடியாதவர்கள் என மொன்டசூரி அம்மையார் குறிப்பிடுவார். அவ்வகையில் எமது ஆசிரியர்கள் எம்மில் கற்றல் தாகத்தை ஏற்படுத்தியவர்கள் என்ற வகையில் என்றும் எம் மனதில் நிலைபெற்றுள்ளனர். இங்கு அக்காலத்தில் எனது சக மாணவர்கள், ஆசிரியர்கள், பெயர் குறிப்பிடாமல் இருந்தால் அது எனது ஞாபக மறதியால் ஏற்பட்டதேயல்லாமல், திட்டமிட்டும் புறக்கணிக்கவில்லை என்பதை பணிவுடன் தெரிவிக்கின்றேன்.

திரு.சி.கந்தப்பு அவர்கள் பாடசாலையை மிகச் சிறப்பாக வழி நடத்தினார். உண்மையில் இப்பாடசாலை தான் மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் க.பொ.இரத்தினம் அவர்கள் தற்போதைய இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தைத் தரம் உயர்த்தியதால், வட்டக்கச்சி மக்களின் அழுத்தமான வேண்டுதலுக்காக கட்ஷன் வீதியில் உள்ள தற்போதைய வட்டக்கச்சி மகாவித்தியாலயமும் தரம் உயர்த்தப்பட, இப்பாடசாலை கனிஸ்ட பாடசாலையாகவே 1971வரை க.பொ.த (சா/த) தரத்துடன் இயங்கி, அதற்குப்பின் சிறிது காலம் 9ஆம் ஆண்டு வரைதான் இப்பாடசாலையில் இருந்தது. பின்னர் வந்த அதிபர்களின் அர்ப்பணிப்பால் தற்போது தரம் 11 வரை உள்ள தரம் II பாடசாலையாக நிலைத்து நிற்கிறது. என்னுடைய அனுபவங்கள் 1966-1971 வரையானது தான். அதன் பின் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அதிபர்கள் ஆசிரியர்களை நான் குறிப்பிடமுடியாமை அதுபற்றி அறிவு எனக்கில்லை. ஆனால் இப்பாடசாலையை நிலைகுலையாது, பாதுகாத்து அதன் நற்பெயர் பாதுகாக்கப்பட்டு வருவதை நான் நன்கறிவேன். அத்தகைய பணியில் ஈடுபட்டோர் யாவருக்கும் எனது பணிவான நன்றிகள்.

பாடசாலை என்பது தாய் போன்றது. எந்த மோசமான முட்டாளும் தாயையும் தாய்மையையும் மதிப்பான். அது போலத்தான் கற்ற பாடசாலை என்பது எல்லோர் வாழ்விலும் முக்கியமானது. பலர் பெரிய மக்கள் விருப்புள்ள கல்லூரிகளில் படிப்பதை பெருமையாகக் குறிப்பிடுவர். ஆனால் எனக்கு இப்பாடசாலைதான் பெரியது. இங்கு பெற்ற அனுபவங்களும் அன்பும், பாசமும், கருணையும் அதற்கு பின் நான் எங்கும் பெறவில்லை. இதை நான் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளேன். திருமதி. செல்லையா (செல்வரத்தினம்) அவர்கள் எங்கள் எல்லோரதும் எழுத்தையும், சொல்லாட்சியையும் செவ்வைப்படுத்த எடுத்த அர்ப்பணிப்பான சேவையை நினைத்துப் பார்க்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிப் புத்தகங்களை எல்லாம் மாணவர்களிடமும் இருந்து எடுத்துச் சென்று, வீட்டுக்கு கொண்டு போய் அடுத்த நாள் குறிப்புகளுடன் தண்டனையை தனது அன்பான கண்டிப்புடன் தந்து, அவர்கள் கற்பித்த முறைமை பாடத்தில் ஆர்வத்தையும், கற்றலில் விருப்பத்தையும் உருவாக்கின. கௌரவ சுப்பிரமணியம் அதிபர் இப்பாடசாலையின் அதிபராக இருந்த அக்காலமும் பாடசாலையில் பல முன்னேற்றம் ஏற்பட்டது. அவரிடம் நான் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற காலம் ஒரு பொற்காலம் ஆகும்.

கல்விச் சிந்தனையாளர் "ரூசோ" குறிப்பிடும் போது "School Should be better home" என்பார். (பாடசாலை வீட்டை விட விருப்பமான இடமாக இருக்க வேண்டும்) உண்மையில் நாம் எமது பாடசாலைக்குப் போகாது வீட்டில் நிற்க விரும்புவதில்லை. ஏனெனில் எங்களது பெற்றோரை விட எங்கள் மீது அன்பும், ஆதரவும் காட்டிய ஆசிரியர்கள் பாடசாலையில் இருந்தனர்.

சரஸ்வதிப் பூசைக்காலம் பெருங்கொண்டாட்டம். அதேபோல் கிறிஸ்வ நிகழ்வுகள், நபிகள் நாயகத்தின் விழாவும் முறையாகக் கொண்டாடப்பட்டன. எல்லா மாணவர்களும் எல்லா நிகழ்வுகளிலுமே பங்கெடுப்பர். அந்நியோன்னிய உறவுகளுடன் ஆசிரிய-மாணவர் உறவு, பெற்றோர், ஆசிரியர் உறவு காணப்பட்டது.

அக்கால கிராமத்தவர்களைப் பாடசாலைகளுடன் இணைக்க அதிபர் சில உத்திகளை கைக் கொண்டார். வயல்களில் புல்லுப்பிடுங்கும் காலத்தில் தெரிவு செய்யப்பட்ட வயல்களில் மாணவர்களாகிய நாங்கள் போய் கால்களால் வயல்களில் மிதித்து உழக்குவோம். உண்மையில் புல்லும் நெல்லும் மடிந்துகிடக்கும் பின்னர் நெல் நிமிர்ந்து விடும் புல் முறிந்துவிடும். வயல் உரிமையாளர்களுக்கு பெரிய மகிழ்ச்சி. எங்களுக்கு பணிசும் தேநீரும் தருவார்கள். வயல் உரிமையாளர்கள் பாடசாலைக்கு பக்கபலமாக இருந்தனர்.

திருமதி இமானுவேல் ஆங்கில ஆசிரியை அன்புடன் பழகுவார். "கல்லில் நார் உரிப்பது போல" எங்களில் ஆங்கில மொழியை புகுத்த அதிபிரயத்தனம் எடுத்தார். பல மாணவர்களைக் கூப்பிட்டு தன் வீட்டில் வைத்து பணம் எதுவும் வேண்டாது சொல்லிக் கொடுத்தார். அத்தகைய உயர் பண்புகளை நினைத்துப் பார்க்கும்போது இன்று இந்த பண்பு ஊற்றுக்கள் எல்லாம் வற்றிப்போன வங்குரோத்துத் தனத்தை நாம் எப்போது சீர் செய்யப் போகிறோம் என்று எண்ணத் தோன்றும்.

திரு.சிவராசா அவர்களின் கற்பித்தல் தான் உண்மையில் வரலாற்றில் எங்களை ஆர்வம் கொள்ளச் செய்தது. இப்படி ஒவ்வொரு ஆசிரியரதும் பங்களிப்பு சொல்லி மாழாது. நடுநிலை தவறாது நற்பண்புடன் தன்பிள்ளைகளையும் மாற்றார் பிள்ளைகளையும் ஒன்றாக மதித்து வாழ்ந்த அவர்களின் பணியியல் வாழ்வியல் முறைமை எல்லோருக்கும் உதாரணமாக அமையலாம். நாம் விதைத்ததை தான் அறுவடை செய்ய முடியும். அந்த ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையாற்றுகிறார்கள் தான் நாங்கள் இன்று இந்நிலையில் இருக்கின்றோம். இன்று பெற்றோர்கள் தான் பிள்ளைகளுக்கு உதவவேண்டும் அப்படி அன்று எமது ஆசிரியர்கள் எண்ணி இருப்பின் நாங்கள் யாருமே படித்திருக்க வாய்ப்பில்லை. இன்று பாடசாலை மாணவர்கள் அகில இலங்கை ரீதியான போட்டிகளிலும் முன்னணியில் நிற்கிறார்கள் என்று குறிப்பிட்டனர். அத்தகைய அர்ப்பணிப்புடன் செயற்படும் அதிபர்கள் ஆசிரியர் குழாத்தை வட்டக்கச்சி மக்கள் சார்பாக நன்றியுடன் நினைவு கூருகின்றேன். நான் எழுதியுள்ள இந்த குறிப்புக்கள் ஒரு சிந்தனைக் கிளறல் மட்டுமே இத்தகைய பதிவுகள் முறையாக எழுதப்படல் வேண்டும். இல்லையேல் மகாவம்சம், சூழவம்சம் போன்ற இலக்கியங்களால் மறைக்கப்பட்டுப் போன எங்கள் வரலாற்றைப் போல இக்கிராமத்தினதும் இப்பாடசாலையினதும் வரலாறுகள் அற்றுப் போகலாம். இந்தக் கிராமத்தைப் பற்றி பூரண புள்ளி விபர ஆதாரங்களுடன் வரலாற்றுப் பதிவு செய்ய வேண்டும் என்ற ஆதங்கத்தின் அத்திவாரமாகவே இக்குறிப்புக்களை எழுதினேன்.

என் பாடசாலை அன்னை பல்லாண்டு பல்லாயிரம் மாணாக்கரை நன் மக்களாக்கி நீண்டு நிலைத்து நிற்பாள். அந்தப் பணியில் ஆர்வமுடன் சங்கமமாகும் அனைத்து ஆளணியினருக்கும் நீண்ட வாழ்வும் சுகமும் இறைவனிடம் வேண்டி நிறைவு செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு.சி.சிறிதரன்** J.P.
B.A. PGDE, SP.Trd (Ag), M.Ed
பழைய மாணவன்
அதிபர் - கண்டாவளை ம.வி.

# ஐந்து தசாப்தங்களில் வட்டக்கச்சி

இலங்கையில் 1968ம் ஆண்டு வரை ஏற்படுத்தப்பட்ட எண்பது (80) நெற்செய்கைக் குடியேற்றத் திட்டங்களுள் இருப்பத்தைந்து (25) திட்டங்கள் வடமாகாணத்தில் அமைந்தன. யாழ்ப்பாணக் குடாநாடு தவிர்ந்த வன்னிப் பிரதேசத்திலேயே அவை அனைத்தும் உருவாக்கப்பட்டன. 1943ம் ஆண்டில் முதன்முதலாக இரணைமடுக் குளத்தையடுத்துக் " கரைச்சி இரணைமடுக் குடியேற்றத்திட்டம்'' என்ற பெயரில் ஒரு குடியேற்றத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இதன் பின்னர் 1950ம் ஆண்டில் ''இரணைமடு பரந்தன் திட்டம்'' என்ற பெயரில் ஒன்றும் இரணைமடுக்குள நீர்பாசன வசதிகளை அடிப்படையாகக் கொண்டு வேறு பல குடியேற்றத்திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன. குடியேற்றத் திட்டங்கள் மேலும் அதிகரிக்கவே அவற்றின் எல்லைகளும் பெயர்களும் மாறுபட்டன. இவற்றிலொன்றே 1953ம் ஆண்டு உருவாக்கப்பட்ட வட்டக்கச்சிக் குடியேற்றத் திட்டமாகும்.

வட்டக்கச்சி என்பதற்கு வட்டமான காய்கள் உள்ள மரங்கள் இருந்ததாலும் எத்திசையும் வேறுபடாத வட்டமான திசைகளை உடையதாலும் இப்பெயர் தோன்றப் பல காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அந்நியர் ஆட்சியின் முன் இக்கிராமம் சிறந்து விளங்கியதென்பதற்கு பழைய வட்டக்கச்சி என்று கூறப்படும் இடமும், பழைய கண்டி வீதியும், இடையிடையே உள்ள மைல் கற்கள், பாலங்கள், கிணறுகள், குதிரைகளைத் தங்க விட்ட லயங்கள், ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோவில் ஆலய வளாகத்தில் மம்மில் குளத்தருகே காணப்படும் இதுவரை ஆய்வுக்குட்படுத்தப்படாத இடிபாடுகள் கொண்ட பெரும் கட்டடங்கள், புழுதியாறுக் குளத்தருகேயுள்ள மட்பாண்டங்கள், சுட்ட மண்ணினால் செய்யப்பட்ட யானை உருவங்கள், குஞ்சு மீசான் குளப்பகுதியில் காணப்படும் இலச்சினைகள், தாதுப் பொருட்கள் என்பன இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இக்கிராமத்தில் மக்கள் வாழ்ந்ததை உறுதிப்படுத்துகின்றன. (செய்திக் கட்டுரை - 19-10-1990 ஈழநாதம் பேராசிரியர் செ.கிருஷ்ணராசா இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவாலயம் வட்டக்கச்சியில் கண்டு பிடிப்பு'')

வட்டக்கச்சியில் குடியேற்றம் 1953ம் ஆண்டு முதல் 1955ம் ஆண்டு வரை ஏற்படுத்தப்பட்டது. மொத்தமாக இங்கு 514 குடியேற்றவாசிகள் குடியமர்த்தப்பட்டனர். இதனுள் படித்த இளைஞர் குடியேற்றத்திட்டமும் சாதாரண குடியேற்றவாசிகள் குடியேற்றத்திட்டமும் அடங்கும். இங்கு படித்த இளைஞர் 228 பேர் ஒரு புறத்திலும் சாதாரண குடியேற்றவாசிகள் 286 பேர் மறுபுறத்திலும் குடியமர்த்தப்பட்டனர். 1966ம் ஆண்டின் பின்னரே பெரும்பாலான படித்த இளைஞர் குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ள போதும் வட்டக்கச்சிக் குடியேற்றத்திட்டத்தின் ஒருபகுதி படித்த இளைஞர் திட்டமாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதுவே வடமாகாணத்தில் படித்த இளைஞரை உள்ளடக்கிய முதல் குடியேற்றத் திட்டமாகும். இப்படித்த இளைஞர்களுள் பெரும்பாலானோர் எட்டாம் வகுப்பு வரை படித்தோராயும் சிலர் கமத்தொழிற் பாடசாலைக் கல்வி கற்றோராயும் இருந்தனர்.

1953இல் யாழ்ப்பாண மாவட்டக் கரைச்சிக் காரியாதிகாரிப் பிரிவில் வட்டக்கச்சிக் கிராமசேவகர் பகுதியினுள் இக்குடியேற்றத் திட்டம் அமைந்துள்ளது. கிளிநொச்சி நகரிலிருந்து கிழக்காக ஏறத்தாழ ஐந்து மைல் தூரத்தில் (8 km) அமைந்துள்ள வட்டக்கச்சிக் குடியேற்றத் திட்டத்தின் எல்லைகளாக மேற்கே கனகராயன் ஆறும் கிழக்கே இராமநாதபுரம் குடியேற்றத்திட்டமும், வடக்கே முரசுமோட்டைக் கிராமமும் தெற்கே இரணைமடுக்குளமும் உள்ளன. இரணைமடுக்குள விசேட திட்டப் பிரிவினுள் உள்ளடக்கப்பட்டுள்ள வட்டக்கச்சிக் குடியேற்றத்திட்டத்திற்கு இரணைமடுக்குள வலது கரைக் கால்வாய் நீர்பாசன வசதியை அளிக்கின்றது. அத்துடன் இராமநாதபுரக் குடியேற்றத்திட்டமும் (1263 ஏக்கர்) இக்கால்வாய் வழியாகவே நீர்பாசன வசதி பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டக்கச்சிக் குடியேற்றத் திட்டம் இரணைமடுக்குளத்தின் நீர்வளத்தை அடிப்படையாகக் கொண்டது. வடமாகாணத்தில் மிகப்பெரிய குளங்களிலொன்றும், கிளிநொச்சி மாவட்டத்தில் மிகப் பெரிய குளமுமான இரணைமடுக் குளத்தின் நீர்க் கொள்ளளவு 82000 ஏக்கர் அடியாகும். இதன் நீரேந்து பரப்பு கனகராயன் ஆற்றுவடிநிலத்தை உள்ளடக்கி 227 சதுர மைல்களாகும். இதன்மூலம் நீர்ப்பாய்ச்சல் செய்யக்கூடிய பரப்பளவு 20000 ஏக்கராகும்.

13ம் நூற்றாண்டையடுத்து ஏற்பட்ட சோழப்படையெடுப்பின் காரணமாக இப்பகுதிகள் பாதிக்கப்பட்டன. அதற்கு முன்னரும், பின்னரும் வன்னிச்சிற்றரசர்களால் இப்பகுதிகள் பரிபாலனம் செய்யப்பட்டன. இவர்கள் சில சமயங்களில் யாழ்ப்பாண அரசுக்குத் திறை செலுத்தியும் இன்னோர் சமயங்களில் சுய ஆட்சி செய்தும் வந்திருக்கிறார்கள். வன்னியரது ஆட்சிக்காலத்தில் நீர்ப்பாய்ச்சல் வசதியுடன் கூடிய விவசாய நடவடிக்கைகள் இப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன, என்பதற்குத் தூர்ந்த நிலையிலுள்ள குளங்கள், நீர்ப்பாய்ச்சல் கால்வாய்கள் என்பன ஆதாரங்களாய் உள. போக்குவரத்துப் பாதைகளும் இவர்கள் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டிருந்தன, என்பதற்குப் பழைய கண்டி வீதி என இன்றும் அடையாளங் காணக்கூடியதாயுள்ள வீதி சான்று பகருகின்றது. வட்டக்கச்சி குடியேற்றத்திட்டம் உருவாக்கப்படுவதற்கு இவ்வரலாற்றுத் தகவல்கள் துணைபுரிந்தன.

## புவியியல் நோக்கு:-

பூமியின் மத்திய கோட்டிற்கு வடக்கே ஏறத்தாழ 5° - 10' க்குமிடையே வட்டக்கச்சி அமைந்துள்ளது. வடகீழ்ப்பருவக்காற்று, வெப்பச்சலன மழை, சூறாவளி மழை என்பனவற்றைப் பெறுகின்றது. கோடையில் 80°F க்கு மேற்பட்ட வெப்பம் நிலவுவதால் வரட்சியாக இருக்கின்றது. சுருக்கமாக மாரிமழையும், கோடை வரட்சியும் கொண்டது. அதாவது மத்திய கோட்டுச் சுவாத்திய நாடுகளின் காலநிலையை ஒத்ததென்றே கூறலாம். பொதுவாக மணலும், களியும் சேர்ந்த இருவாட்டி மண் விளாத்திக்காடு, வட்டக்கச்சி அரசினர் பண்ணைக்கு கிழக்குப் பக்கமாக உள்ள பத்து வீட்டுப் பகுதி, பழைய வட்டக்கச்சிப் பகுதியில் காணக்கூடியதாக இருக்கின்றது. இப்பகுதிகளில் நெல் கூடிய விளைச்சலைக் கொடுக்கின்றது. மாரியில் மழை நீரும் கோடையில் நீர்ப்பாய்ச்சலும் நெல் வேளாண்மைக்கு உதவுகின்றது.

## மக்கள் வாழ்க்கை முறை:-

இங்கு வாழ்வோர் மூன்று ஏக்கர் வயல் நிலத்தையும் இரண்டு ஏக்கர் மேட்டு நிலத்தையும் பெற்றுள்ளனர். வயல்களில் இருபோக நெல் பயிரிடப்படுகின்றது. மேட்டு நிலங்களில் வான் பயிர்களான மா, பலா, தென்னை, கமுகு என்பனவும் தோடை, எலுமிச்சை, காய்கறிகள், சிறுதானியங்கள் என்பனவும் செய்கை பண்ணப்பட்டு கிணற்று நீரினால் நீர்பாய்ச்சப்படுகின்றன. கால்நடை வளர்ப்பும் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது.

குடியேற்ற காலத்தில் காணிகளைப் பெற்றுக் கொண்டவர்களின் பரம்பரைகள் இன்று விரிவடைந்ததன் காரணமாக மேற்குறிப்பிட்ட காணிகளின் அளவுத்திட்டம் மாற்றம் கண்டுள்ளது. அத்துடன் சராசரி ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராவது வெளிநாடுகளில் வாழ்வதால் அந்நிய வருமானத்தின் மூலம் எமது மக்களின் உழைப்பு முயற்சி, கூட்டுறவு வாழ்க்கை என்பவற்றில் எதிர்மறையான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் கிளிநொச்சி நகரை நோக்கி அரச உத்தியோகம் மற்றும் தொழில் நிறுவனங்களில் வேலை பார்க்கச் செல்வோரின் தொகை கிளிநொச்சி மாவட்டக் கிராமங்களில் வட்டக்கச்சியிலேயே அதிகமாக உள்ளது. விவசாய விளைபொருள்களில் ஏற்பட்ட விலைவீழ்ச்சி, உள்ளீடுகளின் உச்சவிலை, சந்தைப்படுத்தலில் உள்ள சிரமங்கள் காரணமாக மக்கள் விவசாய உற்பத்தியில் கவனம் செலுத்துவது குறைந்து கொண்டே செல்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980களில் வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணையும் பாடசாலையும் இலங்கையில் தரம் வாய்ந்த விவசாயப் பாடசாலைகளில் ஒன்றாக இயங்கி வந்தது. கரைச்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம் விவசாயப் பண்ணை, பாடசாலைகள், வைத்தியசாலை என்பன எமது கிராமத்தின் உபநகர அடிக்கட்டு மானங்களாகும்.

**போக்குவரத்து :-**

வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடுநகர் என்ற பெருங்கிராமங்களிலிருந்து பல ஆயிரக்கணக்கான மக்கள் நாளாந்தம் கிளிநொச்சி நோக்கியும் தம் இருப்பிடம் நோக்கியும் பயணஞ் செய்கிறார்கள். 1980களில் இங்கிருந்து யாழ்ப்பாணம், காரைநகர் போன்ற பகுதிகளிற்கு ஒவ்வொரு நாளும் பஸ் பயணம் காணப்பட்டது. நாட்டின் சூழல் இன்று அந்த நடைமுறைக்குத் தடையாக உள்ளது. மாரி காலங்களில் கிளிநொச்சிக் குளத்தின் மேலதிக நீர்பாயும் இடமும் (ஐந்து அடி வான்) இரணைமடுக் குளக்கதவுகள் திறக்கப்படும் பட்சத்தில் பன்னங்கண்டிப்பாலமும், வட்டக்கச்சி சந்தைக்கருகாமையிலுள்ள நாவலடிப் பகுதியும் இப்பிரதேசத்தைச் சிறு தீவுகளாக்குகின்றது. இப்பகுதிகளில் பொருத்தமான பாலங்கள் அமைக்கப்படும் பட்சத்தில் போக்குவரத்தில் இடையூறுகள் ஏதும் ஏற்பட வாய்ப்பிருக்காது. விவசாய விளைபொருட்களைச் சந்தைக்குக் கொண்டு செல்வோர், உத்தியோக ரீதியாக நகரை நோக்கிச் செல்வோரின் தொகை அதிகரித்துள்ளதால் போக்குவரத்து மிக முக்கியமானதாயுள்ளது.

**கல்வி நிலை:-**

நான்கு பாடசாலைகள் கிராமத்தின் மூன்று திசைகளிலும் உள்ளன. கிழக்கே கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையும் (இதன் தொடக்கக் காலப்பெயர் "வட்டக்கச்சி கிழக்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை" என்பதாகும்.) வடக்கே கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயமும் தெற்கே கிளி/வட்டக்கச்சி தெற்கு அ.த.க. பாடசாலையும் கிளி/மாயவனூர் அ.த.க. பாடசாலையும் அமைந்து காணப்படுகின்றது. எதிர்காலத்தில் பத்து வீட்டடி - கறுப்பி குளத்தை மையப்படுத்திக் குடிவாழும் மக்கள் தொகையைப் பொறுத்து அங்கேயும் தரம் ஐந்து வரையான பாடசாலை உருவாக்கப்பட வேண்டும். இதில் கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. காடசாலை அகில இலங்கை ரீதியான உடற்பயிற்சிப் போட்டியில் ஓராம் இடத்தைப் பெற்றுக் கொண்டமையும் தொடர்ந்து ஏழு வருடங்கள் அகில இலங்கைப் போட்டியில் பங்குபற்றி வருகின்றமை கிளிநொச்சி மாவட்ட வரலாற்றில் பெரும் சாதனையாகும். அத்தோடு கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலய சாரணர்குழு அகில இலங்கை மட்டத்தில் ஓராம் இடம் பெற்று ஜனாதிபதி விருது பெற்றமையும் யப்பானில் நடைபெற்ற அகில உலக சாரணர் ஜம்போறியில் வட்டக்கச்சி மகா வித்தியாலயப் பிரதிநிதி கலந்து கொண்டமையும் வரலாற்றுப் பெரும் சாதனைகளாகும். இப்பெரும் பாடசாலைகள் இருந்தும் இன்றைய நவீன உலகின் தகவல் தொழில்நுட்பத்தை உள்வாங்கும் வகையில் வசதிகள் இன்மையும் போதிய ஆய்வுகூட நூலக வசதிகள் இன்மையும் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

**கலை கலாச்சாரம்:-**

இங்கு இந்துக்களும் கிறிஸ்தவர்களும் தமக்குரிய வழிபாட்டுத் தலங்களை அமைத்து ஆன்மீகத்தைப் புனிதப்படுத்துகின்றனர். ஆயினும் இங்கு வாழும் மக்கள் தொகையோடு ஒப்பிடும் போது ஆலயங்களின் தொகை வீக்கமடைந்துள்ளதாகவேயுள்ளது. மேலும் மக்கள் கல்வி-சமூக நலன்புரித் திட்டங்களை செலவிடும் தொகையை விட ஆலயங்களில் செலவிடும் பணம் அதிகமாகவே உள்ளது. உதாரணமாக வட்டக்கச்சிப் பகுதிகளில் உள்ள இடுகாடுகள் இதுவரை புனிதம் பெறவில்லை என்பதும் எந்த ஒரு இந்து ஆலயமும் தான் கண்ட வளர்ச்சியின் அளவுக்கு ஒரு முன்பள்ளியைத் தானும் நடாத்தும் திட்டத்தை இதுவரை கொண்டிருக்கவில்லை என்பதும் ஏற்புடையதாகும்.

இங்கு கிராமத்தின் ஆரம்ப காலத்தில் உழைத்த பெரியோர்களின் பெயர்களைக் கொண்டு வீதிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஹட்சன் (இவர் ஒரு ஆங்கிலேயர்) சில்வா (இவர் ஒரு சிங்களவர்) அழகரத்தினம், ஆறுமுகம் போன்ற பொறியியலாளர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசுந்தரமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மை பெறுகின்றனர். இலங்கையிலேயே இவ்வாறு பெயர்குறிப்பிட்டு வீதிகள் அமைத்து பெரியோர்களைக் கௌரவித்த மண்ணாக வட்டக்கச்சி மண்ணே இன்றுவரை காணப்படுகின்றது.

**சுகாதார வசதி:-**

மக்களுடைய வாழ்க்கை முறைக்கு சுகாதாரம் முக்கியத்துவம் பெறுகின்றது. முன்னொரு காலத்தில் மலேரியா நோய் தீவிரமாக இக்கிராமத்தில் காணப்பட்டது. ஆனால் 95% மும் தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றே கூறலாம். பிரசவ விடுதியுடன் இயங்கும் அரசினர் வைத்தியசாலை எதிர்காலத்தில் ஆண், பெண் விடுதி வசதி கொண்ட ஒரு மாவட்ட வைத்தியசாலையின் தரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**எதிர்கால வளர்ச்சி**

**அபிவிருத்தியடைந்து வரும் எமது பிரதேசத்திற்கு தேவைகள் பல இருக்கின்றன.**

1) வைத்தியசாலையின் தரம் உயர்த்தப்பட்டு விடுதிகளுடன் அமைந்து வைத்தியர்கள், தாதியர்களின் சேவையுடன் மிளிர வேண்டும். எமது அயற்கிராமமான இராமநாதபுரத்தில் ஒரு மத்திய மருந்தகம் அவசரம் உருவாக்கப்படவேண்டும். இராமநாதபுரம், கல்மடுநகர், புதுக்காடு, நாவல்நகர், வயலூர், பத்தேக்கர் திட்டம், பகுதிவாழ் மக்கள் நலம் பெற இராமநாதபுரத்தில் மருந்தக உருவாக்கம் அவசியமானது.

2) கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம் போல கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயமும் கணித விஞ்ஞானப் பிரிவுகளைக் கொண்ட 1-AB பாடசாலையாகவும், கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை கலை வர்த்தகப் பிரிவுகளைக் கொண்ட 1-C பாடசாலையாகவும் கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை க.பொ.த (சா/த) கொண்ட பாடசாலையாகவும் தரமுயர்வுகளைப் பெறும் போது எமது பிரதேசம் கல்வியில் பாரிய நேர்த்தாக்கங்களை அனுபவிக்கும்.

3) வட்டக்கச்சித் தபாலகம் தரமுயர்த்தப்படுவதோடு மாயவனூரில் உபதபாலகம் உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலம் பல உபதபாலகங்களை உள்ளடக்கியதாக வட்டக்கச்சித் தபாலகம் மிளிரும்.

4) வட்டக்கச்சி, இராமநாதபுரத்தை மாரி காலத்தில் தீவுகளாக்கும் நாவலடி, மாவடியம்மன் ஆலய முன்றல் பாலங்கள் திட்டமிட்டு அமைக்கப்படும் போது மக்களின் மழைகாலப் போக்குவரத்து இலகுபடுத்தப்பட்டு எமது பகுதி பாரிய வளர்ச்சி காணும்.

5) பழைய வட்டக்கச்சி ஊடாக முரசுமோட்டை செல்லும் வீதியும், பெரியகுளம் ஊடாக கண்டாவளை செல்லும் வீதியும் புனரமைக்கப்படும் பொழுது முரசு மோட்டை, கண்டாவளை மக்கள் இலகுவாக வட்டக்கச்சிச் சந்தையைப் பயன்படுத்துவார்கள் இதன் மூலம் சந்தையமைப்பு சிறப்பானதாக மாறும். இது எமது கிராமத்தில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

6) கரைச்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தினூடாக எரிபொருள் நிலையம் நவீன முறையில் உருவாக்கப்பட வேண்டும். அத்தோடு சங்கத்தின் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டு கட்டுமான வசதிகள் உருவாக்கப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) எமது பிரதேசத்தை உள்ளடக்கிய வகையில் மையப்படுத்தப்பட்ட இடத்தில் வங்கிகள் உருவாக்கப்பட வேண்டும். நவீன உலகில் வங்கிகளின் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கு வசதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

8) வட்டக்கச்சி சந்தைப் பகுதி நன்கு திட்டமிடப்பட்டு நவீன உபநகரத்திற்கான வசதிகளோடு புனரமைக்கப்பட வேண்டும். இதற்கு மின்சாரவசதி மிக முக்கிய தேவையாகும். எதிர்காலத்தில் அது கிடைக்குமென நம்புவோம். மின்சார வசதியின்மை பல வழிகளிலும் எமது பிரதேசத்தில் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

9) பொழுது போக்கு மையங்கள், பூங்காக்கள், சிறுவர் பாதுகாப்பிடங்கள், மூதாளர் பேணலகங்கள்எமது பிரதேசத்திற்கு முக்கியமானதாகும்.

10) பல்துறை சார்ந்த அரச, அரசு சாரா நிறுவன ஊழியர்களின் தொகை எமது பிரதேசத்தில் அதிகம் உள்ளது. இவர்களின் பிள்ளைகளைப் பராமரிக்கும் பகல் பராமரிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட வேண்டும். இவ்விடயம் எதிர்காலத்தில் எம் மண்சார்ந்த புத்திஜீவிகளை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்தும்.

11) மேய்ச்சல் தரைகள் புனரமைக்கப்பட்டு கால்நடைகள் பேணப்படுமிடத்து பால் பண்ணைத் தொழில் பெருவளர்ச்சி காணும்.

12) தென்னை அதிகமிருப்பதால் துப்புக் கைத்தொழில் சவர்க்காரத் தொழில் என்பன பெருக வழியுண்டு.

13) வட்டக்கச்சி விவசாயப் பண்ணை புனரமைக்கப்பட்டு நவீன வசதிகளுடன் அது மிளிர வேண்டும். பல்துறை சார்ந்த புத்திஜீவிகளை உருவாக்குவதோடு பலருக்கு வேலை வாய்ப்புக்களையும் அப்பண்ணை வழங்கும் என்பது கடந்த கால உண்மையாகும்.

14) எமது பிரதேசத்திலுள்ள கறுப்பிகுளம், குஞ்சுமீசான் குளம், மம்மில் குளம், புழுதியாறுக்குளம், இராமநாதபுர குளம் ஆகிய சிறு குளங்கள் புனரமைக்கப்பட வேண்டும். இதில் புழுதியாறுக்குளம் எதிர்காலத்தில் நீர்ப்பாய்ச்சல் செய்யக்கூடிய பெரிய குளமாக .மாறுவதற்குரிய சாத்தியங்கள் நிறையவே உண்டு.

15) எல்லாவற்றுக்கும் மேலாக எமது பிரதேசம் தனியான பிரதேச செயலர் பிரிவாக (உதவி அரசாங்க அதிபர் பிரிவாக) பரிணமிக்க வேண்டும். 1-AB பாடசாலைகள், மாவட்ட வைத்தியசாலை தபாலகம், நவீன சந்தியமைப்பு, நவீன வீதியமைப்பு, வடிகாலமைப்புக்கள், மின்சாரவசதி, குளங்களின் புனரமைப்புக்கள் என்பன "கரைச்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு" உருவாவதற்கான அடிக்கட்டுமானங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


1. சிவச்சந்திரன் இ. (1979) இலங்கையின் வன்னிப்பிரதேச நிலப்பயன்பாடு.
   " யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் "

2. ஜெயராசா சபா (2000) "ஆய்வு முறையில்"
   கல்வியியல் ஆய்வுக்கழகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

3. ந.பேரின்பநாதன் (1979) யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாயமும் அதன் நிதியீட்டலும்
   " யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் "

4. ஆ.செல்லத்துரை (1980) வளர்ந்துவரும் வட்டக்கச்சி வெள்ளிவிழா மலர்
   கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம்

5. "கிளிநொச்சி செய்தி" (1997 செப்டெம்பர்)
   கிளிநொச்சி மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி


அதிஷ்டம் என்பது கூட - துணிவும்
விடாமுயற்சியும் உள்ளவர்கள் பக்கம்தான் நிற்கும்
தேடுகிறவர்கள் தான் கண்டடைவார்கள்.
தட்டுகிறவர்களுக்குத்தான் வாழ்க்கையின்
கதவுகள் திறக்கப்படுகிறது.

மலர் விரிந்தால் மணம் வீசத்தான் செய்யும்
மேகங்கள் கூடினால் மயில் ஆடத்தான் செய்யும்
தென்றல் வீசினால் குளிர்ச்சி ஏற்பட்டுத்தான் தீரும்
அவை போல ஆட்சி அலங்கோலமானால்
மக்கள் கண்டிக்கத்தான் செய்வர்.

– அண்ணாத்துரை -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களும் வெற்றிகளும்



ஆங்கில தினப்போட்டி 2005
மாகாண மட்டம்

கிளிநொச்சி
தமிழ்ச்சங்கம்
நடாத்திய
போட்டியில்
வெற்றியீட்டிய
மாணவர்கள்.





2005
மெய்வல்லுனர்
திறனாய்வின்
சிறந்த
விளையாட்டு
வீரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2005ம் ஆண்டு
வகுப்பு ரீதியாக
முதன்நிலை
பெற்ற
மாணவர்கள்



தமிழ்த்தினப் போட்டி 2005 வலய மட்டத்தில்
வெற்றி பெற்றவவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி.க.தேவராஜா
பீடாதிபதி
முகாமைத்துவ கற்கைகள் வணிகப் பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

# பாடசாலைத் தலைமைத்துவம்

## 1.0 அறிமுகம்

பாடசாலைகள் அறிவையும் திறன்களையும் உளப்பாங்கையும் விருத்தி செய்யும் அமைப்புக்கள் என்பதனால் அவற்றை வழிநடாத்துவதில் பாடசாலைத் தலைமைத்துவம் முக்கியம் பெறுகின்றது. ஏனைய அமைப்புக்களைப் போல் அல்லாது பாடசாலைகள் பல்வேறு நோக்கம் கொண்டவர்களை முகாமை செய்ய வேண்டிய அவசியத்தைக் கொண்டுள்ளன. பாடசாலைத் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்ட அதிபர், ஆசிரியர்களையும் மாணவர்களையும் மட்டுமன்றி பெற்றோர்கள் பழைய மாணவர்கள் கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரையும் இணைத்துக் கொண்டே பாடசாலைகளை முகாமை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தைக் கொண்டுள்ளார். இதன் காரணமாகவே சிக்கல் நிறைந்த முகாமைத்துவப் பண்பை பாடசாலை அதிபர்கள் கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. பாடசாலைகள் தெளிவானதும் அங்கீகரிக்கப்பட்டதுமான குறிக்கோள்களைக் கொண்டிருப்பதனாலும் அவை தேசிய ரீதியில் அரசினாலும் மக்களினாலும் அங்கீகரிக்கப்பட்டிருப்பதனாலும் அக்குறிக்கோள்களை நோக்கி பாடசாலை சமூகத்தை அழைத்துச் செல்வது பாடசாலைத் தலைமைத்துவத்தின் குறிக்கோளாகும்.

## 2.0 வரைவிலக்கணம்

தலைமைத்துவம் என்பது நிறுவனங்களின் இலக்கினை அடைவதற்கு அவற்றுடன் தொடர்புடைய உதவியாளர்களையோ அல்லது பின்பற்றுவோர்களையோ அழைத்துச் செல்லும் முகாமைத்துவக் கருமமாகும். இப்பாடசாலையில் கிடைக்கும் வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி இலக்கினை அடைவது இதன் நோக்காகும். பாடசாலைகளிலுள்ள பௌதீக வளம், மனிதவளம், நிதிவளம், நேரவளம், தகவல்வளம் என்கின்ற வளங்களைப் பயன்படுத்தி இலக்குகளை அடைவதற்கு முயலும் முகாமைத்துவத்தில் மனித வளத்தை இலக்குகளை நோக்கி நகர்த்திச் செல்ல தலைமைத்துவம் முக்கியமாகின்றது. பாடசாலைத் தலைமைத்துவத்தை ஏற்றிருக்கும் அதிபர் தனது உதவியாளர்களான ஆசிரியர்களையும் பின்பற்றவோர்களான மாணர்வகளையும் இலக்கினை நோக்கி நகர்த்திச் செல்லும் பொறுப்பினைக் கொண்டிருக்கின்றார். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இலக்கினை அடைவதற்கு பாடசாலைச் சமூகத்தினரை வழிநடாத்தும் ஒரு கருமமே பாடசாலைத் தலைமைத்துவம் ஆகும். இதற்கென பாடசாலை அதிபருக்கு ஏனையோரை விட கூடிய வலு (Power) வழங்கப்பட்டிருப்பதனால் அதனைப் பயன்படுத்தி ஏனையோர்களின் மீது செல்வாக்கினைச் (Influence) செலுத்தி அவர்களின் நடத்தையில் மாற்றத்தினை (Change in Behaviour) கொண்டு வரவேண்டும். எனவேதான் பாடசாலைத் தலைமைத்துவத்தினால் பாடசாலையின் இலக்கு நோக்கி ஏனையோரை அழைத்துச் செல்ல முடியும் எனக் குறிப்பிடலாம்

## 3.0 தலைமைத்துவத்தின் வகைகள்

உற்பத்திப் பொருளை அல்லது சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களில் பணியாற்றுவோர்களை வழிநடாத்தி இலக்கினை அடைவதற்கென உருவாக்கப்படும் தலைமைத்துவம் பல வகைகளில் உருவாக்கப்படுவதனை காணமுடியும். பாடசாலைத் தலைமைத்துவமும் இவ்வகைகளில் ஒன்றைக் கொண்டதாகவே அமையமுடியும் அவை,

### 1. கொடை/ஆகாஷிக்கும் தலைமைத்துவம் (Charismatic Leadership)

இது தலைமை தாங்கும் ஆற்றல் இயற்கையாக ஒருவருக்குக் கிடைத்திருப்பதாகும். இவர் பிறப்பிலேயே தலைமை தாங்குவதற்கான ஆளுமையைக் கொண்டவர்களாகக் காணப்படுவதுடன் இவரால் இடப்படும் கட்டளைகளுக்கு கீழ்படிய ஏனையோர் தயாராக இருப்பர். இதன் காரணமாகவே தலைவர்கள் உருவாக்கப்படுவதில்லை; பிறக்கின்றார்கள் என்ற கொள்கை நிலைபெற்றுள்ளது. உலகில் பிரபலம் பெற்ற நெப்போலியன், மகாத்மாகாந்தி போன்றவர்கள் கொடைத் தலைமைத்துவத்தைக் கொண்டவர்களேயாவர்.

### 2. பாரம்பரிய தலைமைத்துவம் (Traditional Leadership)

இது பரம்பரையினால் கிடைக்கும் தலைமைத்துவமாகும். ஒருவர் பிறந்த பரம்பரையானது அவருக்கு தலைமை தாங்குகின்ற வாயப்பைப் பெற்றுக் கொடுக்கும். பெரும்பாலும் அரசியல் தலைவர்கள் பரம்பரைத் தலைமைத்துவத்தைக் கொண்டிருப்பதைக் காணலாம். இங்கிலாந்தில் எலிசபெத் மகாராணியின் குடும்பம் பாரம்பரிய தலைமைத்துவத்தைக் கொண்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. தெரிவுத் தலைமைத்துவம் (Elected Leadership)

இது தெரிவுசெய்யப்படுவதன் மூலம் உருவாகும் தலைமைத்துவமாகும். ஒரு குழவினில் இருந்து தெரிவு செய்யப்படுவதன் மூலம் அதன் அங்கத்தவர்களிலிருந்து ஒருவர் தலைவராக தெரிவு செய்யப்படுவார். குறிப்பாக தொழிலாளர்களில் இருந்து ஒருவரை தெரிவு செய்வதன் மூலம் உருவாகும் தொழிற்சங்கத் தலைவர் தெரிவுத் தலைமைத்துவத்தை கொண்டவரேயாவார்.

## 4. நியமனத் தலைமைத்துவம் (Appointed Leadership)

இது நியமனம் செய்யப்படுவதன் மூலம் உருவாக்கப்படும் தலைமைத்துவமாகும். பெரும்பாலும் நிறுவனங்களில் காணப்படுவது நியமனத் தலைமைத்துவமேயாகும். பாடசாலைகளிலும் இந்த வகையான தலைமைத்துவமே காணப்படுகின்றது. அதிபர் ஒருவர் கல்வித்திணைக்களத்தினால் நியமிக்கப்படும் போது அவர் பாடசாலைத் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்கின்றார். இதன் காரணமாகவே பாடசாலைத் தலைமைத்துவம் எனக் கொள்ள முடியும்.

## 4.0 தலைமைத்துவ இயல்புகள்

பாடசாலை முகாமைத்துவத்தில் தலைமைத்துவ இயல்புகள் முக்கியம் பெறுவதனை அவதானிக்க முடியும். தலைமைத்துவ இயல்புகள் என்பது தலைவன் தான் வைத்துக் கொள்ள விரும்பும் அதிகாரங்களை உதவியாளருக்கு வழங்க விரும்பும் சுதந்திரங்களையும் அடிப்படையில் கொள்வதாகும். இதன் படி தலைவன் வைத்திருக்க விரும்பும் அதிகாரங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட உதவியாளர்கள் பெற்றுக் கொள்ளும் சுதந்திரம் அதிகரித்துச் செல்லும். பாடசாலையைப் பொறுத்தவரை அதிபர் தனது கையிலுள்ள அதிகாரத்தை கையளிப்பதன் மூலம் உதவியாளர்களிடம் ஒப்படைக்க ஏனையோர் அனுபவிக்கும் சுதந்திரம் உயர்வடைந்து வரும். இதன் காரணமாகவே பாடசாலைகளில் மைய்ப்படுத்திய நிர்வாக முறைக்குப்பதிலாக கல்வி அமைச்சு பரவலாக்கிய நிர்வாக முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. முன்னரைப் போல் அல்லாமல், மாகாண, மாவட்ட, வலய, கோட்ட அடிப்படையிலான நிர்வாக முறை கல்வியமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது மட்டுமன்றி பாடசாலை அடிப்படையான முகாமைத்துவம் (School Based Management) என்பதனைக் கொண்டு வந்துள்ளது. இதன் காரணமாக கீழ் மட்டத்தில் வைத்தே தீர்மானமெடுத்து நடைமுறைப்படுத்தும் புதிய நிர்வாக முறையைக் காண முடிகின்றது. இங்கு அதிபர் பலமான தலைமைத்துவத்தைக் கொண்டிருக்க முடிகின்றது.

**தலைமைத்துவ இயல்புகளில் இருபெரும் பிரிவுகளை அடிப்படையில் காணலாம்.**

1. அதிகார மயப்பட்ட இயல்பு - Authoritatium Style
2. ஜனநாயக இயல்பு - Democratic Style

அதிகார மயப்பட்ட இயல்பு என்பது தலைவன் பெருமளவான அதிகாரங்களைத் தன்வசம் வைத்துக் கொண்டு உதவியாளர்களுக்கு மிகக் குறைந்த சுதந்திரத்தைக் கொடுப்பதாகும். இந்த இயல்பில் தலைவனே எல்லா வகையான தீர்மானங்களையும் எடுத்து அவற்றை உதவியாளர்களுக்கு அறிவிப்பான். இங்கு உதவியாளர்களின் நலனுக்கே மதிப்பளிக்கப்படும். இதன் காரணமாகவே இலக்கு நோக்கிய தலைமைத்துவம் (Task Oriented Leadership) என இது கொள்ளப்படுகின்றது. இது மிகக் குறைந்த சுதந்திரத்தை உதவியாளர்தள் அனுபவிப்பதுடன் தலைமைத்துவத்திற்கு பெருமளவான ஒத்துழைப்பை வழங்காதிருப்பதுடன் வேலையில் மிக அர்ப்பணிப்பையும் கொண்டிருக்க மாட்டார்கள். இது பாடசாலைத் தலைமைத்துவத்தில் அமையுமாயின் அதிபர் பெருமளவான ஒத்துழைப்பை ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாதது மட்டுமன்றி பாடசாலையின் வளர்ச்சியிலும் மாணவர்களின் முன்னேற்றத்திலும் ஆசிரியர்களை அர்ப்பணிப்பான சேவையை அனுபவிக்க முடியாதிருக்கும்.

ஜனநாயக தலைமைத்துவ இயல்பே தற்காலத்துக்கு பொருத்தமானது என கொள்ளப்படுகின்றது. இம் முறையில் தலைவன் உதவியாளர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்த முடியும். இதில் உதவியாளர்களின் சுதந்திரம் அதிகரிப்பதுடன் அவர்களது நலனிலும் தலைமை அக்கறை காட்டும் இதன் காரணமாகவே இத்தலைமைத்துவத்தை ஆள்நோக்கிய தலைமைத்துவம் (Person Oriented Leadership) எனக் கொள்வர். இதில் உதவியாளர்களின் ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் இணைந்திருக்கும். இதனால் முரண்பாடுகள் இல்லாத மாணவர் நலனில் அக்கறை கொண்ட ஆசிரியர் குழாத்தை கொண்டிருக்கும் வல்லமை அதிபருக்கு இருப்பதுடன்; பாடசாலையின் வளர்ச்சியும் மாணவர்களின் முன்னேற்றமும் இலகுவில் அடையப்பட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.0 நல்ல பாடசாலைத் தலைமைத்துவத்தின் குணவியல்புகள்

பாடசாலையின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளும் ஒருவர் இருசாராரை திருப்திப்படுத்த வேண்டிய நிலையில் இருப்பார். ஒரு புறம் கல்வியிலும் திருப்திப்படுத்தும் வகையில் பணிபுரிந்தால் மட்டுமே நல்ல பாடசாலைத் தலைமைத்துவம் இருப்பதாக கொள்ளப்படும். இத்தகைய நோக்கத்தை நிறைவு செய்ய பாடசாலை அதிபர் பின்வரும் குணவியல்புகளைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

1. **தொழில் நுட்பத்திறன் (Technical Skill)** என்ற வகையில் தொழில் தொடர்பான பூரண அறிவைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இதன்படி பாடசாலையில் இடம்பெற வேண்டிய ஒவ்வொரு செயற்பாடு தொடர்பாகவும் பூரண விளக்கத்தைக் கொண்டிருப்பதுடன் அதனை ஏனையோர் மூலம் நிறைவேற்றும் ஆற்றலையும் வைத்திருத்தல் வேண்டும்.

2. **தீர்மானமெடுக்கும் திறன் (Decision Making Skill)** என்கிற வகையில் தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றல் கொண்டவராக இருத்தல் வேண்டும். பாடசாலையின் நன்மை கருதி சிறப்பான தீர்மானங்களை மேற்கொள்வது பாடசாலைத் தலைமைத்துவத்தின் பொறுப்பாகும். இத்தகைய தீர்மானங்களை எடுக்கும்பொழுது ஜனநாயக முறையில் பாடசாலைச் சமூகத்தவரின் ஆலோசனையை பெற்று குழுத்தீர்மானமாக அதனை எடுத்தால், அது தவறில்லாத தீர்மானமாக இருப்பதுடன் பலரது பங்குபற்றலுடன் இணைந்து முகாமைத்துவத்திற்கு (Participation Management) துணை செய்யும்.

3. **தொடர்பாடல்த்திறன் (Communication Skill)** என்ற வகையில் செய்திகளை விரைவாகவும் சரியாகவும் வழங்கும் ஆற்றலை பாடசாலைத் தலைமைத்துவம் கொண்டிருத்தல் வேண்டும். வெவ்வேறு நோக்கமாகக் கொண்ட பாடசாலைச் சமூகத்தவருக்கு எத்தகைய செய்திகள் எந்த நேரத்தில் வழங்கப்பட வேண்டுமோ அதனைப் பொருத்தமான நேரத்தில் எழுத்து வடிவத்திலோ அல்லது வாய்மொழி வடிவத்திலோ வழங்கியிருத்தல் வேண்டும். இத்தகைய தகவல்களை வழங்கப்பொருத்தமான தொடர்பாடல் முறைகளைத் தேர்ந்தெடுப்பதும் பாடசாலைத் தலைமைத்துவத்தின் பொறுப்பாகும்.

4. **மானிடத்திறன் (Human Skill)** என்ற வகையில் பாடசாலைச் சமூகத்துடன் பழகும் நடத்தை கொண்டதாக பாடசாலைத் தலைமைத்துவம் காணப்படல் வேண்டும். பாடசாலைச் சமூகத்தவரைத் திருப்திப்படுத்துவதற்கு மற்றையோர் நிலைக்குள்ளாகும் (Empathy) பண்பினை பாடசாலைத் தலைமைத்துவம் கொண்டிருக்க வேண்டும். பாடசாலைச் சமூகத்தவரின் மனோநிலையை அறிந்து அவர்கள் நிலையில் நின்றும் பணியாற்றுகின்ற மனித நேயத்துடன் கூடிய தலைமைத்துவமாக பாடசாலைச் சமூகத்துவம் இருந்தால் மட்டுமே முரண்பாடுகளைக் குறைத்துக் கொள்ள முடியும்.

5. விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உள்ளதாக பாடசாலைத் தலைமைத்துவம் காணப்படுதல் வேண்டும். ஆசிரியர், மாணவர், பெற்றோர், பழைய மாணவர் என்ற வகையில் பலரிடமிருந்தும் பாடசாலைத் தலைமைத்துவத்திற்கு விமர்சனங்கள் வரலாம். அவற்றை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் கொண்டதாக பாடசாலை தலைமைத்துவம் காணப்படுவதுடன் விமர்சனங்களில் உண்மை இருந்தால் மட்டும் அவற்றை திருத்திக் கொள்ளும் மனப்பக்குவத்தை பேணிவருதல் வேண்டும்.

6. பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளும் ஆளுமை கொண்டதாக பாடசாலைத் தலைமைத்துவம் காணப்படுதல் வேண்டும். பாடசாலையில் எந்தவொரு புதிய விடயத்தை அறிமுகப்படுத்த வேண்டி ஏற்பட்டாலும் அது தொடர்பான புதிய பொறுப்பை (Responsibility) தட்டிக் கழிக்காது ஏற்றுக் கொள்ள முன்வருவது பாடசாலைத் தலைமைத்துவத்தின் கடமையாகும். இவ்வாறு ஏற்றுக் கொள்ளும் பொறுப்பை நிறைவேற்ற வசதியாக அதிகாரத்தைக் கையளிக்கின்ற (Delegation of Authority) கடமையும் பாடசாலைத் தலைமைத்துவத்திற்கு உண்டு. குறித்த பொறுப்பை யார் நிறைவேற்றுவார் என்பதை அறிந்து அவரிடம் அப்பொறுப்பைக் கையளித்தால் அது சுலபமாக நிறைவேறுவதைக் காணலாம்.

7. பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர்களது வாண்மையை விருத்தி செய்யத் தேவைப்படும் பயிற்சிகளை ஒழுங்கு செய்யும் ஆற்றல் கொண்டதாக பாடசாலைத் தலைமைத்துவம் காணப்படுதல் வேண்டும். சேவைக்காலப் பயிற்சி, மீளப்பயிற்சி என்பவற்றில் பங்கேற்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவது மட்டுமன்றி அத்தகைய பயிற்சிகளை பாடசாலைத் தலைமைத்துவமே ஒழுங்கு செய்ய முடியும். பயிற்சி தொடராக மனிதவள அபிவிருத்தியைக் கொண்டு வரும் என்பதனால் பயிற்சியும் அபிவிருத்தியும் இணைக்கப்பட்டிருப்பதனை பாடசாலைத் தலைமைத்துவம் உறுதிப்படுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8.** பாடசாலையின் உதவியாளர்களான ஆசிரியர்களையும் பின்பற்றுவோர்களான மாணவர்களையும் தூண்டுதல் பாடசாலைத் தலைமைத்துவத்தின் கடமையாகும். பெரும்பாலும் தேவைகளை இனங்காண்பதும் திருப்திகளை வழங்குவது (Needs and Satisfaction) தூண்டுதலின் அடிப்படைகளாக அமையும். எனவேதான் ஆசிரியர்களினதும் மாணவர்களதும் தேவைகளைக் கண்டறிவதில் பாடசாலைத் தலைமைத்துவம் அக்கறை கொள்வதுடன் அவற்றுக்கான திருப்திகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பாடசாலை ஆசிரியர்கள் தொழில் ரீதியாக முன்னேறுவதற்குரிய (Career Development) வாய்ப்புக்கள் தேவைப்படும். சுற்று நிருபங்கள், விளம்பரங்கள், வெகுசன ஊடகத் தகவல்கள் போன்றவற்றை சரியான சமயத்தில் வழங்குவதுடன், அவை தொடர்பான கலந்துரையாடல்களையும் ஆலோசனைகளையும் வழங்குவது பாடசாலைத் தலைமைத்துவத்தின் பணியே ஆகும். இதன் மூலம் பாடசாலையின் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையில் மட்டுமல்லாது இணைச் செயற்பாடுகளிலும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் பங்கு கொள்ளவைப்பதும் பாடசாலைத் தலைமைத்துவத்தின் ஊக்குதல் பணியேயாகும்.

**9.** பாடசாலை நேர முகாமைத்துவத்தை சிறப்பாக பின்பற்றுவது பாடசாலைத் தலைமைத்துவத்தின் கடமையாகும். நேரம் ஒரு அருமையான வளம் என்பதாலும் பாடசாலைகள் வருடத்தில் இருநூறு நாட்கள் மட்டுமே செயற்படுவதனாலும் இந்த நேரத்தை சிக்கனமாக பயன்படுத்துவற்கு பாடசாலைத் தலைமைத்துவமே நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கற்றல் கற்பித்தலுக்கு நேர அட்டவணை ஒதுக்குவது போன்றே இணைச் செயற்பாடுகளுக்கும் நேரத்தை ஒதுக்குவது பாடசாலைத் தலைமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன் ஒதுக்கிய நேரத்தில் குறித்த கருமம் நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதும் அவசியமாகின்றது. ஆசிரியர்களுக்கிடையே நேர முகாமைத்துவம் தொடர்பாக ஏற்படக் கூடிய முரண்பாடுகளை சமன் செய்ய நெகிழ்ச்சியுள்ள நேரமுகாமைத்துவத்தை கடைப்பிடிப்பதும் பாடசாலை தலைமைத்துவத்தின் கடமையாகும். இந்த நேர முகாமைத்துவத்தில் சுய அபிவிருத்தி (Self Development) என்பதற்கு நேரத்தை ஒதுக்கி ஆசிரியர்களின் முன்னேற்றத்திற்கு உதவுவது பாடசாலைத் தலைமைத்துவமேயாகும்.

**10.** பாடசாலையில் தோன்றுகின்ற முரண்பாடுகளை முகாமை செய்வது பாடசாலைத் தலைமைத்துவத்தின் பொறுப்பாகும். தனிப்பட்ட முரண்பாடுகள்; குழுக்களுக்கிடையிலான நிறுவன முரண்பாடுகள்; எனப் பல வகைப்பட்ட முரண்பாடுகள் தோன்றலாம் என்பதனால் அவற்றை இனம் காண்பதும் முரண்பாடுகளை தீர்த்து வைப்பதும் பாடசாலைத் தலைமைத்துவத்தின் பொறுப்பாகும். பழைய காலத்தில் முரண்பாடுகள் தோன்றுவது கெடுதியானது என்றும் அவற்றை எக்காரணம் கொண்டும் உருவாக விடக் கூடாது என்பதுமான கருத்து நிலவி வந்தது. ஆனால் அண்மைக்காலத்தில் முரண்பாடுகள் தோன்ற வேண்டும் என்றும் ஆனால் அவை உத்தம அளவில் (Optimum Level) காணப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். என்பதுமான கொள்கை வலியுறுத்தப்பட்டுள்ளது. உத்தம அளவிலான முரண்பாடுகள் ஊழியர்களின் செயற்திறனை (Performance) உயர் அளவில் வைத்துக் கொள்ள உதவும் என்பதனால் முரண்பாடுகள் தோன்றுவதற்கு அனுமதிப்பதும் ஆனால் அவற்றை உத்தம அளவில் வைத்திருக்க நடவடிக்கை எடுப்பதும் பாடசாலை முகாமைத்துவத்தின் கடமையாகும். இங்கு ஆகக் கூடுதலான முரண்பாடுகளையும்; ஆகக் குறைவான முரண்பாடுகளையும் இல்லாமல் செய்து உத்தம அளவான முரண்பாடுகளை பாடசாலைத் தலைமைத்துவம் பராமரித்து வருவது பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுவதாக அமையும்.

## 6.0 முடிவுரை

எந்தவொரு பாடசாலையின் வளர்ச்சியும் தலைமைத்துவத்திலேயே தங்கியுள்ளது, என்பதனை எவரும் மறுக்கவோ அன்றி மறைக்கவோ முடியாது. இதன் காரணமாகவே மிகச்சிறிய பாடசாலையிலிருந்து மிகப்பெரிய கல்லூரி வரை இத் தலைமைத்துவத்திற்கான நல்ல அதிபரைத் தேடி அலைகின்றனர். உண்மையிலேயே தலைவர்கள் பிறப்பதில்லை உருவாக்கப்படுகின்றார்கள். என்ற புதிய கோட்பாட்டின் படி பாடசாலைகளின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்ட அதிபர்கள் தமது தலைமைத்துவத்திற்கான ஆளுமையை வளர்த்துக் கொள்வார்களாயின், அவர்களால் பாடசாலைகளுக்கான நல்ல தலைமைத்துவத்தை பெற்றுக் கொள்ள முடியும். இத்தகைய அதிபர்களால் பாடசாலையுடன் தொடர்புடைய ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் பழைய மாணவர்கள் என்போரை பாடசாலையின் இலக்கை நோக்கிய பயணத்தை சிறப்பாக மேற்கொள்ள முடியும். இது பாடசாலை சமூகத்தினரிடையே உச்ச திருப்தியை பெற்றுக் கொடுப்பதுடன் பாடசாலையின் வளர்ச்சியை துரிதப்படுத்தி; மாவட்ட மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பாடசாலையின் மதிப்பை உயர்த்தி; பெரும் எண்ணிக்கை கொண்ட மாணவர்களைக் கவரும் நிலையை உருவாக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

*"கண்டிக்கத் தெரியாதவனுக்கு கருணை காட்டவும் தெரியாது."*

-கார்லைல்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சபா ஜெயராசா
கல்வியியல்துறை
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

# நவீன ஆசிரியத்துவமும் நலம் மிகவாக்கற் செயற்பாடுகளும்

மரபு வழியான ஆசிரியத்துவத்தின் அறிவுக்கையளிப்பில் குறிப்பிடத்தக்க வினைதிறன் குன்றிய செயற்பாடுகள் காணப்படுதல் ஆய்வுகளின் வழியாக வெளிப்பட்டுள்ளன. வேறுபட்ட தேவைகளை கொண்ட மாணவர்கள், மற்றும் வேறுபட்ட கற்றற்கோலங்கள் கொண்ட மாணவர்களிடத்துப் பல்வேறு ஊக்கல் உபாயங்களை வழங்கும் ஆசிரியத்துவம்பற்றிச் சிந்திக்கும்பொழுது முதற்கண் நலம்மிகவாக்கற் செயற்பாடு (Facilitation) முன்மொழியப்பட்டுள்ளது. மரபுவழிக்கற்பித்தலில் மாணவர்கள் தெறிப்பின்றி உள்வாங்கும் முனையாமைச் (Passive) செயலே மேலோங்கியுள்ளது. நலம் மிகவாக்கல் நடவடிக்கையில் மாணவர்களின் செயல்முனைப்பும் (Active) செயலூக்கத் தெறிப்பும் வலியுறுத்தப்படுகின்றது. மரபுவழிக் கற்பித்தலில் மௌன வாசிப்பு, மனனம் செய்தல், உள்வாங்கி ஒப்புவித்தல், ஒருவழித்தொடர்பாடல், விரிவுரைமுறை, ஆசிரியரே வினாவுயர்த்தி விடைதருதல் என்றவாறு கட்டமைப்புச் செய்யப்பட்ட சிந்தனை (Structored Thinking) முறைமையின் வலுப்படுத்தல் முன்னெடுக்கப்படுகின்றது. நெறிப்படுத்தப்பட்ட பயிற்சிகள், நிபந்தனைக்கு உட்பட்ட பரிசோதனைகள், கட்டுரையாக்கங்கள், ஒப்படைகள், குறுவினாவிடைகள், கட்டமைக்கப்பட்ட கட்டுரையாக்கம் என்ற செயற்பாடுகளில் செயலூக்கமுள்ள முனைப்பிலும், திறனாய்வற்ற வெளிப்பாடுகளே மேலெழுகின்றன.

பாத்திரமேற்றல், உளக்கோலநாடகம், திறன்சார்தொழிற்பாடுகள், அனுபவப்பகிர்வுக்கற்றல், மாதிரிகளை உருவாக்குதல், உளப்பாங்குகளை மீள்வடிவமைத்தல் முதலிய செயற்பாடுகள் மரபுவழிக்கற்பித்தலில் வறிதாகவுள்ளன. கல்விஉளவியல் ஆய்வுகள் கற்றற் கோலங்களைப் பொதுவாக நான்கு பிரதான கட்டமைப்புக்குள் வரையறைப்படுத்துகின்றன. அவையாவன

1. ஆய்வாளர்களின் அறிவாற்றல் வெளிப்பாடுகளை மறுப்பும் திறனாய்வுமின்றி நுகர்ந்து கொள்ளல்.
2. கோட்பாடுகளையும் முடிவுகளையும் பரிசோதனைகள் வழியாக ஏற்றல் அல்லது நிராகரித்துத் தெளிவு பெறுதல்.
3. வாழ்க்கை அனுபவங்களில் இருந்து அறிவைத் திரட்டிக் கொள்ளல்
4. சூழலில் பரிசோதித்தும், பகுத்தறிந்தும், உள்ளுணர்வை ஒளிபெறச் செய்தல்.

மரபு வழிக்கற்பித்தலில் இருந்து மாறுபடும் நலம்மிகவாக்கற் கற்பித்தல் நடவடிக்கை மாணவர்களை “ ஒன்று திரட்டிப்பார்க்கும்” அணுகுமுறையைத் தளர்த்தி விடுகின்றது. மாணவர்களின் பன்முகமான இயல்புகளையும் தனித்துவமான ஆக்க மலர்ச்சிகளையும் கவனித்துக் கொள்கின்றது. தனித்தனிச் செயற்பாடு (One Toone Activity) என்பதைக் குவியப்படுத்துகின்றது. ஒவ்வொரு கற்றற் செயற்பாட்டிலும் உட்பொதிந்துள்ள தனித்துவத்தைக் கூர்ந்து நோக்குகின்றது.

பாரம்பரியமான செயற்பாடுகளில் ஆசிரியரே கற்றற் செயற்பாடுகளைத் தெரிவு செய்பவராகவும் ஒழுங்கமைப்பவராகவும் தொழிற்பட நேரிடுகின்றது. நலம்மிகவாக்கல் நடவடிக்கையின் போது இந்நிலை மாற்றியமைக்கப்படுகின்றது. கற்றலின் போது மாணவரின் சுதந்திரமான தொழிற்பாடுகளிற்கு இங்கே இடமளிக்கப்படுகின்றது. நலம்மிகவாக்கல் நடவடிக்கை பின்வரும் சிறப்பார்ந்த பரிமாணங்களைக் கொண்டுள்ளது.

1. கற்றல் இலக்குகளை தெளிவுபடுத்துவதற்கு உதவுதல்.
2. கற்கும் கால அட்டவணையைத் திட்டமிடுவதற்கு அனுசரணை செய்தல்.
3. கருத்துகளை இடமாற்றம் செய்து ஆற்றலை வளம்படுத்த உதவுதல்.
4. நட்பு நிலையில் அறிவுநிலை மறுதலிப்பை (Friendly conforonting) வழங்குதல்.
5. ஆழ்ந்த ஈடுபாட்டுக்குரிய அறிவுநிலை உணர்ச்சியைத் தூண்டுதல்.
6. கல்வி சார்ந்த விழுமியங்களை வளர்க்கவும் கட்டமைப்புச் செய்யவும் உதவுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய வகுப்பறைச் செயற்பாடுகள் வரையறுக்கப்பட்ட அறிவுக்கையளிப்பும் வரையறுக்கப்பட்ட மீள் ஒப்புவித்தலும் என்ற ஒடுங்கிய பாதையினூடான பயணிப்பைக் கொண்டுள்ள வேளையில் ஆசிரியரும் மாணவரும் புத்தாக்கச் செயல்களில் ஈடுபடுவதற்கு ஒருவித அச்சம் காட்டுகின்றனர்.

அண்மைக்காலமாக வெளிவந்து கொண்டிருக்கும் கல்வி உளவியல் மற்றும் கற்பித்தலியல் நூல்களில் நலம் மிகவாக்கலுக்குரிய புத்தாக்கச் செயற்பாடுகளும், ஆக்கமலர்ச்சியைத் தூண்டும் நடவடிக்கைகளும் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை நலம் மிகவாக்கலை நடைமுறைப்படுத்துவதில் பல அறை கூவல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இறுகிய பரீட்சை முறைமை, நெருங்கிய கால அட்டவணைகள், பெருகிப்பருத்த வகுப்பறைகள், எளிதில் மாற்றமுறா இறுகிய மனோபாவங்கள் முதலியவற்றால் புத்தாக்க முயற்சிகள் இலங்கையில் முன்னெடுக்க முடியாதிருக்கின்றது.

ஆசிரியத்துவத்தை மேம்படுத்தும் வாண்மைக் கல்வித்திட்டங்களில் இத்தகைய புதிய விடயங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஆனால் நடைமுறையில் இவை மாணவர்களைச் சென்றடைவதில்லை. இச்சந்தர்ப்பத்தில் ஆசிரிய வாண்மைக்கும் ஏனைய வாண்மைகளுக்குமிடையே காணப்படும் ஒரு முக்கிய வேறுபாட்டைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக மருத்துவவாண்மையிலே ஒரு புதிய நுட்பத்தைக் கற்பித்தால் மருத்துவர்கள் உடனடியாக அதை நடைமுறைக்குக் கொண்டுவந்து விடுகிறார்கள். இத்தகைய ஒருநிலை ஆசிரிய வாண்மையிலே காணப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. ஆசிரியத்துவத்தில் புத்தாக்கங்களின் தேவையை அண்மைக் காலத்தைய நிகழ்ச்சிகள் மீளவலியுறுத்துகின்றன.

சமகால வகுப்பறை உளவியல் புதிய புதிய அறைகூவல்களை நோக்கித் திசைகொள்ளத் தொடங்கியுள்ளது. கற்க வேண்டிய உள்ளடக்கத்தின் அதிகரிப்பு போட்டி அழுத்தங்களின் மிகையான தாக்கங்கள், உட்கட்டுமானம் தொடர்பான இடர்கள், தரவலியுறுத்தல் நடவடிக்கைகளால் அனுகூலம்மிக்கோர் மேலும் அனுகூலங்களைப் பெறுதல், கல்வி நுகர்வோரிடத்துப் பாரிய அறிக்கை இடைவெளிகள் தோன்றுதல் முதலியவை மேலெழுந்து வருகின்றன.

இந்நிலையில் அணுகப்படாதவர்களை அணுகுதல் (Reaching the unreached) என்ற தொடர் முன்னெடுக்கப்படுகின்றது. கல்வியை அகிலப்படுத்துதல், தரமான கல்வியை அனைவருக்கும் விரிவாக்கம் செய்தல், கல்வியிலே சமூக நீதியை முன்னெடுத்தல் முதலிய செயற்பாடுகளில் உளவியலின் ஒன்றிணைப்புத் தவிர்க்க முடியாதுள்ளது. தனியாண்மைப் பொருளாதாரத்தை குவியப்படுத்தும் சமகால "அபிவிருத்தி" நடவடிக்கைகள் வலியுறுத்தும் உளவியலில் மௌனமான வர்க்கச்சார்பு காணப்படுகின்றது.

தீவிரமாகத் தொழிற்படத் தொடங்கியுள்ள உலகமயமாக்கல் நடவடிக்கைகள் தீவிரமான வறுமையின் உராய்வுகளை அதிகரிக்கச் செய்துவரும் நிலையில் அவற்றின் தாக்கங்கள் வகுப்பறைகளில் நேரடியாக வெளிப்படத் தொடங்கியுள்ளன. ஆசிரியரின் நலம்மிகவாக்கல் நடவடிக்கைகள் இவை அனைத்தையும் மனங்கொள்ள வேண்டியுள்ளது.

திறந்த பொருளாதார முறைமையில் கல்வியானது கவர்ச்சிமிக்க விற்பனைப் பண்டமாக்கப்பட்டுள்ளமையினால் வாய்ப்பு மிக்க வகுப்பினர் தரச்சிறப்புமிக்க கல்வியைத் தமது கொள்வனவுத் திறனாற் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இந்நிலையில் நிராகரிக்கப்பட்டோருக்குரிய கல்வியை வகுப்பறைகளிலே கையளிப்பதற்குத்திடமான கருத்தியலும் வளமான உளவியல் உபாயங்களும் வேண்டப்படுகின்றன.

மெய்யியல் உண்மையைத் தேடிநகர, உளவியல் மனிதரைத் தேடிநகர வேண்டியுள்ளது. கல்விச் செயல்முறையிலிருந்து நிராகரிக்கப்பட்டோர் வெளிவீசப்படாதிருப்பதற்குரிய பாதுகாப்பு வலைகளை (Safety Net) வகுப்பறைகளிலே உருவாக்கித்தருதல் ஆசிரியரின் வாண்மைப் பொறுப்பு ஆகின்றது.

**நன்றி அகவிழி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்.அ.நவரத்தினராஜா
தலைவர்/விலங்கு விஞ்ஞானத் துறை
விவசாய பீடம்
யாழ் பல்கலைக்கழகம்

# வன்னிப்பிரதேசத்தில் கால் நடை அபிவிருத்தி

இலங்கையில் கால் நடைகளின் எண்ணிக்கை உலர் வலயத்திலேயே அதிகமாக காணப்படுகின்றது. எனினும் வடமாகாணத்தைக் கவனிக்கும் போது வன்னிப் பிரதேசத்திலேயே குறிப்பிடத்தக்களவு கால் நடைகள் காணப்படுகின்றன. ஆனால் இவற்றில் 85% மானவை உள்ளூர் இனங்களாகவும் 15% மானவை தரமுயர்த்தப்பட்ட கால் நடைகளாகவும் காணப்படுகின்றன.

நீண்ட கால நோக்கில் உள்ளூர் கால் நடைகளின் தரமுயர்த்தல் முக்கியமானதாக அமைகின்றது. இவ்வரிசையில கீழ்வரும் முறைகள் தரமுயர்த்தலில் பயன்படுத்தப்படுகின்றன.

## 1. செயற்கை முறைச் சினைப்படுத்தல் (Artificial Insemination)

உள்ளகமுறை வளர்த்தலை (Internsive) பின்பற்றுகின்ற இடங்களிற்கு, செயற்கை முறைச் சினைப்படுத்தல் பொருத்தமானதாகும். அத்துடன் தேவை ஏற்படும்போது வினைத்திறனுடன் கால்நடை மருத்துவசேவை வழங்கப்பட வேண்டும். ஆகவே இச் சினைப்படுத்தல் முறை கிராமப் புறங்களுக்கு பொருத்தமானதல்ல. ஏனெனில் போதிய மின்சார வசதிகள் இல்லாமை, போக்குவரத்து இடர்பாடுகளும் விந்து பாயத்தின் கிடைக்குமளவு போன்றன செயற்கை முறைச் சினைப்படுத்தலுக்கு மிகவும் தடங்கலாக திகழ்கின்றன. வடமாகாணத்தில் தற்போது குளிரூட்டப்பட்ட விந்துப் பாயமே (Chile Semen) செயற்கை முறை சினைப்படுத்தலுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

செயற்கை முறைச் சினைப்படுத்தலை அபிவிருத்தி செய்வதற்கு முக்கிய கட்டம் வடமாகாணம் முழுவதும் உறைநிலை விந்துப்பாயத்தை (Deepfrozen Semen) அறிமுகப்படுத்தப்படுவதாகும். திரவ நைதரசன் இப்பிரசேங்களில் போதியளவு விநியோகிக்கப்பட்டால், கிராமப்புறங்களில் கூட உறைநிலை விந்துப்பாயத்தை சினைப்படுத்தலுக்குப் பயன்படுத்த முடியும். குளிரூட்டப்பட்ட விந்துப்பாயத்தை போலல்லாது உறை நிலை விந்துப்பாயம் பலவருடங்களுக்கு வைத்திருக்க முடியும். எமது அனுபவத்தில் குளிரூட்டப்பட்ட விந்துப்பாயம் எதிர்பார்க்கப்படுமளவிற்கு பயனளிப்பதில்லை. இதற்கான காரணம் யாதெனில் குளிரூட்டப்பட்ட விந்துப்பாயத்தை விநியோகிப்பதில் அடிக்கடி ஏற்படும் தடைகள் பண்ணையாளர் மத்தியில் செயற்கை முறை சினைப்படுத்தலிலுள்ள நம்பிக்கையை இழக்கச் செய்கின்றது.

உறை நிலை விந்துப்பாய உற்பத்திக்கு திரவ நைதரசன் வழங்கல் மிகவும் முக்கியமானது. இதற்கான திரவ நைதரசன் பொறி ஒன்றை (Liquid Plant) கொள்வனவு செய்வது சிறந்தது. திரவ நைதரசன் கொள்கலன்கள் 30-40 லீற்றர் கொள்ளளவு உடையனவாகவும், வெளிக்களக் கொள்கலன்கள் 2-3 லீற்றர் கொள்ளளவுடையனவாகவும் கொள்வனவு செய்ய வேண்டும். அத்துடன் தனியார் வகையைச் சார்ந்த சினைப்படுத்துனர்களை உறை நிலை விந்துபாயத்தை பயன்படுத்துவதற்கு பயிற்சி அளிக்க வேண்டும். அனுபவரீதியில் கருத்தரிப்பு வீதம் உறை நிலை விந்துப்பாயத்திலும் பார்க்க, குளிரூட்டப்பட்ட விந்துப்பாயத்திற்கு அதிகம். தற்போது திருநெல்வேலியில் உள்ள செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையம் குளிரூட்டப்பட்ட விந்துப் பாய உற்பத்தியில் சில தொழிநுட்பங்களை உட்புகுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.

திருநெல்வேலி நிலையத்தில் பெருமளவில் உள்ளினச் சேர்க்கை (Inbreeding) அவதானிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் விந்துப்பாய சேகரிப்புக்கு பயன்படுத்தப்படும் காளைகள், கடாக்கள் காலத்திற்கு காலம் மாற்றப்படுவதில்லை. ஆகக் குறைந்தது மூன்று வருடத்திற்கு ஒரு முறையாவது காளைகள் மாற்றப்பட வேண்டும்.

குளிரூட்டப்பட்ட விந்துப்பாயத்தை பயன்படுத்தி செயற்கை முறைச் சினைப்படுத்தலை மேற்கொள்ளும் போது முக்கிய குறிக்கோள் யாதெனில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலம் பிறக்கும் கன்றுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதேயன்றி சினைப்படுத்தலின் எண்ணிக்கையை மாத்திரம் அதிகரிப்பதல்ல. மேற்குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கு கால் நடைகள் செறிவாக உள்ள இடங்களிற்கு செயற்கை முறைச் சினைப்படுத்தலுக்கு சுற்றுக்களை (Al Circuits) உருவாக்க வேண்டும். துவிச்சக்கர வண்டிகளை அல்லது மோட்டார் வண்டிகளை பயன்படுத்தி செறிவான முறையில் சினைப்படுத்தலை மேற்கொள்ள முடியும். இதனால் செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவை அதிகரிக்கும். அத்துடன் முன்னேற்றகரமான கால்நடைப் பண்ணை முகாமைத்துவத்தையும் கடைப்பிடித்தல் வேண்டும். செயற்கை முறைச் சினைப்படுத்தல் மேற்கொள்ளுகின்ற சினைப்படுத்துனர்கள், கால்நடை மருத்துவர்கள், பண்ணையர்களுக்கு வேட்கையை உரிய நேரத்தில் கண்டறிந்து சம்பந்தமான முழுமையான விளக்கங்களை வழங்குவது மிகவும் அவசியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்கைமுறைச் சினைப்படுத்தலின் பின்தொடரும் நடவடிக்கைகள் (AL FOLLOW UP)

அனேகமான சினைப்படுத்துனர்கள் செயற்கை முறைச் சினைப்படுத்தலின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன், தமது வேலை நிறைவடைந்துவிட்டதாக எண்ணுகின்றனர். ஆயினும் செயற்கை முறை சினைப்படுத்தலின் மூலமாக உருவாகும் கன்றுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் முக்கியமானதொன்றாகும். எனவேதான் சினைப்படுத்தலின் வினையை தீர்மானித்தல், செயற்கை முறைச் சினைப்படுத்தலின் பின்தொடரும் நடவடிக்கைகள் முக்கியமுடையதாகின்றது. இது கீழ் வரும் திட்டங்களைக் கொண்டுள்ளது.

### 1. கருத்தரித்தலுக்கான பரிசோதனை

இப்பரிசோதனை சினைப்படுத்தி 45-60 நாட்களுக்குப்பின் பொதுவாக கால் நடை மருத்துவர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது விலங்குற்பத்தி சுகாதார திணைக்களம் (Department of Animal Production & Health) செயற்கை முறைச் சினைப்படுத்தலை பின்தொடரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். கால் நடை மருத்துவர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் (Incentive) வழங்குகின்றது. அதுபோன்ற செயற்கை முறைச் சினைப்படுத்தலின் மூலம் பிறக்கும் கன்றுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு, ஊக்குவிப்புப் பணத்தை வழங்கலாம். ஒவ்வொரு கருத்தரிப்பு பரிசோதனைக்கும் பணம் வாங்குவதிலும் பார்க்க, கர்ப்பகால இறுதியில் ஆரோக்கியமான கன்றினை ஈன்ற பின்னர் செயற்கை முறைச் சினைப்படுத்துனருக்கும் கால் நடை மருத்துவருக்கும் முன்னர் வழங்கியதிலும் பார்க்க கூடிய பணத்தை வழங்குதல் மிகவும் சிறந்த ஊக்குவிப்புத் திட்டமாகும். இதன் மூலம் ஆரோக்கியமான கன்றுகள் பிறப்பதற்கு செயற்கை முறைச் சினைப்படுத்துனரும் கால்நடை மருத்துவரும் உற்சாகமாக செயற்படுவதற்கு வழிவகுக்கும்.

கருத்தரிப்பு பரிசோதனையில் பாலில் புரொஜெஸ்திரோனின் (Progesterone) அளவை சினைப்படுத்தி 20 நாட்களின் பின்னர் பரிசோதிக்க முடியும். இதற்காக புரொஜெஸ்திரொன் பரிசோதிப்புத் தொகுதி (Progesterone kit) பயன்படுத்தப்படுகின்றது. கருத்தரிப்பின் இவ்வோமோனின் அளவு கூடுதலாகவும் அல்லாவிடின் இதனளவு குறைவாகவும் காணப்படும்.

### 2. வளமற்ற விலங்குகளிற்கான சிகிச்சை முகாம்.

ஒவ்வொரு கால்நடை மருத்துவர் அலுவலகத்திற்கும், ஒவ்வொரு வளமற்ற சிகிச்சை முகாம் நிறுவப்படல் வேண்டும். கிராமப் புறங்களிலும் கூட கிழமைக்கு ஒரு தடவை அல்லது இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை இத்தகைய முகாமமைத்து வளமற்ற விலங்குகளை அல்லது நிரந்தர வளமற்ற விலங்குகளிற்கு சிகிச்சை வழங்கலாம். ஒவ்வொரு கால்நடை மருத்துவரும் ஆகக் குறைந்தது மூன்றுமணி நேரமாவது ஒவ்வொரு கிராமப்புற மருத்துவ நிலையத்திலும் செலவழிக்க வேண்டும்.

### II இயற்கை முறைச் சினைப்படுத்தல்
### Natural Insemination

#### காளை, கடா நிலையங்களை நிர்மாணித்தல்

செயற்கை முறைச் சினைப்படுதல் போன்று இயற்கை முறைச் சினைப்படுத்தலுக்கும் முக்கியத்துவம் வழங்க வேண்டும். தற்போது செயற்கை முறைச் சினைப்படுத்தல் மிருக வைத்திய நிலையங்களிற்கு அண்மித்த பிரதேசங்களிலேயே நடைபெறுகின்றது. அத்துடன் இப்பிரதேசங்களில் போக்குவரத்து வசதிகள் மின்சார குளிர்சாதன வசதிகள் உள்ளன. ஆனால் பெரும்பான்மையான இனவிருத்திக் குடித்தொகை இயற்கை முறை சினைப்படுத்தலுக்கே உட்படுகின்றது. எனவே இயற்கை முறைச் சினைப்படுத்தலுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

யாழ் மாவட்டத்தில் தீவுப்பகுதிகள், வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி பகுதிகளில் காளை, கடா நிலையங்கள் அமைக்க முடியும். இதே போல் வன்னிப் பிரதேசத்தில் செயற்கை முறைச் சினைப்படுத்தலை மேற்கொள்ளாத பகுதிகளில் இந் நிலையங்களை நிர்மாணித்தல் மிக முக்கியமானதொன்றாகும்.

யாழ் குடாநாட்டில் செயற்கை முறைச் சினைப்படுத்தலை மேற் கொள்ளும் பகுதிகளில் கூட கடா நிலையங்கள் அமைத்தல் வேண்டும். இதே போன்று செம்மறியாட்டினை தரமுயர்த்துவதற்கு இயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்படலாம். இந்நிலையங்கள் Red, Madras, Bannur போன்ற வர்க்கங்களை கொண்டிருக்கும். நிலையங்கள் LIBCO இனால் நிர்வகிக்கப்படும். தேவையான காளைகளை, கடாக்களை விலங்குற்பத்தி சுகாதார திணைக்களம் வழங்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை முறைச் சினைப்படுத்தலுக்கு நியாயமான விலையை LIBCO பெற்றுக் கொள்ளும். இவ் விலங்குகளுக்குத் தேவையான செறிதீவனம், மருந்து வைத்திய சேவைகள் LIBCO வினால் ஒழுங்காக்கப்படும். ஒவ்வொரு சினைப்படுத்தும் நிலையத்திற்கும் பொறுப்பாக பயிற்சி பெற்ற படித்த விவசாய குடும்பத்தைச் சார்ந்த இளைஞன் ஒருவனை நியமிக்க வேண்டும். அத்துடன் சினைப்படுத்தலுக்கு உபயோகிக்கும் விலங்குகள் காலத்திற்குக் காலம் மாற்றப்படல் வேண்டும். சினைப்படுத்தும் நிலையப் பொறுப்பாளர் இயற்கை முறைச் சினைப்படுத்தலின் மூலம் பிறந்த கன்றுகள் பற்றிய குறிப்புகளை பராமரித்தல் வேண்டும். அத்துடன் இக்கன்றுகளை பதிவு செய்யவும் வேண்டும்.

## III. திட்டமிட்ட இனவிருத்தி
## (Planned Breeding)

வன்னிப் பிரதேசத்தில் பரந்தளவிலான கால்நடை தரமுயர்த்தலுக்காகச் செயற்கைமுறைச் சினைப்படுத்தலை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பொதுவாக வெப்ப வலயக் காலநிலை நிலவும் பரதேசங்களில் மார்கழி, தை மாதங்களில் பெரும்பாலான கன்று ஈனுதலை திட்டமிடுதல் விரும்பத்தக்கது. ஏனெனில் மேற்குறிப்பிட்ட மாதங்களிலேயே புற்களின் கிடைக்குமளவு அதிகமாக உள்ளது. இதனால் தாய் விலங்குகள் போதியளவு ஊட்டச் சத்துக்களை புற்களிலிருந்து பாலுற்பத்திக்குப் பெறக்கூடியதாகவுள்ளது, அத்துடன் அநேகமான தன்று ஈனல்கள் இயற்கையாகவே மேற்குறிப்பிட்ட மாதங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. பெரும்போக மழையைத் தொடர்ந்து வரும் காலப்பகுதிகளில் மிகையான புற்களின் வளர்ச்சி ஊடாக உயர் போசணை கிடைப்பதால் கருத்தரிப்பு வீதம் அதிகரிக்க ஏதுவாகின்றது.

2. வேட்கைக்கான அறிகுறிகள் விற்றமின் ஏ சத்து அடங்கிய உயர் போசணையினால் தெளிவாக வெளிப்படுத்தப்படும்.

இக்காரணிகளை மையமாக வைத்து புரொஸ்திரேகிளான்டின் (Proteroglandin) பயன்படுத்தி பெரும்பாலான விலங்குகளை தை, மாசி மாதங்களில் வேட்கை ஒரு முகப்படுத்தலுக்கு உட்படுத்தி திட்டமிட்ட இனவிருத்தியை மேற்கொள்வது வன்னிப் பிரதேசத்துக் கால் நடைகளை தரமுயர்த்துவதற்கு சிறந்த வழியமைக்கும்.

தொழிற்படும் நிலையிலுள்ள மஞ்சள் சடலத்தை, தொழிநுட்ப உத்தி மூலமாக புரொஸதிரோகிளான்டினை பயன்படுத்தி சிதைவடையச் செய்யப்படுகின்றது. அத்துடன் சரியாக இனங்காண முடியாத பட்சத்தில் புரொஸ்திரோகிளாண்டின் ஒரு முறை ஊசி மூலம் ஏற்படுவதிலும் பார்க்க இருதடவைகள் ஏற்றப்படுதல் மிகவும் சிறந்ததாக கருதப்படுகின்றது. இதன் மூலம் எல்லா விலங்குகளையும் ஒரே நேரத்தில் வேட்கைக்கு கொண்டு வரமுடியும். புரொஸதிரோகளாண்டின் பாவனையானது சரியான நேரத்தில் வேட்கையை இனங்காணலில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதுடன் பண்ணையாளரை வேட்கைக்கான அறிகுறிகளை கண்டறிவதற்கு பயிற்றவும் உதவுகின்றது. சினைப்படுத்தலின் பின்னர் எல்லா விலங்குகளும் சினைப்படுத்தி 60 நாட்களின் பின்னர் கருத்தரிப்புப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்கு சகல கருத்தரியாத வேட்கை வட்டத்திற்கு உட்படுத்தப்படுகின்ற விலங்குகள் தெரிவு செய்யப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட விலங்குகள் குறிசுடுவதன் மூலம் அல்லது காதில் அடையாளம் இடுவதன் மூலம் அடையாளம் காணப்படுகின்றன.

> *கடவுள் வேலைக்காரனாக முடியாது*
> *வேலைக்காரன் கடவுளாக முடியாது*
> *கடவுளாகவும் வேலைக்காரனாகவும்*
> *இருப்பது மாடுதான்*
> *வருஷமெல்லாம் அடிவாங்குவதும்*
> *தைப்பொங்கல் வந்தால் வணங்கப்படுவதும்*
> *அது தான்.* -கவிஞர் வைரமுத்து-
> (கள்ளிக்காட்டு இதிகாசம் நாலிலிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி. கோகிலா மகேந்திரன்**
பிரதிக்கல்விப்பணிப்பாளர்
(கல்வி முகாமைத்துவம்)
வலிகாமம் கல்வி வலயம்
மருதனார் மடம் சுன்னாகம்

# பிள்ளைப் பருவத்து உளப்பிரச்சினைகள்

ஆரோக்கியம் என்பது நோயற்ற நிலை மட்டுமல்ல; உடல், உள, சமூக, ஆன்மீக மட்டங்களில் ஒருவர் அமையக் கூடிய அதியுன்னத நிலையே ஆரோக்கியமாகும் என உலக சுகாதர ஸ்தாபனம் கூறுகின்றது. அத்தகைய ஆரோக்கிய நிலையை அடைவது அவ்வளவு சுலபமானதல்ல. வளர்ச்சி அடைந்த நாடுகளிலேயே ஏறத்தாழ 20% இனர் சமூகத்தில் ஏதோ ஒரு உளப்பிரச்சினையுடன் காணப்படுகின்றனர். வளர்ந்து வரும் நாடுகளில் காணப்படும். பல்வேறுபட்ட நெருக்கீடுகள் காரணமாக இந்நூற்று வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதனிலும் கடந்த 20 வருடகால யுத்த அனர்த்தங்களும் கடந்த ஆண்டு இறுதியில் நடைபெற்ற சுனாமி அனர்த்தமும் எமது நாட்டில் இந்த நூற்று வீதத்தை மேலும் அதிகரித்துள்ளது. மக்கள் குழாமும் முழுமையும் பாதிக்கப்படுகின்ற நேரங்களில் சிறுவர்கள் இன்னும் கூடுதலான பாதிப்பை அனுபவிக்கின்றார்கள்.

பொதுவாக உளப்பிரச்சினைகளை பல்வேறு வழிகளில் வகைப்படுத்தலாமாயினும், அது தோன்றும் காலத்தை (வயதை) வைத்து வகைப்படுத்துவது ஒரு வழி. அந்த வகையில் குழந்தை பருவத்திலும் பிள்ளைப் பருவத்திலும் தோற்றம் பெற்று வாழ்வின் இறுதிக் காலம் வரை நிலைத்து நிற்கிற அல்லது முற்றிலும் மாறிப் போகிற உளப்பிரச்சினைகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

பிள்ளைப்பருவத்தில் மாத்திரமல்லாது வளர்ந்தோரிலும் தோற்றம் பெறக் கூடிய பிரச்சினைகள் இங்கு பேசப்படவில்லை. பிள்ளைப் பருவத்தில் தோற்றம் பெறும் உளப்பிரச்சினைகள் மிகப் பெரியதோர் பரப்பை உள்ளடக்கக் கூடியவை. வளர்ந்தவர்களோடு ஒப்பிடுகையில் பிள்ளைகள் பெறும் சமூக பொருளாதார உள ஆதரவு குறைவு. அதனால் இப்பிரச்சினைகளை சமாளிப்பதில் அவர்கள் அதிகம் அல்லற்படுவர். பிரச்சினை உள்ள பிள்ளைகள் பெற்றோரிலோ அல்லது பாதுகாவலரிலோ அதிகம் தங்கியிருப்பதால் அவர்களுக்கு பிள்ளைகளின் நிலமை ஒரு நெருக்கீடாக இருக்கும். இப் பிள்ளைகளின் பெற்றோர் யார்? ஆசிரியர் யார்? அவர்களின் கல்வித்தர நிலை யாது? அவர்களது உள ஆரோக்கியம் என்ன? இவர்களுக்குக் கிடைக்கக் கூடிய மருத்துவ வசதி என்ன? இவர்கள் அணுகக் கூடிய உளவளத் துணையாளர் யார்? என்பவற்றைப் பொறுத்து இவர்களின் எதிர்காலம் நிச்சயிக்கப்படும்.

பிள்ளைப்பருவத்து உளவளர்ச்சியும் உளப்பிரச்சினைகளும் அவர்கள் பெரியவர்களாக வரும்போது மிகப்பெரிய செல்வாக்கினை செலுத்தும் என்பதை எல்லாக் கொள்கையாளர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். வளர்ந்த பின்னர் ஒருவரில் மாற்றங்கள் செய்வது சுலபம் அல்ல என்பதையும் அனைவரும் ஏற்றுக்கொள்வர். அந்த வகையில் பிள்ளைப் பருவத்து உளப்பிரச்சினைகள் தொடர்பான அறிவு மிக அவசியமானது. அண்மைக்காலத்து ஆய்வுகள் இப்பருவத்தின் உள நலப்பிரசிசினைகள் தொடர்பாகப் பல தகவல்களை தந்துள்ளன. பிள்ளைகளின் உளம் சார் பிரச்சினைகளை இனம் காண்பதற்கு அந்த வயதின் இயல்பான பண்புகள் தெரிந்திருக்க வேண்டும். நிலத்தில் விழுந்து புரண்டு அழுதல், இரண்டு வயதுப்பிள்ளையின் இயல்பென நோக்கலாம். ஆயினும் அதே கூட்டு நடத்தை எட்டு வயதுப் பிள்ளையில் காணப்படுமாயின், அது அசாதாரணம் என்று நோக்க வேண்டி வரும். ஒரு குறிப்பிட்ட வயதில் இயல்பு என்று சொல்லத்தக்க நடத்தைகள் இன்னொரு வயது வரும்போது நோய்குரிய குணம் குறி எனக் கருதப்படும். இப் பருவத்தில் தோற்றம் பெறும் உளப்பிரச்சனைகளை மிகச்சுருக்கமாக பின்வரும் தலைப்புக்களில் அட்டவணைப்படுத்தலாம்.

## 1. விவேக குறைபாடு

அறிக்கை சார் தொழிற்பாடு நுண்மதிகள் தொழிற்பாடு ஆகியவை சராசரியை விட குறைவாக இருக்கும். இந்நிலை பிறப்புக்கு முந்திய பிறப்பின் போதான அல்லது பிறப்பிற்கு பிந்திய காரணிகளால் ஏற்படும். 18 வயதின் பின் இது ஒருபோதும் தோன்றுவதில்லை. இவர்களது இசைவாக்கத்திறன்களிலும் பாதிப்பு இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கற்றல் குறைபாடுகள்

இவர்களது நுண்மதிஈவு சாதாரணமானது ஆனாலும் அந்த வயதுக்கும் நுண்மதிக்கும் பொருந்தாத வகையில் கற்றல் சார்ந்த குறிப்பிட்ட ஒரு துறையில் மட்டும் குறைபாடு காணப்படும்.

**1. வாசிப்பு சார் குறைபாடுகள்.**

**2. எழுத்து சார் குறைபாடுகள்.**

**3. கணிதம் சார் குறைபாடுகள்.**

இவர்களது புலன் அங்கங்களில் குறைபாடு இருப்பதில்லை.

## 3. தசைத் தொழிற்பாட்டு ஆற்றல் குறைபாடு

இவர்களது நுண்மதி ஈவு சாதரணமானது. ஆயினும் தசை இயக்க இணைவில் பிரச்சினைகள் காணப்படும். சிறுவயதில் உடையின் தெறி பூட்டுதல், சப்பாத்து லேஸ் கட்டுதல் ஆகியவற்றில் பிரச்சினையை எதிர்கொள்ளும் இவர்கள், சற்று வளர்ந்த பின் பந்துடன் விளையாடுவது மாதிரிகளைக் காட்டுவது ஆகியவற்றிலும் கஷ்டங்களை எதிர் கொள்ளலாம்.

### தொடர்பாடல் குறைபாடு

இங்கும் பிள்ளையின் நுண்மதிஈவு சாதாரணமாக இருக்கும். ஆனாலும் மொழியை உபயோகிப்பதில் பிள்ளை சிரமப்படும். புதிய சொற்களை கற்கும் போது பழைய சொற்களை மறந்து போவதும், இலக்கணத்தை சரியாகப் புரிந்து கொள்ளாது பயன்படுத்துவதும் அவதானிக்கப்படலாம். சிலவேளை சில உச்சரிப்புக்கள் பிள்ளைகளுக்கு கஷ்டமாக இருக்கலாம்.

### பல விடயங்களில் ஊடுருவி நிற்கும் வளர்ச்சி சார் குறைபாடு

தனித்தமைக் குறைபாடு, றெற்சின் குறைபாடு, அஸ்பேர்கஸ்ஸின் குறைபாடு போன்றவை இதற்குள் அடங்கும். றெற்ஸின் குறைபாடு மிகவும் அரிதாகப் பெண்பிள்ளைகளில் மட்டும் தோன்றும். கைகளை விரும்பியவாறு அசைக்கமுடியாத நிலையில் கைகள் திரும்பத்திரும்ப ஒரேமாதிரி அசையும். நடப்பதில் ஒரு ஒருங்கிணைவின்மை காணப்படும். கதைப்பதும் மற்றவர்களோடு உறவு கொள்வதும் குறைவாக இருக்கும்.

தனித்தன்மைக் குறைபாடு உள்ள பிள்ளைகளும், மொழியாற்றலின் மிகவும் பின் தங்கி இருப்பதோடு, தம்மைச் சுற்றி உள்ள எல்லா விடயங்களும் மாறாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணச் சூழலில் அகப்பட்டிருக்கும்.

தனித்தன்மையின் ஒரு பாதிப்புக்குறைந்த வடிவம், அஸ்பேர்கஸ்ஸின் குறைபாடு எனப்படும். இவர்களின் நுண்மதி ஈவு சாதாரணமாயிருக்கும். மொழிப் பயன்பாடு காணப்படும் ஆயினும் சமூக ஊடாட்டம் குறைவாய் இருப்பதுடன் ஒரே செயற்பாட்டை திரும்பத் திரும்பச் செய்தல் காணப்படும்.

## 6. கவனக்குறைவுடன் கூடிய அதீத செயற்பாடு

இவர்களில் கவனக் குறைவு தொடர்ச்சியாகக் காணப்படுவதுடன் ஒத்த வயதுப் பிள்ளைகளோடு ஒப்பிடுகையில் அதீத செயற்பாட்டு நிலை இருக்கும். குணம் குறிகள் ஏழு வயதுக்கு முன் தெரிய ஆரம்பித்து விடும். நாளாந்த வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்துவதாய் இருக்கும். வகுப்பில் ஆசிரியர் கேள்வி கேட்டவுடன் எழுந்து பிழையாய் பதில் சொல்லும் பிள்ளை இந்தப்பிரச்சனை உள்ள பிள்ளையாக இருக்கலாம்.

## 7. நடத்தை சார் குறைபாடு

சமூக எதிர் நடத்தைகள், சட்டவிரோத நடத்தைகள் இவர்களில் காணப்படலாம். பொதுவாக இரக்கமற்ற கொடூரமான செயற்பாடுகள் காணப்படும்.

## 8. எதிர்க்கும் இயல்புள்ள அடங்காத்தன்மை குறைபாடு

இது நடத்தை சார் குறைபாட்டின் ஒரு வகையா? அல்லது அதன் ஆரம்ப நிலையா? என்ற விவாதங்கள் உண்டு. பெரியவர்களை எதிர்ப்பது, அவர்களோடு விவாதிப்பது, அதிகார நிலையில் உள்ளோருக்கு எதிராக பணிந்து போகாத வெறுப்புக் கொண்ட நடத்தை ஆகியன இதன் முக்கிய அறிகுறிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 9. சாப்பிடுதல் சார் குறைபாடுகள்

போசாக்கற்ற பதார்த்தங்களை தொடர்ந்து சாப்பிடுதல், எப்போதும் வாயில் ஏதாவது உணவுப் பதாாத்தம் வைத்திருத்தல் தொடர்ந்து சாப்பாட்டில் வெறுப்பைக் காட்டுவதால் நிறை குறைதல் போன்றவை இந்த வகைக்குள் அடங்கும்.

### 10. ரிக் குறைபாடுகள்

திடீரென ஆனால் திரும்பத்திரும்ப வரும்வேகமான ஒரே மாதிரியான தசை அசைவுகள் அல்லது மொழி இதற்குள் அடங்கும். இச் செயற்பாட்டில் ஒரு லயம் இருக்காது.

### 11. கழிவு நீக்கல் தொடர்பான குறைபாடுகள்

நாலு வயதின் பின்னரும், பொருத்தமற்ற இடங்களில் மலம் கழித்தல் அல்லது ஐந்து வயதின் பின்னரும் படுக்கையில் சலம் கழித்தல் ஆகிய நிலமைகள் இந்த வகையில் அடங்கலாம்.

### 12. பிரிவுப்பதகளிப்பு

மிகவும் அன்புக்குரியவர்களில் இருந்து அல்லது குடும்பத்தில் இருந்து பிரிவதற்கு அதிக பதகளிப்பை காட்டுதல், நாளாந்தக் கருமங்களில் குறைபாடு ஏற்படத்தக்க அளவிற்கு அதிகமான பதகளிப்பு இருக்கும் போதுமட்டுமே அது ஒரு குறைபாடாகக் கொள்ளப்படலாம்.

### 13. தெரிவு செய்யப்பட்ட பேச்சுக் குறைபாடு

வீட்டில் சாதாரணமாகக் கதைக்கும் பிள்ளை விசேட சந்தர்ப்பங்களில் குறிப்பாக பாடசாலையில் மற்றவர்களுக்கு முன் கதைக்க மறுக்கும் நிலை.

### 14. உறவு நிலை சார்ந்த குறைபாடுகள்

சமூக உறவுகளில் மிகவும் குழப்பமான நிலை காணப்படுதல். இந்த நிலை பொதுவாக ஐந்து வயதுக்கு முன் தோன்றும். பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்களின் உளநோய் நிலைகள் இக் குறைபாடு தோன்றுவதற்கு காரணமாகலாம்.

மேலே காட்டப்பட்ட பிரச்சனைகள் பிள்ளைகளிடம் காணப்படுமிடத்துப் பாடசாலைகளில் பணியாற்றும் நட்புதவியாளர்கள் அல்லது உளவளத்துணையாளர்களின் உதவி நாடப்படலாம். இத்தகைய பிள்ளைகளுக்கு பொருத்தமான உதவி வழங்கப்படுவது மிகவும் அவசியமாகும்.

*சில பெற்றோர்களின் அதிகமான அன்புதான்*
*பல குழந்தைகளின் ஒளி பொருந்திய*
*எதிர்காலத்தையே இருளடையச் செய்து*
*விடுகின்றது.* - கார்லீ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஓய்வுபெற்றுச் சென்றுள்ள எங்கள் முன்னைநாள்
உபஅதிபர் திருமதி. கமலாதேவி முத்துலிங்கம்




# நல்லாசிரியர் விருது பெற்ற எங்கள் பிரதி அதிபர் திருமதி. நளாயினி ஜெயபாலசிங்கம்




இவர்களை
பாடசாலைச்
சமூகம்
நன்றியுடன்
பாராட்டி
நிற்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் பதிவுகள்



பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட
போது கற்பித்த முதலாவது
ஆசிரியர் திருமதி. ஆ. கௌரியம்மா

அதிபர்
திரு. கனக மகேந்திரா
அவர்களின் பிரிவுபசார நிகழ்வு





பிரிவுபசார நிகழ்வில்
எமது பிரதியதிபரை
வரவேற்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் பதிவுகள்




ஆசிரியர் திரு.செல்லையா அவர்களின்
பிரிவுபசார விழாவில்
அதிபர் செல்வி. திரவியம் வேலுப்பிள்ளை
அவர்கள் உரையாற்றுகிறார்



2001 ம் ஆண்டு முதலாம் தர மாணவரின்
புகுமுகவிழாவை பிரதேச செயலதிகாரியும்
எமது பழைய மாணவியுமான
திருமதி. சின்னப்பிள்ளை நித்தியானந்தன்
மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார்



விவசாய பாடச் செயன்முறையில்
மாணவர்களும் ஆசிரியர்களும்
ஈடுபடுகின்ற காட்சி



2003ம் ஆண்டு இல்ல மெய்வல்லுநர்
திறனாய்வில் பிரதம விருந்தினராகக்
கலந்துகொள்ளும் எமது பழைய மாணவன்
திரு.கி.சின்னராசா (பிரதிக்கல்விப் பணிப்பாளர்)
மங்கல விளக்கேற்றுகிறார்





அதிபர்
திரு.ஆ.கருணாநிதி
அவர்களின்
பிரிவுபசார
நிகழ்வு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் பதிவுகள்



முன்னைநாள் மேலதிக மாகாணக்
கல்விப் பணிப்பாளர் அமரர் பொன் சபாபதி
அவர்கள் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வில்
உரையாற்றுகிறார்



ஆசிரியர் திரு.வை. செல்லத்தம்பி
அவர்களின் சேவைநலன் பாராட்டின்
போது பா.அ.ச. செயலாளர்
திரு.க.கயிலாயபிள்ளை அவர்கள்
மாலை அணிவித்து வரவேற்கிறார்



1991ம் ஆண்டு வலைபந்தாட்டப் போட்டியில்
மாவட்ட மட்டத்தில் 1ம் இடம்பெற்ற மாணவிகள்
அதிபர் ஆசிரியருடன்



1991ம் ஆண்டு கிளித்தட்டுப் போட்டியில்
மாவட்ட மட்டத்தில்
1ம் இடம்பெற்ற மாணவிகள்



1991ம் ஆண்டு பாண்ட் வாத்திய இசைக்குழு



அதிபர் திருமதி. செ. செல்வரட்ணம்
அவர்களின் பிரிவுபசார நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா
தலைவர் தமிழ்த்துறை
யாழ் பல்கலைக்கழகம்

# ஈழத்து நவீன தமிழ்க்கவிதை வளர்ச்சி (1940ஆம் ஆண்டுவரை)

ஈழத்துத் தமிழ்க்கவிதை வரலாறு சங்கப் புலவராகிய ஈழத்து பூதந்தேவனாருடனேயே தொடங்குகிறது. பூதந்தேவனாருக்குப்பின்னர் ஆரியச் சக்கரவர்த்திகள் என அழைக்கப்பட்ட யாழப்பாண மன்னர்கள் காலம் வரையான தமிழ்க்கவிதை முயற்சிகளைக் கண்டறியக் கூடிய சான்றாதாரங்கள் பெருமளவுக்குக் கிடைக்கவில்லை. யாழ்ப்பாண மன்னர்கள் காலத்திலிருந்து துலங்கமடையத் தொடங்கிய ஈழத்துத் தமிழ்க்கவிதை வரலாறு, போரத்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம், இருபதாம் நூற்றாண்டு எனப்பகுத்து ஆராயப்பட்டுள்ளது. பேராசிரியர் ஆ. சதாசிவத்தின் ஈழத்துத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம் இந்த வகையிலே விதந்து குறிப்பிடத்தக்கது. பொதுவாக இலக்கிய வரலாறு என்பது தொடக்க நிலையிற் கவிதை வரலாறாகவே அமைந்திருந்தது என்பதையும் மனங்கொள்ளல் வேண்டும்.

தமிழில் நவகவிதைக் கோட்பாடு பாரதியுடனேயே தொடங்குகிறது எனலாம்.

*சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது சொற்புதிது*
*சோதி மிக்க நவ கவிதை..........*

என்று தனது கவிதையை அறிமுகப்படுத்தியவன் பாரதி. சுவையும், பொருளும், வளமும், சொல்லும் புதிதாகவே அமைவதே நவ கவிதை என்பது பாரதியின் கருத்து நிலை எனக் கருதலாம். பாஞ்சாலி சபத முன்னுரையிலே பாரதி குறிப்பிடும் எளிய பதங்கள் எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம். பொதுஜனங்கள் விரும்புகின்ற மெட்டு என்பதும் நவீன கவிதைக் கோட்பாடு விளக்கமாகவே அமைகின்றதெனலாம்.

ஈழத்தைப் பொறுத்தவரையில் 19ஆம் நூற்றாண்டிலே தமிழ் இலக்கியங்கள் பல வழிகளிலும் மெல்ல மெல்ல மடைமாறத் தொடங்குகிறது. இம்மடைமாற்றத்திற்கு அக்காலப் பகுதியிலேயே நிலவிய கல்வி அச்சியந்திரப் பயன்பாடு பத்திரிகைகளின் தோற்றம், பொருளாதார மாற்றம் முதலானவை பின்னணியாக அமைந்தன எனலாம்.

பாரதியின் நவகவிதைகள் கோட்பாட்டின் குரலைக் கேட்பதற்குச் சற்று முன்னரே ஈழத்தில் நவகவிதைக் கருத்து நிலையின் சில கூறுகள் கேட்கத் தொடங்கிவிட்டன. கருத்து நிலையில் நவகவிதை என்ற கோட்டினைத் தொடர முயன்ற முன்னவர்களாகக் குமாரசுவாமி முதலியார் (1791-1874) முத்துக் குமாரகவிராயர் (1780-1851), சுப்பையனார் (1820-18896), தி.த.சரவணமுத்துப்பிள்ளை பாவலர், துரையப்பாபிள்ளை முதலானோரைக் குறிப்பிடலாம்.

18ஆம், 19ஆம் நூற்றாண்டிலே ஈழத்திற் குறிப்பாக யாழ்ப்பாப் பிரதேசத்திலே மிக வேகமாகப் பரவிப் பல ஆயிரம் உயிர்களைப் பலிகொண்ட கொலரா எனும் வாந்திபேதியின் (கொலராவைக் கொள்ளை நோய் என்றும் கோதாரிக் கழிச்சல் என்றும் யாழ்ப்பாணத்திலே அழைத்தனர்) கொடூரத்தைக் கண்டு குமாரசாமி முதலியார் பாடிய கீர்த்தனைகள் சமூகப்பிரக்ஞை கொண்டவை என்று ஆய்வாளர்கள் கூறுவர். குமாரசாமி முதலியார் கோவை, பதிகம், ஊஞ்சல் முதலான பிரபந்தவகைகளைப் பாடிய அதேவேளை கொள்ளை நோயின் கொடூரத்தினூடு களவு, தில்லுமுல்லு. கொள்ளைலாபம் புரிவோரைக் கண்டித்தும் கீர்த்தனைகள் பாடினார். பாரதி குறிப்பிடும் "பொருள் புதிது" குமாரசுவாமி முதலியாரின் கீர்த்தனைகள் மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தினாற் போலும் இவர் கீர்த்தனை வடிவத்தினைத் தெரிவு செய்தார் எனக் கருதலாம்.

"நாமறிந்த அளவில் சமகால நிகழ்ச்சிகளைச் சமுதாய நோக்கிலே பாடிய ஈழத்துப் புலவருள் குமாரசுவாமி முதலியாரே காலத்தால் முற்பட்டவராகக் காணப்படுகின்றார்" (பேராசிரியர் க.கைலாசபதி ஈழத்து இலக்கிய முன்னோடிகள் ப-33) என்று பேராசிரியர் கைலாசபதி குறிப்பிடுவது மனங்கொள்ளத்தக்கது. குமாரசுவாமி முதலியாரின் கீர்த்தனை ஒன்றின் ஒரு பகுதியை வகை மாதிரிக்கு சுட்டிக் காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வையகத்துய்யமனுச் சென்மமழிக்கக் கொள்ளை**
**வந்து நுழைந்ததோ வெந்தெய்வமே**
**பையபைய நுழைந்து பாரெங்கும் சேரவாரிப்**
**படபடென்றடிக்கிறதே யெந்தெய்வமே.**
**.........................................**
**கஞ்சி கெஞ்சியுங் கிடைக்காதிருந்தக் காலம் காட்டுக்**
**காய் கிழங்கேஏண்ணாரோ வெந் தெய்வமே**

தம் காலத்தில் சமூகத்தை பீடித்திருந்த பிரச்சினையொன்றினைப் பாடு பொருளாக்கி கீர்த்தனைகள் பாடியமை இவரது சமூக நோக்கினை புலப்படுத்துகின்றது. கொள்ளை நோயைப் பரவ விடாது தடுப்பதற்கான முயற்சிகளிலே அக்காலத்திலே இருந்த மிசனறிமாரும் பாடுபட்டு உழைத்தனர். குமாரசாமி முதலியார் கிறிஸ்தவத்தினைத் தழுவாவிடினும் மிசனறிமாருடன் நெருக்கமான உறவு பூண்டிருந்தார். குமாரசாமி முதலியாரின் புதல்வரே உவைமன் கதிரைவேற்பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ குமாரசுவாமி முதலியாரின் சமகாலத்தவரான சுன்னாகம் முத்துக்குமார கவிராயரின் பாடல்களிலும் சமூக உணர்வு சுவறியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

முத்துக்குமார கவிராசரின் சமூக நோக்குச் சமயம் சார்ந்ததாக அமைந்த போதிலும் அக்காலச் சமூகச் செல் நெறியின் ஒரு பகுதியைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைகின்றது. சிலேடை, யமகம் முதலான கடினமான செய்யுள்களை இயற்றிய முத்துக்குமார கவிராசர் சமயச்சார்புடைய சமூகச் செல்நெறியை விமர்சிக்கும் பல தனிப்பாடல்களையும் கும்மிப் பிரபந்தங்களையும் பாடியுள்ளார். பொதுசனங்களை மனங்கொண்டே இவர் கும்மியெனும் வடிவத்தினை தெரிந்தெடுத்தார் எனக் கருதலாம். "ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கம் உள்ளவர்களும்" கும்மிப்பபாடல்களை இலகுவாக விளங்கிக் கொள்வர். 19ஆம் நூற்றாண்டின் கடைசிக் கூறில் இருந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை நூற்றுக்கு மேற்பட்ட கும்மிப்பாடல்கள் ஈழத்திலே தோன்றியமை அவதானிப்புக்குரியது. உயர் இலக்கியப் பாரம்பரியத்திலிருந்து நெகிழ்ந்து சாதாரண பொது மக்களை நோக்கி இலக்கியம் படைக்கும் போக்கின் வெளிப்பாடாகவே இக்கும்மிப் பாடல்களின் பெருக்கத்தினைக் கொள்ள வேண்டும்.

முத்துக்குமாரகவிராசரின் ஞானக் கும்மியும், சில தனிப்பாடல்களும் சமயச் சார்புடைய சமூகச் செய்திகளைச் சொல்பவையாக அமைந்துள்ளமையை நோக்கும்பொழுது மரபுவழிவந்த தமிழ்ப்புலவர்களும் சமூக சிந்தனையோட்டத்துடன் கலந்து கொள்ளும் தன்மையைக் கொண்டிருந்தமை புலனாகும்.

**"நல்வழி காட்டுவோம் உடுபுடவை சம்பளம்**
**நாளும் தருகுவோம்**
**நாம் சொல்வதைக் கேளும் எனமருட்டிச் சேர்த்து**
**நானமுஞ் செய்துவிட்டார்**
**மெல்ல மெல்லப் பின்னை வேளையிங்கில்லை நீர்**
**வீட்டினிடை போமென்கிறார்**
**வேண்டியயொருகன்னியைக் கைக் கொண்டு கருவாக்கி**
**விட்டபின் கணவன் வேலை**
**இல்லை நீ போவென்று தள்ளுவது போலுமே**
**இனி எம்மை எம் உறவிலே..........**
**ஏர் பூட்டி உழவுமறியோம்**
**...........................**
**ஆபராபரனே! கிறிஸ்தவர்கள் எங்களை**
**அடுத்துக் கொடுத்தார்களே!**

பெரும்பாலான ஆய்வாளர்களாலே குறிப்பிடப்படும் மேற்காட்டிய பாடல் சமயப்பிரச்சினைகளுக்கூடான சமுதாய நோக்கு நிலைமையை புலப்படுத்துகின்றது எனலாம்.

சமயம் சாராது சமூக நோக்கு நிலையிலே எழுந்த கவிதை இலக்கியத்துக்கு உதாரணமாகச் சுப்பையனாரின் கனகி புராணம், தி.த. சரவணமுத்துப்பிள்ளையின் தந்தை விடுதூது, இன்று முழுமையும் கிடைக்காமற் போன கோட்டுப் புராணம், தால புராணம் முதலானவற்றைக் குறிப்பிடலாம். இந்த இலக்கியங்களில் ஊற்றெடுத்த சமூகப்பார்வையே இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவிலே தோன்றியதெனக் கூறப்படும் நவீன தமிழ்க்கவிதைச் செல்நெறிக்கு கால் கோளாக அமைந்தது எனக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுவழிப் புலவர்களால் உயர்ந்த இலக்கிய வடிவமாகக் கொள்ளப்பட்ட புராணம் என்னும் இலக்கிய வடிவத்தினூடு சமகாலச் சமூகச் சீரழிவொன்றை உட்பொருளாகக் கொண்டு சுப்பையனார் கனகி புராணத்தைப் பாடினார். "நல்ல சரளநடைப்புலவராக விளங்கிய சுப்பையனாரின் கனகி புராணம் முன் பின் நானூறு விருத்தங்களைக் கொண்டது" என்று பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் குறிப்பிடுவார். இன்று முழுமையும் கிடைக்காவிடினும் கிடைத்தவற்றை வைத்து நோக்கும் பொழுது சுப்பையனார் சமூகச் சீரழிவொன்றைக் கவித்துவத்தோடு பாடியுள்ளார் என்பது புலனாகின்றது.

கனகியிடம் வந்து போகும் கனதனவான்களைத்தோழி தலைவிக்கு அறிமுகம்செய்வதாக அமைந்த சுயம்வரப் பாடல்களில் ஒன்றை வகைமாதிரியாகச் சுட்டிக் காட்டலாம்.

**தாலக் கனியொன் றினுக்காகத்**
**தரைமேல் மாந்தர் பலர் திரண்டு**
**வேல்கத்திகள் கொண்டெறிந்து மிக**
**விசயம் பொருது வளநாடன்**
**மால்பற்றிய நெஞ்சின னாகி**
**வந்தான் கனகே மன்றலுக்கு**
**நீலக்கருங்கார் மேக நிற**
**நியூற்றனிவன் காண் நேரிழையே**

அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய பிரபுக்களை மறைமுகமாக மாத்திரமன்றி, வெளிப்படையாகவும் சுட்டிப் பாடியபெருமை சுப்பையனாருக்கு உரியது. கனகி புராணம் பற்றிப் பேராசிரியர் கைலாசபதி கூறும் கருத்தொன்றினை இவ்விடத்திலே சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும்.

> "இயற்றமிழ் ஆசிரியர்களும் வித்துவ சிரோமணிகளும் தமிழ்ப் புலமையில் மிக்குயர்ந்து விளங்கிய காலப் பகுதியில், கல்வித் திறமையின் துணையாலன்றிக் கவித்துவ சக்தியின் ஆற்றல் கொண்டும் கவிப் பொருளை உள்ளும் புறமும் அறிந்த பட்டறிவின் துணை கொண்டும் புதுமுறைப் புராணம் ஒன்றைப் பாடினார் சுப்பையனார். புராணம் என்ற சட்டகத் தை வைத்துக் கொண்ட பிரபுத்துவ உலகையே ஒரு கலக்கு கலக்கி விடுகின்றார் புலவர் பிரபுக்களின் சீரழிந்த ஒழுக்க நெறியினையும் பொதுவான தார்மீக வீழ்ச்சியையும் நுண்ணிய அனுபவ உணர்வுடன் கனகி புராணம் சித்திரிக்கின்றது.

**(கைலாசபதி க. ஈழத்து இலக்கிய முன்னோடிகள்)**

கனகி புராணத்தைப் போலவே இக்காலப் பகுதியிலே எழுந்த தாலபுராணம், கோட்டுப் புராணம் முதலியனவும் சமூகச் செய்திகளைப் பாடுபொருளாகக் கொண்டவையாகவே அமைந்துள்ளன. மேலைப் புலத்தவரின் வருகையால் எமது உணவு, உடை, பாவனைப் பொருட்கள் இவைகளிலே குறிப்பிடத்தக்க மாற்றங்கள் பல நிகழ்ந்தன. இந்த நிலையிலே பனையின் பயன்பாட்டை வலியுறுத்தத்தோன்றியதே தால புராணமாகும். இப்புராணம் புலப்படுத்தும் செய்திகளைத் திட்ட வட்டமாகக் கூறமுடியாதுள்ளது. இப்புராணம் கிடைத்தாலே அன்றி அதன் தாற்பரியங்களை அறுதியிட்டுக் கூறமுடியாது.

இக்காலப் பகுதியிலேயே தோன்றிய மிக முக்கியம் வாய்ந்த புராணங்களிலே கோட்டுப் புராணம் ஒன்றாகும். இப்புராணமும் இன்று கிடைக்கவில்லை. ஓரிரு பாடல்கள் கிடைத்துள்ளன. கிடைத்த பாடல்களை வைத்து நோக்கும் பொழுது அக்காலத்திலே கோடுகளிலே நடைபெறும் சீரழிவுகளை வெளிக்கொணர்வதே கோட்டுப்புராண ஆசிரியரின் நோக்கமாக இருக்க வேண்டும். கோட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறோக்கர்களையும் நியாய துரந்தரர்களையும் இழித்துப் பழித்தும் பாடப்பட்டது. என்று பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் குறிப்பிடுவார். இக்கூற்று இப்புராணத்தின் சமூகநோக்கினை புரிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றது. 19ஆம் நூற்றாண்டிலே நிர்வாகக் குவிமையமாகக் கோடுகள் விளங்கின என்று கூறுவர். கோட்டு வழக்குகள் பற்றிய பல தனிப்பாடல்களும் தோன்றியுள்ளன. இன்று வாய் மொழியாகக் கோடு பற்றி சில பாடல்கள் வழங்கி வருகின்றன. சமகாலப் பிரச்சினை ஒன்றை கவிதையாகப் பாடும் மரபுக்கு நல்ல உதாரணமாகக் கோட்டுப் புராணத்தைக் கொள்ளலாம்.

இக்காலப் பகுதியிலே நவீன கவிதைக்குரிய பாடு பொருளுடன் தோன்றிய மிகச்சிறந்த இலக்கியமாக தி.த. சரவணமுத்துப்பிள்ளையின் தந்தை விடுதூதினைக் (1892) குறிப்பிடலாம். தி.த.கனகசுந்தரம் பிள்ளையின் சகோதரராகிய சரவணமுத்துப்பிள்ளை சென்னைப் பல்கலக்கழகத்திலே பீ.ஏ பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் தந்தைவிடுதூது மரபு வழிப்பிரபந்த வடிவிலே அமைந்த போதிலும் உள்ளடக்கதில் புதுமை தழுவியதாகவே காணப்படுகின்றது. அக்காலச் சமூகத்திலே பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை பெண் அடக்கு முறைகளை மரபுக்கவிதைக்கு ஊடாகச் சிறப்பாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

**"கூட்டிற் பசுங்கிளி போற்**
**கோதையரை எப்பொழுதும்**
**வீட்டில் அடைத்து வைக்கும்**
**வீரகிலருக் கியா துரைப்போம்**
**பூட்டித் திறந் தெடுக்கும்**
**பொருளாக் கருதினரோ**
**கேட்டோர் நகைப்பதுவுங்**
**கேட்டிலரோ பைங்கிளியே"**

ஏறத்தாழ பாரதி குறிப்பிட்ட பெண் விடுதலைக் கருப்பொருளைச் சற்று அவருக்கு முன்பதாகவே சரவணமுத்துப்பிளை சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. பாரதியின் "வேகத்தைச் சரவண முத்துப்பிள்ளையிடம் காண முடியாவிட்டாலும் "உட்பொருளில்" பாரதியின் சிந்தனையை இவர் கொண்டிருந்தார் எனக் குறிப்பிடுவது தவறாகாது.

ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றிலே நவீன சிந்தனைகளை உணர்வு பூர்வமாகவே விதைத்துச் சென்றவர் எனப் பாவலர் துரையப்பாபிள்ளையைக் குறிப்பிடுவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக் கூறிலே பிறந்து இருபதாம் நூற்றாண்டின் முதற் கூறுவரை (1872 - 1929) வாழ்ந்தவர் பாவலர் துரையப்பாபிள்ளை. ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமைமிக்கவராகத்திகழ்ந்தார். இவர் வட இந்தியாவிலேயும் சிலகாலம் வாழுந்தவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஈழத்திலே சிறப்பாக யாழ்ப்பாண பிரதேசத்திலே நிலவிய பல சமூகக் கொடுமைகளை இவர் வன்மையாக கண்டித்துள்ளார். சமூக வளர்ச்சியில் அதிக கரிசனை கொண்ட இவர் சாதாரண மக்களை மனங்கொண்டே யாழ்ப்பாண சுவதேசக்கும்மியைப் பாடினார். அவையடக்கத்திலே பாவலர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"மிக்க அரும்பதத்தோடு புணர்ச்சி**
**மிருந்திடிற் கும்மி பொதுச்சனங்கட் (கு)**
**எக்காலமும் விளங் காதகா னல்நலம் ஏதுவருமடி சங்கமின்னே**
**கல்வித் திறனை யுலகோ ரறியக்**
**கழறிட வில்லையிக் கும்மியை நான்**
**நலவிதமாக நம் நாடுதிருந்த**
**நவிலுகிறேனடி சங்கமின்னே"**

மேற்காட்டிய அவையடக்கப் பாடல்கள் கவிஞரின் நோக்கு நிலையைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. விவசாயம், உணவு, உடை பழக்கவழக்கம் முதலானவற்றைப் பற்றிப்பாடும் இக்கும்மிப்பாடலில் நவீனத்தன்மை சற்று அதிகமாகவே காணப்படுகின்றதெனலாம். இவர் பாடிய எங்கள் தேசநிலை என்ற பாடலும் சமூகச் செய்திகள் பலவற்றைச் சொல்வதாகவே காணப்படுகின்றது. இவரது சமூக நோக்கினைப் புலப்படுத்தப் பின்வரும் பாடலைச் சுட்டிக்காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீதனம் வரவர ஏறுகுது - நகை
திகழ் தங்கம் வயிரமாய் மாறுகுது
நீதி நெறிதனை மீறுகுது - மண
நிலையினுசிதத்தன்மை பாறுகுது"

ஈழத்து நவின தமிழ்க்கவிதை வரலாற்றிலே பாவலர் துரையப்பாபிள்ளைக்குத் தனித்துவமானதோர் இடமுண்டு எனத் துணிந்து கூறலாம்.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து 1940கள் வரை தோன்றிய ஈழத்துத் தமிழ் கவிதைகளை நுனித்து நோக்கும் பொழுது, நவீனத்தன்மை பொருள் அமைப்பிலும் எளிமையிலும் மெல்ல மெல்லத் தலை நீட்டத் தொடங்கியுள்ளமையை அவதானிக்கலாம்.

கல்லடி வேலுப்பிள்ளையால் 1897இல் எழுதப்பட்ட அழகம்மா திருமண அலங்கோலக் கும்மியையும் இவ்விடத்திலே நினைவு கூரவேண்டும்.

மறுமலர்ச்சிக்குழுவினரின் வருகையோடு ஈழத்துத் தமிழ்க்கவிதைப் போக்கிலே நவீனத்துவம் வெளிப்படையாகத் தோன்றியது என்பது உண்மையே. எனினும் யாம் முற்குறிப்பிட்ட கவிஞர்களோடு சுவாமி விபுலானந்தர், சோமசுந்தரப்புலவர், க.சச்சிதானந்தன் (இவர் 36,37களில் எழுதத் தொடங்கியவர்) மு.நல்லதம்பி முதலானோரின் கவிதைகளிலும் ஆங்காங்கே நவீனத்தன்மை புலப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து 1940கள் வரையான கால கட்டம் ஒரு பிரிவாகவும் நாற்பதுகளுக்குப் பின்வரும் காலப்பகுதி பல்வேறு பிரிவுகளாகவும் பகுத்தாய்வு செய்யப்படுவது இன்று மரபாகிவிட்டது.

இன்றைய கவிதைப் பாரம்பரியத்திற்குரிய "ரிஷி மூலத்தைப்" பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தரிசிக்க முடிகின்றது எனலாம்.

*உச்சரிப்பு மொழிக்கு உயிர் போன்றது*
*அது மொழிக்கு உயிரையும் உணர்ச்சியையும் ஊட்டும்*

கல்விச் சிந்தனையாளர்

- ரூசோ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் ம.பா.மகாலிங்கசிவம்

# வீணான காலங்கள்

கல்லாது என தருமைக்
காலங்கள் போயினவென்று
எல்லோரும் என்னை இகழ்ந்தாரே
கல்லானாய் -
வாழ்ந்தே மடிவதுதான் வல்விதியோ?
மூடன் எனைச்
சூழ்ந்தது எல்லாமே துயர்

அள்ளிக் கொடுப்பதற்கு
ஆகும் பொருளிருந்தும்
நல்லமனமின்றி நாட்கழித்தேன்
உள்ள
நிலைக்காத செல்வங்கள்
நிம்மதியை நீக்கித்
தொலைத்ததே நெஞ்சச் சுகம்

கண்ணின்றிக் கால்இன்றிக்
காப்பதற்கோர் ஆள் இன்றி
மண்ணிற் பிறந்தோர்க்கு வாழ்வளிக்க
இன்னமும் நான்
அன்பாய் ஒரு வார்த்தையேனும்
அளித்ததில்லை
என் சோகப்பாடல் இது!

கண்ணில் ஒளி குறைந்து
காலும் நடை மறந்து
திண்மை உடல் கூடத் தேய்ததுவே!
பின்னாலே
கூற்றுவனும் என்னுயிரைக்
கொண்டுசெல வந்திடுவான்
மாற்றாற்கும் வேண்டாம் என்வாழ்வு!

வீணான காலங்கள்
வேண்டி அழைத்தாலும்
ஓர் நாளும் மீளாதே உன்னிடத்தே!
வாழ்நாளை
நல்ல செயல் புரிய
நாடிச் செல விட்டால்
அல்லல் அணுகாதென்றறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
வாழ்நாட் பேராசிரியர்
யாழ் பல்கலைக்கழகம்

# இந்துக் கோயில் அமைப்பு

வேதங்களிலே கூறப்பட்டுள்ள சமயநெறி உருவ வணக்கத்தை அறியாததாகும். வழிபாட்டு நிலையங்களகாப் பிரதிஷ்டை செய்து அமைக்கப்பட்ட ஆலயங்கள் இருந்தனவென்பதற்கு இருக்கு வேதத்திலே சான்றுகள் காணப்படவில்லை. ஆனால் சமஸ்கிருத மொழியிலே ஆலயங்களில் பூசை செய்யும் குருக்கள்மார் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றது. இந்து மத்திலுள்ள ஆலய வழிபாடானது வேதங்கள், பிராமணங்கள், உபநிடதங்கள், ஸ்மிருதிகள். இதிகாசங்கள் என்பவற்றால் விளக்கப்படும். வைதீக நெறியில் இருந்து வளர்ச்சி பெற்ற சமய சாதனம் எனக் கொள்ளலாம். ஆதியில் கோயிலானது வழிபாட்டிற்குரிய சிறிய சிலையைக் கொண்ட ஒரு குடிலாகவே அமைந்தது. குப்தர் காலத்திலேதான் கோயில் வடிவமாக உருப் பெற்றது. இயற்கையழகு பொருந்திய இடங்களே பழம்பெரும் கோயில்களாக விளங்கின. ஆற்றங்கரைகளிலும் மரத்தடியிலும் தெய்வங்களின் உருவங்களை அமைத்து மக்கள் வழிபட்டு வந்தனர். அதற்குச் சிறு கட்டடங்களை அமைத்தனர் மலைக் குகைகளிலும் ஆரம்ப காலத்தில் கோயில்கள் அமைக்கப்பட்டன.

கோயில்களது தோற்றம் பற்றி ஆராயும் பொழுது கோயிலைப் பற்றிய விளக்கங்களும் வேண்டப்படுகின்றன. கோயிலைக் குறிக்குஞ் சொற்கள், அவற்றிற்குரிய விளக்கங்கள், கோயிற்கட்டடக்கலையின் தோற்றம், வளர்ச்சி, கோயிலின் அமைப்பு, கோயில் கட்டுவதற்கு தேவையான பொருட்கள், கோயில் அமைப்பதற்கு வேண்டப்படும் நுண்ணறிவு, கோ்யிற் கோபுரங்கள், தூண்கள், தூண்களில் விளங்குஞ் சிற்பங்கள், சுவர்களிலும் கூரைகளிலும் வரையப் பெற்ற ஓவியங்கள், கொடிமரம், கருவறையின் உச்சியில் உள்ள விமானங்கள் பரிவார மூர்த்திகளுக்கான கருவறைகள், கோயில் உபகரணங்கள், வாகனங்கள், தேர், இசைக்கருவிகள் கோயிற் கல்வெட்டுக்கள், தலவிருட்சங்கள், தல புராணங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றியும் நாமறிய வேண்டியதும் அவசியமாகின்றது. கோயிலோடு தொடர்புடைய விடயங்களை நாமறியும் போது கோயில் தோற்றமும் அதன் தத்துவங்களும் வெளிப்படுகின்றன. இறைவனை மனமொன்றி வழிபடும் இடமாக கோயில் விளங்குகின்றது. இக்கோயில்கள் பெரும்பாலும் இயற்கையழகு பொருந்திய இடங்களிலே அமைந்தமையால் அவற்றைச் சூழவுள்ள இடங்களின் சிறப்பும் ஆராயப்பட்டது. தல விருட்சங்கள் தீர்த்தச் சிறப்புக்கள் எனப் பிரித்து நோக்கப்பட்டது.

கோயிலுக்கும் மனித வாழ்வுக்கும் நெருங்கிய தொடர்பினை நமது முன்னோர் கண்டு கோயில் என்பது உடல் என்னும் கோயிலின் புறச்சின்னம் என விளக்கினர். புறச்சின்னத்தை உடலிலுள்ள தத்துவங்கள் ஒத்திருக்கும்படி கட்ட வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. சுற்றிலும் மதிலெடுத்து ஒரு புறம் பெரிய வாயில் அமைத்து அங்கு ஒரு கோபுரம் அமைக்கின்றனர். அக்கோபுரத்திற்கு தூலலிங்கம் என்று பெயர். தொலைவில் இருந்து இதனைக் கண்டு தெய்வ வடிவங்களென எண்ணி வணங்குவது முறை. கோபுரத்தை காணும்போதெல்லாம் மக்களுக்குத் தெய்வ நினைவு உண்டாகும் என்ற நோக்கத்துடன் இதனை அமைத்துள்ளனர்.

மனிதன் தனது வாழ்க்கையைப் பல்வேறு மாற்றங்களுக்கூடாக நடத்திச் செல்லும் போது தன் மனத்தை ஒரு வழிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்ட போது இத்தகைய கோயில்களை நாடியிருக்க வேண்டும். இறைவன் பற்றிய கோட்பாடுகளையும் கருத்துக்களையும் நிலைபெறச் செய்வதற்காகவே கோயில்கள் அமைக்கப்பட்டன. ஆன்மீக வளர்ச்சிக்குத் தீவிர சமயச் சடங்குகள் அடிப்படையாக அமைந்தன. மனிதன் கடவுளை ஒத்தவன் இதனை வேதங்கள் சைவத்திருமுறைகள் வைணவப் பிரபந்தங்கள் போன்ற சமய நூல்கள் யாவும் உணர்த்துகின்றன. வழிபாடு அவசியம் என்பதை உணர்ந்து பல வழிபாடுகளையும் மக்களிடையே ஏற்படுத்தினர். கடவுள் எங்கும் நிறைந்தருந்த போதிலும் அவரது உருவத்தை ஓரிடத்திலிருத்திருத்தி வழிபடும்போது அந்த இடம் கடவுள் உறைகின்ற இடமாகின்றது. இத்தகைய இடங்களையே கோயில் என்றழைத்தனர். கடவுள் உறைகின்ற இடங்களைக் குறிக்கும் பல சொற்கள் சிற்ப நூல்களிலே குறிப்பிடப்பட்டுள்ளன. தேவகிருகம், தேவாயதனம், தேவாலயம், தேவகுலம், தேவமந்திரம், தேவ பவனம், தேவஸ்தானம், தேவேஸ்மம், தைத்யம், கேஷத்திரம், அச்சாகிருதம், விமானம், பிரசாதம் போன்ற சொற்கள் குறிப்பிடத்தக்கவை. சொல்பற்றி "சிற்பரத்தினம்" என்னும் நூல் குறிப்பிடுகின்றது. தம் அழகினால் தேவர்களினதும் மக்களதும் உள்ளம் கவர்ந்து அகமகிழ்வினை எய்துவிப்பதினால் இப்பெயர் பெறுவதாக அந்நூல் கூறும். அரசர்களும் தெய்வங்களும் உறையும் இடம் பிரசாதம் என நிகண்டு குறிப்பிடுகின்றது. கோயில் என்னும் தமிழ்ச்சொல் கருத்தளவில் பிரசாதத்தை ஒத்து நிற்கின்றது என்பர். கோயில் பற்றிய விளக்கத்தை கூறவந்த பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் (சைவத் திருக்கோயில் கிரியை நெறி பக்கம் 68-69) வருமாறு விளக்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோவில் என்னுஞ் சொல் கோயில் எனவும் வழங்குகிறது. கோவென்றொல் அரசன் இல் என்பது வீடு ஆகவே கோவில் என்பது அரசனது வீடு ஆயிற்று. முன்னர் கூறிய பிரசாதம் என்னும் சொற்பொருள் இதே வகையாக அமைந்திருப்பது நோக்கற்பாலது இதனால் அரசனது வீடும் தெய்வத்தின் வீடும் ஒரே நிலையில் வைத்து மதிக்கப்படுவதைக் காண்கின்றோம்."

இதே போன்று குடி என்ற தமிழ்ச்சொல்லும் இறைவன் இருப்பிடத்தைக் குறிப்பிடுவதாகும். ஆந்திர தேசத்தில் குடி என்ற சொல்லே வழங்கப்படுகின்றது. கேரளத்தில் பெருங் கோவில்கள் அம்பலம் என்றே அழைக்கப்படுகின்றன.

பசுவினுடைய உடம்பெங்கனும் பரந்தோடுகின்ற குருதி பக்குவமடைந்து பாலாகப் பரிணமிக்கும் பொழுதுஅதை வெளியேற்றுவதற்காக முலைகள் அமைந்திருப்பது போல உலகெங்கணும் பரந்து விளங்கும் பரமன் ஆன்ம ஈடேற்றம் கருதிக் கருணை மேலீட்டினால் உருவந்தாங்கி எழுந்தருளியிருக்கின்ற இடமே கோயில் என்பர். கோயிலை அமைக்கும் போது நாற்புறமும் மதிலமைத்து ஒரு புறம் பெரிய வாயில் அமைக்கின்றனர். அங்கே பேரிய கோபுரம் அமைக்கப்படுகின்றது. அதை இராஜகோபுரம் என்றே அழைத்தனர். தாழ்ந்ததில் இருந்து உயர்ந்தது வரையுள்ள எல்லாவற்றையும் கோபுரத்திலே அமைத்து விடுவதன் மூலம் உலகிலுள்ள பொருட்கள் யாவற்றையும் நினைவுக்கு கொணரும் உலகக் காட்சியாகவும் கோபுரத்தை விளங்க வைத்தனர்.

கோபுரத்தின் வாயில்கள் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி அமைக்கப்படும் வாயில்கள் மூன்றாக இருந்தால் நனவு, கனவு, சுழுத்தி என்னும் மூன்று அவத்தைகளையும் ஐந்தாக இருந்தால் ஐம்பொறிகளையும், ஏழாக இருந்தால் ஐம்பொறிகளுடன் மனம், புத்தி என்னும் இரண்டையும் சேர்த்துக் குறிப்பனவாகவும் கூறுவர். எத்தனை வாயில்கள் ஒரு கோயிலுக்கு இருந்த போதிலும் தரைமட்டமாக உள்ள வாயில் வழியாகவே நாம் கோயிலுக்குச் செல்ல முடியும். இவ்வாறே கடவுள் நாட்டம் ஏற்படும்போது மனம் என்னும் ஒரு வாயிலே எமக்குப் பயன்படும் எனக் கருதினர். கோபுரத்தைக் கடந்து உள்ளே செல்லும் போது முதலில் அமைந்துள்ளது பலிபீடம் ஆகும். அதன் அருகிற் சென்று வீழ்ந்து வணங்கும்போது நமது மனதிலுள்ள கீழத்தரமான எண்ணங்களையெல்லாம் பலிகொடுத்து மேலான இயல்புடன் எழுந்தருளுகின்றோம். அந்த மேலான இயல்புடனேயே இறைவனை வணங்கச் செல்கிறோம். பின்பு இறைவனைச் சுற்றி வருதல் பிராணாயாமம் முறையைக் காட்டுகின்றது. பலிபீடத்தை சார அமைந்திருப்பது கொடித்தம்பம் அதன் முகம் உள்முகமாக அமைக்கப்பட்டிருக்கும் கொடித்தம்பத்தையடுத்து உள்ளிருக்கும் தெய்வத்துக்குரிய வாகனம் அமைக்கப்பட்டிருக்கும் அது ஆன்மாவைக் குறிக்கின்றது. ஆன்மா உள்முகமாக இறைவனை வணங்குகின்றது. இறைவனை அடைவதே ஆன்மாவின் குறிக்கோள் என்பதை வாகனம் இறைவனை நோக்கியிருக்கும நிலை எமக்கு உணர்த்துகிறது. இத்தத்துவ வழக்கங்கள் கோயில் அமைப்போடும் மக்கள் வாழ்க்கையோடும் தொடர்புபட்டிருப்பதாலே இன்றுவரை கோயில்களில் சுற்றுமதில் பெருங்கோபுர வாயில் பலிபீடம் கொடித்தம்பம், வாகனம், கர்ப்பக்கிரகம் போன்ற அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கோயிலுக்கருகில் பெரும்பாலும் ஒரு கேணியாயினும் அல்லது நீர் நிலையாயினும் இருப்பது வழக்கம் சமய ஆசாராங்களுக்கு நீராடல் முக்கியமானதாக இருந்தமையால் இதுவும் கோயில் அமைப்பினுள் ஒன்றாகவே கருதப்பட்டது. கோயில்களிலே காவியங்கள், புராணங்கள், திருப்பனுவல்கள் படிப்பதற்காகவும் மண்டபங்கள் கட்டப்பட்டன. யாத்திரிகர்கள் தங்குவதற்காகவும் மடங்கள் அமைக்கப்பட்டன. கல்வெட்டுக்களிலும் இலக்கியங்களிலும் இம்மடங்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. பாடல் பெற்ற கோயில்கள் ஈஸ்வரம், பெருங்கோயில், ஆலக்கோயில், கரகக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், துங்கானை மாடம், எனப் பல பெயர்களைக் கொண்டிருந்தன எனலாம்.

அமைதி இல்லா நேரத்திலே – அந்த
ஆண்டவன் என்னைப் படைத்துவிட்டான்

-கவியரசு கண்ணாதசன்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் செல்வி. அனுஷா பத்மநாதன்
M.B.B.S
பழைய மாணவி
மாவட்ட வைத்தியசாலை - கிளிநொச்சி

# விசர்நாய்க்கடி நோய் (நீர் வெறுப்பு நோய்)

விசர்நாய்க்கடி நோயானது நூறு சதவீதம் மரணத்தை ஏற்படுத்தக் கூடியது இதனைக் குணப்படுத்துவதற்கு மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை ஆனால் இந்நோய் வராமல் முற்றாக தடுக்கமுடியும்.

இந்நோய் அநேகமாக நாய்களில் இருந்து மனிதனைப் பீடிக்கின்ற போதிலும் இந்நோயை ஏற்படுத்தக்கூடிய வேறு பிராணிகளும் உண்டு.

விசர்நாய் ஒன்றின் நோய்க்குறிகள் இரண்டு முறைகளில் தோற்றமளிக்கலாம்.

**ஊமை சுயாதீனம்**

1. தொண்டையில் ஏதோ சிக்கியது போலக் காட்சிதரும்.
2. இருளான இடங்களில் மறைவாக இருக்க முயலும்
3. உணவு அருந்த மறுக்கும்
4. தொடைகள் பலமற்றவைகளாக தோற்றமளிக்கும்

இந்நிலைமைகள் காணப்பட்டால் விசர்நாய்க்கடி நோய் எனத் தீர்மானிக்க முடியாமலும் இருக்கலாம்.

**கடுங்கோபங் கொண்ட விசர்**

1. உணவு உண்ணாமல் நோய்ச் சுபாவத்துடன் காணப்படும்
2. உரத்த குரலில் குரைக்கும்
3. வழக்கத்திற்கு மாறாக ஓடும்
4. எல்லாப் பொருட்களையும் கடிக்கும்
5. கண்கள் சிவந்து விசாலித்து ஒளிரும்
6. வாயினின்று சளி வழிந்தோடும்
7. வருவோர் போவோர் அனைவரையும் கடிக்கும்
8. தொடைகள் பலவீனமாகக் காணப்படும்.

மேலே கூறப்பட்ட இருவகைக் குணங்குறிகள் காணப்பட்டால் நாய் கண்டிப்பாக பத்து நாட்களுக்குள் இறந்து விடும்.

விசர்நாய்கடித்து தகுந்த சிகிச்சை பெறாவிட்டால் விசர்நாய்க்கடி நோய் குறுகிய காலத்திலோ அல்லது நீண்ட நாட்களின் பின்னரோ ஏற்படும்.

விசர்நாய்க்கடிக்கு உட்பட்டு தகுந்த சிகிச்சை பெறாது, விசர்நாய்க்கடி நோய் ஏற்பட்ட ஒருவரின் நோய்க்குரிய அறிகுறிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. காச்சல்.
2. தலையிடி.
3. உடல் பலவீனம்.
4. வெளிச்சத்தைப் பார்க்க முடியாது இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தொண்டையை இறுக்குகின்ற மாதிரி இருத்தல்.
6. அதிகமாக உமிழ்நீர் சுரத்தல்.
7. நீர்வெறுப்பு (நீர் அருந்த முடியாமலும் நீரைக்கண்டால் பயமாகவும் இருத்தல்)
8. காற்று வெறுப்பு (காற்று உடலில் படும்போது நோயின் தாக்கம் கூடுதலாக இருத்தல்.

விசர்நாய்க்குரிய குணங்குறிகளுடன் காணப்பட்ட நாய் கடித்தால், கடித்த நாய் ஒரு மாதத்திற்குள் இறந்தாலோ, கடித்த நாயைக் கண் காணிக்க முடியாத பட்சத்திலோ அல்லது காட்டுப்பிராணி ஒன்று கடித்தாலோ உடனடியாக தகுந்த சிகிச்சை பெறவேண்டும்.

விசர்நாய்கடித்தவுடன் முதலில் காயத்தை நன்றாக சவர்க்காரம் பூசி ஓடும் நீரில் நன்றாக கழுவவேண்டும். வைத்தியசாலைக்குச் சென்று தடுப்பு ஊசி போடுதல் வேண்டும். முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டால் இந்நோயில் இருந்து முற்றாக பாதுகாக்க முடியும்.

இந்நோயைத்தடுப்பதற்கு ஐந்துவாரங்களுக்கு மேற்பட்ட வயதுள்ள சகலரும் வருடத்துக்கு ஒருமுறை பால்கட்ட வேண்டும். கட்டாக்காலி நாய்களை அழித்தல் வேண்டும். மேலும் கீழே குறிப்பிடப்படும் எந்தச் சந்தர்ப்பங்களிலும் நாய்களுக்கு வக்சின் பெற்றுக் கொடுக்கலாம்.

1. நாய்குட்டி ஈனும் பருவத்தில்
2. குட்டிகளுக்குப் பால் ஊட்டும் பருவத்தில்
3. நோய் ஆரம்ப நிலையில் இருக்கும் போது

இவற்றைவிட வீட்டில் வளர்க்கப்படும் நாய்களை அலைந்து திரியவிடக்கூடாது. தேவையற்ற குட்டிகள் பெருகுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். விசர்நாய்க்குரிய குணங்குறிகள் ஒரு நாய்க்கு காணப்பட்டால் இந்நாயினை உடனடியாக அழித்தல் வேண்டும்.

எனவே விசர்நாயக்கடியினை அலட்சியம் செய்யாது தகுந்த சிகிச்சையினைப் பெற்று பேராபத்தினைத் தடுத்து ஆரோக்கியமாக வாழ்வதற்கு ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்து செயற்படுவதன் மூலம் விசர்நாய்க்கடி நோயில் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பது திண்ணம்.

*உலகம் வாழத்தெரியாதவர்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும்*

*வாழத்துடிப்பவர்களுக்குக் குறுக்கே நிற்கும்*

*பழிப்பவர்களுக்குப் பயந்தால் இவ்வுலகில் வாழவே முடியாது*

- அகிலன் -

*முட்டாளின் இதயம் அவன் வாயிலிருக்கிறது.*

*ஆனால் அறிவாளியின் வாய் அவன் இதயத்தில் இருக்கிறது*

- பிராங்ளின் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம்

# நாடகப் பட்டறை ஒழுங்குபடுத்தும் முறைமை

நாடகம், அரங்கு என்பன கற்றலுக்கு உதவும் சாதனங்களாக இருந்துவருகின்றன. நியமக்கல்வி முறையிலும், முறையில் கல்வியிலும் இவை உதவுகின்றன. கேட்டுக்கற்றல், பார்த்துக்கற்றல், செய்து பட்டறிந்து கற்றல் ஆகிய யாவும் இவற்றால் விளையக்கூடியன.

## (i) அரங்கக்கலையின் மூலங்களும் பட்டறையும்

பட்டறிவு மூலம் கற்றலையே பட்டறை முறைமை நிறைவு செய்கின்றது. நாடகம் ஒரு கூட்டுக்கலை எனினும் அது ஒரு தனிக்கலை. அது பல மூலகங்களின் இசைவால் முழுமைபெற்றுத் தனிக்கலையாக நிற்கும். எனவே நாடகத்துக்கான பட்டறைகளை ஒழுங்கு செய்பவர், வெவ்வேறு இலக்குகளைக் கருத்திற்கொண்டு ஒழுங்குகளை மேற்கொள்வர். உ-ம்:-

1. அரங்கக் கலைகளை அறிமுகம் செய்தலும், அவற்றின் பால் நாட்டத்தை ஏற்படுத்துதலும்
2. நாடகம் எழுதுதல்
3. நடித்தல்
4. நெறியாளுகை செய்தல்
5. காட்சிவிதானித்தல்
6. ஒளிவிதானிப்பு
7. அரங்குக்கான இசை அமைத்தல்
8. அரங்குக்கான நடனம்
9. அரங்க நிர்வாகம் என வெவ்வேறு இலக்குகளைக் கருத்திற்கொண்டு தனித்தனி பட்டறைகள் ஒழுங்கு செய்யப்படும்.

## (ii) அரங்க வகைகளும் பட்டறைகளும்

எமது சூழலைக் கருத்திற்கொண்டு நோக்குமிடத்து, இங்கு இன்று பயிலப்படும் அரங்குகளைப் பின்வரும் வகையில் பிரித்து நோக்கலாம் :

1. பாலர் கல்வியில் அரங்கு
2. சிறுவருக்கான அரங்கு
3. பாடசாலை அரங்கு-பாடசாலை அரங்கு என்பது, இடைநிலை வகுப்பு மாணவர்களை பார்வையாளராகவும், ஆற்றுவோராகவும் கொண்ட அரங்கு எனக்கொள்ளலாம்.
4. வளர்ந்தோர் அரங்கு அல்லது சமூக அரங்கு-உயர்தர வகுப்பு மாணவர், பல்கலைக்கழக மாணவர் யாவரும் இதற்குள் வரக்கூடும்.

மேலும், எமது சமூக அரங்கினைப் பின்வருமாறும் வகுத்துக் கொள்ளலாம்

1. பாரம்பரிய வழிநின்ற அரங்கு - எமது பிரதேசக் கூத்துகள், இசை நாடகம் எனப்படும் வடிவம் இதற்குள் அடங்கக்கூடும்
2. சமகால அரங்கு - இதில் இயல்பு நெறி நின்ற அரங்கும், மோடிமை அரங்கும் அடங்கலாம். தெருவெளி அரங்கையும் சமகால அரங்கினுள் நிறுத்தித் தனித்து நோக்கலாம்.

கற்கை நெறியாக அரங்கு வளர்ந்து வருவதால் நாம் பட்டறைகளை வகைப்படுத்தி முறைமைப்படுத்தி நடத்தமுற்படுவது அவசியமாகின்றது. எனவே எமது அரங்க முயற்சிகளை வகைப்படுத்தி, ஒவ்வொரு வகைக்குமான, பட்டறைகளை நடத்துவதும் பயன்தரும். பாரம்பரிய வடிவங்களுக்கும் பட்டறைகள் பயன்படும் என்பதை நாம் உணரத்தலைப்படுவது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (iii) பயில்வோரும் பட்டறையும்

எமது தள நிலைமைகளைக் கருத்திற்கொண்டே நாம் பட்டறைகளை ஒழுங்குசெய்வது அவசியம். எதனைப் பயிலப்போகிறோம் என்பது எந்த அளவுக்கு முக்கியமாக இருக்கின்றதோ, அதனைவிட யார் பயிலப்போகிறார்கள் என்பதை அறிந்து அவர்களையும் வகைப்படுத்திக்கொண்டு, ஒவ்வொரு வகையினருக்கும் தனித்தனியே பட்டறைகளை ஒழுங்கு செய்தல் நல்லது. சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வகையினரை இணைத்துச் செய்வதும், சாத்தியமாகவும், அவசியமாகவும் இருக்கும்.

எமது சூழலில் அரங்க நடவடிக்கைகளைக் கருத்திற் கொள்ளுமிடத்து பட்டறை மூலம் பயிலுவோரைப் பின்வரும் முறையில் வகைப்படுத்தலாம்.

1. பாலர் பாடசாலை ஆசிரியர்கள்.
2. ஆரம்ப வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள்.
3. ஆரம்ப வகுப்புகளில் பயிலும் மாணவர்.
4. ஆரம்பவகுப்பு மாணவரையும், ஆசிரியர்களையும் இணைத்து,
5. இடைநிலை வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்.
6. இடைநிலை வகுப்புகளில் கற்கும் மாணவர்.
7. இடைநிலை வகுப்பு மாணவரையும், ஆசிரியர்களையும் இணைத்து,
8. உயர்தர வகுப்பு மாணவர்.
9. நாடக, அரங்க நடவடிக்கைகளில் பொதுவான நாட்டங் கொண்ட ஆசிரியர்கள்.
10. ஆசிரிய கலாசாலைகளில் பயிலும் ஆசிரிய மாணவர்
11. பயில்முறைக் கலைஞர்களாக உள்ளவர்கள்
12. நாடகக்கலையின் ஆர்வங்கொண்ட முன் அனுபவம் இல்லாத இளைஞர்.
13. நாடகத்தைப் பாடநெறியாகப் பயிலும் மாணவர்.
14. நாடக பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்.
15. தொழில் முறைக்கலைஞர்.
16. பாரம்பரிய வழிவந்த நாடகங்களை நடிக்கும் கலைஞர்.
17. பிரசார நோக்குடன் நாடகத்தைப் பயன்படுத்துவோர் உ-ம் சுகாதார ஊழியர்

நாடகக்கலையின் ஆர்வமுள்ள பயில்முறையாளர்களையும், ஆசிரியர்களையும், நாடக ஆசிரியர்களையும் அனைத்துப் பட்டறைகளிலும் இணைத்துக்கொள்ளலாம்.

மேலும், தெருவெளி அரங்கினை ஒரு தனிவடிமாகக் கருத்திற்கொண்டு அதன் ஆற்றுகை சம்பந்தப்பட்ட பட்டறைகளைத் தனிப்பிரிவாக அமைத்து நடத்துவது பற்றியும் சிந்திக்கலாம்.

## (iv) பயில்வை வழிநடத்துவோரும் பட்டறையும்

"கற்பித்தல்" "பயிற்றுதல்" என்பவை இன்று ஒவ்வாச் சொற்களாக கருத்தப்படுவதுமுண்டு. ஆசிரியன் ஒரு வழிகாட்டியாகவே அமைதல் நல்லதெனக் கருதப்படுகிறது. இலக்கைச் சென்றடைபவர் மாணவர். பிரதானமாக சிறுவருடன் சேர்ந்து பட்டறை நடத்தும் ஆசிரியர், நியம ஆசிரியரொருவரைப் போன்றிராது, சமமானவர்களுள் முதன்மையான ஒருவரைப்போன்று நடந்து கொள்வது அவசியமாகும். வளர்ந்தவருடன் இணைந்து பட்டறை நடத்தும் ஒருவர்கூட தன்னை "ஆசிரியர்" எனக் கருதிக்கொள்ளாது பட்டறையில் சுதந்திரமானதொரு சூழல் நிலவும் வகையில் நடந்துகொள்வது அவசியமாகும்.

## பட்டறையை வழிநடத்துவோர் எண்ணிக்கை

தனியொருவர் தனித்து நின்றும் வழிநடத்தமுடியும். பலரோடு இணைந்தும் வழிநடத்தமுடியும். பட்டறையின் இலக்கினைப் பொறுத்து நடத்துவோர் எண்ணிக்கை வேறுபடும். அரங்கின் மூலகங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி பட்டறைகள் நடத்துவதாயின் ஒவ்வொன்றையும் அவ்வத்துறைசார் கலைஞர்கள் தனித்து நடத்தமுடியும். ஆயிலும் நடிப்பு போன்ற அரங்க மூலகம் சார்ந்ததொரு பட்டறையினை, மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவான முறையில் நடத்துவதாயின், வெவ்வேறு மோடியில் அமைந்து நடிப்பு முறைமைகளை ஆழமாகப் பட்டறிந்து, அனுபவம் பெற்ற கலைஞர்கள் இணைந்து நடத்த வேண்டிவரும்.

எவ்வாறாயிலும், தனியொருவர் பட்டறையை வழிநடத்தும் நிலைமையே இயல்பானதாக அமையும். அவர் வெவ்வேறு துறைசார் அரங்கக் கலைஞர்களது உதவியோடு பட்டறையை நடத்தி முடிக்கலாம். அரங்கின் சகல துறைகளிலும் துறைபோன ஒருவராக எவரும் இருப்பது அரிது. ஆயிலும் அரங்கு பற்றியும் நாடகம் பற்றியும் தெளிவான அறிவும் விளக்கமும் அனுபவமும் உள்ள ஒருவர், சிறந்த முறையில் பட்டறையை வழிநடத்த முடியும்.

## (v) பட்டறையின் நோக்கம்

சிறந்ததொரு கலைப்படைப்பு என்பதுதான் ஒன்றைச் சொல்லும் வேளையில் இன்னொன்றைக் கருதுவதாக இருக்கும். அது கருதும் பொருளை "மெய்ப்பொருள்" எனவும் கொள்ளலாம். எனவே சிருஷ்டிக்கலையான நாடகக்கலை சம்பந்தப்பட்டதொரு பட்டறையும், இரண்டு வகையான நோக்கங்களைக் கொண்டதாக இருக்கும்.

### வெளிப்படை நோக்கம்

அரங்கக்கலையின் பயில்வையும், ஆர்வத்தையும், திறமையையும், அனுபவத்தையும் பட்டறையில் பங்குகொள்வோர் பெற்றுக்கொள்வதற்கான சூழலையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தலே பட்டறை ஒழுங்குபடுத்தலின் வெளிவாரியான அல்லது வெளிப்படையான நோக்கமாகும். அரங்கக்கலையின் மூலகங்களில் ஒன்றில் அல்லது பலதில் ஆற்றலையும் அனுபவத்தையும் விருத்தி செய்து கொள்வதை நோக்கமாகக் கொண்டே பயிலுநர் நாடகப்பட்டறைக்கு வருகின்றனர்.

### உள்ளுறை நோக்கம்

கலைப்படைப்பில் ஈடுபடுவதற்காகப் பயில முற்படும் ஒருவர் முதலில் தன்னைத்தான் கண்டுகொள்ள வேண்டும். அதாவது தன் ஆற்றலைத் தான் இனங்கண்டு கொள்ள வேண்டும். தன்னைத்தான் விமர்சிக்கும் துணிவையும் திறனையும் பெறவேண்டும். சுயநலத்தை விடவேண்டும். கூடிக்கருமமாற்றத் தேவைப்படும் தன்நம்பிக்கையைப் பெறவேண்டு. முழுமையானதொரு இசைக்கோலத்தின் மிகச்சிறிய ஆயினும் மிக இன்றியமையாததொரு இசைக்குறி தான் என்பதை உணரவேண்டும். இவற்றை அறிவதாயின் அவன், தன் குறைகளை அறிந்து, களைந்து, தன் ஆற்றல்களை அறிந்து விருத்தி செய்துகொள்ள வேண்டும். தன்னையே தான் கண்டுபிடிக்கும் படிமுறையில் ஈடுபடும் ஒரு பட்டறையாளன், வெற்றிகாணும் பட்சத்தில் சிறந்ததொரு கலைஞனாக வளர்வதோடு, மனிதம் நிறைந்ததொரு மனிதனாக உயர்வான். இவ்விரண்டில் முற்கூறியது மட்டும் வளர்ந்தால் பட்டறை பாதி வெற்றி பெற்றதாகும். பின்னது மட்டும் உயர்ந்தால் பட்டறை முழுவெற்றி பெற்றதாகக் கருதமுடியும். இரண்டுமே வளருமாயின் பின் பேசவும் வேண்டுமோ?

## (vi) பட்டறைச் சூழல்

நாடகப்பட்டறை ஒரு கல்விமுறைமை என்ற வகையில் அதன் சூழல் கல்வி நடவடிக்கை சுதந்திரமாக நடைபெறுவதற்கான சூழலாக இருப்பது நல்லது. பட்டறையில் பங்குபெறுபவர், தாமாக முயன்று கல்வியைப்பெறும் முயற்சியில் ஈடுபடுவது அவசியமாதலால், பட்டறையின் சூழல் சுதந்திரம் நிறைந்ததொன்றாக அமைவது அவசியம்.

மகிழ்வும் சுதந்திரமுமே சிருஷ்டியின் அடிப்படைகள், படைப்பனுபவத்தையும், படைப்பில் ஈடுபடும் வேளையில் கிடைக்கும் இன்பத்தையும் பெறுவதாயின் பட்டறைச் சூழல் மட்டுப்பாடுகளற்றதாக இருப்பது அவசியம். அனைவரும் கூட்டாக இணைந்து, தாமாக ஏற்படுத்திக்கொள்ளும் ஒழுங்குகள் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தவிர, தனியொருவரால் விதிக்கப்படும் கட்டுப்பாடு அங்கு இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் நிர்ப்பந்தமின்றி, தன்னெழுச்சியாகப் பங்குகொள்ள வைப்பதற்காகவே பட்டறைச் சூழல் சுதந்திரமானதாக உள்ளது. பட்டறை நடத்தப் பயன்படுத்தும் வெளி-அது மண்டபமாகவோ, அரங்கமாகவோ, வெட்டவெளியாகவோ இருக்கலாம். பட்டறையாளர்களின் எந்தவொரு நடவடிக்கையையும் கட்டுப்படுத்துவதாக அமையக்கூடாது. மனம்போலச் செயல்புரிய இடம் விட்டுக்கொடுக்க வேண்டும். பட்டறையாளர்களது மனங்களும், பட்டறை வழங்கும் இடமும், கட்டுப்பாடுகள் எதுவுமில்லாது விட்டு விடுதலையாகி நிற்க வேண்டும். அப்பொழுதுதான் "மனமுண்டானால் இடமுண்டு" என்ற நிலை தோன்றும்.

ஒவ்வொரு பட்டறையாளனும் கூட்டாக இணைந்து தமக்குள் உறைந்து போய்க்கிடக்கின்ற மனிதத்தை, உருகிவெளிவரச் செய்வதற்கான சூழலை பட்டறை நடைமுறையும், சூழலும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அது "கூடி வாழ்தல்" என்ற உயரிய குணங்களை உற்பத்தியாக்க வேண்டும்.

### (vii) பட்டறையில் பயன்படும் ஊடகங்கள்

பட்டறை எந்த நோக்கத்திற்காக நடத்தப்படுகிறதோ அதற்கேற்றவாறு அங்கு பயன்படுத்தப்படும் ஊடகங்கள் வேறுபடும். ஒளியமைப்பு சார்ந்த பட்டறையாயின், ஒளியமைப்புச் சாதனங்களும், மேடைவெளியும், வேட உடுப்பு, ஒப்பனையும், நடிகர்களது அசைவும், காட்சியமைப்புக்களும், ஊடகங்களாகப் பயன்படும். அவ்வாறே காட்சியமைப்பு, இசை, நடனம் என்பவற்றுக்குத் தனித்தனியே பட்டறை நடத்துகையில், பயன்படும் ஊடகங்கள் வேறுபடும். எனவே பொதுவாக நடிப்பினை முதன்மைப்படுத்தி நடத்தப்படும் பொதுமைப்பட்டதொரு பட்டறையாயின் அதில் பின்வரும் ஊடகங்கள் பயனுடையனவாக அமையும்.

### 1. விளையாட்டு

பலவகையான **அரங்க விளையாட்டுக்கள்** உள்ளன. இவற்றைவிட கற்பனை வளமும், சுதந்திர உணர்வும் உள்ளதொரு பட்டறையில் பட்டறையை வழிநடத்துவோரும் பட்டறையாளர்களும் இணைந்து பலப்பல அரங்க விளையாட்டுக்களை உருவாக்க முடியும். இவற்றைவிட **நியமவிளையாட்டுக்களையும்** பட்டறையில் பாவனை செய்யமுடியும். மேலும் அனைத்து நடவடிக்கைகளையும் 'விளையாட்டு' எனும் வகையில் ஈடுபாட்டோடும், மகிழ்வோடு செய்வதன் மூலம், பட்டறை நடவடிக்கை முழுவதுமே ஒரு விளையாட்டு தரும் இன்பத்தைத் தந்தவண்ணமிருக்கும்.

மேலும் நாடகப்பாங்கான விளையாட்டுக்கள் பலவும் பயன்படுத்தப்படும். இவற்றுள் பாகமாடுதல், ஆக்க நாடகம் ஆயின பயன்படுத்தப்படும். அவை நாடகப் பண்புடையனவாக இருப்பினும் விளையாட்டின் பண்பும், மனநிலையும் , சூழலுமே அங்கு மேலோங்கி நிற்கும்.

### 2. புத்தளிப்பு

எழுத்துரு இல்லாது நிகழ்த்தப்படும் ஒரு நாடகம் என இதனைக் கூறமுடியும். எந்தவொரு நிலைமையையும் உடனடியாகச் செய்துகாட்டுதல் இதன் இயல்பும் பயனுமாகும். பேச்சினைப் பயன்படுத்தியும் இதனைச் செய்யலாம். பேச்சு இல்லாது வெறுமனே உடல்மொழியைப் பயன்படுத்தியும் இதனை நிகழ்த்தலாம். சிறுவர் முதல் வயது வந்தவர் வரை இதனைச் செய்து பல திறன்களை விருத்தி செய்துகொள்ள முடியும். நாடகப் பட்டறையில் புத்தளிப்பின் பயன் மிகவும் குறிப்பிடக்கூடியதாகும். புத்தளிப்பும் பலவழிகளில் விளையாட்டின் பண்பினைக் கொண்டதொரு ஊடகமாகும்.

### 3. அசைவும் ஆட்டங்களும்

தன் உடலின் சாத்தியக்கூறுகளையும், வெளியின் பல்வேறு பரிமாணங்களையும் பட்டறையாளன் கண்டுகொள்ள உதவும் மிக்கச்சிறந்த ஊடகம் அசைவும், அசைவிலிருந்து வளர்த்தெடுக்கப்படும் ஆட்டங்களுமாகும். சாதாரணமான நடத்தலிலிருந்து பல்வேறுவகைப்பட்ட நடைகள் வரையிலும் தன்னியல்பான ஆட்டங்களிலிருந்தும் சாஸ்திரியப்படுத்தப்பட்ட ஆட்டங்கள் வரையிலும் ஒவ்வொருவரும் தன்னாற்றலுக்கேற்ற அளவில் புரிந்துகொண்டு புரிதலை இது உள்ளடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. பேச்சும் பாட்டுக்களும்

சுயமாகப் பேசுதல், செந்தமிழில் பேசுதல், மொழியிலா மொழியில் பேசுதல், உரைநடையில் பேசுதல், கவிதையில் பேசுதல் எனப் பலவாறு பேசுதல் மூலம் பேச்சின் பரிமாணத்தை அறிந்து கொள்ள முடிகிறது. அவ்வாறே எவ்விதக் கட்டுப்பாடுமின்றிப் பாடுதல் முதல், சுருதி லயசுத்தத்தோடு பாடுதல்வரை தன்னாற்றலை ஒருவர் கண்டுகொள்ளப் பட்டறை உதவுகிறது. ஆற்றலை மட்டுமின்றித் தனது மட்டுப்பாடுகளையும் அறிந்துகொள்ளப் பட்டறை உதவும்.

## 5. ஊமம் / கூட்டுமம்

பேச்சினைப் பயன்படுத்தாது உடலினை மட்டும் பயன்படுத்திக் கருத்தினை வெளிப்படுத்தும் கலை ஊமம் எனலாம். மேலைத்தேசங்களில் இது ஒருதனிக்கலையாக வளர்ந்துள்ளது. இது மிகவும் பயனுடையதொரு ஊடகமாகப் பட்டறைகளில் பயன்படும். தனியொருவர் செய்வது முதல் பலர் இணைந்து செய்தல் வரையிலும், தனியொரு செயல்முதல் நீண்டதொரு நாடகம் வரையிலும் இவ்வூடகத்தினூடாக வெளிப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

## (viii) பட்டறைதரும் அனுபவங்கள்

நாடகப்பட்டறை மூலம் ஒருவர் பெறக்கூடிய அனுபவங்கள் பல உள்ளன. சுருங்கக்கூறுவதாயின், அவர்கள் வாழ்க்கை அனுபவத்தைப் பெறுகிறார்கள் எனலாம். வாழ்தல் என்பது வெறுமனே உண்டு, உடுத்து வாழ்தல் என்பதல்ல. அனைத்தையும் அழகுபடச் சுவைத்து வாழ்தலே வாழ்வாகும்.

பட்டறைதரும் அனுபவங்களுள் முக்கியமான சிலவற்றை மட்டுமே இங்கு மிகச் சுருக்கமாக நோக்கக்கூடியதாகவுள்ளது,

### 1. கற்பனை:-

கற்பனை என்பது சோம்பலின் விளைபயனல்ல; அது அறிவின் விவேகத்தின், பயிற்றப்பட்ட சிந்தனையின் பெறுபேறாகும். வேகமும், ஆழமும் நிறைந்த கற்பனைத்திறனை வளர்க்கப் பட்டறை உதவும். கற்பனை கலைஞனின் ஆயுதமாகும்.

### 2. அவதானம்

வாழ்வினை அவதானித்து, மக்களிடத்திலிருந்து கற்றுக்கொண்டதை மக்களின் நலனுக்காகப் பயன்படுத்துவதே சிறந்த கலைஞனின் பணி எனக் கொள்ளப்படுகிறது. ஆற்றல் நிறைந்த அவதானத்தை வளர்த்து அறிய வேண்டியவற்றைத் தெரிந்து, விரைந்து அவதானிக்கும் பண்பு பட்டறையால் பெறப்படும் அனுபவமாகும்.

### 3. புலனுணர்வு

கலைஞனின் புலன்கள் எப்பொழுதும் விழிப்பாக இருப்பது அவசியம். ஐம்புலன்களையும் கூர்மைப்படுத்தப்பட்டறை பல நடைமுறைகளைக் கொள்ளும். கூர்மையான புலன்கள், சிருஷ்டித்தலில் பெருந்துணைபுரியும்.

### 4. மனவெழுச்சிகள்

நவரசங்களையும் வெளிப்படுத்தும் கலைஞன், தனது மன வெழுச்சிகளில் இயல்பினையும், தாக்கங்களையும், பரிமாணங்களையும் அனுபவபூர்வமாக உணர்ந்திருப்பது அவசியமாகின்றது. வேண்டிய வேளைகளில் அவற்றை மீள்படைப்புச் செய்யும் அவசியம் கலைஞனுக்கு உண்டு.

### 5. தளர்ப்பீடு

இது தசைநார்களின் தளர்ப்பீட்டையும், உள்ளத்தின் தளர்ப்பீட்டையும் உள்ளடக்கி நிற்கிறது. உடலும் உள்ளமும் பதட்டமின்றி இருக்க இது உதவும். தளர்ப்பீட்டு நிலையில் தன்னை வைத்துக்கொள்ளக் கூடிய ஒரு கலைஞனால்தான், தான் விரும்பியவாறு சிருஷ்டிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. கருத்தூன்றல்**

கருத்தூன்றிச் செய்யாத கருமம் கைகூடாது. செய்யும் கருமத்தில் கருத்தூன்றி நிற்கும் பழக்கத்தைக் கலைஞன் எற்படுத்திக் கொண்டால், படைப்பு நிச்சயம் சிறக்கும். நாடகப்பட்டறை தரும் அனுபவங்களும் மிகவும் நெருக்கமான அனுபவமாக அமைவது, கருத்தூன்றலால் கிடைக்கும் இன்பமும் பயனுமாகும். இது கற்றலுக்கும் கலைச்சிருஷ்டிக்கும் பெரிதும் உதவும்.

**7. சிருஷ்டி இன்பம்**

ஒன்றைச் சிருஷ்டிக்கும் வேளையில், சிருஷ்டிப்பவன் பெறும் இன்பத்தை இது குறிக்கும். அது உழைப்புக்கலந்ததொரு இன்பமாக இருப்பினும், உழைப்பின் சிரமம் மறக்கப்பட்டு, உழைப்பால் விளைந்த இன்பமே எஞ்சி நிற்கும். இந்த அனுபவத்தைப் பட்டறை பல வழிகளில் தந்து நிற்கும்.

**8. சுதந்திர சிந்தனை**

சுதந்திரமான சூழலை வழங்கிச் சிருஷ்டியில் ஈடுபட உதவும் பட்டறை, சுதந்திர சிந்தனையை வளர்க்கிறது. சுதந்திர சிந்தனை தற்புதுமையான படைப்புக்கு வழிவகுக்கிறது. தனித்துவமும் தற்புதுமையும் கலையின் இன்றியமையாப் பண்புகளாகும்.

**9. அழகியல் இன்பம்**

கலையை நயக்கும் பாங்கினைப் பட்டறை பலவழிகளால் ஏற்படுத்துகின்றது. இப்பழக்கம் மெல்லமெல்ல ஏற்படும் ஒன்றாகும். நாடகக் கலையின் அனைத்து இயல்புகளையும் அறிவதன் மூலம் இது பெறப்படுகிறது இவ்வனுபவம் பின்னர் ஏனைய கலைகள் அனைத்தையும் நயக்கும் பாங்கைக் கொடுக்கிறது.

**10. சமூக உணர்வு**

கூட்டுக்கலை எனப்படும் நாடகக்கலை தனது தனித்துவமான இயல்பின் காரணமாகப் பலரையும் இணைந்து கருமமாற்றவைக்கிறது. பட்டறையின் இலக்குகளில் ஒன்றாக அமைவதும் இதுவே. கூடிக்கருமமாற்றும் பண்பு சுயநலங்களை அகற்ற உதவுகிறது, பொதுநலனுக்காகத் தன்னை விட்டுக்கொடுக்கும் தன்மையை வளர்க்கிறது. இது பரந்த சமூக உணர்வாகப் பரிணமிக்கின்றது.

## (ix) பட்டறைக்கான வேலைத்திட்டமும் அதனை நடைமுறைப்படுத்தலும்

பட்டறையை வழிநடத்துபவர் நிச்சயமாக ஒரு வேலைத்திட்டத்தை வைத்திருப்பது அவசியம். அவ்வேலைத்திட்டம்

1. பட்டறையின் இலக்கு
2. இலக்குப்பட்டறையாளர்
3. பட்டறையின் கால அளவு என்பவைக்கேற்ப வேறுபட்டதாக அமையும்.

கருத்துரைகளும், செயல்முறைகளும் கலந்ததாகப் பட்டறை வேலைத்திட்டம் அமைவது விரும்பதக்கது. நாடக வரலாறு, நாடக, அரங்கக் கோட்பாடுகள் என்பவை பற்றிய அறிவு மிக அவசியமாகும். செய்முறை அனுபவமும் கோட்பாடுகள், கொள்கைகள் பற்றிய அறிவும் சமநிலைப்படுவது அவசியம்.

கற்பித்தல்-கற்றல்முறைமைகள் போன்று, பட்டறை நடத்தும் முறைமையும், வழிகாட்டிக்கும் பட்டறையாளர்களுக்குமிடையில் விளையும் ஊட்டத்தின் பயனாக அமையும் ஒன்றாகவே இறுதியில் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.S.இராமநாதன் B.A. PGDE (பழைய மாணவன்)
ஆசிரியர் (S.L.T.S. 2II)
யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி
தொண்டைமானாறு

# கல்வி வளர்ச்சியில் பொருளாதாரத்தின் தாக்கம்

21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் கூட வறுமை, நாம் எதிர்நோக்கும் பெரிய சவாலாக அமைந்துள்ளது. இலங்கையில் கல்வியறிவு வளர்ச்சி வீதம் 92% மாக காணப்பட்ட போதும் கூட இலங்கையில் கிராம குடித்தொகையில் ஏறத்தாள 79% சதவீதமானோர் வறியவர்களாக இருந்து வருகின்றனர் என்ற உண்மையை உலக வங்கி அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன. 1995/96ஆம் ஆண்டு புள்ளி விபரங்களின்படி இலங்கையின் மொத்த குடித்தொகையில் ஏறத்தாள 26.7% குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர்.

இலங்கையில் வறுமையை தோற்றுவிக்கும் காரணிகளாக பொருத்தமற்ற கல்வி முறைமை, குறைந்த மட்டத்திலான மானிட அபிவிருத்தி, பெண்களின் தாழ்வான சமூக அந்தஸ்து என்பனவும், அரசியல்பொருளாதார யுத்த நடவடிக்கைகளும், வறுமையைக் குறைந்த காலத்தில் தோற்றுவிக்கும் காரணிகளாக அமைந்துவிட்டன. வடக்கு கிழக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியின் பின்புலத்தில் வறுமை முழுமையாக குடி கொண்டுள்ளது. எனினும் வெளிநாட்டு வருமானங்கள் அதனை வெளிக்காட்டாமல் மூடி இருக்கும் நிலையையும் கவனத்திற் கொள்ளுதல் அவசியம்.

வறுமை கல்வியை வெகுவாக பாதிக்கும். கல்வியானது வறுமைச் சூழலை இல்லாதொழிக்க வேண்டும். இந்த இரு வேறுபட்ட சூழலை கட்டியெழுப்ப மனிதவள அபிவிருத்தி கல்வி கலாச்சார அமைச்சு பல கல்விச் செயற்திட்டங்களை வகுத்துள்ளது. கல்வித்திட்டங்களை உருவாக்குவது மட்டும் போதாது. அதனை நடைமுறைப்படுத்தி அதன் வெளியீட்டின் பயனை பெறவேண்டும்.

கல்வியும் பிரதேச வளமும் இணைய வேண்டும். அதற்கூடாக வேலைவாய்ப்பும், அதற்கூடாக பொருளாதார சமூக அபிவிருத்தியும் ஏற்பட வேண்டும். இச் செயற்பாடே சமூக அபிவிருத்தியை எழுச்சி பெறச் செய்து வறுமையை இல்லா தொழித்துவிடும். இலங்கையில் இளைஞர்கள் தாம் பெற்ற கல்விக்கு ஏற்ற விதத்திலான தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை இருந்து வருகின்றது. இது இளைஞர்களை விரக்தி நிலைக்கு இட்டுச் செல்கின்றது. வடக்கு கிழக்கு மக்கள் கல்விக்காக பெரும் மூலதனம் இடுகின்றனர். அந்த மூலதனம் வீண் விரயமாகும் போது சமூக கிளர்ச்சிகள் தோற்றம் பெறுகின்றன. 1999ல் இலங்கையில் வேலையின்மை 8.8% வீதமாக காணப்பட்டது.

தொழில் வாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய கல்வி முறையினைப் புகுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். உயர் கல்வி வரையறுக்கப்பட்ட நிலையிலிருப்பதனால் ஆண்டு தோறும் க.பொ.த சாதாரணதரம் சித்தியடைந்த க.பொ.த உயர்தரம் சித்தியடைந்த பெரும்பாலான பிள்ளைகள் பொருத்தமான வழிகாட்டலின்றி கைவிடப்படுகின்ற நிலை, கல்விப்புலத்தில் இன்றும் அவதானிக்கக் கூடியதாக உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. முறைசாராக் கல்வி அமைப்புக்கள் வலுவுள்ளதான பயிற்சிகளையும், தொழிலுக்கு தொடர்ச்சியான வழிகாட்டியாகவும் அமைய வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரை முறைசாராக் கல்வி அமைப்புக்கள் ஓரளவு தொழிற்பயிற்சியை வழங்கிய போதிலும் தொடர்ந்து அத்தொழிலை மேற்கொள்ள வங்கிக்கடன், (மூலதனம்) உற்பத்தி, சந்தைப்படுத்தல் போன்ற தொடர் நிகழ்வுகளில் கவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துவதில்லை. இவற்றுக்கிடையிலான தொடர்புகளும் இல்லை. இதனால் அவை வலுவிழந்து காணப்படுகின்றன. முறைசாரா கல்வியில் வறுமையை போக்கக் கூடிய சிறப்பான அம்சங்கள் காணப்பட்ட போதும் அவை தனது தொடர்ச்சியான வழிகாட்டல் சேவையை வழங்காத காரணத்தினால் நம்பிக்கை இழக்கும் நிலையில் காணப்படுகின்றன. இதனால் இளைஞர் சக்தி வீணடிக்கப்படுகின்றது. இது வறுமை நிலையை மேலும் உக்கிர நிலைக்கு கொண்டு செல்கின்றது.

வறுமையைப் போக்குவதற்கு இலங்கையில் பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. பாடசாலையிலும் கூட சில திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவை இன்றுங்கூட தொடர் நடவடிக்கைகளாகவே அமைந்துள்ளன. போஷாக்கு அற்ற குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்தே வருகின்றது. இது கல்வி அபிவிருத்தியில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது

கல்வி மீதான அபிவிருத்தியினை மேற்கொள்ளும் அதே வேளை வறுமையை தணிப்பதற்கான சமூக அபிவிருத்தித் திட்டங்களையும் வடிவமைக்க வேண்டும். வீட்டுத் தோட்டம், சுய தொழில் பயிற்சி, விவசாய நுட்பங்களை அறிமுகம் செய்தல், புதிய மரநடுகை, மூலிகைநடுகை, கால்நடைவளர்ப்பு, மீன்பிடி போன்ற துறைகள் வளர்க்கப்பட வேண்டும். சமுர்த்தி செய்திட்டங்கள் இவற்றில் கவனம் செலுத்தத் தலைப்பட்டன. ஆயினும் அவை இலங்கை முழுவதையும் பிரதிபலிக்கவில்லை.

வறுமையை உடன் ஏற்படுத்தும் போர் நடவடிக்கைகள், நிறுத்தப்பட வேண்டியது மிகமிக அவசியமாகும். போர் நடவடிக்கைள் நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக சீரழித்ததோடு, ஒவ்வொரு குடும்பத்திலும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. இது குடும்ப வறுமையை தோற்றுவித்த முதல் காரணியாகவும் வர்ணிக்க முடியும். இவை கல்வி மீது பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன.

கல்வி மீதான பின்புலத்திலுள்ள வறுமையை இனம் கண்டு இல்லாதொழிப்பதன் ஊடாகவே கல்வி அபிவிருத்தியை நிலை நாட்ட முடியும் என்பதால் புரிந்துணர்வுடனான தூய சிந்தனையுடன் எம்மை நாமே அர்ப்பணிப்பதன் மூலம் உண்மையான கல்விக் கூடான மனித வள விருத்தியினை ஏற்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் நடராஜா ஜெயராஜா
டி.ஏ.எம் (இலங்கை)
அம்பிகை வைத்திய நிலையம்
வட்டக்கச்சி

# மருத்துவப் பெயர் பெற்ற கீழ்க்கணக்கு நூல்கள்

மதுரை மாநகரிலே நிலவியிருந்த கடைச்சங்கத்தின் இறுதிக்காலத்திற்குப் பின்னரும், ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலும், சிறப்பாக ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் தோன்றிய பல்லவர்கள் ஆட்சிக்காலத்துக்கு முன்னரும் இடைப்பட்ட ஒரு காலப் பகுதியினைச் சங்கம் மருவிய காலம் என்பர். இக் காலத்திலே எழுதப்பட்டதாகக் கூறப்படும் தமிழ்நூல்களிலே பதினெண் கீழ்கணக்கு நூல்களும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

பதினெண் கீழ்கணக்கு நூல்களைக் குறிப்படும் வெண்பா ஒன்று உளது. அது பின்வருமாறு

**நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்**
**பால்கடுகங் கோவை பழமொழி - மாமூலம்**
**இன்னிலை காஞ்சியுட னேலாதி யென்பவே**
**கைந்நில யோடாங் கீழ் கணக்கு**

கீழ் கணக்கு என்பது தமிழகத்தில் வழங்கிய ஒரு வகைக்கணக்கு முறையைக் குறிப்பதாகக் கூறப்படுகின்றது. கீழ் என்பது கொண்டு சிறு கணக்கு கைக்கணக்கு என்று சமய குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரச சுவாமிகள் பின்வருமாறு கூறுகின்றார்.

**தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று**
**அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்**
**பொழுது போக்கிப் புறக்கிணப்பாரையும்**
**எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பார் ஈசனே.**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் நல்லாதனார், காரியாசான், கணிமேதாவியார் ஆகியோரால் இயற்றப்பட்டதாகக் கூறப்படும். திரிகடுகம், சிறுபஞ்ச மூலம், ஏலாதி ஆகிய நூல்களும் அடங்குகின்றன.

திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகிய பெயர்கள் நோய்நீக்கி எமது உடல்நலம் பேணும் மருத்துவப் பதார்த்தங்களின் பெயர்களாகும். இம் மருத்துவப் பதார்த்தங்களின் பெயர்களை இந்நூலாசிரியர்கள் தமது நூல்கட்குப் பெயரிட்டனர் என்பதை நோக்கும் போது திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திற்பிலி என்னும் மூன்று மருத்துவப் பதார்த்தங்களைக் குறிப்பதாகும். ஆயுர்வேத நூல்களான பதார்த்த குண சிந்தாமணி, அஷ்டாங்க இருதயம் போன்றவை திரிகடுகத்தின் சிறப்பை அதாவது இம் மூன்றுபொருட்களும் எவ்வாறு நோயைப் போக்கி உடலைப் பாதுகாக்கின்றது என்பதைக் கூறுகின்றது.

இதே போல் திரிகடுகம் என்னும் நூலினில் காணப்படும் செய்யுள்களில் மூன்று மூன்றாக உரைக்கப் பெற்ற அறங்கள், ஒழுங்குகள் என்பன எமதுடலினை மனத்தை நல் வழிப்படுத்தி உயிரைப் பாதுகாக்கும் என்பதாகும். இக்கருத்தினை

**உலகின் கடுகம் உடலின் நோய் மாற்றும்**
**அலகு இல் அக நோய் அகற்றும் - நிலைகொள்**
**திரிகடுகம் என்னும் திகழ் தமிழ்ச்சங்கம்**
**மருவு நல்லாதன் மருந்து**

எனவரும் பாயிரச் செய்யுள் உணர்த்துகிறது.

**திரிகடுகச் செய்யுளை நோக்கும் போது**
**அருந்ததிக் கற்பினார் தோளுந்திருந்திய**
**தொல்குடியினர் மாண்டார் தொடர்ச்சியும் - சொல்லின்**
**அரிவகற்றுங் கேள்வியார் நட்புமிம் மூன்றுந்**
**திரிகடுகம் போலு மருந்து**

என மூன்று கருத்துக்களை தெளிவு படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபஞ்ச மூலத்தை எடுத்துக்கொண்டால், சிறுவழுதுணைவேர் எனும் நெருஞ்சிவேர், சிறுமல்லிவேர், பெருமல்லி வேர், கண்டங் கத்தரிவேர், எனும் ஐந்து சிறிய வேர்களைக் குறிப்பிடுவதாகும். இதனை

**சிறிய வழுதுணைவேர் சின்னெருஞ்சி மூலம்**
**சிறுமல்லி கண்டங்காரி வேர் - நறிய**
**பெருமல்லி ஓர் ஐந்தும் பேசு பல்நோய் தீர்க்கும்**
**அரிய சிறு பஞ்ச மூலம்**

என பதார்த்த குணசிந்தாமணி நூல் விளக்குகின்றது. இச் சிறு பஞ்ச மூலம் உடல் நோய்களை நீக்கி உடலைப் பேணிப் பாதுகாப்பது போல் இந் நூலிலும் கூறப்பட்ட ஒவ்வொரு பாடலிலும் ஐந்து ஐந்து பொருட்களைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றும் எமது உடல் மன தேவைக்கு எவ்வாறு வழிகாட்டும் என்பதையும் நூலாசிரியர் குறிப்பிடுகின்றார், இதழில் ஓர் பாடலை நோக்கும் போது

**பொருள் உடையான் கண்ணதே போகும் அறனும்**
**அருள் உடையான் கண்ணதே ஆகும். அருள் உடையான்**
**செய்யான் பழிபாவம் சேரான், புறமொழியும்**
**உய்யான் பிறர் செவிக்கு உய்த்து**

என ஐந்து பொருட்களைக் குறிப்பிடுகின்றார். இதனால் இது சிறுபஞ்ச மூலம் என பெயர் பெற்றது.

ஏலாதி என்பது ஏலாதியை ஆதியாகக் கொண்டு ஆறு பொருள்கள் சோந்த ஒருவகை சூரணம் என மருத்துவ நூல்களில் கூறப்படுகின்றது. ஏலம் ஒரு பங்கு, இலவங்கப்பட்டை இரண்டு பங்கு , நாககேசரம் மூன்று பங்கு, மிளகு நான்கு பங்கு, திப்பிலி ஐந்து பங்கு, சுக்கு ஆறு பங்கு, என்னும் அளவு விதிப்படி இவ் ஏலாதி மருந்து தயாரிக்கப்படுகின்றது.

இதே போல் ஏலாதி என்னும் நூலும் ஆறு பொருள்களைப் பெற்று உயிருக்கு உடலுக்கு உறுதுணையாக அறநெறியைப் விளக்கி உரைக்கிறது. இதை பின்வரும் பாடல் விளக்குகின்றது.

**சென்ற புகழ் செல்வம் மீக் கூற்றம் சேவகம்**
**நின்ற நிலை கல்வி வள்ளன்மை - என்றும்**
**அளிவந்து ஆர் பூங்கோதாய் - ஆறும் மறையின்**
**வழிவந்தர் கண்ணே வனப்பு**

இவ்வாறு சங்கம்மருவிய காலத்திலேயே வாழ்ந்த புலவர்கள் தாம் இயற்றிய நூல்களுக்கு மருத்துவப் பெயர்களை இட்டு வைத்துள்ளார்கள் என்பதை அறியும் போது இவையெல்லாம் எமது வைத்தியத்திற்கு அவர்கள் இட்டுச் சென்ற அடிக்கற்கள் என்று கூறுவது மறுக்க முடியாததாகும்.

*அறிவால் பணிசெய்யும் மேன்மை இல்லையேல்*
*நாம் உயிருடன் வாழ்வதில் பொருள் இல்லை*
**-ரஸ்கின்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ம.முரளிதரன்** B.Com Sp. Trd (Primary)
ஆசிரியர் - யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி
மாவட்ட சாரணத்தலைவர்
காங்கேசன் துறை மாவட்டம்

# சாரணீயமும் மாணவனும்

றொபேட் ஸ்ரீவின்சன் சிமித் பேடன் பவல் பிரபு அவர்களால், 1907 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் பிரவுன்சித் தீவின் 20 சிறுவர்களுடன் சாரணீயம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி இன்று 147 நாடுகளில் 2 கோடி 70 இலட்சம் சாரணர்கள் உள்ளனர். பேடன் பவல் பிரபு அவர்கள் 1857 மாசி 22இல் இங்கிலாந்தில் உள்ள இலண்டன் மாநகரில் பிறந்தார். தனது 19ஆவது வயதில் பட்டப்படிப்பை முடித்து இராணுவத்தில் சேர்ந்த இவர், 26ஆவது வயதில் தளபதியானார். பெரும் யுத்தங்களில் வெற்றியீட்டிய இவருக்கு இம்பீசா துயில் கொள்ளாத ஓநாய் என்ற பட்டம் சூட்டப்பட்டது. 1903இல்சாரணியத் துணை எனும் நூலை பகுதிபகுதியாக வெளியிட்டதுடன், 1908இல் இளைஞர் சாரணியம் என்ற நூலையும் வெளியிட்டார். 1910இல் பெண்கள் சாரணியத்தை ஆரம்பித்து வைத்த இவர், 1941 தை 8ஆம் திகதி இயற்கை எய்தினார்.

இலங்கையில் 1912ஆம் ஆண்டு F.G. ஸ்ரீபன் என்பவரால் மாத்தளைக் கிறிஸ்தவக் கல்லூரியில் சாரணர் இயக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1918இல் கடேற் சாரணியம் இலங்கையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1921 இல் திரு. திருமதி. பேடன் பவல் பிரபு தம்பதியினர் இலங்கைக்கு விஜயம் செய்தனர். இவ்வாறாக இலங்கையில் வளர்ச்சி அடைந்த சாரணியம் பல பரிமாணங்களில் வளர்ச்சிடைந்து நிற்கின்றது. இந்த ஆண்டு (2006) 7வது தேசிய ஜம்பொறி நுவரெலியாவில் நடைபெற்றுள்ளமை குறிப்பிடக் கூடிய ஒன்றாகும்.

சாரணர் இயக்கமானது மாணவரிடத்தே கல்வியறிவை மட்டுமன்றி ஒழுக்கம், நேர்மை, தன்னம்பிக்கை, ஆர்வம், சேவை மனப்பாங்கு, பெரியோரை மதித்தது நடத்தல், ஆபத்தில் உதவியளித்தல், முதலுதவி செய்தல், இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றிச் செயற்படல் என இன்னோரன்ன நற்பண்புகளை வளர்க்கின்றது.

சாரணன் ஆனவன் விதி, வாக்குறுதி என்பவற்றிற்கு அமைவாகவே செயற்படுகின்றான். வீட்டிலோ அல்லது வீதிகளிலோ ஏற்படும் விபத்துக்களுக்கு சிறந்த முறையில் முதலுதவி அளிக்கக் கூடிய திறன் பொருந்தியவனாக சாரணன் காணப்படுவான். தருணத்திற்கேற்ப கிடைக்கின்ற பொருள்களைப் பயன்படுத்தி முதலுதவி அளிக்கக் கூடியவனாக இருப்பான். அன்றாட வாழ்வில் மனிதன் ஒருவனுக்கு தேவையான விடயங்களை அறிந்து இருப்பவனாக, செயது காட்டுபவனாக சாரணன் ஒருவன் இருப்பான்.

**சாரணர் வாக்குறுதியானது**

என்னால் கூடுமான வரையில்,

எனது சமயத்திற்கும் எனது தேசத்திற்கும் என் கடமைகளைச் செய்வேன் என்றும், எக்காலத்திலும் பிறருக்கு உதவி புரிவேன் என்றும், சாரணர் விதிகளுக்கு அமைந்து பணிந்து நடப்பேன் என்றும் என் கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கின்றேன்.

எனக் கூறப்படுகின்றது, அதாவது சாரணன் ஒருவன் தன்னால் இயன்ற வரையில், தனது சமயத்திற்கும் நாட்டிற்கும் தேவையான கடமைகளை செய்வதாகவும் தேவை ஏற்படும் போதெல்லாம் பிறருக்கு உதவி செய்வதாகவும், சாரணர்களது விதிகளுக்குப் பணிந்து நடப்பதாகவும் தனது கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கின்றான்.

**Scout Promise**
**On my honour I Promise,**
**That I will do my best,**
**To my Religion and Country,**
**To help other peoples at all times,**
**To obey the scout Law.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரணர் வாக்குறுதியானது ஆங்கிலத்தில் இவ்வாறு கூறப்படுகின்றது.

**சாரணர் விதிகளாவன.**

1. சாரணன் நம்பத்தகுந்தவன்
2. சாரணன் பற்றுறுதி உடையவன்
3. சாரணன் நேசமும் மரியாதையும் உடையவன்
4. சாரணன் மற்றெந்தச் சாரணனுக்கும் சகோதரன்
5. சாரணன் தைரியமுள்ளவன்
6. சாரணன் பிராணிகளின் தோழன்
7. சாரணன் ஒத்துழைப்பவன்
8. சாரணன் மகிழ்ச்சியுடையவன்
9. சாரணன் சிக்கனமானவன்
10. சாரணன் சிந்தனை, சொல், செயலில் தூய்மையானவன்

அதாவது சாரணன் ஒருவன் நம்பகத்தன்மை உடையவன் ஆகவும், கொண்ட கொள்கையில் செயலில் பற்றுறுதி உடையவன் ஆகவும், பிறர்மேல்பாசமும் மரியாதையும் உடையவன் ஆகவும், மற்றைய சாரணர்களுக்குச் சகோதரனாகவும் தைரியம் உள்ளவனாகவும், பிராணிகளுடன் அன்பாகக் பழகுபவனாகவும், எல்லா விடயங்களுக்கும் ஒத்துழைப்பு நல்குபவனாகவும், சந்தோசமாகச் சிக்கனமாக இருப்பவன் ஆகவும், தூய்மையான சிந்தனை, சொல், செயல் என்பவற்றை உடையவனாகவும் இருப்பான் என்பது இவ் விதிகள் மூலம் தெளிவாகிறது.

பாடசாலையில் இருந்து வெளியேறுகின்ற மாணவர்கள், சமூகத்திற்குப் பொருத்தப்பாடு உடையவர்களாக, சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றபவர்களாக, நாட்டினது எதிர்கால சிற்பிகளாக திகழ்பவர்களாக, நவீன விஞ்ஞான யுகத்திற்கும் கோளமயமாதலுக்கும் ஏற்ப செய்பாடுடையவர்களாக, நற்பிரஜைகளாக உருவாவதற்கு பல்வேறு வழிகளிலே சாரணியம் உதவுகிறது; வழிகாட்டி நிற்கிறது. பாடசாலை இணைபாட விதான செயற்பாடுகளிலே, முக்கியமான ஒன்றாகக் காணப்படும் இச் சாரணியத்தில் இணைந்து உயரிய விருதான ஜனாதிபதி விருதைப் பெறுவதன் மூலம், பல்கலக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுவதைக் கூட இலகுபடுத்தக் கூடியதாக உள்ளது. எனவே மாணவர்கள் அனைவரும் சாரணியத்தில் இணைவதன் மூலம் நற்பண்புகளைப் பெற்று நற்குடிமகனாகத் திகழ முடியும் என்பது திண்ணம்.

*குழந்தையின் பேச்சில் அறிவுரை இருந்தால்*
*அதையும் ஏற்பது அரசன் கடமை*

**-சாணக்கியன்-**

☆ ☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. திருமகள் குகதாசன்
B.A (Hons) Dip.in. Ed.
(பழைய மாணவி)
ஆசிரியர்
யாழ் இந்து மகளிர் கல்லூரி

# இந்துக்களின் வாழ்வில் திருமணம்

திருமணம் என்ற சொல்லை நாம் திரு+மணம் எனப் பிரிக்கலாம். மணம் என்பதே தமிழரின் பழைய மரபுதான். ஒரு கன்னிப் பெண்ணின் கூந்தலிலே மலர் சூட்டி அவளை ஊரும் உறவும் அறியத் தன்மனதிற்கு இனியவளாக வாழ்க்கைத் துணைவியாக ஒருவன் ஏற்றுக் கொள்வதனாலேதான் மணம், திருமணம் என்ற பெயர்கள் அச்சடங்கிற்கு ஏற்பட்டன. திரு என்னுஞ் சொல் அழகு, செல்வம், செம்மை, சிறப்பு முதலிய பொருள் பொதிந்த சொல்லாகும். சுருங்கக் கூறின் கண்டோரால் விரும்பப்பெறும் தன்மை விளங்குமிடமெல்லாம் திருவும் பொலிகின்றதென்று சொல்லலாம்.

அறிஞர். ஞா. தேவநேயன் அவர்கள் ஒரு ஆடவனும் ஒரு பெண்ணும் கணவனும் மனைவியுமாக இல்லறம் நடத்த இசைந்து ஒன்று சேருவதே மணமாகும். மணவாழ்க்கைக்கென்றே இறைவன் மக்களை ஆணும் பெண்ணுமாய்ப் படைத்திருப்பதாலும் அதனிடத்து மிகுந்த அறப் பொறுப்புள்ளமையாலும் அது ஆயிரங்காலத்துப் பயிர் ஆகையாலும் வாழ்க்கைத்துணைவர் இருவரும் தெய்வத்தின் முன் அல்லது தெய்வத்தின் பேரில் பலரறிய ஆணையிட்டுக் கூறுவதாலும் மணம் தெய்வத்தன்மை பெற்றுத் திருமணம் எனப் பெயர் பெற்றது என்பர். இவ்வகையிலே திருமண விழா இந்துக்களின் வாழ்வில் தனித்துவமானது.

திருமணம் இரண்டு தனிப்பட்டவர்களுக்கிடையே நடைபெறும் உடன்படிக்கையன்று. இரண்டு குழுக்களிடையே இணைப்பை நெருக்கத்தை ஏற்படுத்தும் உறவுத்தளை என்பது நியதி என்கிறார். சி.என். நடராஜன் என்பார்.

இப்பிறவியில் மனிதப்பிறவியெடுக்கின்ற ஒவ்வொருவரும் வாழப்பிறந்தவர்கள்; வளமாக இன்பமாக வாழுந்து வாழ்வின் பயனை அடையப்பிறந்தவர்கள். வாழ்க்கை என்பது ஓர் எல்லையற்ற கடல் அதில் இன்னநேரம் என்றில்லாது பெரும் புயல்களும், மலைபோன்ற அலைகளும், ஆழம் மிக்க 'சுழிகளும் எழக்கூடும். நீர் அலைகளுள் மறைந்து கலங்களை உடைக்கக் காத்திருக்கும் கொடும் பாறைகளும் உண்டு. இவற்றையெல்லாம் தாங்கத்துணிந்து கடற்பயணத்தில் ஈடுபடுவோர்இப்பெரிய இடையூறுகளைக் கடந்து உயிருடன் தப்பினால்; அவ்வாறு தப்பி வெற்றிகண்டபின் அவர் அடைகின்ற பெருமைக்கும் இன்பத்திற்கும் மகிழ்விற்கும் எல்லை இருக்க முடியாது. கணவனின் வாழ்க்கை மனைவியாகிய துணைவியாலும் மனைவியின் வாழக்கை கணவனாகிய துணைவனாலும் தோன்றி வளர்ந்து விளக்க முறுகின்றது. கணவன் தன் மனைவியிடத்தில் உலகைக் கண்டு மகிழ்கிறான். மனைவியும் தன் கணவனிடத்தில் உலகைக்கண்டு உவக்கிறாள். அதாவது கணவன் தன்னுடைய மனைவியின் துணையால்தான் துணையாகிய வாயிலால் உலக வாழ்வில் பங்குகொண்டு கடமையாற்றிப் பெருமையும், பேருவகையும் கொள்கிறான். இதனை அதிவீரராம பாண்டியனின் பாடலில்

**"கொழுநன் உண்டபின் தானுகர் கொள்கையும்**
**விழிதுயின்றபின் துஞ்சலுமென்துயில்**
**எழுதன் முன்னம் எழுதலுமேயன்றோ**
**பழுதில் கற்புடைப் பாவையர் செய்கையே"**

என்கிறது. குடும்பம் ஒரு கோயில் என்பர் மங்கல மங்கையரின் அறவாழ்வே தெய்வீக வாழ்வு அவர்களது அறவாழ்வு இன்றெனில் உலகில் எதுவும் நிலவாதொழியும் எனலாம்.

**"காதல் ஒருவனைக் கைப்பிடித்தே - அவன்**
**காரியம் யாவினும் கைகொடுத்து**
**மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்**
**மாட்சி பெறச் செய்து வாழ்வமடி"**

எனச்சிறப்பித்துக் கூறுகின்றார் பாரதியார். இவ்வாறே திருவள்ளுவர் தம் வாழ்க்கைத் துணைவி இறந்தபோது அவளது நற்செய்கைகளைக் கூறிப் புலம்புகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடிசிற்கினியாளே அன்புடைய மாதே
படிசொற்தவறாத பாவாய் - அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
என்தூங்கு மென் கண் இரா"

இவ்வகையிலே இல்வாழ்விலே மனையாளுக்குரிய தகைமைகள் புலப்படுகின்றன. மனையாள் எனும் தகைமையை விவாகம் எனும் பந்தத்தினால் ஆக்கிக் கொள்ளலாம். விவாகத்தின் வகைகள் பற்றி மனுஸ்மிருதியில் மனு குறிப்பிடும் போது

"ப்ராம் ஹோதை வஸ்ததை வர்க்ஷ
ப்ராஜா பத்ய ததா ஆஸர
காந்தர்வ ராக்ஷ சேதி
பைசா ச:சஅக்ஷ்மோமத"

அதாவது பிரம்பம், தைவம், ஆர்ஷம் பிரஜாபதீயம், ஆஸபரம், காந்தர்வம், ராசஷிஸம், பைசாசம் என எட்டுவிதமாகும். இவற்றுள் பிராமணருக்கு பிரம்பம், தைவம், ஆர்ஷம் பிராஜம், பத்ஜம், காந்தர்வம் ஆகிய ஆறும் சைத்திரியனுக்கு ஆஸரம், காந்தர்வம், ராசஷிஸம், பைசாசம் ஆகிய நான்கும் வியாபாரி, தொழிலாளி இவர்கட்கு ஆஸரம், பைசாசம், காந்தர்வம் ஆகிய மூன்றும் தர்மத்தை விட்டு விலகாத விவாகங்களாகும்.

தமிழ்நாட்டிலே பிரம்மம் முதலிய எண்வகை மணங்களும் சுயம்வரம் முதலிய பிறவும் வழக்கிலிருந்தன. அவற்றுள் காதல் மணமான காந்தர்வ விவாகம் சிறப்புற்றதாயினும் அதிலும் பொய்யும் வழுவும் புகுந்து இல்லறத்திற்கு கேடு செய்தன. அதனால் அறிவுடையோர் இல்லறத்தானுக்கு எல்லாவகையிலும் பொருத்தமான மணமகளைத் தெரிந்து ஆகமத்திலே விதிக்கப்பட்ட கிரியை மூலம் இறைவனருளை முன்னிட்டுத் திருணமம் முடித்து வைப்பாராயினர்.

"பொய்யும் வழுவும் புகுந்த பின்னர்
ஐயர் வகுத்தனர் கரணமென்ப"
என்று தொல்காப்பியம் கூறுவது கொண்டு இது உணரப்படும்.

பண்டைத்தமிழர் மணவினை மேற்கொள்ளும் நற்பொழுதாக மிக்க இருள் நீங்கிய அழகுடைய விடியற்காலத்தையும் திங்கள் உரோகினியுடன் சேர்ந்த நாளையும் சிறப்பாகக் கொண்டனர். இதனை அகநானூறு (86:5:8)

"கனையிருள் அகன்ற கவின் பெறு காலைக்
கோள்கால நீங்கிய கொடு வெண்டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென" என்கின்றது.

இவ்வண்ணம் நோக்கும் போது இந்துக்களது திருமண விழாக்கள் நாள்கோள் என்பன பார்த்தேஇடம் பெற்றுள்ளன என்பது புலனாகும். திருமணம் மனித உறவு நிலைகளை ஒழுங்குடன் காண உதவும் அரிய நிகழ்வாகும். ஒருவரோடு ஒருவர் அன்பு கொண்ட ஆணையும் பெண்ணையும் இணைக்கின்ற நிகழ்வாக அன்றி இரு குடும்பங்களின் தொடர்பை வலுப்படுத்தும் சாதனமாகவும் விளங்குகின்றது.

நாடு நகரறிய நடைபெற்ற மகட் பேச்சுத் திருமணம் வதுவை மணம் எனவும் அழைக்கப்பட்டது. ஆண்டாள் இவ்வகை மணத்தினை நாச்சியார் திருமொழியிலே "நாளை வதுவை மணமென்று நாளிட்டு" என்கிறார். திருமணத்திற்கு முன் மணமகன் வீட்டார் மணமகள் வீட்டிற்கு வந்து மகட் பேசும் கடப்பாடு உடையவராக இருந்தனர். அவ்வாறு மணமகன் வீட்டார் பெண் பேச வரும் போது தம்முடன் பிரபலம் வாய்ந்த சிலரையும் அழைத்து வருவது வழக்கம். அவ்வாறு மகட் பேசி வதுவை நிச்சயம் என்றவுடன் மணப்பெண்ணுக்கு கோடியுடுத்தி கூட வந்தோருடன் வயதான சுமங்கலிப் பெண் மணமகளுக்கு மாலை சூட்டும் நடைமுறை பின்பற்றப்பட்டது என்பதை நாச்சியார் திருமொழியிலே ஆண்டாள் தாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்திரனுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
வந்திருந்தென்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரங் கோடியுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழி நான்"

என்று கூறுகின்றார். இவை வைணவ சம்பிரதாயத்தை சார்ந்தவை எனக் கூறப்படுகின்றது

இந்துக்களது திருமணத்திலே கிரியைகள் சிறப்பிடம் பெறுகின்றன. விவாகமாவது அறம் பொருள் இன்பம் வீடாகிய நான்கு பயன்களையும் பெறுவதற்காக ஒரு வாழ்க்கைத் துணையைப் பெறுதல். இது பலவகையாகினும் சைவ நூலிலே விதிக்கப்பட்ட விவாக முறையாவது பெண்ணை அவளுடைய தகப்பன் முதலிய ஒருவர் நாயகனுக்குக் கொடுக்கும் வகையே. விவாகத்திலே வழக்கமான முற்கிரியைகளுக்குப் பின் நடைபெறுவன பிதிர்தேவரது ஆசிர்வாதத்தைப் பெறுதல், தாலிகட்டுதல், ஓமம் வளர்த்தல், நவக்கிரக தானம், ஏழடி நடத்தல், அம்மி மிதித்தல், அக்கினியை வலம் வருதல், அருந்ததிகாட்டல், பெரியோரது ஆசிர்வாதம் என்பவைகளாகும்.

முதற்கிரியையாக மணமகன் விவாகம் செய்வதற்கும் ஆசாரியர் அதை நடத்துவதற்கும் சங்கற்பம் செய்த பின் பிள்ளையார் பூசை, புண்ணிய யாகம், பஞ்சகவ்வியம், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம் ஆகியன நடைபெறும். மணமகனுக்கு இரட்சாபந்தனமான பிறகு ஆசாரியர் முறைப்படி சிவகும்பத்திற்கும் தேவிகும்பத்திற்கும் பூசை செய்வார். நவக்கிரக குற்றம் போதற்காகவும் பூசை செய்யப்படும். அதன்பின் ஓமத்துக்காக அக்கினி உண்டாக்கப்படும். யாகேசுவரர் யாகேசுவரியைக் கும்பத்திலே பூசித்து அதன் பின்னர் அக்கினி காரியஞ் செய்தல் வேண்டும்.

அடுத்து பிதிர் ஆசீர்வாதம் இடம்பெறும். குடும்ப வாழ்வைத் தொடங்கும் போது அது தவறின்றி நடத்துவதற்கு அக்குடும்பத்து முன்னோரது ஆசீர்வாதம் வேண்டும். இவர்களுள் சிறந்தவர்களாகிய பிதுர்களை மகிழ்விப்பதற்கு ஒரு வகையான சிராாத்தம் மணமகனுடைய தந்தையாலும் மணமகளுடைய தந்தையாலுஞ் செய்யப்படும். இதில் பூணூல் வலமாகத் தரித்தல் வேண்டும் தர்ப்பை கிழக்கு முகமாக வைத்தல் வேண்டும். அறுகும் நெல்லுமன்றி எள்ளும், அப்பிரதட்சணமுந் தகாதவை மற்றயவை வழக்கமான சிரார்த்தம் போல நடைபெறும். இது விவாகத்திற்கு பிதுர்களை அழைக்கும் பான்மையாகும்.

மணமகனுக்கு உபசாரம் இடம்பெறும் மணமகளை அழைத்து இரட்சாபந்தனம் செய்தபின் அவளுடைய தந்தையார் (தகப்பன் இல்லையாயின் தமையன் அல்லது தாயாரின் சகோதரன் முதலியோர்) கன்னிகா தானத்திற்காகச் சங்கற்பஞ் செய்வர் பின்பு மணமகனுடைய கால்கழுவி வஸ்திரம் சுகந்தம் கொடுத்தல் முதலிய உபசாரங்களைச் செய்வர்.

அடுத்து கன்னிகாதானம் நிகழும் மணமகளுடைய தந்தையார் கிழக்கு முகமாகவிருந்து மணமகளை கிழக்கு முகமாக வைத்து இரண்டு கோத்திரப் பெயர்களும் சொல்லி மங்கலப்பொருள்களோடு அவர்களுடைய கையை மணமகனுடைய கையிற் கொடுத்துக் கையிலே தண்ணீர் விடுவர் கையிலே தண்ணீர் விடுதல் ஒரு பொருளை இறுதியாக கொடுத்ததற்கு அறிகுறியாகும். மணமகன் மணமகளுடைய கையிற் பிடித்து அவளை ஏற்பார்.

திருமண விழாவின் முக்கிய நிகழ்வு தாலிகட்டல் ஆகும். தாலி பெண்ணுக்கு வேலி என்பது பழமொழி இந்து சமூகத்திலே இது சிறப்பிடம் பெறுகின்றது. தாலியிலே சிவலிங்கம், விநாயகர் அல்லது இலக்குமியினுடைய திருவருவம் செய்யப்பட்டிருக்க வேண்டும். தாலியையும் கயிற்றையும் சுத்தி செய்து அதிலே மூர்த்தியை பூசித்த பின்பு தாலியையும் சீலை முதலியவற்றையும் பெரியோர்களைக் கொண்டுதொடுவித்து ஆசிர்வதித்தபின் மணமகன் சீலை முதலியவற்றை மணமகளுக்குக் கொடுப்பார். முகூர்த்தக் குற்றங்களைத் தீரத்தற்காக ஒரு தானம் செய்யப்படும் பின்பு மணமகன் உமாமகேஸ்வர மந்திரத்தினால் தாலியைக் கட்டி அந்த மந்திரத்தினால் முடிச்சிலே திருநீறு சாத்திப் பெண்ணுக்குந் திருநீறு சாத்துவர். மணமகள் மணமகனுக்கு இடப்பாகத்தில இருத்தப்படுவாள்.

இதன் பின் தாலி கட்டல் இடம்பெறும். தாலி கட்டலைத் தொடர்ந்து அக்கினி பூசை நிகழும். மணமகன் ஓமாக்கினிக்கு நிகழ்த்தும் பூசையே அக்கினி பூசை ஆகும். பின்பு மதுபர்க்கம் புசித்தல் இடம்பெறும் (பால், தயில், தேன், சர்க்கரை, நெய், பழம் சேர்த்து செய்யப்படுவது) அதனைத தொடர்ந்து இருதய மந்திரத்தால் பசுவையும் கன்றையும் தரிசித்து மூலமந்திரத்தால் நூற்றெட்டு ஆகுதி செய்தல் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு, பொருள், உடல்உறுதி, பக்தி, மன அமைதி, அறிவு, காலத்துக்கு காலம், பெறப்படும் சுகம் ஆகிய ஏழு செல்வங்களையும் பெற மணமகன் மணமகளோடு அவள் கையைப் பிடித்த வண்ணம் அக்கினிக்குப் பக்கத்தில் ஏழடி நடப்பான். அதாவது விவாக அக்கினியை வடக்கு நோக்கித் தம்பதிகள் ஏழு அடியெடுத்து வைத்து வலம் வரும் சடங்கினை சப்தபதி என மனுஷ்மிருதி முதலாய வடமொழி நூல்கள் கூறுகின்றன. கைத்தலம்பற்றலும் தீவலம் வருதலும் ஒன்றாகவே நடைபெறுகின்றன. தீவலம் வரும் சமயத்திலேயே மணமகளுடைய கையினை மணமகன் முதன் முதலாகப் பற்றுகிறான். அவ்வாறு கைத்தலம் பற்றித் தீயை வலம் வருதல் கணவன் செல்கின்ற வாழ்க்கைப் பாதையிலே மணமகளும் பின் தொடருவாள் என்பதனை உலகோருக்கு முன்னாலேயே நடைமுறைப்படுத்துவதாக இச்சடங்கு அமைகின்றது. திருமணத்தின் அதிபதியாகிய விஷ்ணு அவ் ஏழு அடிகளிற்கும் மேற்குறிப்பிட்ட ஏழு செல்வங்களை அளிக்கின்றார் என வடமொழி நூல்கள் செப்புகின்றன. தீவலம் செய்யும் நடைமுறை சிலப்பதிகார காலத்திலேயே தமிழர் திருமண நடைமுறைகளுள் ஒன்றாகி விட்டது. இந்நிகழ்வை ஆண்டாள் குறிப்பிடும் போது

**"வாய்நல்லால் நல்ல மறையோதி மந்திரத்தால்**
**பாசிலை நாணல்படுத்துப் பரிவைத்துக்**
**காய்சின மா களிறன்னாளென் கைப்பற்றித்**
**தீவலஞ் செய்யக் கனாக்கண்டேன் தோழி நான்"**

என்கிறார். இந்துக்களின் வாழ்க்கையில் தனித்துவம் பெறும் திருமண விழாவிலே ஓர் சடங்காக அம்மி மிதித்தல் நிகழ்கிறது. மனைவி மன உறுதிஉடையவளாக விளங்கவேண்டும். என்பதை உணர்த்தும் முகமாக அவளுடைய வலது காலினை மணமகன் தனது கரத்தால் பற்றி அம்மி மீது வைப்பான். இதுவும் தீவலம் வரும்போது நடைபெறும் ஒரு சடங்காகும். மும்முறை தீவலம் வரும் போதும் மும்முறையும் மணமகன் மணமகளின் காலைப் பற்றி அம்மியிலே வைப்பான் ஆரியத் திருமணச் சடங்காகிய அம்மிமிதித்தல் பற்றித் தமிழிலே ஆண்டாளே முதன் முறையாகக் குறிப்பிடுகின்றார்.

**"இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும் பற்றாவான்**
**நன்மையுடையவன் நாராயணன் நம்பி**
**செம்மையுடைய திருக்கையாற்றாள் பற்றி**
**அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழி நான்"**

என்கிறார். இந்துக்களின் வாழ்க்கையிலே தனித்துவமானதாக மிளிரும் திருமணம் சமயச் சடங்காக மிளிர்கிறது.

அடுத்து அருந்ததி காட்டல் ஒரு முக்கிய நிகழ்வாகும். அருந்ததி வசிட்டரின் மனைவி கற்பிற்கு இலக்கணமாக வாழ்ந்துகாட்டியவள். தன் கற்பினால் அவள் வானத்தில் நட்சத்திரமாக விளங்குகிறாள் என்பது இந்துக்களின் நம்பிக்கை. எனவே தனது மனைவி அருந்ததி போலக் கற்பு நிலை தவறாதவளாய் விளங்குவதற்கு அறிகுறியாக மணமகன் மணமகளை வெளியில் அழைத்துச் சென்று குருக்களின் உதவியோடு அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டுவான் இதுவே இன்றைய யாழ்ப்பாண திருமணங்களில் நிகழும் அருந்ததி காட்டலாகும். ஆனால் நூல்களில் விதித்தபடி திருமணக் கிரியைகள் முடிந்து நான்காம் நாள் மணமக்கள் இருவரும் எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்து இரவில் அக்கினி காரியஞ் செய்து மணமகன் அருந்ததி மந்திரஞ் சொல்லி அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டி கற்பு நிலையை விளக்க வேண்டும். என்று கூறப்பட்டுள்ளது.

இந்துக்களின் திருமணங்களில் இறுதியாக இடம் பெறுவது ஆசிர்வாதமாகும். அறுகு, பச்சையரிசி, மஞ்சள், ஆகிய மூன்றும் சேர்ந்த கலவையைக் கொண்டு மூன்று தரம் மணமக்களின் தலைகளில் தனித்தனி இட்டு அவர்களின் உறவினர்கள் (மணமானவர்) நண்பர்கள் ஆசீர்வதித்தல் அறுகு படர்ந்து வளர்வது போலச் சந்ததிபெருக்கியும் அரிசி போலச் செல்வம் வளர்த்தும் மஞ்சள் போல மங்கள மனைவாழ்வு நடத்தியும் மணமக்கள் சிறத்தல் வேண்டும் என்பதே இந்த ஆசீர்வாதத்தின் பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தின் போது அரசாணி நடப்படுவது வழக்கம். இது பத்ததியில் கூறப்படவில்லை. இது தேச வழக்கம் போலும் அரசிலே சிவபிரானையும் வேம்பிலே உமாதேவியாரையும் வழிபடும் வழக்கம். இன்றும் உண்டு ஒரே இடத்தில் அரசும், வேம்பும் நட்டுப் பூசிப்பதுண்டு. அரசு சிவனைக் குறிக்கின்றது. ஆல் விஷ்ணுவைக் குறிக்கின்றது என்பர். அரசும் ஆலும் சிவனையும் சக்தியாகிய விஷ்ணுவையும் பூசித்தற்காக நடப்பட்டு அரசால் என்ற பேருண்டாகி அரசாணி என்று மாறியிருக்கலாம். இப்போது இவைகளுக்குப் பதிலாக முருக்கு நடப்படுகிறது. முருக்கு அரசு போலவே சிவ வழபாட்டிற்குரிய மரமென்பர். அரசு, ஆல், முருக்கு ஆகிய மூன்றும், பிரமா, விஷ்ணு, உருத்திரனாகிய மும் மூர்த்திகளையும் பூசித்தற்குரிய மரங்களென்றும் இவை மூன்றையும் நடும் வழக்கம் உள்ளது என்றும் கூறுவர்.

இல்லற காரியங்களில் கணவனும் மனைவியும் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும். இதனை நன்நெறிப்பாடல்

**"காதன் மனையாளுங் காதலனுமாறின்றித்**
**தீதிலரு கருமஞ் செய்யவே யோதுகலை**
**யெண்ணிரண்டு மொன்றமதி யென்முகத்தாய் நோக்கறான்**
**கண்ணிரண்டு மொன்றையே காண்"**

என்கிறது.

இவ்வாறாக திருமண விழா இந்துக்களின் வாழ்வில் தனித்துவமானதாகத் திகழ்கின்றது. இந்துக்களது திருமண வாழ்க்கை தெய்வத் தொடர்புடைய தூய செந்நெறி வாழ்க்கையாகும். இவ் வாழ்க்கைக்கு வேண்டுவனவாய் நிகழ்த்தப் பெறும், கரணங்கள் தனித்துவம் வாய்ந்தனவாகும். இவ்வண்ணம் இந்துக்களின் வாழக்கையிலே தெய்வீக சம்பந்தமுடையதாக திருமணம் நிகழ்கின்றது.

## உசாத்துணை நூல்கள்


1. சைவக்கிரியை விளக்கம் - சு.சிவபாதசுந்தரம் B.A
2. தமிழர் திருமண நடைமுறைகள் - Prof அ.சண்முகதாஸ், Dr. மனோண்மணி சண்முகதாஸ்
3. தமிழர் திருமணம் - டாக்டர் ச.சசிவல்லி
4. விவாக மந்திரங்கள் - பிரம்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள் தொகுப்பு டாக்டர் ஸ்ரீ.கே.என். சரஸ்வதி
5. செந்தமிழ்ச்செல்வி - 1959 திங்கள் வெளியீடு
6. செந்தமிழ்ச்செல்வி - 1926 தமிழர் மணமுறை கா. சுப்பிரமணியபிள்ளை
7. பெண்கள் உலகம் - ந.சி. கந்தையாப்பிள்ளை
8. மகளிர் குடும்பக்கலை - புலவர் செந்துறைமுத்து
9. பெண்களுக்கு பயனுள்ள குடும்பக்குறிப்புக்கள் - திருமதி.சீதா


மனிதன்
*ஆரம்பமாவதும் பெண்ணுக்குள்ளே - அவன்*
*ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே*
-பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.குகராஜ்
பழைய மாணவன் 1997 (O/L)
கணனி விஞ்ஞானம்
யாழ் பல்கலைக்கழகம்

# BLUE TOOTH

இது ஒரு சர்வதேச ரீதியாக பயன்படுத்தப்படும் மின்னியல் கருவியாகும். இப்வுபகரணத் தொழிற்பாடானது கம்பியில்லாத் தந்தி மூலம் தகவல்களைப் பரிமாறும் ஒரு உபகரணமாகும். இவ் Blue Tooth ஆனது தற்பொழுது உற்பத்தியாகும் மின்னியல் உபகரணங்களிலும் மற்றும் டிஜிற்றல் (Digital) உபகரணங்களிலும் காணப்படுகிறது.


மின்னியல் உபகரணங்களில் எங்கு காணப்படுகின்றது என நீங்கள் நினைக்கலாம். அதாவது தன்னியக்க கருவிகள் மூலம் மின்னியல் சாதனங்களை இயக்கும் போது Blue Tooth தகவல்களை வழங்குகின்றது. இதே போன்று டிஜிற்றல் உபகரணங்களில் காணப்படுகின்ற Blue Tooth ஆனது தற்பொழுது இரு தேவைகளுக்காக பயன்படுகின்றது.

- **தன்னியக்க சாதனங்கள் மூலம் மின்னியல் உபகரணங்களை இயக்குவதற்கு**
- **தகவல்களைப் பரிமாறுவதற்கு**

தகவல்கள் பரிமாறல் என்னும்போது தற்பொழுது கணனி மயமான காலம். எனவே கணனிகளிலும் கையடக்க தொலைபேசிகளிலும் (Mobile Phone) Hand held devices. டிஜிற்றல் கமரா (Digital Camera) களிலும் காணப்படுகின்றன. அதன் மூலம் கணனியில் இருந்து கையடக்க தொலைபேசிக்கோ அல்லது கணனியில் இருந்து டிஜிற்றல் கமராக்களுக்கோ தகவல்களைப் பரிமாற முடியும். இச் செயற்பாடுகளை நாம் எதிர்மாறாகவும் செய்ய முடியும். அதாவது கையடக்க தொலைபேசியில் இருந்து கணனிக்கு தகவலை வழங்க முடியும்

Blue Tooth மூலம் சிறியளவிலான உள்ளூர் ஆளுகை வலைப்பின்னல் (Local Area Networking) (LAN) இனைச் செய்ய முடியும். இந்த வலையமைப்பானது 10m விட்டமுடைய சுற்றளவு பிரதேசத்திற்கு வழங்க முடியும்.


நாம் வாங்கும் கருவிகளில் Blue Tooth உண்டா என அவதானிப்பின் மின்னியல் உபகரணங்களில் தன்னியக்க சாதனம் மூலம் இயக்குவதற்காக வரையறுக்கப்பட்ட குறித்த பிரதேசம் ஒன்று காணப்படும். இது நமக்குத் தெரிந்ததே. இதே போன்றே கையடக்க தொலைபேசி, டிஜிற்றல் கமரா hand held device களிலும் காணப்படும். இவற்றில் காணப்படும் Blue Tooth நேர் கோட்டுப் பாவனை மூலமே பாவிக்கப்படும். அதாவது பக்கம் பக்கமாக வைத்தால் மட்டுமே இயங்கும்.




Multi Point Blue tooth உடைய உபகரணம் எனின் நாம் ஒரு வலையமைப்பினை இவ்வாறு செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Blue Tooth என்னும் போது சுருக்கமாகச் சொன்னால் பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய ஒரு அலைவடிவில் உருவாக்கும் உபகரணமாகும். 02.04 GHZ உடைய வானொலி அலைவரிசையை ஒத்த அலை வடிவமாகும். அதாவது கம்பியில்லாத் தகவல் பரிமாற்றலாகும். அத்துடன் Multi Point எனின் பக்கம் பக்கமாக வைக்கத் தேவையில்லை. Sight point எனின் பக்கம் பக்கமாக வைத்தால் மட்டுமே இயங்கும். அதாவது இரு Blue tooth பிரதேசமும் எதிர் எதிராக இருக்க வேண்டும். இது 10-15m விட்டமுடைய சுற்றளவு பிரசேத்தில் செயற்படக் கூடியது. தற்பொழுது இதனை விரிவாக்கி 100m இடைவெளிக்கு செயற்படக் கூடியளவு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு செக்கனுக்கு 1 - 2m தகவலைப் பரிமாறக் கூடியது.




எனவே நீங்கள் இப்பொழுது Blue tooth பற்றிய அறிவை பெற்று இருப்பீர்கள். தற்காலத்தில் தகவல் தொழில் நுட்பம் பெரும் வளர்ச்சி கண்டு வருகிறது. எனவே இனிவரும் காலங்களில் என்ன என்ன கண்டுபிடிப்புகள் நடைபெறுகின்றன என்பதை பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும்.

மணமக்கள் தங்கள் குழந்தைகட்கு ஆழ்ந்த அறிவுரைகளையும்
விஞ்ஞானத்தின் வளர்ச்சிகள் பற்றியும் சொல்ல வேண்டுமேயொழிய
மூட நம்பிக்கைகள் நிறைந்த சம்பவங்களையோ
கதைகளையோ சொல்லக் கூடாது.

-ஈ.வே. ராமசாமி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச.நந்தகுமார் (B.F.A)
(Art and Design Hons)
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை

# கலைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

கலை என்றால் என்ன? என்கின்ற அடிப்படையான கேள்விக்கு விடை கூறுவது இலகுவானதல்ல. ஏனெனில் மனிதனிடம் காணப்படும் மிகச் சிறந்த கருவி எனக் கருதப்படும் பகுத்தறிவின் வளர்ச்சிக் கட்டத்தினை அளவிட முடியாததாகும். எனவே பொதுவாக கலைக்கு வரைவிலக்கணம் கூறுமிடத்து மனிதனால் செயற்படுத்தப்படுகின்ற செயற்பாடுகள் அனைத்துமே கலை எனக் கொண்டு ஓர் முடிவிற்கு வரலாம்.

எனவே மனிதன் தனது உருவ அமைப்பில் ஒத்திருக்கின்றான் என்பது உடலியல் நூல் வல்லுனர்களின் முடிவாகும். இத்தன்மை வாய்ந்த மனிதன் மிருகத்திலும் விட எவ்விதம் சிறந்தவனாகின்றான்? என ஆராயுமிடத்து அறிவு வளர்ச்சி ஒன்றே சிறப்புடைமைக்கு காரணமென்பது தெளிவாகின்றது. இவ்வாறான ஆதி மனிதனுடைய வாழ்க்கையின் கலையின் தோற்றமும் வளர்ச்சியும் மேலோங்கியது.

இவ்வாறு மேலோங்கிய கலை இரண்டு வடிவங்களில் வளர்ச்சி பெற்று வந்ததை அவதானிக்கலாம்.

**1. சமயக் கோட்பாடு Religious Theory**

இக்கோட்பாட்டில் கடவுளே கலைஞர்களை உருவாக்குகின்றார் கடவுளே கலைகளை உருவாக்குகின்றார்

**2. சமூகவியல் கோட்பாடு Sociological Theory**

கலை என்பது சமூக ஆக்கத்துடன் இணைந்துள்ளது என்பதாகும்.

சமூகவியற் கோட்பாடு மனித வாழ்க்கை வாழ்வதற்கான போராட்டத்துடன் இணைந்து காணப்படுகின்றது. அவையாவன.

1. **விலங்குகளுடன் போராட்டம்**
2. **உணவிற்கான போராட்டம்**
3. **நெருப்பிற்கான போராட்டம்.**

என்பனவாகும். மனிதன் தனது உணவிற்காக விலங்குகளுடன் போராடினான். இவ்வாறு தான் போராடிய மிருகங்களின் உருவப்படங்களை பாறைகளில் வரைந்து கொண்டான். இந்த மனித நடிவடிக்கையில் அவனது கைகள் ஆயுத உறுப்பாகப் பயன்பட்டது.

இவ்வாறு வரைந்த ஓவியங்களுக்கு சில ஆயுதங்களை பயன்படுத்தினான். அவனது கலையாக்கங்களில் மேலும் இரண்டு முக்கியமான அம்சங்களில் கலை வளர்ச்சியடைந்தன.

1. **சடங்கு**
2. **மந்திரம் அல்லது மாயவித்தை**

ஆதிகால மனிதன் தனக்கு மிருகங்களினால் வரும் தீமைகளை மந்திரங்கள் மூலம் விலக்கலாம் என எண்ணி விலங்குகளை வரைவதால் விலங்குகளிடம் இருந்து தப்பிக் கொள்ளலாம் என நம்பினான். இதனால் கைத்திறனும் கலையும் வளர்ச்சியடைந்தன. இவன் தான் வசித்த குகைச் சுவர்களில் கற்பாறைகளில், தன் உடலில் சித்திரங்களை வரைந்து கொண்டான். இவ்வாறு வரைந்த ஓவிங்களாக மாடுகள், குதிரைகள், கோட்டு உருக்கள், குறியீடுகள், கற்பனைப் பறவைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவர்கள் மேற்கொண்ட மந்திரங்கள் இரண்டு வடிவங்களில் வளர்ச்சி பெற்றுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. தீமை செய்யும் மந்திரம்**
**2. நன்மை செய்யும் மந்திரம்**

என்பனவாகும். ஒரு எதிரி அல்லது தனக்கு நன்மை செய்யும் முறைகளைப் பயன்படுத்தி உருவங்களைச் செய்து சாந்தி செய்தல் அல்லது வெட்டுதல் என்பவற்றால் தான் வெல்லுவதாக எண்ணிக் கொண்டான். இச் செயற்பாடும் கலைகள் வளர காரணம் எனலாம்.

மேலும் அவன் ஒரு உருவத்தைப் போல் இன்னுமோர் உருவத்தைச் செய்தால் அல்லது வரைந்தால் மனிதனுடைய ஆற்றலும் பலமும் அதிகரிக்குமென எண்ணி தன்னுடைய கருவிகளையும் தன்னுடைய ஆயுதவர்க்கங்களையும் வரையத் தொடங்கினான். இவ்வாறான வடிவமைப்புக்களை தொன்மையான குகை ஓவியங்களின் காணக்கூடியதாகும்.

உதாரணமாக.

* வடக்கு ஸ்பெயினில் உள்ள அல்டாமீரா
* தெற்குப் பிரான்சில் உள்ள லாஸ்கோ
* பிரான்சின் பொன்டிதாகோவே
* வெஸ் ஏளிஸிஸ் குகை

போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆதி மனிதன் தங்களுக்கான ஒரு மேலாண்மையை வளர்த்துக் கொண்டனர். தங்களுக்கான வாழ்க்கையில் ஓர் பாரம்பரியத்தை வளர்த்ததற்கான சான்றுகளில் ஒன்றாக குலக்குறி காணப்படுகின்றது. நாகம், எருது, கோடு, வேல் போன்ற குறியீடுகளை தங்கள் உடல்களிலும் பொருட்களிலும் பதித்துக் கொண்டனர்.

இயற்கையோடு மனிதன் நடத்திய போராட்டம் மேலும் கலை வளர வழிவகுத்தன. கலையானது அவனது தொழில்த்துறையோடு நெருங்கிய தொடர்பில் வளர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

* வேட்டையாடுதல்
* உணவிற்காக விதைகள் கிழங்குகள் சேகரித்தல்
* குடும்ப பராமரிப்பு - குழந்தை உணவு சேமிப்பு

இவ்வாறு பண்டைய காலத்தில் தொழில்த்துறைகளோடு ஈடுபட்ட மனிதர்கள் தொழில்த்துறை சம்மந்தமான உருவ அமைப்புக்களை அதிகம் வரைந்தால் தொழில் தவறாது அதிகம் கிடைக்கும் என எண்ணினான். இவ்வாறான பரிணாம வளர்ச்சியின் பயனாக மேலும் இரண்டு துறைகள் வளர்ச்சியடைந்தன. அவையாவன.

* விவசாயம்
* மந்தை மேய்த்தல்

போன்ற தொழில்களில் ஈடுபட்டபடியால் அவனது வாழ்நாட்களில் அதிகமான ஓய்வுநேரம் ஏற்பட்டது. எனவே தனது தொழில்சார்பான தன் வாழ்க்கையில் புதிய அனுபவங்களையும் உள்வாங்கினான். எனினும் விவசாய வாழக்கையில் அவனது சிந்தனை, கலைகள், சித்திரங்கள் போன்றவற்றை வளர்த்தெடுத்தன என்பது தெளிவு எனினும், தனது ஓய்வு நேரங்களில் பருத்தி மரத்திலிருந்து எடுக்கப்பட்ட பஞ்சில் இருந்து நூல்களை நூற்று ஆடைகளை ஆக்கத்தொடங்கினான். இவ்வாறாக விவசாயப் பண்பாட்டில் இருப்பிட இல்லங்களை அமைக்கும் முறையினைக் கற்றுக் கொண்டான். இல்லங்கள் அரைவட்ட வடிவம், கோண வடிவம், நீள் சதுர வடிவம், வட்ட வடிவம் போன்ற வடிவங்களில் அமைத்துள்ளான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்பட்ட காலங்களில் கல்லினாலும் சுவர்களை அமைக்கத் தொடங்கி சுவர்களுக்கு உடைக்கும் கற்களில் சித்திரங்கள் அலங்கார வேலைப்பாடுகள் குறியீட்டு அம்சங்கள் என்பவற்றை வரைந்தான். எனினும் பூர்வீக வளர்ச்சியில் கலை நடைமுறையில் வளரத் தொடங்கியது. உதாரணமாக சீனா, கிரேக்கர், உரோமானியர், எகிப்தியர், திராவிடர் போன்றோர் தங்களுக்கான பண்பாடுகளுக்கு ஏற்றவாறு வளர்த்தெடுத்தனர்.

தொடர்ந்து மனிதனது உச்சநிலை கலைவளர்ச்சிக்கு இயற்கை மாற்றங்களும். விலங்குகளின், மனிதனின் இறப்புமே காரணமாயின. மனிதன் கண்ட புரியாத புதிர்களாக தன்னுடைய மரணத்தையும், இயற்கை மாற்றங்களையும் கண்டு விடைகாணாது திணறினான். இதனை அறிய முற்படும்போதுதான் அறிவுத்திறன் மேல் எழுந்தது எனலாம். இதற்கு இரண்டு கோணங்களில் விடைகாண முற்பட்டான்.

* கலை அறிவியலினூடாக
* சமய அறிவியலினூடாக

தேடுதல்களை மேற்கொண்டான். தொடர்ந்து தேடல்களில் ஈடுபட்ட மனிதன். தனது வாழ்க்கையினை மாற்றியமைத்துக் கொண்ட மனித வளர்ச்சியினூடாகவே கலைக் களஞ்சியமும் வியாபித்து பல கிளைகளை பரப்பின. எனினும் இன்று நாம் வாழும் புதியதோர் கலை உலகில் எம்மைக் கலை வழிநடத்திச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.


கலைகளின் தோற்றமானது மனிதன் எப்போது தோன்றினானோ அந்தப் பொழுதில் இருந்தே தோற்றம் பெறத்தொடங்கி விட்டது எனலாம். ஆயினும் அவை பல கட்டங்களாக வளர்ச்சியடைந்து இன்று நிலையான இடத்தைப் பெற்று மிளிர்வதைக்காண முடிகின்றது. இதற்காக ஆரம்பத்தில் இருந்து மனிதன் பல தடைகளையும் வெற்றிகொண்டு விடாமுயற்சியுடன் இக் கலைகள் தோன்றி வளர்வதற்கு அரும்பாடுபட்டுள்ளான் என்பது வெள்ளிடைமலையாகும்.

மதிநுட்பத்தின் மதிப்பு
*வைரங்களிலும் மேலானது.*
-புதிய ஏற்பாடு-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் பதிவுகள்




2004ம் ஆண்டு நடைபெற்ற
விளையாட்டுப் போட்டியில் பெற்றோருக்கும்,
பழைய மாணவர்களுக்கும்
இடையிலான கயிறிழுத்தல் நிகழ்வு

விஞ்ஞான கூட
திறப்பு விழா 2005





பாடசாலையின்
ஆரம்ப காலத்தின்
முதல் மாணவனுக்கு
பாடசாலை முதல்வர் கைலாகு
கொடுத்து வரவேற்றல்

தரம் 5, கா.பொ.த. (சா/த,)
க.பொ.த(உ/த) பரீட்சைகளில் முதலிடம்
பெற்ற மாணவன் ரூபவண்ணனும்
அதிபர் கனக மகேந்திரா குடும்பத்தினரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணனித் தொகுதி, மின்பிறப்பாக்கி பாடசாலைக்கு
அன்பளிப்புச் செய்த புலம் பெயர்ந்து
வாழும் பழைய மாணவனுடன் இராப்போசனம்



கண்காட்சி நிகழ்வின் போது.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2005 இல்ல மெய்வல்லுநர் திறனாய்வில்**
**இடம்பெற்ற இசையும் அசைவும்**



**அணி**
**இசைக்குழு**





**மாவீரர்களின்**
**பெற்றார்**
**கௌரவிப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஞா.நயனகுமார் BA (Cey)**
**ஆசிரியர்**

# ஓசோன் படை சிதைவடைதல்
# DEPLETION OF OZONE LAYER

வளிமண்டலத்தை மாறன் மண்டலம், படை மண்டலம், அயன மண்டலம் என மூன்று பிரதான கூறுகளாக வகுக்கலாம். இதில் மாறன் மண்டலத்தின் ஒரு பகுதி ஓசோன் ($O_3$) படையாகும். இப்படை சூரியனிலிருந்து பூமியை நோக்கி வருகின்ற, உயிர் சூழலுக்கு கெடுதலான புற ஊதாக்கதிர்களை (Ultra-Violet) உறிஞ்சிக் கொள்வதன் மூலம், அவை பூமியின் மேற்பரப்பை வந்தடையாது தடுக்கின்றன. இவ்வாறாக இயற்கைச் சமநிலையைப் பேணுவதற்கு உதவி வருகின்ற இவ் ஓசோன் படை இன்று சிதைவடைந்து வருவது உலக நாடுகள் அனைத்தையும் அச்சத்திற்குள்ளாக்கி வருகின்றது.

வளிமண்டலத்திலிருந்து 50kmக்கு அப்பால் காணப்படுகின்ற இப்படை, 1840 இல் அமெரிக்காவைச் சேர்ந்த "சேன் பீன்" என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. 1979 இல் அந்தாட்டிக்காவில் ஆய்வு செய்த விஞ்ஞானிகளால், ஓசோன் படையில் ஏற்படும் தாக்கம் பற்றி உணரப்பட்டது. பின் 1982 இல் பிரித்தானிய விஞ்ஞானிகள் கலிபே (Halley Bay) என்ற இடத்தில் ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டிருப்பதைக் கண்டறிந்தனர். 1984 ஒக்டோபரில் மீண்டும் அவ்விடத்தில் ஆராய்ந்த போது முன்னரிலும் பார்க்க ஓசோன் துவாரம் 30% விரிவடைந்திருந்தமை கண்டறியப்பட்டது. இன்று இந்த ஓசோன் துவாரம் அந்தாட்டிக்கா முழுவதும் விரிவடைந்து விட்டது.

இந்த ஓசோன் படையை ஆராய்ந்த விஞ்ஞானிகள் ஒவ்வொரு வருடத்திலும் செப்ரெம்பர் முற்பகுதியிலும் ஆகஸ்ட் முற்பகுதியிலும் இத்துவாரம் பெருதுபடுவதைக் கண்டறிந்தனர். ஒக்டோபர் மாதத்திற்குப் பின் இத்துவாரம் தன் பரப்பில் குறுகுகின்றது. அந்தாட்டிக்காவிற்கு மேற்பரப்பில் மட்டுமன்றி தென்னரைக் கோளத்தின் தென் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, தென் நியுசிலாந்து பகுதிகளிலும் இது அவதானிக்கப்பட்டுள்ளது. தென் அமெரிக்காவின் நகரங்களான றியோடி, ஜெனிரோ, சந்தியாகோ ஆகிய நகரங்களிலும் சிலியின் தென் நகரமான "அறனாஸ்" என்ற இடத்திலும் மேலும் ஓசோன் துவாரம் அவதானிக்கப்பட்டுள்ளது.

## ஓசோன்படை சிதைவடைவதற்கான காரணிகள்
## FACTS OF THE DEPLETION IN OZONE LAYER

ஓசோன்படை சிதைவுக்கு முக்கிய காரணியாக குளோரோ புளோரோ காபன் (CFC) என்ற வாயு விளங்குகின்றது. குளிர்சாதனப் பெட்டிக்கு பயன்படுத்தப்படுகின்ற வாயுவே இந்த CFC ஆகும். இன்று இந்த CFC குளிர்சாதனப் பெட்டிகளுக்கு மட்டுமன்றி குளிரூட்டிகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. இந்த வாயு நிலையானதாக நீண்டகாலம் வளிமண்டலத்தில் தங்கியிருப்பதனால், ஓசோன்படையில் இரசாயன அமைப்பை ஊறுபடுத்திவிட்டது. அங்கு அவை புறஊதாக்கதிர்களை உறிஞ்சிக் குளோரின் அணுக்களை வெளிவிடுகின்றன. இவ்வாறு வெளிவிடப்படும் ஒரு குளோரின் அணு ஆயிரக்கணக்கான ஓசோன் தனிமங்களை அழித்துவிடும் சக்தி வாய்ந்தது.

CFC குளிர்சாதனப் பெட்டிகளில் இருந்து மட்டுமன்றி, பிளாஸ்ரிக் பொருட்கள், வாசனைத் திரவியங்கள், ஆசன மெத்தைகள், உலோக சுத்திகரிப்பு, கிருமி நீக்கிகள், தெளிகருவிகள், உந்தும் பதார்த்தங்கள், கரைப்பான்கள் மற்றும் நுரைகளைத் தோற்றுவிக்கும் கூறுகளிலிருந்து தோற்றுவிக்கப்டுகின்றது.

CFCஐவிட ஒளியும் ஓசோன்படை சிதைவுக்கு ஓரளவு காரணமாக இருக்கின்றது. அத்துடன் நைதரசன் ஒட்சைட்டுக்கள் ($N_2O$) வளிமண்டலத்தை அடையும்போது அவை ஓசோன்படையில் குறித்தளவு சேதத்தை ஏற்படுத்தும். மிகை ஒலி விமானங்களின் போக்குவரத்து, நைதரசன் வளமாக்கிகளின் அதிகரித்த பயன்பாடு என்பவற்றால் வளிமண்டலத்தில் நைதரசன் ஒக்சைட்டுக்களின் அளவு அதிகரிக்கும். இவற்றைவிட பீடைகொல்லியான மீதையில் குளொரைட் ($CH_3Cl$) என்ற வாயுவும் ஓசோன்படையில் சிதைவை ஏற்படுத்துகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓசோன்படைச் சிதைவினால் ஏற்படும் விளைவு.
## EFFECTS OF THE DEPLETION IN OZONE LAYER

ஓசோன்படைத் துவாரத்தினூடாக பூமிக்கும் உயிரினங்களுக்கும் உவப்பற்ற புற ஊதாக்கதிர்கள் (Ultra-Violet) வந்தடைவதற்கு வாய்ப்பேற்பட்டுள்ளது. இதனால் உயிரினங்களின் உயிர்வாழ்க்கையில் சிரமம் ஏற்பட இடமுண்டு. மனிதனுக்கு பல்வேறு நோய்கள் ஏற்படும். குறிப்பாக தலைவலி, தலைச்சுற்று, வாந்தி, மூளையுறுப்புக்கள் பாதித்தல் என்பன ஏற்படலாம் என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். அத்துடன் கண்கள் பாதிப்படைவதுடன் தோல் எரிவு மற்றும் தோலின் மேற்றோல் கலங்களில் காணப்படும் கட்டமைப்பை மாற்றுவதன் மூலம் தோல்ப்புற்று நோயையும் ஏற்படுத்தும். ஓசோன் படலத்தில் ஏற்படும் 1% இழப்பு தோல்ப்புற்று நோய் ஏற்படுவதில் 3% அதிகரிப்பை உண்டாக்கும்.

இவை தவிர இதர விளைவுகளாக தாவரங்களின் வளர்ச்சி குறைவடைந்து, உற்பத்தியும் வீழ்ச்சியடையும். கடல்வாழ் உயிரினங்கள் பாதிப்படைவதால் கடலுணவு உற்பத்தியும் பாதிக்கப்படும். அத்துடன் நீர்ப்பீடனத் தொகுதியில் காணப்படும் நிணநீர்க் குழியங்களின் தொழிற்பாட்டைப் பாதிப்பதனால் நோயினால் பீடிக்கும் தன்மை அதிகரிக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக சூழற் சமநிலை பாதிக்கப்பட்டு வானிலை நிலைமைகளிலும் மாற்றம் ஏற்பட வழிசமைக்கும்.

ஞாயிற்றுக் கதிர்களில் தீங்கு தரும் கதிர்களைத் தடுத்து, வான வெளிக்குத் திருப்பியனுப்பி பூமியின் வெப்ப நிலையைச் சீராக வைத்தும், உயிரினங்களுக்குத் தீமை செய்யும் கதிர்களை புவி மேற்பரப்பிற்கு வரவிடாமலும், காத்து நிற்கின்ற ஓசோன்படைக்கு நன்றி கூறாவிட்டாலும் பரவாயில்லை, மனிதன் அப்படைப்பின் சிதைவிற்கு காரணமாகிவிட்டான். வளியை மாசடைய வைத்ததன் மூலம் ஓசோன்படையில் துவாரம் ஒன்று ஏற்பட வழிசமைத்துவிட்டான்.

## ஓசோன் படையைப் பாதுகாக்கும் வழிமுறைகள்
## WAYS OF CONSERVING IN OZONE LAYER

ஓசோன்படையில் ஏற்பட்டிருக்கும் துவாரத்தினை அடைப்பதற்கு வாய்ப்பு உண்டா? என்பதனை விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். முதற்கட்ட நடவடிக்கையாக ஐக்கிய அமெரிக்கா 1978இல் CFC வாயுக்களைத் திட்டமிடாத வகையில் உற்பத்தி செய்வதை மட்டுப்படுத்தும் சட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனைப் பின்பற்றி ஐரோப்பிய நாடுகள் சிலவும் சட்டங்களினை ஏற்படுத்தியுள்ளன. ஓசோன் துவாரத்தினை செப்பனிடுவதற்கு ஓசோன்படையை சீர்படுத்தும் வாயுக்களை நிரப்பி உயரே வளிமண்டலத்திற்கு அனுப்புவதன் மூலம் ஓசோன் துவாரத்தினை சீர் செய்யலாம் என எண்ணுகின்றனர்.

16/06/1996 இல் பிரேசில் மாநாட்டில் ஓசோன்படையைப் பாதுகாப்பது பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்திற்கமைய ஓசோன்படைச் சிதைவை பாதுகாக்க பல நாடுகள் முன்வந்ததுடன் ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 16இல் உலக ஓசோன் தினமாக அனுஷ்டிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவை தவிர ஓசோன் படையை எதிர்காலத்திலாவது பாதுகாப்பதன் பொருட்டு கீழ்வரும் கருத்துக்களும் தற்காலத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

* சூழல் பாதுகாப்பு சம்பந்தமான சட்டங்கள் இயற்றப்பட்டு நாட்டினுள்ளும் நாடுகளுக்கு இடையேயும் அமுல்படுத்தப்படல்
* CFCயின் பாவனையை முடிந்தளவு தடைசெய்தல்
* புதிய தொழில் நுட்பமுறைகளைக் கண்டு பிடித்தல்
  உதாரணமாக
  CFC க்குப்பதிலாக Hஐ சேர்ப்பதன் மூலம் CFCயின் உறுதித்தன்மையைக் குறைத்தல்
* நைதரசன் வளமாக்கிகளின் பிரயோகத்தைக்கட்டுப்படுத்தல்
* CFCக்கு மாற்றீடான இரசாயனப் பொருளை உருவாக்கல்
* தூவிகளாகப் பயன்படுத்தப்படும் ஓசோன் படையைச் சிதைக்கும் பீடைகொல்லிகளின் பாவனையைத் தடைசெய்தல்.

எனவே ஓசோன் துவாரமும் எதிர்காலத்திலே வரவிருக்கின்ற அனர்த்தங்களிற்கும் ஓர் அறிகுறியாக இருக்கிறது எனலாம். ஓசோன் துவாரம் இன்று மட்டும் ஏற்பட்டதன்று. சூரியனால் களங்கங்கள் அதிரிக்கும்போது வெப்பநிலையிலும் கதிர் வீச்சிலும் எற்படும் மாறுபாடுகள் ஓசோன்படையால் காலத்திற்குக் காலம் துவாரத்தை ஏற்படுத்தியிருக்கலாம். இன்று அந்தாட்டிக்காவுக்கு ஆய்வுக்குச் சென்ற சமயமே இந்த துவாரம் கண்டுபிடிக்கப்பட்டது. வளிமண்டலம் தனது துவாரத்தை தானே அடைத்துக் கொள்ளும் என்ற கருத்துக்கள் தோன்றினாலும் மனிதன் இயற்கைச் சூழலை வெற்றி கொணடு சூழலின் எசமானாக, பங்காளியாக மாறப் பார்க்கிறான் என்றே கூறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி ஹம்சானந்தி
மகேந்திரா
(பழைய மாணவி)
வர்த்தக பீட மாணவி-யாழ் பல்கலைக்கழகம்

# எமது பாடசாலையின் உடற்பயிற்சி விளையாட்டு அனுபவங்கள்

அன்று தனது இருபுறமும் இரண்டு பெரிய பாடசாலைகட்கும் மத்தியில் தலைநிமிர்ந்து நின்ற பாடசாலைதான் சில்வாறோட்டில் உள்ள இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை. சுமார் எழுபது முஸ்லீம் பிள்ளைகள் படித்ததால் இது முஸ்லீம் பாடசாலை எனவும் அழைக்கப்பட்டது.

பல ஆண்டுகளின் பின்பு 1989இல் பல தொண்டர் ஆசிரியர்களும் பயிலுனர் ஆசிரியர்களும் நியமனம் பெற்றதோடு பாடசாலையில் ஒரு புதுயுகம் ஆரம்பமானது. அப்பொழுதுதான் செல்வி சி. நளாயினி, செல்வி நா. ஜெயராணி ஆகியோர் விளையாட்டுத்துறையில் தம்மை இனம் காட்டத் தொடங்கினர். அப்பொழுது கொத்தணி அமைப்பு முறை காணப்பட்டது. போட்டிகளும் முதலில் கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெறும். அப்பொழுதெல்லாம் மூலாதாரப் பாடசாலைகளை எல்லாம் தோற்கடித்து எமது பாடசாலை விளையாட்டில் சாதனை படைக்கும். அன்று நடைபெற்ற தாச்சிப் போட்டி, எறிபந்து, காலப்பந்து, வலைப்பந்து, உடற்பயிற்சி அனைத்திலுமே எமக்கு வெற்றிகள் கிடைத்தது என்றால் அது மிகையாகாது.

நிரந்தரமான வலைப்பந்துத்திடல், கரப்பந்துத்திடல், பூப்பந்தாட்டத்திடல், உதைபந்தாட்டத்திடல் என்பன எமது பாடசாலையில் அமைத்து, அவற்றிற்குச் செல்லும் பாதையின் இரு மருங்கும் பூந்தோட்டம். பாடசாலையைச் சூழ பயன்தரு மரங்கள், என்பன காட்சி தர மாணவர்கள் மைதானத்தில் விளையாட்டுப் பயற்சியில் ஈடுபடுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இவ்வாறு விளையாட்டில் மட்டும் ஈடுபடாமல், கல்வியிலும் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டது என்பதற்கு பாடசாலைக்கு கிடைத்த பரீட்சை முடிவுகள் கட்டியம் கூறி நிற்கின்றன. க.பொ.த சாதாரணப் பரீட்சையில் 1991இல் கொத்தணிக்குள் சிறந்த பரீட்சை முடிவையும் 1992இல் மாவட்ட மட்டத்திலேயே எல்லாப் பாடசாலைகளையும் விட சிறந்த பரீட்சை முடிவையும் பெற்றுள்ளோம். என்பது கல்வித் திணைக்களத்தின் கணிப்பீடாகும். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வருடாந்தம் 2,3 பேர் எனப் பரீட்சையில் சித்தியடைந்த வண்ணம் இருப்பர். 1996இல் எமது மாணவன் ம.ரூபவண்ணன் மாவட்டத்திலேயே அதிகூடிய புள்ளிகளைப பெற்றான் என்பது குறிப்பிடத்தக்கது.

கலைத்துறையில் குறிப்பாக நாடகத்துறையில் நாமீட்டிய சாதனைகள், கல்விச் சமூகத்தையே ஒரு கணம் எம்பக்கம் ஈர்த்தது எனலாம். விவசாயத்துறையில் முன்னணி வகித்ததுடன் தொடர்ச்சியாக பரிசில்களையும் பெற்றது. எமது பாடசாலை. அதனால் பல திக்குகளிலும் இருந்து மாணவர்கள் எம் கலாசாலையில் இணைந்தார்கள். எமது சொந்த மாணவ வளத்தோடு பாடசாலை பிரகாசிக்கத் தொடங்கியது.

உடற்பயிற்சிப் போட்டியில் மூன்று குழுக்கள் வெற்றி பெறும். ஆயினும் மாவட்டத்தில் 17வயதுப் பெண்கள் குழு முத்திரை பொறிக்கும். ஆனால் மாவட்டத்துக்கு வெளியில் நகர முடியாதபடி அரசின் முட்கம்பி அரண்கள். அதனால் வெற்றிகள் அத்துடன் நின்றுவிடும். மாவட்டத்துக்கு வெளியில் நகரமுடியாத நிலை தேசியத்தைச் சந்திக்க முடியாத நிலை. அரண்கள் அகற்றப்பட்ட அந்த ஆண்டே தேசியமட்டத்தில் சின்னப் பொடுகுகள் தம் ஆற்றலை அரங்கேற்றிக் காட்டின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுப் போட்டி என்றால் எமக்கென்றொரு தனித்துவம், புதிய பாதை, புதிய பாணி மற்றைய பாடசாலைகள் போல் நடத்தப்படுவதில்லை. இராமநாதபுரம் மேற்கில் விளையாட்டுப் போட்டி என்றால் புதுமைகள் காண சனத்திரள் கூடும். சொந்தமாக கட்டிக் காத்த Band இசைக் குழுவின் மெருகூட்டலும் அதில் இணைந்து இருக்கும். படிக்கும் பிள்ளைகள் அத்தனையும் மைதானத்தில் பங்காளிகள் ஆவர். விருந்தாளியாக வரும் அதிகாரிகளின் அவதானமும் பாராட்டுரைகளும் எம் விழாவின் சிறப்பையும் புதுமையையும் பறைசாற்றும்.

இத்தனைக்கும் குறைந்த ஆசிரியர் தொகையுடன், விஞ்ஞானப் பயிற்சி பெற்ற கணிதம் கற்பிக்கின்ற ஆசிரியையே இவற்றின் களநாயகியாக மிளிர்வார். அவர்தான் எங்கள் அன்பு ஆசிரியை நளாயினி சின்னத்தம்பி, அவரின் ஊக்கமும் உணர்வும் சிந்தனையும் செயற்பாடுமே அவரின் அபரிமிதமான வெற்றிக்கு காரணமாய் இருந்தன. போட்டி என்ற ஒன்று வந்துவிட்டால் அது முடியும்வரை அவர் பசிநோக்கார், கண் துஞ்சார், மெய்வருத்தம் பாரார். பயிற்சியாளர்களின் முன் அக்குவேறு ஆணிவேறாகச் சிந்தித்துச் செயற்பட்டு, கையாளும் புதுப்புது உத்திகள் சிறுசிறு திறன்களைக் கூட நுணுக்கமாகப் பேணி உட்புகுத்திவிடுவார். அடுத்தவர் தொடராதபடி அடிக்கடி உத்திகளை மாற்றிக் கொள்வார். இதனால் போட்டிக்கு வரும் எதிர் அணிகள் ஏமாந்து விடுவதுண்டு.

பயிற்சியும், வேகமும், தோல்வியை ஏற்றுக் கொள்ளத் தயாரற்ற மன எழுச்சியும், விவேகமும் ஏனைய உடற்கல்வி ஆசிரியைர்களைப் போல் இல்லாது சலசலப்பின்றிப் பேணும் அமைதியான போக்கும் கொண்ட எமது ஆசிரியரின் வழிநடத்தலில் எமது பாடசாலை மாணவர்களின் முயற்சியோடு தேசியத்தில் உயர்ந்து நிற்கின்றது.

அறத்தை நேசி அது தனிமையில் இருக்கின்றது
எப்படி முன்னேற வேண்டும் என்று அது கற்பிக்கின்றது.

-மில்டன்-

எவ்வளவு பெரிய குற்றத்தையும் நான் மன்னித்து விடுவேன்
ஆனால் துரோகத்தை மட்டும் என்னால் ஒருபோதும்
மன்னிக்கவே முடியாது.

- ரூசோ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற்பயிற்சிக் குழுக்கள்



2002ம் ஆண்டு
அகில இலங்கையில்
முதலாம் இடம்பெற்ற எங்கள்
பாடசாலையின் அணி
கொழும்பு - வத்தளை
புனித அந்தோனியார்
கல்லூரி மைதானத்தில்



2002ம் ஆண்டு
அணி பயிற்சி
ஆசிரியர்களுடன்



2004ம் ஆண்டு
அகில இலங்கை
ரீதியில் வெங்கலப்
பதக்கங்களைப்
பெற்றுக் கொண்ட
உடற்பயிற்சிச்
குழுவுக்கான
கௌரவிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2005ஆம் ஆண்டு
மாகாண
மட்டத்தில்
இரண்டாம்
இடம் பெற்ற
எங்கள் அணி
(பெண்கள்)

2005ஆம் ஆண்டு
மாவட்ட மட்டத்தில்
மூன்றாம்
இடம் பெற்ற
எங்கள்
உடற்பயிற்சி அணி
(ஆண்கள்)





வலை
பந்தாட்டக்குழு
15 வயது அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 வயது
கரப்பந்தாட்ட
அணி
2005ம் ஆண்டு
மாவட்ட
மட்டத்தில்
முதலாம் இடம்





15 வயது
கரப்பந்தாட்ட
அணி
2005ம் ஆண்டு
மாவட்ட
மட்டத்தில்
முதலாம் இடம்



வலை
பந்தாட்டக்குழு
17 வயது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி.சு.சுபாசினி
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை

# விழித்தெழுந்திடு மாணவ சமூகமே

காலம் தந்த கொடை
கல்வி
பருவத்தே பயிர் செய்து
ஞாலத்தை காப்பான்
உழவன்
காலத்தே கல்வி பயின்று
ஞாலத்தை காத்திடு
மாணவனே!
விளையாட்டு தேவைதான்
ஆனாலும்
விளையாட்டே வாழ்க்கையா
இல்லை
இல்லவே இல்லை

நீ
விளையாடுவது உன்
வாழ்க்கையுடன் என்பதை
ஏன் தான் புரிய
மறுக்கின்றாய்
பெற்றவர் மனங்கள்
போற்றிடும் வகையில்
கற்றிடு நீயும்
கல்விதனை
கல்வியென்ன
வேப்பங்காயா
கசப்பதற்கு
இல்லை
கல்வி என்றும்
கற்கண்டு தான்
கற்றுப்பார் புரியும் உனக்கு
பணம் அது
இன்று வரும்
நாளை போகும்.
கல்வி அது
என்றுமே அழிந்திடாது.

நீ
மண்ணை விட்டு
விண்ணகம் செல்லும் வரை
மண்ணில் வாழும்
காலம் வரை நீ
மனிதனாக வாழ விரும்பின்
நிச்சயம் கல்விதனை
கற்றுத்தான் ஆகவேண்டும்.
இலக்கு ஒன்றுதனை நோக்கியே
வீறுநடை போடு
உன்
இலட்சியம் ஓர் நாள்
நிச்சயம் வெல்லும்
மனதிலே உறுதிகொள்
தடைகளைத் தகர்த்தெறி
தன்னம்பிக்கையோடு போராடு
சவால்களுக்கு மட்டும் (எதிர்)
நீச்சல் போடு
இமயமும் கூட
ஒரு பொழுதேனும்
உன் காலடிகளிலே
சரண் புகலாம் உன்
தற்துணிவு கண்டு
போராடு போராடு
உறுதியோடு போராடு
நாளைய புதுயுகம்
உன்னையும் ஓர்
மனிதனாக ...........

மதித்திட
அறிவுரைகள் எல்லாம்
அவரவர்களது சொந்த
அனுபவங்கள் தான்
கேட்டு நீயும்
அறிந்து கொள்
மூத்தோரை மதித்திடு
பிறர் மனம் தனை
புண்படுத்தாதே
ரணங்களை ஏற்படுத்துவது
சுலபமானது
ஆனால்
ரணங்களை ஆற்றுவது
கடினமானது
எதுவாகிலும்
உறுதி குலையாது
கொண்ட கொள்கைதனை
ஊரும் உலகும்
போற்றிடும் வகையில்
புது பரிணாமமாய்
பெற்றிட வேண்டும்
இது தான்
அன்புள்ளம் கொண்டவர்களது
அன்பான விண்ணப்பம்.............
நாம் நினைப்பது
நடக்குமா
காலம்தான் இதற்கு
பதில் சொல்லட்டுமே
நடத்திக்காட்டுவது
நல்லோர் பண்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி.மணிமேகலை சண்முகராஜா
B.A. (Hons)
(பழைய மாணவி)
உள்ளூராட்சி உதவியாளர்
கரைச்சி, பிரதேசசபை.

# குடியைக் குடி கெடுக்கும்

**"கிளைஞர்க்குதவாதான் செல்வமும் பைங்கூழ்**
**விளைவின்கண் போற்றானுழவும் - இளையனாய்க்**
**கள்ளுண்டு வாழ்வான் குடிமையும்**
**இம் மூன்றும் உள்ளன போன்றதில்லாப் பொருள்"**

எனக் கூறுகின்றது திரிகடுகம். ஆம் நாகரிகத்தைகெடுத்துப் பெருங்கேட்டை விளைவிப்பது மதுபானம். மதுபானம் மனித சுபாவத்தையே கெடுத்து மிருகத் தன்மையை உண்டாக்கி விடுகின்றது. ஆதலால் மதுவானது விஷம் போன்றது. இதனை நன்றாகப் பரீட்சித்துப் பார்க்கின் பாஷாணம் என்பது இதுவேயெனச் சொல்லலாம். சாராயம், கள், விஸ்கி முதலிய குடியைக் கெடுக்கக் கூடிய மதுபானங்கள் உலகிலே பெருகிய வண்ணமுள்ளன. வெறிதருவதும் வெறிதராததுமான இரண்டு வகைப் பானங்களில் இவை வெறிதரும் இனத்தைச் சார்ந்தவை. இவ்விதமாக வெறியுள்ளவை என்னும் தமிழ்ப்பதத்திற்கு "இன்டாக்ஸிகென்ட்ஸ்" (Intoxicants) என்னும் பதம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. 'இன்டாக்ஸிகென்ட்ஸ்' என்னும் இந்த மொழி ஆதியில் (Toxicon) 'டாக்ஸிகன்' என்னும் க்ரீக் வார்த்தையினின்றும் உற்பவமானது. இப்பதத்திற்கு க்ரிக் மொழியில் பாஷாணம் என்றுதான் பொருள் என்பது கற்றறிந்தோரது துணிவு.

ஆனால் பாஷாணத்திலும் மதுபானம் கொடியது. பாஷாணம் தன்னை உட்கொண்டவரை மாத்திரம் துன்புறுத்தும். மதுவோ அப்பாடியானதன்று. அதனை உட்கொண்டாரும், உற்றர், பெற்றார், உறவினர், மற்றும் சகலரையும் துன்புறுத்துகின்றது. பாஷாணம் இம்மை இன்பத்தை மட்டும் போக்கடிக்கும். ஆனால் மதுவோ இம்மை மறுமை ஆகிய இரண்டின்பத்தையும் ஒரு சேரப் போக்கடிக்கும் தன்மையுடையது. இதனைத் திருமந்திரம்

**"உள்ளுண்மை யோரார் உணரார் பசு பாசம்**
**வள்ளண்மை நாதன் அருளினில் வாழ்வுறார்**
**தெள்ளுண்மை ஞானச் சிவயோகம் சேர்வுறார்**
**கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறியாரே"**

என்று கூறியது கவனிக்கத்தக்கது. பாஷாணம் உட்கொண்டவரை மானிட வகுப்பில் சேர்த்துக் கொள்ளலாம். அந்தோ! மது உட்கொண்டாரை மாக்கள் வகுப்பிலேயும் சேர்த்துக்கொள்ள வகையில்லையே. பாஷாணம் புசித்தோரை நித்திரை செய்வாரோடு ஒப்பிடலாம். மதுபானம் புசித்தோரைச் செத்தவருக்கே ஒப்பிட வேண்டும். என்பதனைப் பொய்யாமொழிப் புலவர்

**"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுண்பார் கள்ளுண்பவர்"**

என்ற குறட்பா மூலம் அழகுற விளக்குகிறார். மதுவானது இரத்தத்தின் சத்தையே குறைக்கின்றது. இரத்த ஓட்டத்தைப் பாதிக்கின்றது. ஜீரண உறுப்புக்களையும் பாதிக்கின்றது, மதுபானம் அருந்தாதவர்களின் உடலில் காயம் உண்டானால் அது சீக்கிரம் குணமடைகிறது. ஆனால் மது அருந்துபவர்களுக்கு காயம் ஏற்பட்டால் அது குணமடைய வெகு நாளாவதுடன் மரணத்திற்கே அப்புண்கள் ஏதுவாயுமிருக்கின்றன. இம் மதுபானமானது எக்காரணத்தைக் கொண்டும் மனித ஆகாரத்தில் ஒன்றல்ல. இதனை உபயோகிக்கும் மனிதன் பாகனில்லாக் குதிரை போல, நிலை தளர்ந்து வழி தவறி விடுகின்றான். நடக்க முடியாமல் கால்கள் தள்ளாடுகிறான். அதனாலே பனையால் விழுந்தவனை கடாவேறித் துவைத்தது போல் துன்புறுகிறான். ஏன் இருதயம் கூடப் பலமிழந்து மயக்கமடைகின்றது. இதனால் அநேகமானோர் அகாலமரணமடைகின்றனர். அதாவது மதுவை நிறையக் குடித்துப் பனியில் படுத்திருந்தமையால் காலையில் இறந்து கிடக்கும் மனிதனே இதற்குச் சாட்சியாவான். மது போதை காரணமாக மதியிழந்து தற்கொலை செய்வோர் மறுபுறம் ஐயகோ! அபாயகரமானது மதுபானம் என்பதை, உலகுணரும் நாளும் எந்நாளோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொக்கரிக்கும் பாம்புதனை ஆட்டி வாழ்வோன்
குடிகெடுக்கும் கள்ளதனைக் குடித்து வாழ்வோன்
துக்கமொரு ஜனவசைக்கும் பாவத்துக்கும்
துர் மரணத்துக்குமிவர் துணைப்பட்டாரே"

என்ற பொன்மொழி குடியால் விளையும் கேட்டினை அனுபவத்தால் உணர்ந்து எழுந்தது போலும், மதுப்பழக்கத்தினால் உடலுக்கும் பல விதமான கெடுதல்கள் உண்டாகின்றன என்பதை வைத்திய சாஸ்திரம் குறிப்பிடும்போது,

"பாதமதிலே நிமிரும் பாண்டொடு சோகை பருக்கள்
வாத பித்தம் கிராணிவன் கரப்பன் பேதியிவை
பொங்கியதிகரிக்கும் புத்திகெடும் மேகமுண்டாம்
தங்கு மதுவிற் கெனவே சாற்று"

என்று விரிவாகக் கூறியுள்ளது. ஆம் காதல், கவராடல், கள்ளுண்ணல், பொய்மொழிதல், ஈதல் மறுத்தல் என்னும் பஞ்சமா பாதகங்களில் நடுவில் அமைந்துள்ள இக்குடியானது ஏனைய நான்கு பாதகங்களையும் செய்யும்படி தூண்டுகின்றதே? கருணைக்கடலாம் ஸ்ரீ ராமபிரானிடம் சுக்கிரீவன் தான் குறித்த நாளிலே வராமல் தவறியது குடியினாலேயே என்பதனைக் கம்பர்

"வஞ்சகமும் களவும் பொய்யும்
மயக்கமும் மரபில் கொட்பும்
தஞ்ச மென்றாரை நீக்கும்
தன்மையும் களிப்புந் தாங்கும்
கஞ்சமெல் அணங்குந் தீரும்
கள்ளினாலருந்தினாரை
நஞ்சமும் கொல்வதல்லால்
நரகினை நல்காதன்றே"

என்று கூறியிருப்பது நோக்கத்தக்கதன்றோ? இம்மதுபானத்தால் அறிவும் செயலும் மானமும் கெட்டு செருக்கும் கோபமும் அதிகரித்து ஆணவம் மேலோங்கும்.

"அறிவையழிக்கும் செயலழிக்கும்
அழியா மானந்தனை அழிக்கும்
செறியும் அறிஞர் மதியாத
செருக்கை விளைக்கும் ஈன்றாலும்
முறியும் வெறுப்பும் மிக விளைக்கும்
கொள்ளேல் கள்ளுண்டலை மைந்தா"

என்று விநாயகபுராணம் குறிப்பிடுகின்றது. இவற்றை ஆராய்ந்து பார்த்தால் மதுபானத்தால் இத்துணைத் தீங்கு உண்டென்பதை உணர முடிகின்றதல்லவா? ஒரு வாழைப்பழத்தை உரித்துச் சிறிது நேரம் கள்ளில் போட்டு வைத்தால், சில நிமிடங்களுக்குப் பிறகு பழத்திலுள்ள ரசமெல்லாம் வற்றிச் சுக்குப் போலாகி விடுகின்றது. இதனால்தான் மதுவைக் குடிக்கக் குடிக்க நாவரட்சி கண்டு அதிகமாக குடிக்கின்றனர் எனலாம். மது கொடியது அழிவிற்கு ஒப்பானது, தீங்கை விளைவிக்கின்றது.

ஆதலால் குதர்க்கமான குணங்களையும், கேவலமான சிந்தனைகளையும் உண்டாக்கி, மக்களை மாக்களாக மாற்றிவிடும் அதிகூடிய சக்தி படைத்த மதுவின் தீமைகளை மனங்கொண்டு அதனை அறவே விலக்கி நாமும் வாழ்ந்து சமூகத்தையும் வாழ வைப்போமாக.

*உலகில் இரண்டே இரண்டு மனிதர்கள்தான் நல்லவர்கள் ஆகின்றனர்*

1. *கருவறையில் இருப்பவன்*
2. *கல்லறையில் இருப்பவன்*

-தத்துவஞானி சேர்ச்சில்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டாக்டர். சித்திரா பரமேஸ்வரன்**
ஆயுர்வேத வைத்தியசாலை
வட்டக்கச்சி.

# ஆயுர்வேத மருந்து இருக்க ஆங்கில மருந்தை நாடுவது ஏன்?

ஆயுர்வேதமானது ஆயுளின் தத்துவங்களையும் நோய் அணுகாவண்ணம் உடல் நலத்தையும் காத்து, ஆயுளை நீடிக்கச் செய்யும் முறைகளையும், நோய்களை அறிந்து அவற்றைக் தீர்ப்பதற்கான உபாயங்களையும் கூறும் கலையாகும். சரித்திர காலத்திற்கு முற்பட்ட இக்கலை, அன்று தொட்டு இன்றுவரை நிலைத்து நிற்பதென்றால், இதன் மகிமை பற்றிக் கூறவும் வேண்டுமா? ஆங்கில மருந்துகள் காலத்திற்கு காலம் மாற்றமடைகின்றன. ஆனால் எமது மருத்துவத்தில் அன்று சொன்ன மருந்துகள் தான் இன்றும் நடைமுறையில் உள்ளன. மனிதன் பயின்ற கலைகளில் மிகப்பழமையானது மட்டுமன்றி, பெருமதிப்புப் பெற்ற கலையாகவும் ஆயுர்வேதம் திகழ்கின்றது.

உலகில் பழம்பெரும் நாகரீகங்கள் தோன்றி வளர்ந்த எகிப்து, இந்தியா, சீனா போன்ற நாடுகளின் மருத்துவ வரலாறு இற்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இந்தியரும், இலங்கையரும், தம்பழம்பெரும் மருத்துவ முறைகளை, சித்த ஆயுர்வேதமென குறிப்பிடுகின்றனர். வேதம் என்பது அறிவு எனப் பொருள்படும். நோயற்ற நீண்ட ஆயுளை பெறும் வழிகளை உணர்த்துவது தான் ஆயுர்வேதம். இது இன்றும் தனித்தன்மையைப் பேணி வருவதுடன், சக்தி வாய்ந்த ஒரு மருத்துவ முறையாகவும் காணப்படுகின்றது.

இம் மருத்துவ முறை, பெரும்பாலும் மூலிகைகளை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படுகின்றது. அல்லாமலும் தாது வர்க்கங்களையும் மற்றும் கொடிய பாசாணங்களின் நஞ்சுத்தன்மை போக்கி அமிர்தம் என்னும் மருந்துக்கு இணையாகச் செயற்படும் திறமை இவ் ஆயுர் வேதத்தையே சாரும்.

**"நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்"**

என்னும் குறளுக்கேற்ப நோய்க்கான குணம் குறிகளைக் கொண்டு, அந்நோயை இனம் கண்டு அந்நோய்க்கான காரணங்களை ஆராய்ந்து, நோயைத்தணிப்பதற்கான முறைகளை ஆராய்ந்து, நோயாளியின் உடலுக்கு பொருந்தும்படியாக சிகிச்சை வழங்கவேண்டும் என ஆயுர்வேதம் வலியுறுத்துகின்றது.

**"மிதனும் குறையினும் நோய் செய்யும் நூலோ**
**வளி முதலா எண்ணிய மூன்று"**

என்னும் வள்ளுவரின் கருத்துக்கமைய அஷ்டவித பரீட்சையில் நாடி முக்கியத்துவம் பெறுகின்றது. நாடியானது 3 தாதுக்களின் சமநிலை மாறுபாடு நோய்க்கு காரணமாகிறது. அவையாவன

1. **வாதம்** நரம்புத் தொகுதியின் தொழிற்பாட்டுடன் சம்மந்தப்பட்ட காரணியாகும்.
2. **பித்தம்** உடலில் நடைபெறும் அனுசேபத்தொழில்பாட்டுடன் சம்மந்தப்பட்ட காரணியாகும்.
3. **கபம்** உடல் அமைப்புடன் சம்மந்தப்பட்ட காரணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை மூன்றும் மனித உயிர் வாழ்விற்கு இன்றியமையாததால் உயிர்த்தாது எனப்படுகின்றது, இந்த உயிர்ச்சத்துகளின் செயல்களே வாத, பித்த, கபம், ஆகியன தமது நிலையில் இருக்கவேண்டும். செயல்பாடுகள் மாறுபடும்பொழுது ரோகம் ஏற்படுகிறது. இதுவே ஆயுர்வேதத்தின் அடிப்படைத் தத்துவம். நோய் ஏற்பட்டு அவஸ்தைப்படுவதிலும் பார்க்க வருமுன் காப்பதே ஆயுர்வேதம்

மனித உடலில் உள்ள 4448 வியாதிகள் பற்றியும் அவற்றுக்குரிய சிகிச்சை முறைகளையும் ஆயுர்வேதம் தெளிவாகக் கூறுகின்றது. போகர் என்ற மாமுனிவர் பாதரசத்தை நெருப்பிலிட்டு மணியாக்கியதும் தேரர் எனும் சித்தர் மண்டையோட்டைத் திறந்து நோய்செய்த தேரையினை வெளியேற்றி நோய் தீர்த்தும், கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையில் ஒரு காகத்தின் உடலில் புகுந்து விண்ணில் பறந்து திரிந்த காகபுசண்டர் போன்றவர்கள் பற்றியும், மேலும் கொடிய பாம்புகளுடன் பழகித்திரிந்த பாம்பாட்டிச்சித்தர் போன்றவர்களின் வரலாறுகளையும் ஆயுர்வேதம் சுட்டி நிற்கின்றது. இப்படிச் சித்துக்களில் மட்டுமல்லாது நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு முதலிய உலக நியதிகளை வென்று நீண்ட ஆயுளுடன் வாழும் முறைமைகளை ஆயுர்வேதம் வலியுறுத்தி நிற்கிறது,

இது மட்டுமன்றி மருந்தை மருந்தாக மட்டுமன்றி உணவாக உட்கொள்ளும் அளவை வகைப்படுத்தி வந்த நோயை நீக்குவதன்றி நோய்வராது தடுக்கும் முறைகளையும் வகுத்தளித்தும் உடலிற்கு மட்டுமன்றி உளத்திற்கும் இதமளிக்கும் வழிவகைகளையும் ஆயுர்வேதம் கூறி நிற்கின்றது.

சித்த ஆயுர்வேத மருத்துவ மூலிகைகளில் இருந்தே, அலோபதி மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. உதாரணமாக நிலபாகல், சிறுகுறிஞ்சா, ஆடாதோடை, கண்டங்கத்தரி, சீந்தில், நேத்திரபூண்டு, வில்வம், கரிசராங் கண்ணி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மலேரியா என்று கூறப்படும் காட்டுக் காய்ச்சலுக்கு கடுகுரோகினி, கருஞ்சீரகம், நிலவேம்பு, நாயுருவிவேர், சிறியாள் நங்கை போன்ற மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்படும் மருந்துகளும், செங்கண்மாரி நோய்க்கு கீழ்க்காய் நெல்லி, சாதிக்காய் போன்ற மூலிகைகளும், நீரிழிவு நோய்க்கு சிறுகுறிஞ்சா, நாவல், ஆவரசு போன்ற மூலிகைகள் பயன்படுத்தப்படுவதையும் நாம் அன்றாட வாழ்க்கையில் காணமுடிகின்றது.

ஆங்கில மருந்துகளால் உடனடியாக நோய் குணமடைந்தது போலக் காணப்படினும், பூரண சுகம் கிடைப்பதில்லை. பக்கவிளைவுகளும் ஏற்படுகின்றன. ஆயுர்வேத மருந்துகளால் பூரண சுகம் அடைவதுடன் விஷவீரியத்தன்மையற்றதாகவும், பக்கவிளைவுகள் அற்றதாகவும் காணப்படுகின்றது. எமது பாரம்பரிய பரம்பரைச் சொத்தான ஆயுர்வேதத்தை அழியவிடாமல் பாதுகாப்பது மனிதர்களின் கடமையாகும்.

எம்மினம், எம்மொழி, எங்கள் தமிழ் மருத்துவம் எல்லாமே உயர்ந்தவை. காலடிக்குள்ளே கண்ணில்படும் பலவகை மூலிகைகள் பலநோய்களை நீக்கவல்லன. இவற்றினை அறியோம். ஆங்கில மருந்துகள் எனப் பல இடங்களுக்கும் அலைந்து திரிகின்றோம். இவற்றை விடுத்து வருங்கால சிற்பிகளாம். எம் இளம் சந்ததியினர் ஆரோக்கியமான சுகவாழ்வு வாழ்வதற்கு மூலிகைகளைப் பயன்படுத்துவதுடன் ஆயுர்வேத மருத்துவத்தில் உற்சாகத்துடன் ஈடுபட்டு எமது பழம்பெரும் வைத்திய முறையான ஆயுர்வேதம் வளர்வதற்கு, அனைவரும் சேர்ந்து உழைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.பாலசுப்பிரமணியம் வசந்தன்
B.Sc
(பழைய மாணவன்)
ஒக்ஸ்பாம் நிறுவனம்
கிளிநொச்சி

# இணையம் - INTERNET

இன்றைய உலகானது தகவல் தொழில் நுட்பத்தில் பாரிய வளர்ச்சியடைந்து கொண்டு முன்னோக்கி நகர்கிறது. இத் தகவல் தொழில் நுட்பமானது இன்றைய மனித வாழ்க்கையின் அத்தியாவசியமான தேவைகளில் முக்கிய இடம் வகிப்பதை நாம் உணரக் கூடியதாகவுள்ளது. இத் தகவல்தொழில்நுட்ப வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பது கணனிகளே ஆகும். எனவே தான் இன்றைய சூழலில் உலகமானது கணனி மயப்படுத்தப்பட்ட உலகம் (Computer World) என அழைக்கப்படுகிறது. இத்தகைய ஒரு சூழலில் நாம் எமது தேவைகளைச் சுயமாகப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமாயின் கண்டிப்பாக கணனி பற்றியும் அதன் பயன்பாடுகள் பற்றியும் அறிந்திருப்பதோடு அதனை எமது அத்தியாவசியத் தேவைகளுக்குப் பயன்படுத்தும் அடிப்படை அறிவினையும் பெற்றிருத்தல் வேண்டும்.

இக் கணனி உபயோகத்தின் ஒரு பகுதியாக இணையம் (Internet) அமைந்துள்ளது. கற்காலம் முதல் தற்காலம் வரை மனிதன் மற்றவர்களுடன் இணைவதிலேயே இன்பத்தை காணுகிறான். இதற்காக பல ஊடகங்கள் இருந்தாலும், இன்றைய நவீன யுகத்திலே உலகத்தை கிராமமாக்கி ஒவ்வோர் மனிதனையும் இணைக்கின்ற ஓர் ஊடகமே இணையம் ஆகும். முரசு, புறா, தபால் என்ற தொடர்புகளின் ஊடாக வளர்ச்சியைக் கண்டு இன்று தேவையின் தேடலால் கணனியின் மூலமாகத் தகவல்களைப் பரிமாறும் இணைய யுகத்தில் இருக்கின்றோம்.

கணனிகளை ஒன்றுடன் ஒன்று இணைத்துப் பயன்பெறலாம், என்ற அடிப்படையில் உருவானதே வலைப்பின்னல் (Net work) ஆகும். இப்படியான வலைப்பின்னல் பலவற்றை ஒன்றுடன் ஒன்று இணைத்து மிகுந்த பலனை அடையும் பொருட்டு உருவானதே இணையம் ஆகும். வலைப்பின்னலின்தொடக்கமே இணையத்தின் உருவாக்கமாக அமைந்தது. 1967ஆம் ஆண்டு அமெரிக்க பாதுகாப்புத் துறை தங்கள் வசதிக்காக அற்பாநெற் (ARPANET - Advanced Researan Projects Administration) என்ற வலைப்பின்னலை ஆரம்பித்தது. வலைப்பின்னலின் நம்பகத்தன்மையை பரிசோதிக்க உருவாக்கப்பட்ட இந்த அமைப்பில் இராணுவ ஆய்வாளர்கள், இராணுவ பல்கலைக்கழகங்கள் போன்றவை இணைந்திருந்தன. இதன்பின் அமெரிக்க பல்கலைக்கழகங்கள் எல்லாம் இதில் சேரத்துடித்தன. எனவே இது இரண்டாகப் பிரிக்கப்பட்டு மில்நெற் (MILNET) என்ற வலைப்பின்னலில் இராணுவ இடங்களையும், அற்பா நெற்றில் (ALPANET) ஏனைய இடங்களையும் இணைத்தார்கள்.

1970ஆம் ஆண்டு பிற்நெற் (BITNET) யூஸ்நெற் (USE NET) போன்ற பல வலைப்பின்னல்கள் தோன்றின. 1980 ஆம் ஆண்டில் Naional Science Foundation Network (NSFNE) என்ற புதிய வலைப்பின்னல் உருவானது. பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சிக் கூடங்களில் உள்ள தரமான கணனிகள் இணைக்கப்பட்டன. காலப்போக்கில் பல வலைப்பின்னல்கள் மூடப்பட மீதமுள்ளவை 1990 ஆம் ஆண்டளவில் NSFNET இல் இணைந்து கொண்டன. இவ்வாறே படிப்படியாக NSFNET இன் ஆதிக்கமும் குறைந்து இணையம் (INTERNET) தோற்றம் பெற்றது.

இணையத்தின் மூலம் உலகின் அனைத்து நூலகங்களையும் தகவல்களங்களையும் அவைகளுக்குரிய முகவரி மூலம் அணுகி அறிய முடியும். இதன் முக்கிய பயன்பாடாக சாதனங்களின் பங்கீடு, தகவல்பங்கீடு, கருத்துப்பரிமாற்றம் என்பன அமைகின்றன. இணையத்தைப் பயன்படுத்தி பத்திரிகை, நூல்கள் வாசித்தல், வியாபாரம் செய்தல், தகவல் பரிமாற்றுதல், கடிதம் அனுப்புதல், சர்வதேச ரீதியிலான பரீட்சைகள் எழுதுதல், வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளல், உறவினர்களுடன் உரையாடல், விளையாட்டு மற்றும் அரசாங்க அறிக்கைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், சினிமாக் கதைகள், சித்திரங்கள், பிரபலமான சொற்பொழிவுகள், இலக்கியங்கள், சிறுகதைகள், பிரயாணம் பற்றிய தகவல்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணனி ஒன்றில் இணைய இணைப்பை ஏற்படுத்துவதற்கு பின்வரும் பாகங்கள் இன்றியமையாததாகும்.

1. தரமான கணனி **(Computer)**
2. மொடம் **(Modem)**
3. தொலைபேசி இணைப்பு **(Telephone Conection)**
4. இணையச் சேவை வழங்கும் நிறுவனத்தின் அனுமதி **(ISP -Internet Service Provider)**
5. தகவல் தொடர்பு மென்பொருள் **(Communication Software)**

இப்பாகங்களைக் கொண்டு ஒழுங்குபடுத்தப்பட்ட கணனியில் பின்வரும் படிமுறைக் கூடாக அணுகி இணையத்தை உபயோகப்படுத்தலாம்.

1. My Computer ஐ Double Click செய்து அதில் Dialog Networking என்ற Icon ஐ Double Click செய்தால் அதில் புதிய இணைய இணைப்பை ஏற்படுத்துவற்கான வழியும் (Make new Connection) ஏற்கனவே பயன்படுத்தப்படுகின்ற இணைய இணைப்பிற்குரிய Icon ஐயும் காணலாம்.

2. நீங்கள் இணையத்திற்கு புதியவராயின் Make New Connection என்ற Icon ஐ Double Click செய்து அதில் பயனாளியின் பெயர் தொலைபேசி இலக்கம் போன்றவற்றைப் பதிந்து புதிய இணைப்பை ஆரம்பியுங்கள்.

3. இப்பொழுது பயனாளியின் பெயரையும் இணைய இணைப்பைப் பெறுவதற்கான Icon ஐ கணனித் திரையில் காணலாம். இவ் Icon இன் மீது Doubl Click செய்யும் போது ஓர் Dialog Box கணனித் திரையில் தோன்றும்.

4. அதில் பயனாளியின் பெயரைச் சரிபார்த்து கடவுச் சொல் (password) தொலைபேசி எண் என்பவற்றைப் பதிந்து பின்னர் Connect என்ற Button ஐ அழுத்தினால் சிறிது நேரத்தில் உங்களுக்கான இணைப்புக் கிடைத்துவிடும்.

5. பின்னர் இணையத்தின் வலம் வருவதற்குரிய தொடர்பு மென்பொருளைப் பயன்படுத்தி நீங்கள் இணையத்தில் உலாவலாம்.

எனவே இணைய அறிவை அனைவரும் பெற்று உலகை ஒரு கணப் பொழுதில் சுற்றிவலம் வந்து மகிழ்ச்சி அடைவோம்.

*அலைந்தேன் திரிந்தேன் எங்கெங்கோ தேடினேன்*
*அமைதி கிடைக்கவில்லை. கடைசியல் கிடைத்தது*
*என்வீட்டில் ஒரு புத்தகத்தில்*

-தோமஸ் கெம்ப்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா.நக்கீரன்
(பழைய மாணவன்)
ஆசிரியர்
கிளி/பன்னங்கண்டி இ.த.க பாடசாலை

# அத்திபாரக் கல்லாய் விளங்கும் ஆரம்பக் கல்வி

கருவறையில் தோன்றிய குழந்தை ஒன்று, தனது கல்வியை தாயின் வயிற்றில் இருந்தே கற்கத் தொடங்கிவிடுகின்றது என்பார்கள் உளவியல் அறிஞர்கள். அந்தக் குழந்தை தாயின் வயிற்றில் வளர்ச்சிடைகின்ற பொழுது, தாயின் நடத்தைக் கோலத்திற்கேற்ப இயைபாக்கம் அடையத் தொடங்கிவிடுகின்றது.

ஒரு குழந்தையின் அறிவு வளர்ச்சியில் ஆரம்பத்திலேயே, நல்ல திடகாத்திரமான அறிவுள்ள குழந்தையாகப் பிறப்பதற்கு தாயே பெரும்பங்கு வகிக்கின்றாள். அவ்வாறு தாயின் வயிற்றில் இருந்து பூவுலகை வந்தடைந்த குழந்தைக்கு, தாய், தந்தை, சுற்றத்தார் போன்றோரின் அன்பு, அரவணைப்பினால் குழந்தையின் உடல், உள நலம் மேலும் வளர்ச்சி அடைந்து வருகின்றது. இவ்வாறு குடும்பத்தின் அரவணைப்பில் இருந்து கற்றல் என்னும் படிநிலைக்கு அடி எடுத்து வைக்கின்ற பொழுது அக்குழந்தையானது பாதுகாப்பு, அன்பு, அரவணைப்பை எதிர்பார்க்கின்றது. குழந்தையின் உளம் மென்மையான சுபாவத்தைக் கொண்டிருப்பதால், கடும் வார்த்தைப் பிரயோகங்களை தாங்கிக் கொள்ள முடியாத ஒரு பிள்ளையாக இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.

குழந்தையானது பாடசாலை என்கின்ற புதியதொரு சமூக அமைப்பிற்குள் காலடி எடுத்துவைக்கின்ற பொழுது, அக்குழந்தைக்கு வீட்டில் கிடைத்த அன்பு, காப்பு, கணிப்பு, அரவணைப்பு என்பன பாடசாலையில் கிடைப்பது அவசியமானதாகும். இதனையே குழந்தைகள் எதிர்பார்ப்பவர்களாக காணப்படுகின்றனர். அவர்கட்கு எடுத்த எடுப்பில் படிப்பு என்ற சுமையை திணிக்க முற்படும்பொழுது, அவர்கள் படிப்பை வெறுக்கின்ற நிலை காணப்படுகின்றது. பாடசாலைக்கு முதலில் வருகின்ற குழந்தைக்கு கற்றல் என்கின்ற செயற்பாட்டை நாம் கற்கின்றோம் என்ற எண்ணம் ஏற்படாத வகையில் விளையாட்டு வினோத செயற்பாட்டின் மூலம் கற்பித்தலை மேற்கொண்டால், அவர்கள் பாடசாலைக்குச் செல்லும் ஆர்வம் ஏற்பட்டுவிடும். அவ்வாறு அவர்கள் ஆர்வத்துடன் பாடசாலைக்கு வருகின்றார்கள் ஆயின், தாமாகவே தமது கற்றல் செயற்பாட்டை விருப்பத்துடன் மேற்கொள்வார்கள்.

அடி அத்திவாரமாக விளங்கும் ஆரம்பக்கல்வியைக் கற்கின்ற சிறார்கள் கற்பிக்கும் ஆசிரியரையே முற்று முழுதாக நம்பி, தமது கற்றலை மேற் கொள்பவர்களாக காணப்படுகின்றனர். அந்தக் குழந்தைகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் தாம் கற்பிக்கும் எந்தவொரு விடயத்தையும் கூறுகின்ற போதும் சரி கதைக்கின்ற பொழுதும்சரி, வாத்தைகளை அவதானமாக யோசித்துக் கதைக்க வேண்டும். பிள்ளைகள் அவர்களுடன் நிதானமாகச் செயற்படவேண்டும். ஏனெனில் தமது ஆசிரியர் கூறுவனவற்றையே சரி என நினைத்து கற்றலை மேற்கொள்ளும். அப்படிப்பட்ட சிறுவர்களின் ஆரம்பக் கல்வியை ஒருவர் கற்பிக்கும்பொழுது மிகவும் அவதானமாக கற்பிக்க வேண்டும்.

ஆரம்பக்கல்வியில் ஒரு பிள்ளைக்கு சிறந்த முறையில் உரிய வழிகாட்டல் கிடைக்கவில்லை என்றால் அந்தக் குழந்தையின் எதிர்காலத்திற்கு ஆரம்பிக்கல்வி கற்பிக்கும் ஆசிரியரே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவேண்டிய கட்டுப்பாடு உடையவராவார்கள். ஒரு பிள்ளை ஒரு நாட்டில் நல்ல குடிமகனாகத் திகழ்கின்றான் என்றாலும்சரி அவன் நெறிபிறழ்வான நடத்தையை உடையவனாக வாழ்கிறான் என்றாலும்சரி அவனின் நிலைக்கு பெரும் பொறுப்பு வாய்ந்தவர்களாக ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இருந்தே ஆகவேண்டும்.

ஆரம்பக் கல்வி மூலம் கிடைக்கும் அறிவும் ஆளுமை விருத்தியுமே, உயர்கல்வி கற்று வைத்தியராக, பொறியியலாளராக, கணக்காளராக, ஆசிரியராக, எழுதுனராக மேலும் பல்வேறு தரத்தை உடைய எல்லோராலும் மதிக்கத்தக்க ஒரு பிள்ளையாக உருவாவதற்கு அடிக்கல்லாக விளங்குவதாகும். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்ற பழமொழிக்கு ஏற்ப ஆரம்பக் கல்வி எனக் குறிப்பிடப்படும் ஐந்தாம் வகுப்புவரை கற்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் அவனின் எதிர்கால வாழ்வு நல்லபடி சிறந்து விளங்க ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் சிறந்த சிற்பிகளாக இருந்து சிறந்த அத்திவாரத்தைக் கட்டியெழுப்பி, பிள்ளைகளின் வாழ்வு வளம்பெற அயராது உழைத்து, அவர்களின் நல்வாழ்வுக்கு வழிசமைத்துக் கொடுப்பதன் மூலம் நல்லதொரு எதிர்காலத்தை கட்டியெழுப்ப முடியும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

*குழந்தையின் எதிர்காலம் எப்போதும்*
*அன்னையின் செய்கையில்தான் அடங்கியிருக்கிறது.*
-நெப்போலியன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. தி.வேணீஷ்வரி
பழைய மாணவி

# குழந்தையும் பெற்றோரும்

குழந்தைகளது ஆன்மீக வாழ்வின் ஒரு அங்கமாக கல்விப்பயிற்சி விளங்குகிறது. பள்ளி வயதுக்கு முந்திய குழந்தைகளின் கூரிய திட்பமான நினைவாற்றல் கண்டு வியப்படையாதது யார்? கிரகித்துக் கொள்ளப்படாத மனத் தோற்றங்களையும் சித்திரங்களையும், எண்ணத் தொடர்புகளையும், உண்டாக்காத விசயங்களை உருப்போடும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட குழந்தையின் மூளையின் வளர்ச்சி இன்று கடந்த காலத்தை விட மேலானது.

ஒவ்வொரு குழந்தையும் தனது திறமைகளையும் பழக்கங்களையும் ஆக்க ரீதியில் பயன்படுத்துகின்றார்கள். பள்ளியாண்டுகளில் அறிவில் தேர்ச்சி பெறுகின்ற நிகழ்ச்சிப் போக்கு ஆன்மீக வாழ்விலிருந்து தான் விரிகிறது. பிரகாசமான காட்சிகள், சித்திரங்கள், புலனறிவுகள், மனத்தோற்றங்கள் ஆகியவற்றின் தெளிந்த சிற்றாறு, குழந்தையின் மனதுக்குள் பாய்வதால் அந்த நினைவு கூர்மையாகவும், திட்பமாகவும் இருக்கிறது. இந்தச் சிற்றாறின் உயிரோட்டம் ஊற்றுக்கண்ணால் ஊட்டம் பெறுவதால் தான் குழந்தையின் சிந்தனையானது நுண்ணிய எதிர்பாராத தத்துவ ஞானக் கேள்விகளைத் தொடுத்து நம்மை வியப்புக்குள்ளாக்குகின்றனர். சுற்றியுள்ள உலகம் குழந்தை உணர்வுக்குள் நுழையாதபடி பள்ளிக் கதவுகள் தடுத்துவிடக் கூடாது என்பது மிகமுக்கியமானதாகும். குழந்தைப் பருவ காலத்தில் ஆசிரியர்கள் பாடசாலை என்பவற்றைவிட பெற்றோரான புத்தகமே மிகவும் முக்கியம்.

பெற்றோரின் வார்த்தை அழகைத்தான் குழந்தை முதலில் உணருகின்றது. வார்த்தையின் அழகை குழந்தை உணரவில்லை என்றால் சுற்றியுள்ள சூழலின் அழகையும் குழந்தை உணராது. குழந்தையின் இதயத்திற்குச் செல்லும்வழி இரண்டு பக்கங்களில் இருந்து செல்கின்றது. மேம்போக்காகப் பார்க்கையில் இவை எதிரும் புதிருமானது ஒன்று வீட்டில் பெற்றோர்கள் மற்றொன்று பாடசாலையில் ஆசிரியர்கள் எனலாம்.

காடு தோட்டம் புல்வெளி ஆற்றங்கரை ஆகியவற்றிக்கு நாம் செல்கின்றோம். குழந்தைகளின் கண்ணைத் திறந்து காட்டுகின்ற கருவியாக வார்த்தை விளங்குகின்றது. கண்டவற்றின் கேட்டவற்றின் அழகை உணர்ந்தபடி அனுபவித்தப்படி வார்த்தையின் மிகநுண்ணிய அர்த்த வேறுபாடுகளை அறிந்து கொள்பவர்கள் குழந்தைகள். அழகான வார்த்தைகள் சொற்பிரயோகங்கள் குழந்தைகளைத் தூண்டும் தூண்டுகோல்களாகும். குழந்தைப் பருவத்தில் தவறவிட்டு விட்ட ஒன்றை எந்தப்பருவத்திலும் ஒருவர் அடையமுடியாது எனவே குழந்தையினது ஆன்மீக வாழ்வின் எல்லாப் பகுதியுடனும் பெற்றோர்கள் தொடர்புடையவர்களாக இருக்கின்றனர்.

எமது குழந்தைகள் குழந்தைப் பருவம் முடிந்து பிள்ளைப் பருவமாகி பள்ளிசென்றுபாடசாலை விலகிப் பின் பெற்றோராகிய நிலையடைந்த பின் அவர்களது வாழ்வில் மிகமுக்கியமான ஒன்றாக காணப்படுவது குழந்தைகளின் எதிர்கால வாழ்வு ஒளிபொருந்தியதாக அமைவதே. நம் போன்ற பெற்றோர்களின் வார்த்தைகள் அவசியம் என்பதை நாம் உணர்ந்து கொண்டால் ஆரோக்கியமான ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. இ. பரமசிவம்
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பள்ளி

# தமிழர் வாழ்வும், சைவசமயமும்

தமிழர் வாழ்வும், சைவசமயமும் ஏதோ ஒரு வழியில் பின்னிப்பிணைந்து கொண்டே வாழ்க்கைச் சக்கரம் சுழல்கின்றது. அந்த வகையில் தமிழருடைய வருடம் சித்திரையில் அர்தமிக்கிறது அன்று தொட்டு இன்றுவரையும் தெரிந்தோ, தெரியாமலோ விரதங்களும், பண்டிகைகளும் சுபமுகூர்த்தங்களும் பண்பாடுகளும் எம்மோடு பின்னிப் பிணைந்தே செல்கிறது. இதற்கு வலுச்சேர்க்கும் நூல்களில் பஞ்சாங்கம் சிறப்பிடத்தை பெற்றுள்ளது. இதனால் பஞ்சாங்கம் பார்த்தல் என்பது ஒரு பொது வழக்காக தமிழர் வாழ்வில் இன்று நிலைபெற்றுத் திகழ்கின்றது. மனிதன் பிறந்ததில் இருந்து இறக்கும் வரையான காலப்பகுதியில் அவனுடைய ஒவ்வொரு நாட்களும் பஞ்சாங்கத்தால் தொடர்கின்றது. அவற்றுள் கோயில் குளம், பட்டி, தொட்டி எல்லாம் வியாபித்துள்ளதை நல்வாழ்வு வாழும் ஒரு தமிழனின் கிராமிய வாழ்வில் வாழையடி வாழையாக வாழ்ந்து கொண்டிருப்பதை உற்று நோக்கின் இது புலப்படும் என்பதில் ஐயமில்லை.

சித்திரை மாதம் பிறந்து விட்டால் தமிழர் வாழ்வு ஒரு புதுப்பொலிவுபெறும் புதுவருடமும் நம்பிக்கை தரும் புதிய எதிர்பார்ப்புக்களை எதிர்கொள்ளும் காலம் நமது பண்பாட்டின் உயிர்ப்புக்கும், தொடர்புக்கும் முக்கியமாக இடம் பெறுவது சித்திரை புத்தாண்டு இதனை தமிழ் மக்கள் என்றுமில்லாது கொண்டாடுகிறார்கள் வாழ்வில் இறையுணர்வை வளர்த்துக் கொள்ளவும் அதன் காரணமாக சிந்தனை சொல் செயல் உயர்ந்து ஓங்கவும் விரதங்களும், பண்டிகைகளும் நமக்கு வழிகாட்டி நிற்கின்றது. ஆறு பருவ காலங்களிலும் சிறந்தது இளவேனில் காலம் பசியும், பிணியும் நீங்கிட பசியும் வளமும் பெருகும் காலம் இது என்று போற்றப்படுகிறது "ருதுக்களில் வசந்த ருதுவாக இருக்கின்றேன்" என்று கீதையில் கண்ணன் கூறும் சித்திரை நட்சத்திரம் பூரணையோடு கூடிய காலம். இக்காலத்தில் சூரியன் மேட இராசியில் புகும் என்று வானசாஸ்திரமும் சமய நம்பிக்கையும் சங்கமமாகிறது. இக்காலப்பகுதியிலிருந்து பஞ்சாங்கம் தோன்றும் புதுவருட பலன்களை இதன் மூலம் அறியலாம். தன் குடும்பம், நாடு விளைவு, வருவாய், பொருளாதாரம், அரசியல், மழை, வெயில், பனி கலந்து சகல வானசாஸ்திர அமைவிடம் பற்றி இது ஆழஅகல சொல்லும். இதன் அடிப்படையில் தான் தமிழருடைய வாழ்வும் சமயமும் போற்றி துதிக்கப்படுகிறது.

கைவிசேடம், மருத்துநீர், புத்தாடை, அறுசுவை உணவு, வழிபாடு, விரதங்கள், கோயில் நிகழ்வு, புதிர் தின்னல், புதுமனைப்புகுவிழா, உழவு, குறிவைத்தல், விளையாட்டு நிகழ்வு, புதுக்கணக்கு, வித்தியாரம்பம் போன்று விரிந்து செல்கிறது. இக்காலப்பகுதியில் தமிழ் மக்கள் தம்குல தெய்வவழிபாட்டை மேற்கொள்வர். அத்தோடு தமிழர் வாழ்வும் சைவமும் தழைத்தோங்க தூபம் இடப்படுகிறது.

சித்திரை மாத ஆரம்பத்திலே பிரதோச விரதமும், அமாவாசை விரதமும், சித்திரைப் பரனி, சதுர்த்தி விரதம், சஷ்டி விரதம், அக்கினிநாள் ஆரம்பம், சித்திரை பூரணை விரதம் என்று தொடர்கிறது. இவ்வாறு ஒவ்வொரு மாதத்திலும் விரதங்களும் சுபநாட்களும் பங்குனிமாதம் வரை விரிந்து பரந்து செல்கிறது. இவற்றில் அனேகமானவர்கள் மாதத்தில் குறைந்தது ஐந்துக்கு மேற்பட்ட விரதங்கயைும், பண்டிகைகளையும் கொண்டாடுவதில் தவறுவதில்லை இங்கு விரதம் என்றால் என்ன என்பதை அறிவோம். அதாவது உணவைக்குறைத்தேனும் சுருக்கியேனும் இறைவன் பால் நெருங்கி இருத்தலை குறித்து நிற்கிறது.

பண்டிகைகளின் தன்மையினை நோக்குகையில் நவரச பலகாரங்களை தயாரித்து, புத்தாடை அணிந்து அயலவர், சுற்றத்தார், உற்றார் உறவினர், நண்பர்களுடன் அளவளாவி சந்தோசமாக பொழுதைக் களிப்பதை குறித்து நிற்கிறது.

இதன் மூலம் மனித வாழ்வில் சந்தோசம் என்பது மனிதனினை நோயற்ற வாழ்வு வாழ வழி சமைத்து கொடுக்கின்றது. விரதத்தின் மூலம் ஒருவன் நோய் இல்லாமல் நீண்டநாள் வாழ்வதற்கு அவனைத் தயார்படுத்திவிடுகிறது. இதிலிருந்து நாம் ஒன்றை ஏற்றுக்கொள்கிறோம். தமிழர் வாழ்வும், சைவசமயமும், இணைபிரியாத ஒரு நாணயத்தின் இருபக்கங்களாகும் என்பதை அறிந்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்குகள் தந்தவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்குகள் தந்தவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி.த.செந்தமிழ்ச்செல்வி
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா.

# புதிய உலகம்
## (சிறுகதை)

பிள்ளையார் கோயிற் காண்டாமணி ஓசை ஊரெல்லாம் பரவியது. நேரம் சரியாக நான்கு மணி என்பதை அறிவித்தது. பாயைச் சுருட்டிக் கொண்டெழுந்தாள் பார்வதி அம்மாள். எழுந்தவள் தேநீர் தயாரித்துக் கொண்டு, கையில் தேநீர்க் கோப்பையுடன் தன் அருமை மகன்மார் இருவரும் நித்திரை செய்த இடத்திற்குச் சென்றாள். பிள்ளைகளை எழுப்பினாள். கை, கால், முகம் கழுவி விட்டு ஆறுவதற்கு முன் தேநீரைக் குடியுங்கள் என்று குரல் கொடுத்தாள். அயர்வுடன் எழுந்த இரு மைந்தரும் அம்மாவின் முகத்தை நோக்கியதுடன் துயரம் தோய்ந்த முகத்துடன் காணப்பட்டனர்.

ம்ம் அப்பா இருந்த காலம் அவர்கள் மனக் கண் முன் நிழலாடியது. வேண்டாம் வேண்டாம் என்று அடம்பிடித்து எதற்கும் ஆசைப்படாது வாழ்ந்தது, இன்று எவற்றுக்கோ எல்லாம் ஆசை வருகிறது. ஆனால் அனுபவிக்கப் பொருளாதாரம் தடைபோடுகின்றது. ஐயோ! எங்கள் அப்பாவை எம்மை விட்டுப் பிரித்து விட்டாயே. அவருடன் அவர் செல்வமும் சேர்ந்தல்லவா போய்விட்டது. திரைகடலோடியும் திரவியம் தேட வேண்டுமென்ற ஆசை அதிகரிக்க அவர் எல்லாச் செல்வத்தையும் சேர்த்து வெளிநாடு என்று வெளிக்கிட, அம்மாவும் சந்தோஷமாக விடை கொடுத்து அனுப்ப, நாங்கள் மட்டும் சும்மாவா விட்டோம். நான் சொன்னேன் அப்பா உங்கள் உழைப்பில் எனக்கு ஒரு மோட்டபைக் முதலில் வாங்கித் தருவீர்களா? என்றேன். என்ரை குமாருக்கு இவ்வளவு ஆசையா என்று என் தலையையும் வருடிக் கொடுத்தாரே.

அண்ணா எங்கள் அப்பா எங்களுடன் இருந்திருந்தால் இப்படி வந்திருக்காதேயண்ணா என்றான் சுதா. சுதாவிற்கு அப்பா தங்களை விட்டுப் புறப்பட்டதை மனதால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை அவர் எங்களோட இருந்திருந்தால்

கடையும் இருந்திருக்கும்
வியாபாரமும் நடந்திருக்கும்
நாங்களும் படித்திருப்போம் அம்மாவும்

இவ்வாறு தளர்வடைந்திருக்கமாட்டா, ஏன் அண்ணா அவருக்கு இந்த வெளிநாடு ஆசை என்று அடுக்கிக் கொண்டே சென்றான் சுதா.

தேநீரும் ஆறப்போகுது, இன்று அம்மா எழும்பவும் செண்டுபோச்சு கெதியில் முகத்தை கழுவுங்கோ தம்பி என்றான் வாஞ்சையுடன் குமார் என்னண்ணா வெறும் பிளேன்ரீ தானே, எனக்கு வேண்டாம் இது சுதாவின் அங்கலாய்ப்பு இந்த உரையாடலைக் கேட்ட பார்பதியம்மாள் இருந்ததைக் கொண்டு நல்ல படியாகத்தான் வாழ்ந்திருந்தோம் என் பிள்ளைகள் ஆசைப்பட்டதையெல்லாம் வாங்கிக் குவித்தாரே ஆசை ஆரைத்தான் விட்டது. இருப்பதைக் கொண்டு திருப்திப்பட முடியாமல் வெளிநாடு, கார், ரீவி, டெக், கெம்பியூட்டர், பிரிச், நகை நட்டு, விளையாட்டு சாமான்கள் இவையெல்லாம் இரண்டு வருடத்தில் வாங்கிவிடலாம். இந்த ஆசை மொழியிலை நானும் மயங்கி காணி, நகை, கடை எல்லாவற்றையும் விற்று வெளிநாடு செல்ல ஒத்துழைப்புக் கொடுத்தேனே!

இப்போ இப்போ மயக்கம் வந்திடும் போல் இருக்கிறதே, என் பிள்ளைகட்கு ரீ வைத்துக் கொடுக் முடியவில்லையே இவை ஒருபுறம் ஐயோ அவருக்கு என்ன நடந்தது என்று கூட சரியாகத் தெரியவில்லையே? எங்கே, எப்படி, எப்போது ஒன்றுக்கும் விடை தெரியாது உள்ளம் பொங்க, தண்ணீர் பெருக பிள்ளைகள் கண்டுவிடக்கூடாது என்ற மனவிருப்பால் எங்கோ பார்த்துக்கொண்டு உள்ளத்தை அடக்கிக் கொண்டார்.

நேற்றுவரை கையில் சேகரித்தபணமும் ஒதுங்கிவிட்டது. இன்று என்ன செய்வோம். மலைக்குப் போய் என்பிள்ளைகள் மருந்துச் செடிகளைப் பிடுங்கி வந்து காசு காண்பதே எமக்கு ஆண்டவன் காட்டிய வழியாகிவிட்டது. இதையும் அந்த ஊர்பரியாரியார் சொல்லித்தராவிட்டால் எங்கட்கு என்ன தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும். பிச்சை எடுக்க வேண்டி வந்திருக்கும், அதை விடச் செத்துத் தொலையலாம், ஆ....என் ஆண்பிள்ளை இரண்டையும் கொல்வதா? இந்த வழியையாவது காட்டினாயே இறைவா! நன்றி செலுத்துகின்றான் பார்பதியம்மாள்.

ஏதோ எங்கடை பிள்ளைகட்கு காட்டுப்பாதை எல்லாம் இப்போ கரைகண்ட வழியாச்சு, கஞ்சய மலையிலே சஞ்சீவி இலை இருக்குதாம். அதை நல்ல விலைக்கு கொடுக்கலாம் என்றார்கள். தம்பி குமார் இன்று நீங்கள் கஞ்சய மலைக்குச் சென்று சஞ்சீவி இலை தேடி வாருங்கள். நொச்சி இலை போல இருக்குமாம். நல்ல வாசனை தருமாம். முகர்ந்தால் புத்துணர்ச்சி பிறக்குமாம். ஒரு மூட்டை நிறைய தேடி வாருங்கள் அப்படிக் கிடைத்தால் இம்மாதப் பொழுதை போக்கி விடலாம் என்றாள் பார்பதித்தாய்.

அம்மா இது தொலைவில் உள்ள மலையாகும் போகவர, பொருள்தேட எப்படி என்றாலும் மூன்று நாட்கள் செல்லும் என்றனர் மைந்தர்கள்.

இதோ கட்டுச்சாதம் இருக்கிறது. எடுத்துச் சென்று விரைந்து வாருங்கள். நீங்கள் வரும் வரை இறை பூசை செய்து உங்களைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொள்வேன்.

பொழுதும்படுகின்றது நாம் தேடிய மூலிகையைக் காணோம் என்றான் சுதா, நல்ல வேளையாக நமக்கு வேண்டியது கிடைத்துவிட்டது என்றான் குமார், இருவரும் ஓடிச்சென்று இலைகளைப் பறித்து மூட்டையை நிரப்பி விட்டனர். நாளை தானே செல்லலாம். இரவு இங்கேயே தங்கிவிட்டு நாளை காலையில் புறப்பட்டால் என்ன? தம்பி கேட்டான்.

இருவரும் சற்று இளைப்பாறலாம் என்று ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார்கள். மிகவும் களைத்துப் போயிருந்ததால் அப்படியே உறங்கி விட்டார்கள். சிரிப்பு ஒலி கேட்டது தம்பி விழித்துப் பார்த்தான். இரண்டு வன தேவதைகள் பறந்து சென்ற பாதையில் உட்கார்ந்தன. நிலவு ஒளி வீசிற்று அண்ணன் உறங்கிக் கொண்டிருந்தான், அவனை மெதுவாகத் தட்டி எழுப்பி இரவு வந்து விட்டது. வனதேவதைகள் எட்டிப்பார்க்கிறார்கள் என்ன செய்யலாம்? என்று பயத்துடன் வினாவினான்.

அண்ணன் எழுந்தான், போகாமல் என்னுடன் வா என்று தம்பியை இழுத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு ஓடினான். வன தேவதைகள் பின்னால் பறந்து வந்தன. அவர்களைச் சுற்றி வட்டமிட்டன. கைகளைச் சேர்த்துக் கொண்டு கூத்தாடின. அவர்களை அவ்விடத்தைவிட்டு செல்ல முடியாது தடுத்தன. இருவரும் அஞ்சி நடுங்கி செய்வதறியாது திகைத்து நின்றனர்.

இப்பொழுது ஒரு தேவதை அவர்களருகில் வந்தது பார்த்துச் சிரித்தது, நீங்கள் எதற்காக அச்சப்படுகிறீர்கள் என்று பேசத் தொடங்கியது. உங்கட்கு நாம் ஒரு தீங்கும் செய்யமாட்டோம். நீங்கள் எம் விருந்தாளிகள் எம் உலகிற்கு வாருங்கள். இதோ தெரிகிறதே இந்தப் பாலம் இதன்வழி ஏறி நடந்து வாருங்கள். இதுதான் எங்கள் உலகிற்கு செல்லும் பாதை அங்கு நீங்கள் பல அற்புதங்களைக் காணலாம் என்று கூறி அழைத்தது.

இல்லை இல்லை நாங்கள் எம் வீட்டிற்குப் போக வேண்டும், என்று அண்ணன் சொன்னான். அண்ணா ஒருமுறை அந்த உலகையும் சென்று பார்த்து விட்டுப் போவோம், என தம்பி குமாரிடம் மெதுவாகச் சொன்னான். வேண்டாம் இவர்கள் பேச்சை நம்ப முடியாது, அவர்கள் சொல்வது போல் பாலமே இங்கு இல்லை என்று கூறி மறுத்துரைத்தான் அண்ணன் குமார். தம்பி சுதாவிற்கோ வன தேவதைகள் உலகைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை பேராசை ஆயிற்று. அதோ தெரிகிறது பாலம் மலை உச்சியில் இருந்து மேகமண்டலம் வரை பல நிறங்களுடன் தெரிகிறதே. அதுதான் அண்ணா அவர்கள் காட்டிய பாலம் என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதா உனக்கு என்ன பைத்தியமா பிடித்துவிட்டது. அது வானவில் என்பதை மறந்து விட்டாயா என்று உரக்கக் கத்தினான் குமார். நீ சொல்வது தவறு. உன் தம்பி சொல்வது சரி. அதுதான் பாலம் அவ்வழியாக எங்கள் உலகிற்கு செல்லலாம் வாருங்கள் என்று வன தேவதைகள் அழைத்துச் சென்றன. வான வில்லின் மேல் ஏறி நடந்து சென்றனர். ஆம் அது நடக்கக் கூடிய பாலம் தான். எதுவித இடையூறும் இன்றி நடந்தனர். இப்போது சஞ்சீவி மூட்டையையும் கொண்டே சென்றார்கள். ஆம் அப்பாலத்தின் எல்லையில் ஓர் இன்ப உலகம் தெரிந்தது.

அங்கு பல வன தேவதைகள். தேவருலகம் என்று சொல்லப்படுவது இது தானோ இருவரும் மனதில் எண்ணினர். தேவதைகள் வரவேற்றன, உபசரித்தன, உரையாடின அவர்கள் கண்களை அவர்களாலேயே நம்பமுடியவில்லை. இது கனவா? என்று கூட யோசித்தனர், இல்லை நிஜம் தான். ஏன் நாம் விழிப்புடன் தானே இருக்கிறோம். பூலோகத்தில் கிடைக்காத பல இனிய பொருட்கள் அவர்கட்கு கிடைத்தன. வானவில்லின் நிறங்களில் பல உயிர் மதிப்புள்ள உடைகள் கிடைத்தன. அவர்கட்கு ஆடவும், பாடவும், விளையாடவும் வனதேவதைகள் கற்றுக் கொடுத்தன.

அந்த உலகிலே இரவு என்பதே கிடையாது, தேதியும் இல்லை, நேரமும் இல்லை, எவ்வளவு நேரமாயிற்று, எத்தனை நாட்கள் ஆயிற்று என்றும் தெரியவில்லை. குமாரும், சுதாவும் இன்ப உலகில் திளைத்திருந்தனர். பொழுது போவதே தெரியவில்லை. அவர்கட்கு மிகமிக ஆனந்தமாக அப்புதிய உலகிலே பொழுதைப் போக்கினர். நாம் இங்கு வந்து கொஞ்ச நேரம் தானே? இரவு இன்னும் வரவில்லையே? என்ற எண்ணத்துடன் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

அம்மா பூலோகத்தில் தன் கணவனுடன் பிள்ளைகளை இழந்த பாவியாகத் தவித்து அழுது, நோய் வாய்ப்பட்டு, ஊரார் உதவியுடன் இறைவா கணவனின், பிள்ளைகளின் இறுதிநிலை கூடத் தெரியாத பாவியாக என்னை ஆக்கி விட்டாயே மனதில் எண்ணும் போது மேலே கேட்கும் பல்லியின் சத்தம் மனதில் ஒரு நம்பிக்கையை தோன்ற வைக்கும், என்பிள்ளைகள் வருவார்கள். காட்டில் பாதை மாறி விட்டார்களா, கடவுளே நல்ல வழியைக் காட்டு, அம்மாவிடம் வந்து சேரும் பாதையைக் காட்டிக் கொடு, இப்படி வேண்டாத தெய்வம் இல்லை. நேர்த்தி வைக்காத தெரிந்த ஆலயமும் இல்லை. நாட்களாகி மாதங்களாகி வருடங்களாகி காலம் சென்று கொண்டிருந்தது.

தெருவெங்கும் வெடிஓசை, கிபீர் குண்டுவீச்சு மலைக்குச் சென்ற மக்களுக்கு ஏதும் நடந்திருக்கக்கூடாது என்று வேண்டுகின்றாள் பார்வதி. விடுதலைப் போராட்டத்தில் உன் பிள்ளைகள் இணைந்துவிட்டார்களோ? இந்தக் காலம் இளம் பெடியள் போராட்டத்திற்கு சென்று விடுகிறார்கள். இனியென்ன இவ்வளவு நாளாச்சு பார்வதி உன் குடும்பம் போராளி குடும்பமானாலும் ஆகிவிடும் என்றாள் பக்கத்து வீட்டுப் பாக்கியம் அக்கா. பாக்கியம் அக்கா அவங்களுக்கு அப்படி ஒரு மனநிலை இருக்கவில்லை. அவரைப் போல ஒருகடை வைக்க வேண்டுமென்றான் குமார். வயிறு என்ற ஒன்றுக்காக பொருள் தேடப் புறப்பட்ட பிள்ளைகளால் வயிற்றெரிச்சரைத்தான் தேட முடிந்தது. இனி எப்போது எப்பிறவியில் என்பிள்ளைகளைக் காணுவேன்? என்ற நம்பிக்கையும் அற்றுப் போய்விட்டது. நான் வேண்டாத தெய்வம் இல்லை, கும்பிடாத கோயில் இல்லை, உயிரைப் போக்கவும் முடியவில்லை. பின்பு என் பிள்ளைகள் வந்து தவித்துப் போவார்கள். ஒரு மனம் அவர்கள் வருவார்கள் காத்திரு என்கிறது. வழிமேலே விழி வைத்துப்பார்த்துப் பார்த்த கண்ணும் பூத்துப் போய் விட்டது. எனப் பலவாறு புலம்பினாள் பார்வதியம்மாள் இது வீட்டு நிலை.

இதே நேரம் குமார், சுதா அவ்வுலகில் விளையாடிக்கொண்டிருக்கும் போது, அங்கே ஒரு சஞ்சீவி இலை காற்றில் மிதந்து வந்து அவர்களுக்கருகில் விழுந்தது. அப்போதுதான் குமாருக்கு நாம் சஞ்சீவி இலை பறிக்கவே வந்தோம், என்ற எண்ணம் அண்ணனுக்கு வந்தது. தம்பி, அம்மா எம்மை சஞ்சீவி இலை பறித்து வருமாறு அல்லவா அனுப்பினார். நாம் பறித்த இலைகளை கொண்டு சென்று கொடுக்க வில்லையே? என்ன அங்கலாய்த்தான். திரும்பி வரவில்லையே என்று அம்மா தேடுவார்கள், காணாமற் போய் விட்டோம் என்று வருந்துவார்கள், என்று தம்பி சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் வன தேவதைகளிடம் சென்று, எங்கள் மூட்டையைக் கொடுங்கள் நாம் வீட்டிற்குப் போய் அம்மாவைப் பார்க்கவேண்டும், அம்மா எங்களைக் காணவில்லை என்று எண்ணி வருத்தமடையப் போகிறாா், என்று கூறினார்கள். இப்பவே போக வேண்டுமா? இன்னும் சிலகாலம் எம்முடன் இருக்கக்கூடாதா? என வனதேவதைகள் அவர்களிடம் கேட்டன. அண்ணன் வீடு செல்ல வேண்டும், எனப் பிடிவாதமாக நின்றான் வனதேவதைகள் அவன் தோளில் இலை மூட்டையை வைத்து இருவரையும் சந்தோசமாக அனுப்பி வைத்தனர்.

அண்ணனும் தம்பியும் வானவில்லின் வழியாக இறங்கிப் பூமிக்கு வந்தனர். மூன்று நாட்களாகப் பயணம் செய்து வீட்டை அடைந்தார்கள். தோட்டத்திற்குப் போட்டிருந்த வேலிகள் எல்லாம் காய்ந்து அழிந்து கிடந்தது. வீடும் ஒருபுறம் இடிந்து போய்க் காணப்பட்டது. கிராமமே மாற்றம் அடைந்தது போல இருந்தது முற்றத்துச் செவ்விளநீர்ப்பிள்ளை காய்களுடன் காணப்பட்டது. இது என்ன புதுமை? சிறிய பிள்ளையாக இருந்தது தென்னையாகிக்காய்களுடன் காணப்படுகின்றது.

அம்மா! எங்கே தேடிப்பார்ப்போம் அண்ணன்....கூறினான். வீட்டிற்குள் ஓடிப்போய்ப்பார்த்தார்கள், அடுப்புக்குப்பக்கத்தில் ஒரு தலைநரைத்த கிழவி உட்கார்ந்திருந்தாள். அவள் முகம் எல்லாம் சுருக்கங்கள் விழுந்து காணப்பட்டன. குமார், சுதா இருவரும் திகைத்துப்போய் வைத்தகண் வாங்காது அப்படியே பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றுவிட்டனர்.

எங்கள் அம்மா எங்கே? என்று பெரிய சத்தமிட்டு அழுதான் பெரியவன். அண்ணா இனி நாங்கள் எங்கே போவது என அலறினான். இவை கிழவியின் காதில் விழுந்தது. இது யாருடைய குரல் என்று, பிள்ளைகள் குரல் போல் அல்லவா இருக்கிறது. ஐயோ அவர்களை நான் இழந்து பல வருடங்களாகி விட்டதே என்று எண்ணிக்கொண்டு எழுந்து நடந்து வந்தாள்.

அவள் கண்களை அவளால் நம்பமுடியவில்லை. ஆம்....ஆம்........ இது......இது என் பிள்ளைகள் தான் என் குமார்தான் என் சுதா நீங்கள் வந்துவிட்டீர்களா? கடவுளே உனக்குக்கண் உண்டு. கண்கெட்ட கடவுள் என்று எத்தனை தடவை திட்டி விட்டேன். என்ன புதுமை எங்கிருந்து, என் பிள்ளைகளைக் காப்பாற்றி வந்தாய் எனக் கூறியபடியே இருவரையும் ஒரே தடவையில் கட்டி முத்தமிட்டாள். என் கண்மணிகளே சிறிது கூட வளரவில்லையே? சுகமாக அங்கு இருந்தீர்களா? உங்கட்கு என்ன நடந்தது? யார் உங்களைக் கடத்தியது? யார் மீட்டது? அப்பாவைக் கண்டீர்களா? என ஒன்றன் மேல் ஒன்றாகப் பல கேள்விகளைத் தொடுத்தாள். என்ன ஒன்றும் பேசுகிறீர்கள் இல்லையே? என்று பலவாறு புலம்பினாள்.

இப்போதுதான் திகைப்பில் இருந்து விடுபட்டவர்களாக நாங்கள் போய் அதிக நாட்கள் ஆகவில்லையே? அதற்குள் எப்படியெல்லாம் மாறிவிட்டீர்களே? வீடு, வாசல் கூட அடையாளம் காணமுடியாமல் உள்ளதே என வினாவினார்.

என்னடா தம்பி? அதிக நாட்கள் ஆகவில்லையா? உங்கள் முகத்தைப்பார்த்துப் பன்னிரெண்டு ஆண்டுகள் ஆகிவிட்டனவே, உங்கள் இனிய மொழிகளைக் கூட மறந்து போய் விட்டேனடா, நீங்கள் என்ன புதுக்கதை கதைக்கிறீர்கள், உங்கள் முகத்தை மீண்டும் காண்பேன் என்று நான் என்னளவும் நம்பவில்லை, இருந்தாலும் இறைவன் திருவிளையாடல் நீங்கள் அன்று சென்ற வடிவிலேயே வந்துள்ளீர்கள் இதை நாம் நம்பலாமா நம்பமுடியவில்லையே இனியும் மறந்து விடுவீர்களா என மனக்குமுறலை வெளிப்படுத்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா! பன்னிரெண்டு ஆண்டுகள் ஆகிவிட்டதா? தேவதைகளுடன் கொஞ்ச நேரம் தானே தங்கி இருந்தோம், எவ்வளவு உறுதியுடன் இருந்த எங்கள் அம்மா எவ்வளவு தளர்வடைந்து விட்டா, என உரையாடியதுடன்; அம்மா! எங்களை மன்னித்து விடுங்கள், எங்களை வனதேவதைகள் பிடித்து வைத்துக்கொண்டார்கள், அந்த உலகில் பொழுது போவதே தெரியாமல் இருந்து விட்டோம், அங்கு இரவே வரவில்லையம்மா, அதனால் எங்கட்கு காலம் சென்றதே தெரியவில்லை, நீங்கள் இவ்வளவு காலமும் என்ன துன்பம் அடைந்தீர்களோ? என்று காலடியில் விழுந்து கிடந்து புலம்பி அழுதனர்.

நான் அதிஸ்டசாலி, என் பிள்ளைகள் எனக்கு கிடைத்து விட்டார்கள். இறைவா! நீ நன்மை செய்து விட்டாய், இவ்வளவு நாளும் விளக்கு ஏற்றாது விட்டேனே, இப்பொழுதே நான் படத்திற்கு விளக்கு ஏற்றப் போகிறேன், என்று அம்மா இருவரையும் தூக்கி விட்டாள். மூவருமாக விளக்கேற்றி வணங்கினர், பின்னர் உரையாடி மகிழ்ந்தனர், இடையிலே அம்மா, பிள்ளைகளே! உங்களுக்கு மலையில் சஞ்சீவி இலை கிடைத்ததா? என்று கேட்டார்.

கிடைத்தது அம்மா, பன்னிரெண்டு ஆண்டுகள் ஆகிவிட்டதே, அது காய்ந்து கருகி கருவாடாகிப் போய் இருக்கும், என்று சொல்லிக் கொண்டே குமார் மூட்டையை எடுத்துவந்து கட்டை அவிழ்த்துப் பார்த்தான். அதன் உள்ளே இலைகளைக் காணவில்லை. மூட்டையின் உள்ளே புதிய ஒளிவீசியது கண்களைத் துடைத்துக் கொண்டு தம்பி இங்கே பார், இவையெல்லாம் இதற்குள் எப்படி வந்தன? எல்லாமே புதுமையாக உள்ளதே, என்று அழைத்தான். சுதா மூட்டையயை உற்றுப் பார்த்தான் அதன் உள்ளே விலையுயர்ந்த இரத்தினக் கற்களும் முத்துக்களும், பொன்னும், மணியும், இவர்களைப் பார்த்து கண்களைச் சிமிட்டின. இவை எங்கிருந்து வந்தது? இந்த மூட்டை தானே நாம் பிடுங்கி வைத்த மூட்டை? இது என்ன அதிசயம்! என்றான் தம்பி.

எல்லாம் தேவதைகளுடைய வேலைதான், அவர்கள் தானே மூட்டையைத் தலையில் வைத்து விட்டவர்கள், இதை அவர்கள் வைத்து இருக்கிறார்கள், அண்ணன் சொன்னான். அம்மா! இனிமேல் உங்களுக்கு ஒருகுறையும் இல்லையம்மா, எங்களுக்கும் வறுமை வராதம்மா, இனி ஒருபொழுதும் நாங்கள் உங்களை விட்டுப் பிரிய மாட்டோம், என்று தம்பி வாக்குறுதியளித்தான்.

அம்மாவிடம் பொன்னும் பொருளும் குவிந்து விட்டது, இவை விற்றுப் பிழைக்க வேண்டிய நிலை மாறிவிட்டது, காணாமற் போன பிள்ளைகளும் சுகமாகத் திரும்பி வந்து விட்டனர், வறுமை தீர்ந்துவிட்டது, எல்லோரும் இன்புற்று, பலருக்கு உதவி செய்து, இன்பமுடன் வாழ்ந்தனர். இவையெல்லாம் கிடைத்து விட்டது, அப்பா கிடைக்கவில்லையே? அப்பாவும் எம்மைப்போல் திரும்ப வருவாராம்மா? இது பிள்ளைகள் கூற்று, எதுவும் அறியாத பார்வதியம்மாள் அதையும் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறாள். இப்போ அம்மா சந்தோசமாக வாழ்கின்றாள். இது புதிய உலகிற்கு சென்றமையினால் ஏற்பட்ட வளமான வாழ்வு. அத்தேவதைகட்கு இனி எப்படி நன்றி சொல்லப் போகின்றோம், என்றான் தம்பி. அம்மா, அப்பாவைக் காத்திருப்பது போலத்தான் நாம் இனி தேவதைகளைச் சந்திப்பதும், இது எப்போ செய்த புண்ணியமோ? யார் செய்த புண்ணியமோ? இருளின் பின்தானே ஒளி பிறக்கிறது, இதுவும் எத்தனை நாட்களுக்கோ? என்று நெட்டுயிர்த்தான் அண்ணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாய் பிறப்போம்

முல்லைக் கொடியில் மலர் போல - அதில்
முத்தாய் சிரிக்கும் திருநாளாம்.
சொல்லைத் தேனில் குழைத்தது போல
சொர்க்கம் பார்க்கிற ஒளிநாளாம்.

பிள்ளை பெண்டிர் அனைவருடன்
பிரியம் காட்டி உடையுடுத்து
தொல்லை மறந்திடும் திருநாளாம் - இதில்
தோழமை மறந்திடல் கூடாதாம்.

அள்ள அள்ளவே குறையாமல்
அன்பை இனிப்பென பரிமாறி
உள்ளம் கலந்திடும் பொன்நாளாம் - புது
உலகம் பிறப்பது இந்நாளாம்.

எல்லாம் ஒருவர் என எண்ணி - அதில்
எங்கும் நிறையும் ஒளிபோல
புரியா உளங்களின் உணர்வினிலே - நாம்
புதிராய் இருப்பது புரிந்திடுமோ.

கண்கள் இரண்டும் பல காணும் - அதில்
கனவுகள் தோன்றி மறைந்துவிடும்
கற்பனை உலகில் மிதந்திடும் நாம் - நல்ல
கனவுகள் காண்பதில் கவி பிறக்கும்.

பொல்லா செயலை மறப்போமே-இனி
புதிதாய் வந்து பிறப்போமே
பொல்லா நீசரை அழிப்போமே - நாம்
புதிதாய் வாழ்வை அமைப்போமே

**திரு. நா. பாலசிவராம்**
ஆசிரியர்
இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா

***செய்யத் தெரிந்தவன் சாதிக்கின்றான்***
***செயலை அறிந்தவன் போதிக்கின்றான்***
***செய்ய முடியாதவன் குற்றம் காண்கின்றான்***

**- ஜோர்ஜ் பேர்னாட்சா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழி! வாழி!

அழகொரு வளம் சேர்ந்த பிரதேசத்தில்
அருமையாய் பசுஞ்சோலை சூழிடத்தில்
நறுமணக் கல்வியொளி ஊட்டி நிற்கும்
நல்ல வித்தியாலயமே நாளும் வாழி!

இங்கிதமாய் வாழ வழி சொல்லி நிற்பாய்
இனிய கல்வி ஒளியோடு உடற்பயிற்சி
இனிமையுடன் எமக்களித்து உயர்ந்து நிற்பாய்
இணையில்லா இமயம் எனச் சிறந்து வாழி!

ஒற்றுமையே உயர்வென்று எமக்குச் சொல்லி
வேற்றுமையை நாம் மறக்கப் பாடம் சொன்னாய்
நற்குணங்கள் நாம் பெற்று நலமே வாழ
நாளும் வழிகாட்டும் தெய்வம் வாழி!

உன் நிழலில் நாமிருந்து கற்பதாலே
உத்தமராய் பூமி தனில் வாழ்வோம் உண்மை
சத்தியமாய் உன் பணியை நாம் மறவோம்
நித்தியமாய் வித்தியாலயமே வாழி!

**கி. கிருஷ்ணி**
**தரம் - 11.**

# கணிப் பொறி

கணினி பாரு கண்ணாலே - இது
கணிதம் போடும் தன்னாலே
சில நொடிக்குள்ளே செய்திடுமாம் - இது
சிறந்த அறிவியல் சாதனமாம்

வரவும் செலவும் சரிபார்க்கும் - இது
வாயில்லாமல் விடை சேர்க்கும்
கையும் காலும் இல்லாமல் - இது
கடிதில் விரைந்து வினையாற்றும்

வளர்ந்த நாட்டார் இதனாலே
வளங்கள் ஏற்றம் காண்கின்றார்
பிள்ளைப் பருவம் நாள் தொட்டே - இதைப்
பயின்று பயனைப் பெறுவோமே

இன்னும் இன்னும் நாங்கள்
பலவிதத்தில் கற்று நாம்
ஓர் காவியம் பாடுவோம்.

**வே. சுசிதா**
**தரம் - 11.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கை வளம்

பொன்போன்ற நெல் வயல்கள்
பூமி எங்கும் குலுங்குகிறது
வயலோரம் எங்கணுமே
வசந்த மழை பொழிகிறது

அலை அலையாய் கடலலைகள்
அசைந்தாடி வருகிறது
வான் முகில்கள் அதைப் பார்த்து
வட்டமிட்டு சிரிக்கிறது.

மயிலினங்கள் தமை மறந்து
தோகை விரித்தாடுறது
மானிடங்கள் அதை ரசித்து
உளம் மகிழ்ந்து கொள்கிறது.

காற்று வெளி உடல் குளிர
வந்து வீசிப்போகிறது
வான் வெளிகள் எங்கணுமே
நட்சத்திரம் குலுங்கிறது

இயற்கையுடன் சங்கமித்து
இளைப்பாறும் மானிடங்கள்
இன்புற்று தான் மகிழும்
இயற்கையான பூமியிது

கொட்டும் வெயிலென்ன
கோரப் பசியுமென்ன
எட்டி நட தங்கையே
எதிர்காலம் எம் கையில்

**சி. லினோசன்**

**தரம் - 10.**

## நடனம்

பாரதத்தில் உண்டான
பண்பான நடனமிது
பார் புகழ என்றும்
பயின்று வரும் நடனமிது
ஆடி வரும் மங்கையரும்
மனம் விரும்பியதை
மலரவைத்த மலர்க் கொத்து
மண்ணில் பூத்து
மரணிக்காத ஒரு
மகத்தான ஆடலிது
நடனமிது ஆடலிது
நங்கையரும் ஆடவரும்
ஆடி மகிழும் நடனமிது
அலாரிப்பு எனும் கோர்வையை
அழகாகக் கொண்டது இது
தேவ கன்னியர்களின் தெய்வக் கூத்து இது.
இந்தியாவில் பிறப்பெடுத்த
இனிய கலை வடிவம் இது
பரத முனிவரின் படைப்பு இது
அபிநயங்களோடு பின்னிப் பிணைந்தது இது
சப்தங்கள், வர்ணங்கள், ஜதீஸ்வரங்கள் என
உருவெடுக்கும் இனிய கூத்து இது
என்றென்றும் மறையாமல் வியாபிக்கும்
அதிசயக் கூத்து இது
அழியாமல் வாழும் பரதமே ........... நீ
புகழோடு மணம் வீசு ........................

**க. கஜபிரியா**

**தரம் - 11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவா........ இறைவா

இறைவா இறைவா
நீ பெரியன் - உன்
படைப்புக்கள் யாவும்
சிறப்பழகே
பசிய மரங்கள்
பசுந் தரைகள்
பச்சைக் கிளிகள்
பறவை வகை
காட்டில் வீட்டில்
விலங்குகளும்
அழகு அழகு பேரழகு
பூமியில் யாவும் தனியழகு
நாங்கள் வாழும் பூமியிலே
வாழும் மனிதர் பல வகையே
உந்தன் படைப்பில் மகிழ்கின்றேன்
உன்னைப் புகழ்ந்து பணிகின்றேன்
ஒரு மனமாகிப் பணிகின்றேன்.
உருகி உருகி வியக்கின்றேன்.

**வி. மதுஷாலினி**

**தரம் 7A**

# குறத்திப் பாடல்

மந்திரக் காரன்டி அம்மாடி - அவன்
மயக்க எண்ணமும் கொண்டாண்டி
தந்திரமாகவே என்னை அழைத்தாண்டி
தாலி கட்டும் படி சொன்னாண்டி

தேனும் தினைமாவும் தின்று கொழுத்தாண்டி
தேவியை வாவென்று கூவி அழைத்தாண்டி
வேங்கை மரமாய் நின்றாண்டி - அம்மா
வேடர்தனமெல்லாம் வென்றாண்டி

யானையை வாவென்று கூவி அழைத்தாண்டி
தானே போகும்படி சொன்னாண்டி
பச்சை மயிலேறி வந்தாண்டி - அம்மா
வள்ளியை மணம் செய்து கொண்டாண்டி.

**உ. அஸ்வினி**

**தரம் 4B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்னையென்னும் தெய்வம்

தித்திக்கும் மாங்கனியும் - சுவைமிகும்
தேன் கதலிப்பழமும்
நித்தம் இனித்திடுமோ - அன்னை மொழி
நின்று சுவைப்பது போல்

இன்னிசை மெல்லிசைகள் - தென்றலின்
இராக ஆலாபனைகள்
அன்னை தாலாட்டொதுக்கி - உயர்ந்திடும்
ஆற்றல் சிறந்தனவோ


முத்தமழை பொழியும் - ஆயிரம்
மோகன மான் விழி கொள்
பத்தினிகள் இணையோ அன்னையென்.
பாச அணைப்பது போல்

மஞ்சள் நிலாவழகும் - செந்தாமரை
மலரும் பொழுதழகும்
விஞ்சிடுமோ திருந்தாய் - சிந்துநல்
வெற்றித் திரு நகையை

அமுதச் சுவை பெருக்கும் - இந்த நல்
அகில நிலையுணர்வும்
குமுத வதனமொளிர் - தாய் தரு
கூழ்ச்சுவை மேலிடுமோ

தாயில் உயர்ந்ததெது? - மாபெரும்
தாரணி தாய்க்கடிமை
கோயிலின் தெய்வமவள் - என் மனக்
கோட்டை ஆட்சியவள்.

**திருமதி. ச. சிவபாலன்**
(ஆசிரியர்)



## கல்வி

கட்டிலில் வீழ்ந்து
கண்கள் மூடும்
நிசப்த இரவுகளிலும்
வருவது கல்வி அன்றோ
நினைவுகளே..............!
விழிகள் திறக்கும்
விடியல்களில் கூட
நினைவலையாய் வருவது
கல்வியின் கனவுகளே ......!
இதமான எதிர்காலத்துக்காய்
எத்தனையும் தியாகம் செய்து
கல்வி என்ற உன்னை
காப்பரணாய் பெற்றிடுவேன்
கல்வி என்னும் தாயே
கல்விச் செல்வமே என் இதய
சந்தங்களில் ஞாபகங்களாய்
அரங்கேற்று ...........!
கல்வி என்னும் கப்பலினுள்
கரைதேட இறங்கி விட்டேன்
கரைதேடி முடியும் வரை
இலட்சியத்துடன் காத்திருப்பேன்

**வ. கஸ்தூரி**

**தரம் - 11.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம் தேவை



விலங்கினங்கள் கானகத்தில் சுதந்திரமாய் வாழ
சிற்றெறும்பு கூட புற்றில் நிம்மதியாய் வாழும்
பாட்டிசைக்கும் குருவியினம் உலகு சுற்றி வாழும்
பாடி வந்து மரங்களிலும் மலைகளிலும் அமரும்
நாட்டினின்று நம்மவர்க்கு ஏதுரிமை உண்டு?
வாட்டமுடன் வாழுதலே மனிதருக்கிங்குண்டு
நாட்டமுடன் வேண்டி நின்றோம் நல்ல சமாதானம்

உலையிலிட்ட மெழுகெனவே உருகுகின்றார் மாந்தர்
கொலை கொள்ளை கற்பழிப்பு ஈனர்களின் தொல்லை
விலையில்லா உயிர்களெல்லாம் வீதிகளில் சாதல்
முறையன்று என்று நிதம் சொல்லி அழுகின்றார்
மிகையான கொடுமைகளும் சேர்ந்ததை எண்ணி
வழியறியா துழல்கின்றார் வாழ வழியின்றி
நிம்மதியே சந்நிதியாய் வாழ்ந்திடவே ஆசை
நிலைத்த சமாதானம் ஒன்றே எங்களது தேவை

**முருகுப்பிள்ளை மதுரா**

**தரம்** 6B

# பள்ளி செல்ல வாருங்கள் ....!



பள்ளி செல்ல வாருங்கள்
பாடம் நன்றாய் கற்றிடுவோம்
கள்ளமின்றிப் பாடத்தை
கனிவாய் நாமும் கற்றிடுவோம்.

எண்ணும் எழுத்தும் கற்றிடுவோம்
எழுதப் படிக்கக் கற்றிடுவோம்
தேர்ச்சி மிக்க பிள்ளைகளாய்
தேசம் போற்ற நடந்திடுவோம்.

குருவின் ஆசி பெற்றிடுவோம்
குணமாய் நாமும் நடந்திடுவோம்.
இறைவன் அருளை வேண்டிடுவோம்
இனிதாய் நாமும் வாழ்ந்திடுவோம்.

**ம.மதுர்சனன்**

**தரம்** 2A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LESSON FROM NATURE

*Attracted by the buds in bloom,*
*Bees Buzz.......... So quick no gloom,*
*Collecting nectar on flowers' tops.*
*Drops of dews on leaves tips*
*Early colorless marbles might,*
*Far away the moon bright,*
*Glittering like the stars at night;*
*High on the endless milky way;*
*Informing the message of future day.*
*Justify and predict the nature today.*
*Keep on crying the tears roll,*
*Lament of the nature's fall;*
*Man to be warned if not solved*
*Nature roars to future burst.*
*Obey to mother where we live,*
*Pleasant life we all believe.*
*quick think act and see,*
*Rush to the hungry people swiftly;*
*Spread the news and feed purity;*
*Turn the lives of disturbed human;*
*"Unity is strength" say to generation.*
*Vidily see a world in harmony!*
*Wait to see the swamp with honey.*
*"X" gene is there in every human*
*Yes no colour no creed in nation.*
*Z ............. Don't disturb the bees but,*
*Learn to be a bee.*

**English Literary Association**

## LOVE IN LIFE

*Feeling the smooth spring time,*
*On grandma's lap in free.*
*For our teacher's words we mime,*
*On ground in class in glee.*

*Reality brings the summer.*
*Report from school is fine,*
*With the blessings of the elders,*
*Praises and prizes are mine.*

*Courage presents fine Autumn*
*With stethos and tie I'm seated,*
*But I miss the Kiss of my mum,*
*Where fate has really cheated.*

*Winter forces me in deck chair,*
*Care the grandchild, my future bud.*
*Peaceful memories of my elders*
*Oh! anxious to see near God.*

**By. Y. Harirhaam**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TEACHER'S CHILD

*Three decades ago I was a child,*
*But in my home now two I have,*
*I have so many on my way,*
*Greeting happily all the day.*

*In my school, I am cool.*
*Smart and sweet in uniform*
*"Welcome to Class" I hear the call,*
*Willing to learn the lesson inform.*

*We all are children in hands of God,*
*So don't learn to croak like toad,*
*'We share and care' the child wrote*
*See the dawn of success what we*
*- taught*


## SCHOOL

*Chirp of children in cheerful mood*
*Charmed by the childish look,*
*-your food*
*Think of cherry the fruit down falls*
*Don't think of fear forget the tears*
*Mould and make with all your heart*
*cherish your life in School you start.*

*-A teacher's thought -*

Mrs.K.Yesotharan





## ஆடு கற்றுத் தந்த பாடம்

முன்னொரு காலத்தில கருங்காடு என்ற காட்டில், முனிவர் ஒருவர் வாழந்து வந்தார். அங்கு நிறைய மிருகங்கள் வசித்து வந்தன. அந்த இடத்தில் குடில் ஒன்ற அமைத்துத் தன்னை ஒரு மாமுனிவர் போல் காட்டிக் கொள்வார் அவர். மிகவும் மண்டைக்கனம் பிடித்தவர். தன்னை எல்லோரும் மதிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார். மொத்தத்தில் ஒரு போலிச் சாமியார் என்று சொன்னால் மிகையாகாது.

ஒரு நாள் ஆற்றில் குளிப்பதற்காக வேகமாகச் சென்று கொண்டிருந்தார். எதிரிலே ஆடு ஒன்று வந்தது. அந்த ஆட்டைக் கண்டதும் ஒதுங்கிச் செல்லாமல், திமிராக நடந்து வந்தார். மாமுனிவரான தன்னைக் கண்டு ஆடு ஒதுங்கிச் செல்லட்டும் என்று நினைத்தார். அப்போது ஆடு வேகமாக ஓடி வந்து, அவர் முன்னே குனிந்தது. உண்மையில் ஆடு அவரை முட்டித் தள்ளுவதற்காக குறி பார்த்துப் பாய்வதற்காகவே அப்படிச் செய்தது. ஆனால் முனிவரோ ஆடு தன்னுடைய வல்லமையைக் கண்டு பயந்து தன்னைப் பணிந்து வணங்குவதாக நினைத்துக் கொண்டார். உடனே ஆட்டைப் பார்த்து தன்னுடைய கைகளை உயர்த்தி, உனக்காவது என்னுடைய அருமை தெரிந்துள்ளதே பிழைத்துப் போ, என்று சொன்னார். சிறிது நேரத்தில் நிமிர்ந்த ஆடு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து முனிவரை முட்டித் தள்ளிவிட்டு ஓடியது. தலைகுப்புற விழுந்த முனிவருக்கு, அப்பொழுதுதான் ஆடு தன்னை முட்டுவதற்காக குறி பார்த்த விடயமே புரிந்தது. தன்னைப் பற்றிய மிதமிஞ்சிய பெருமைதான், இந்த உதைக்கு காரணம் என்பதை அறிந்தார் முனிவர். அத்துடன் தன்னுடைய மண்டைக் கனத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

**பே. லஜீத்**
**தரம் 3**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணனின் முட்டாள் தனமான மூளை

ஓர் ஊரில் அருணன் என்ற பணக்கார இளைஞன் வாழ்ந்து வந்தான். அவ்வூரில் உள்ள இளைஞர்களிற்குள்ளே தான்தான் அபார மூளையுடையவன் என்று பெருமையாகக் கூறிக் கொள்வான். மற்றவர்கள் அவனைக் குறைத்து மதிப்பிட்டால் அவனுக்குக் கோபம் வந்து விடும். உண்மையில் அருணன் அப்படியொன்றும் புத்திசாலியல்ல.

ஒரு நாள் அயலூரில் உள்ள கிருஷ்ணர் கோயிலில் நடக்கும் திருவிழாவிற்கு அருணன் புறப்பட்டுச் சென்றான். செல்லும் வழியில் ஓர் அடர்ந்த காடு இருந்தது. முன்னெச்சரிக்கையாக அருணன் பெரிய தடியொன்றை எடுத்துச் சென்றான். நடுக்காட்டை அவன் அடைந்த போது சில திருடர்கள் அவனை வழி மறித்தார்கள். அவனிடம் இருப்பதை தரும்படி மிரட்டினார்கள். ஆனால் அருணன் திருடர்களிற்குக் கொஞ்சமும் கூடப் பயப்படாமல பேசாமல் நின்றான். இதைக் கண்ட திருடர்களுக்குக் கோபம் வந்தது. உடனே அருணைத் தாக்க முற்பட்டார்கள்.

அருணன் கொண்டு வந்த பெரிய தடியால் அவர்களை எதிர்த்துச் சண்டையிட்டான். திருடர்களின் உடலில் காயம் ஏற்பட்டது. அருணனுக்குச் சில காயங்கள் மட்டுமே எற்பட்டது. திருடர்கள் நான்கைந்து பேர் நின்றதால் அருணனால் அதிகநேரம் எதிர்த்துச் சண்டைபோட முடியவில்லை. இறுதியில் திருடர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அருணனை மரத்தில் கட்டிப் போட்டனர். திருடர்களில் ஒருவன் அருணனைச் சோதனையிட்டு, அவனது இடுப்பில் இருந்த பணப்பையை எடுத்துக் பார்த்தான். அதற்குள் சில சில்லறை நாணயங்கள் மட்டுமே காணப்பட்டன. இதைக்கண்ட திருடன் சிரித்து விட்டு இதற்காகவா எங்களுடன் இவ்வளவு நேரம் சண்டை இட்டாய்? உனக்கு கொஞ்சமாவது மூளை இருக்கிறதா? என்று ஏளனமாகக் கேட்டான் அவன். திருடன் கூறியதைக் கேட்டதுதான் தாமதம். அருணனுக்கு கோபம் வந்து விட்டது. "யாரைப் பார்த்து மூளையிருக்கிறதா? என்று கேட்டாய்? எனக்கு அபார மூளை இருக்கிறது. நான் ஒன்றும் சில்லறைக் காசிற்காகச் சண்டை போடவில்லை. எனது தலைப்பாகையில் முடிந்து வைத்திருக்கும் ஆயிரம் ரூபாவைக் காப்பாற்றுவதற்காகவே சண்டைபோட்டேன்" என்று சொன்னான்.

உடனே திருடர்கள் அவன் தலையில் இருந்த தலைப்பாகையைக் கழற்றி, அதில் முடிந்து வைத்திருந்த ஆயிரம் ரூபாவை எடுத்துக் கொண்டு, நாமும் இதற்குத்தான் சண்டையிட்டோம் என்று கூறிக் கொண்டு திருடர்கள் சென்று விட்டார்கள்.

**பா. மாதங்கி**
**தரம் - 7A**

# தோமஸ் அல்வா எடிசன்

அமெரிக்காவில் பிறந்து உலகப் புகழ் பெற்ற ஒரு விஞ்ஞான மேதையே, தோமஸ் அல்வா எடிசன் என்பவராவார். மின் குமிழ்கள், கிராமபோன் ஒலிபெருக்கி, திரைப்படம் ஆகியவற்றையெல்லாம் எடிசன் கண்டுபிடித்தார். ஆனால் அவரோ ஒரு பிறவி ஏழை. பள்ளிக்கூடத்திலே சேர்ந்து படிப்பதற்குக் கூட வசதியில்லாததால் வீட்டிலே தன் தாயிடம் அரைகுறையாகக் கல்வி கற்று வந்தார். தோமஸ் அல்வா எடிசன் பிடிவாதகுணமும், விடாமுயற்சியும் கொண்டவர். ஓர் ஆய்வைத் தொடங்கிவிட்டால் அதன் முடிவைக் கண்டறியும்வரை ஓயமாட்டார். விஞ்ஞானிகளுக்கு இருக்கவேண்டிய தகுதிகள் எவை? என்று ஒரு சமயம் அவரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதில் பின்வருமாறு. "ஒரே நேரத்தில் நான் எந்த விடயத்தையும் கண்டுபிடித்ததில்லை" எனக் கூறியுள்ளார். எனவே எடிசனைப் போற்றுவோம்! வாழ்த்துவோம்!

**நா. குயிலினி**
**தரம் - 06.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதொரு நாள் மலர்கிறது

புதியதொரு நாள் என்னுங் குழந்தை பிறப்பதற்காக பிரசவ அறிகுறிகள் ஒவ்வொன்றாகத் தோன்றுகின்றன. முதலிலே சேவல்கள் களிப்புடன் சிறகுகளை அடித்து "செங்கதிரோனே. காரிருள் நீக்கி விரைந்து எழுக வருக" என்ற முறை வைத்து அழைப்பன போன்று கூவுகின்றன. சேவல்களின் பள்ளியெழுச்சிப்பாடலோடு காகங்கள் துயிலுணர்ந்து அங்குமிங்கும் பறந்து கரைகின்றன. கீழ்வான விளிம்பிலே தோன்றும் மெல்லிய வெளுப்பினை கண்ட பறவையினங்கள் பற்பல குரல்களில் ஒலி எழுப்புகின்றன. அதாவது தினகரனின் திருவுலாவுக்கு திசையனைத்துங் கட்டியம் கூறுவது போன்று பறவையினங்கள் பற்பல குரலில் இசை வாசிக்கின்றன.

இப்போது கிழக்குத்திசை வெளுக்கத் தொடங்குகின்றது. சில கணங்களில் வெளுக்கத் தொடங்கிய கீழ்த்திசையில் படர்ந்து இருந்த படர் முகில்களைக் களமாக்கி, அதிகாலை என்னும் நங்கை, பல பல வண்ணக் கோலங்களைத் தீட்டுகின்றாள். மஞ்சள், செம்மஞ்சள், பொன் வண்ணம், வெளிர் நீலம், கருநீலம் அப்பப்பா! எத்தனை எத்தனை வண்ணக் கலவைகள். சில கணங்களிலே அந்த வண்ணக் கோலமனைத்தும் கண்கவர் பொன்னிறமாய் மாறி அழிகின்றன. இப்போது கீழ் வான விளிம்பின் ஓரிடத்தல் தகதகக்கும்தங்கப் பிறையொன்று கண்களைக் கூசச் செய்கின்றது, பால சூரியன் உதயமாகிறான். ஒரு சில கணங்களில் அந்த தங்கப் பிறை வளர்ந்து முழு வட்டமாய்த் தோன்றுகின்றது. கீழ்வானிலே சுழலவிட்டதொரு தங்கத் தாம்பாளம் போன்று சூரியன் உதித்து வருகின்றான். நீலத் தோகை விரித்து நின்றாடும் பொன் வண்ண மயிலேறி வரும் முருகனே, இப்பால சூரியன் என்று எமது மனம் மயங்குகின்றது. கைதொழுகின்றது. காரிருள் கவிந்து எல்லாமே இருள் மயமாகி இருந்த உலகிலே, மெல்ல மெல்ல உருக்கள் தெரியத் தொடங்குகின்றன.

இப்போது சூரியன் சிறிது எழுந்து, வானமெனும் அரங்கிலே கூத்தாட வருகிறான். அந்தக் கூத்தைக் காண வீரும்புகிறீர்களா?

**"இரவிடை மதியமென்பான் ஆடிப்போய் மறையுமெல்லை**
**விரியிருள் எழிலின் நீக்கி விசும்பெனும் ஆங்கு தன்னில்**
**கனைகடல் முழவ மார்ப்பக் கதிரெனும் கைகள் விட்டித்து**
**எரிகதிர்க் கூத்தன் என்பான் ஆடுவான் எழுந்து போந்தான்"**

ஆமாம் வான அரங்கிலே இருள் எனுந் திரையை நீக்கி, கடல் ஒளி மத்தளமாய் இயம்ப, ஒளிக்கதிர்களை எங்குஞ் சுழற்றிக் கூத்தாடி வருகின்றான். வரும்போது பொங்கி வரும் பொன் ஒளிக் கதிர்கள் நாற்றிசையும் சிலிர்க்கின்றன. அதனால் அவன் பிடரிமயிர் சிலித்தெழும் சிங்கம் போலத் தோன்றுகின்றான். வானத்திலே எரியும் மங்காத தணற் பிழம்பாய்த் தோன்றுகின்றான். மாணிக்கக் குவியலாய் தோன்றுகின்றான். வானம் என்னும் தகழியில் ஏற்றி வைத்த பெருவிளக்காய்த் தோன்றுகின்றான்.

இப்போது கதிரவன் கடலின் மீது கதிர்களை வீசிக் கடுகி, வான்மிசை ஏறுகின்றான். உடலிலிருந்து தோன்றிய ஒவ்வொரு நுண்துளியையும் விழிகளாக்கி கதிரவனைப் பார்க்கின்றாள். வரவேற்று வணங்கி வேத கீதம் பாடுவது போல் ஒலிக்கிறது. இரவிலே வையத்தையும் வான் கடலையும் மூடியிருந்த அஞ்சனமை போன்ற அந்தகாரம், ஆதவன் வரவைக் கண்டதும் அதிசயக்கத்தக்க வகையில் ஓடி ஒளித்து விட்டதோ? அன்றேல் இறைவனுடன் உயிர் இரண்டறக் கலப்பது போல் ஒளி கலந்து விட்டதோ? என்று கூறுமாறு புதுப்பொலிவு அடைகின்றன. மரஞ்செடி கொடிகள் உயிர்பெற்று தென்றல் வருடக் கிளையெனுங் கரங்களை அசைத்து நடனமாடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலைகளோ புதுமைக் கோலம் பூண்டு, மெல்லிசை மீட்டுகின்றன. அந்த மரஞ்செடிகளிலேதான் எத்தனை எத்தனை வண்ண வண்ண மலர்கள். எத்தனை எத்தனை வடிவுடை மலர்கள். அவையெல்லாம் குழந்தைகளின் கள்ளங் கபடமற்ற சிரிப்பு போல, ஆதவன் உதயங்கண்டு புதுநகை புரிகின்றன. அப் புதுநகையில் மயங்கிய வண்டுகள் சுற்றியுஞ் சுழன்றும் முரலுகின்றன.

அப் புதுநகையில் மயங்கிய வண்டுகளைப் போல பொய்கையிலே செந்தாமரை மலர்கள் கணவனைக் கண்ட காரிகையர் போன்று முகஞ் சிவந்து மலர்ந்து வரவேற்கின்றன. பொய்கையிலுள்ள தாமரை இலையிலே ஒட்டியும் ஒட்டாமலும் நின்ற நீர்த்திவலைகள் கதிரவன் ஒளியால் பொன்மணிகளாகத் திகழ்கின்றன. சுருங்கக் கூறின் உலகனைத்தும் அழகின் சோதியாய் அழகுக்கொள்ளையாய் விளங்குகின்றன.

பகலவன் ஒளி பாரெங்கும் மெல்ல மெல்லப் பரவுகின்றது. இரவுத் தாயின் அணைப்பிலே இருட்போர்வையைப் போர்த்தி இன்துயில் கொண்ட மக்கள் மெல்லென எழுந்து புதியதொரு நாளின் மலர்ச்சியைக் கண் குளிரக் காண்கிறார்கள். அப்போது சூரியதேவன் வருகின்றான், சக்தி முதல்வன் வருகின்றான், "பாடுமின் பரவுமின்" என்பன போல் கோவில்களில் மணியொலி இன்பநாதமாய் கேட்கிறது. இவ்வினிய கண்கவர் காட்சியைப் புகழேந்திப் புலவர்

**"பூசுரர் தங் கைம்மலரும் பிங்குமுதம் முகிழ்ப**

**காசினியும் தாமரையும் கண் விழிப்ப"**

என்று கூம்புவன இரண்டு, விழிப்பன இரண்டு என அழகு ஒழுகக் காட்டுகிறார். அதோ! அந்த வீட்டைப் பாருங்கள் அங்கே இல்லாள் ஒருத்தி அதிகாலையில் எழுந்து முன்றில் பெருக்கி, காலைக்கடன் முடித்து, நீராடி நீறணிந்து, திலகமிட்டு இலக்குமி போல் நிற்கிறாள். கணவனையும் பிள்ளைகளையும் எழுப்பி, அவரவர் கடமைகளைச் செய்யும்படி அன்புக் கட்டளையிடுகிறாள். அப்போது தொழுவத்தில் நிற்கும் வெள்ளைப்பசு "அம்மா" என குரல் எழுப்புகிறது. அந்த அம்மா ஒலி இல்லாளையும் தன் கன்றையும் ஒரு சேர அழைக்கும் அன்பொலி. உடனே அவள் பளபளக்கும் செம்புடன் பால் கறக்கச் செல்கிறாள். காலையுணவை ஆக்கி கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் பரிவுடன் பரிமாறினாள். பாலர் பள்ளி செல்ல, கணவன் தன் கடமைக்கு செல்கிறான். வயல்களில், தோட்டங்களில், பணிமனைகளில், கோயில்களில், வீதிகளில், கடைகளில் சன நடமாட்டம் கூடுகிறது. உலகம் உயிர் பெற்று இயங்கத் தொடங்குகிறது. இளங்காலைப் பொழுதும் மெல்ல மெல்ல முதிர்ச்சி பெறத் தொடங்குகிறது.

**வி. இராஜசிங்கம்**
**தரம் - 11.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவில் தோன்றிய ஆராய்ச்சி

மாமா உள்ளே வாருங்கள். இப்பொழுது முன்பு மாதிரி இல்லை. தற்போது எல்லாமே இலற்றோனிக் தான். நீங்கள் இங்கே இருந்து வேடிக்கையைப் பாருங்கள் என்றான். மருமகன் இரண்டு பட்டன்களை அழுத்தினான். உடனே மின்சாரம் உருவாக்கிய இரண்டு பேரில் ஒருவர் கையில் தேநீரும், சர்க்கரையும், மற்றவர் கையில் இனிப்புப் பண்டங்களும், உறைப்புப் பண்டங்களும் இரண்டு தட்டுக்களில் கொண்டு வந்து நீட்டினார்கள். "மாமா சாப்பிடுங்கள்" என்று மருமகன் கூற மாமா தன் மகளை அழைக்கும்படி கூறினார். அதற்கு மருமகன் "என் மனைவியுடன் கதைத்து மூன்று நாட்களாகிவிட்டது." என்றான்.

"என்ன விசேசம்" என்று கேட்க அதற்கு மருமகன் "எனது ஆராய்ச்சியில் சில விசயங்களை மனைவியிடம் கூற மறுத்தேன்" என்றார் "விசயத்தை சொல்லுங்கோ இலேசாகப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாமே என்றார் மாமா. அதற்கு "ஆராய்ச்சியில் தோல்வி வந்தால் சந்தோசம் இராது" என்று கூறினார் மருமகன். அம்மாவும் சண்டைபோட்டுக் கொண்டிருந்த காரணத்தை இரண்டு பிள்ளைகளும் எப்படியோ அறிந்து விட்டனர்.

அப்பா, அம்மாவுக்குத் தெரியாமல் அறையின் ஒர் அலுமாரியில் இரண்டு நிறத்தில் இரசாயன மருந்துகளை வைத்துப் பூட்டி இருந்தார். சிவப்பு நிற மருந்தைப் பூசினால் அந்த ஆள் பெருத்து வந்து ஆட்களை தின்று உலகத்தை அழித்துவிடுவான். பச்சை நிற மருந்தை பூசினால் சிறிய உருவமாக வந்து அழிந்து போகும். இதனால் தான் குடும்பத்தில் பிரச்சனை எழுந்தது.

இந்த விபரத்தை, ஒன்றும் அறியாத இரண்டு பிள்ளைகளும், தங்களின் வீட்டுத் தோட்டத்தில் இருந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் இலக்றோனிக் மனிதர்கள் இரண்டு பேரும் வீட்டில் ஒலியை எழுப்பினார்கள். அப்பொழுது வீட்டில் தாய் மட்டும்தான் இருந்தாள். "நீங்கள் யார்? ஏன் ஒலி எழுப்பினீர்கள்." என்று கேட்டாள். நாங்கள் இலக்றோனிக் மனிதர்கள் உங்கள் பிள்ளைகளுக்கு ஆபத்து வரப்போகிறது. எங்கள் முதலாளி அலுமாரியில் வைத்துப் பூட்டிய இரசாயன மருந்துகளைக் கொண்டுபோய் விளையாடுகிறார்கள். அவர்களைக் காப்பாற்றுங்கள் என்று கூறிவிட்டு மறைந்து விட்டனர். தாய் துடித்துப் போனாள். அதனால் தான் தன் கணவர் எனக்கே சொல்லவில்லை. உடனே கணவனை அழைத்து நடந்ததைக் கூறினாள்.

தகப்பனுக்கோ என்ன செய்வதென்றே தெரியவில்லை. தம்மக்களே நாட்டை அழிக்கப்போகிறார்கள் என்றபடி தோட்டத்துக்கு ஓடினார்கள். அங்கே பிள்ளைகளைக் காணவில்லை. ஆனால் பச்சை நிற மருந்து மட்டும் நிலத்தில் கொட்டப்பட்டுக் கிடந்தது. மற்ற மருந்தைக் காணவில்லை. அவர்கள் பிள்ளைகளை அழைத்தனர். நாங்கள் உங்கள் கால்களுக்கு கீழே நிற்கிறோம். எங்களைக் காப்பாற்றுங்கள் என்று அலறியபடி தகப்பனின் காற்சட்டைப் பொக்கற்றினுள் ஏறி ஒளித்தார்கள்.

காற்று பலமாக அடித்துக் கொண்டிருந்தது. "அந்தச் சிவப்பு மருந்து எங்கே?" என்று கேட்க அது தவறிவிட்டது. நாங்கள் காற்றில் பறந்து கொண்டிருக்கிறோம். எங்களை காப்பாற்றுங்கள் என்று அலறின. தாயும் தகப்பனும் வேகமாகப் பின் தொடர்ந்தனர். பிள்ளைகள் ஒரு வேப்பமரத்தடியில் சிக்குண்டு வேரடியில் கிடந்தனர். வேம்பு இலைகள் உதிர்ந்து அவர்களைத் தழுவியதால் அவர்களில் பூசப்பட்ட இராசயனம், வேப்பிலைகளால் உறிஞ்சப்பட்டு மீண்டும் சுய உருவம் அடைந்தார்கள்.

உடனே தாயும், தகப்பனும் பிள்ளைகளைக் கட்டியணைத்துக் கொண்டனர். வேம்பம் இலைகளில் இரசாயனத்தை அகற்றும் சக்தி உண்டென நினைத்துக் கொண்டு விழித்தனர்.

**இ. சத்தியரட்ணம்**

**தரம் 11.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோபல் பரிசு

கையில் கிடைத்த எல்லாத்தையும் தூக்கி எறிந்து கொண்டிருந்தான் ராஜேஸ். தூக்கியெறிந்தவை தானாக உடைந்தவை...........

ஏனையவை அங்கிருந்த கண்ணாடிப் பொருள்களின் மீது மோதி தானாக இரண்டுமாய் நொருங்கியும்.........

இது அவன் உடைப்பது போலவும், அவனைச் சார்ந்தவற்றை உடைப்பது போலவும் இருந்தது. கோபம் கொள்பவர் தாமும் உடைந்து மற்றவர்களையும் உடைக்கிறார்கள் என்பது தான் யதார்த்தம். ராஜேசின் கைகள் ஓய, வாய்வழியாக மனதில் இருந்தவை வந்து கொட்டின வக்கிரமா........ வார்த்தைகளாய்.......... என்ன தந்தவை?....... எதைக் கிழித்தவை? என்னைக் கண்டபின்தான் எல்லாம் கண்டவை. காதலித்தேன் என்ற குற்றத்திற்காக கட்டி அடித்தவை..... பரதேசிகள், விளக்குமாற்றிற்கு ஒரு குஞ்சம் போல பட்டப்படிப்பு வேறு சீ பிழைவிட்டிட்டன். இது இந்துவிற்கு ஒன்றும் புதிதல்ல அடிக்கடி நிகழ்வன. நேற்றைய பகல் வேலைக்கென போயிருந்த ராஜேஸ் இடையில் வந்திருந்தான். அவ்வேளை ........ கதவு தட்டும் சத்தம் கேட்டு இந்து கதவை திறக்காமலே ஹலோ யாரது? என்றாள் பயம் கொண்டவளாய். ஏய் நான் தான் கதவைத் திற! வேறு யாரு இவ்வேளை வாறது? அதட்டலாய் கணவன் குரல் கேட்டுத் திறந்த இந்து ஏனப்பா உங்களிடம் திறப்பு இருக்கிறது தானே என்றவளை, உனக்கென்ன வேலை படம்பார்க்கிறாயா குழப்பி விட்டேனாக்கும். என்னைவிட அது முக்கியம். நிறை மதுவில் குளறலாய் வார்த்தைகள் வந்தன. ராஜேசிடம் திறப்பு இருந்தது. அதை ஒழுங்காய் துவாரத்தினுள் போட்டு திறக்கும் தெளிவை இழந்திருந்த ரகசியத்தை ஒழிக்கவே இந்து மீது இந்த ஆவேசம்............... இன்று விடுமுறை என்பதால் பிள்ளைகள் கரன், துஷி வீட்டில் இருந்தனர். மீண்டும் நேற்றைய நெருடல்களை சமாளிக்க இன்று இப்படி ஒன்றைத் தேடி முன்னெடுத்தான். தான் கோபமாக கொதிப்போடு இருப்பதனை தலைமையாக........ வெளியில் போய் ஒரு ஐம்பது மார்க் உழைக்க தெரியவில்லை. பிள்ளை வளர்ப்பு சரியில்லை, மனைவிக்குரிய மனைமாட்சி இல்லை, மாய்ந்து போவதுதான். மகனையும் கூட்டிக்கொண்டு வெளியே போய்விடுவன். அப்ப தெரியும். பேசியவன் பேசியபடி இருக்க, இந்து எதுவுமே பேசவில்லை. யாரில் யாருக்கு இங்கே கோபம் வரவேண்டும் என்பதெல்லாம் மனுநீதிக்கு அப்பாற்பட்ட விடயம். ராஜேஸ் வீட்டில் இந்துவுக்கும் பிள்ளைகளுக்கும் பழக்கமான விடயமது. அடுத்த அறையிலிருந்து பிள்ளைகள் குரல் கேட்டது.

இந்து செவிகளைத் தீட்டினாள் அந்தப்பக்கமாக "அண்ணா நோபல் பரிசு ஏன் கொடுக்கினம்?" அது திறமைக்கு, குறிப்பிட்ட ஒன்றில் சிறப்பிருந்தால் கொடுப்பினம். அன்னை தெரேசாவிற்கு கிடைத்தது. அப்படி என்றால் இன்னும் கனபேருக்கு கொடுப்பினமா? ஓமோம் துஷி ஏன் கேட்கிறாய்? அப்ப எங்கடை அப்பாவுக்கு கிடைக்கும் என்றால் அதற்கு யாராம் கொடுப்பது? என்ற கரனைப் பார்த்து துஷி, தன்ரை அம்மாவும் அப்பாவும் போடும் சண்டைக்குத்தான் நோபல் பரிசு கொடுக்க வேண்டும். துஷியின் முதுகை தட்டியபடி கரன் பலத்துச் சிரித்தான். பொத்தண்ணா வாயை. கேட்கப் போகிறது. அதனையும் மிஞ்சி சிரித்த கரனின் வாயை துஷி பொத்தினாள். இவர்களின் உரையாடலில் இருந்தும் ஒன்றை உணர்ந்து கொண்டாள். உங்கள் பிரச்சனைகள் அவர்களுக்கு புரிகின்றது. அதன் தாக்கம் என்ன விளைச்சலைத் தருகின்றதோ. என்ற பயமும் தொட்டது. குழந்தைகள் கூர்மையோடு வாழ்கிறார்கள் என்ற இதமும் ஏற்பட்டது. ராஜேஸிற்குள் எத்தனை மனிதர்கள். அவனிடம் மெய்முகம் இல்லை. எனக்குத் தெரியும் என்று அவள் மனது பூத்திருக்கும் எல்லாமே பேரழகுதான். அதுதான் தேவைக்கும் மலர்ந்திருக்கும் மனதுக்கு எங்கே தெரியப் போகின்றது. வாலிபம் பளிங்குத் தரை பளபளப்பாய் கையில் நெய் நிறைந்த கிண்ணம் கால் தவறின் நெய் கொட்டும். தரையில் அடிக்கடி வரும் அவள் நண்பியின் கவி வரிகள். அவளும் அவள் கவிதையும். இந்துவுக்கொரு தெம்பு தரும். நேசமாய் நினைப்பாள் அந்நாளில் ராஜேஸ் மேலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்ப பிடிப்பும் தளர ஆரம்பித்தது. தன்மேல் ஒரு நல்லெண்ண மதிப்பை வளர்க்க இந்துவின் தாயாரை அண்மித்தான் ராஜேஸ். ஆண்களற்ற அந்த வீடு அவனுடைய உதவிக்காக அவ்வப்போது கடன் கொண்டது. தன் விருப்பத்தை இந்துவின் தாயார் ஈஸ்வரியிடம் சொன்னபோது ஈஸ்வரிக்கு இதில் விருப்பு இருந்தது. தாயாரின் கண்ணீர் இந்துவைக் கரைத்தது. கல்யாணம் நடந்தது. வீட்டிற்கொரு ஆண்வரவு. அந்த ராஜபந்தத்தோடு சில நாள் ராஜேஸ். அப்புறம் ஐரோப்பிய நாட்டிற்கு இந்துவோடு புலம்பெயர்ந்து வருடம் பத்து ஆயின.

வாழ்வு கொடுத்தேன் என்ற எண்ணமே முன் நின்றது அவனுக்கு. ஆண்களுக்கென வளர்ப்பு ஒன்று பெண்களுக்கென இன்னொன்று. இதை வளர்த்தெடுக்கும் சமூகத்தைப் பார்த்து நொந்தாள். இந்து மனம் நிறைய தன் தாயை மன்னித்தாள். ராஜேஸ் ஒரு கோழை என்பதைக் காலத்தாலும் வாழ்ந்து கொண்ட வாழ்விலும் கண்டு கொண்டாள். என் குழந்தைகளை எப்படி வளர்ப்பது இப்போது அவளுக்கு எழுபவை அவளின் சிந்தனையைக் கலைத்த துசி. அம்மா இண்டைக்குப் பார்க்குக்கு கூட்டிப் போவதாகச் சொன்னீங்க போவமா? அண்ணாவும் வாறியா? இல்ல நான் வரல்ல என்ற கரனை விட்டு ராஜேஸ் தூங்கப் போனதும் அரவமின்றி வெளிக்கிட்டுப் பார்க் பக்கம் போனார்கள். துசியைக் கண்டதும் அவளுடன் படிக்கும் கோபி கூட விளையாட ஓடி வந்தான். துசி நீ ஏன் தமிழ் வகுப்பிற்கு வரல்ல. இல்லை. வீட்டிலிருந்து சிறுவர் முற்றம் கேட்டனான். ஜோதி அன்ரி அம்மா சொல்லித்தந்த மொழி வடிவா சொல்லித் தந்தவா. சரி விளையாடுவம் வா. வீடு கட்டுவமா மணலில் நான் கட்டுறன் நீ சோறு கறி வை துசி சொன்னதும். துசி வீடு கட்டினாள். இருவருக்கும் சண்டை வந்தது. துசியை விளையாட மறுத்து இந்து வீட்டிற்கு வந்தாள். இப்போது இந்துவிற்கு இன்னொன்றும் விளங்கியது. வீட்டிற்கு வந்த துசி கரன் உன்னோடு கராத்தே பழக வருவன் அடிக்கிறவைக்கு திருப்பி அடிக்கவேணும்........ அம்மா மாதிரி அப்பாவிட்ட அடி வாங்கமாட்டன். சொன்னது கேட்ட ராஜேஸ் எங்க உலாத்தல் தாயும் மகளும். அவன் ஆண்பிள்ளை அடுப்படியில் ரொட்டி அடுக்கிறான். முறைப்போடு கேட்டான். இல்லையப்பா நான் விரும்பித்தான் அம்மா குழைத்து வைத்த மாவில் ரொட்டி போட்டன், கொஞ்சம் அம்மாவிற்கு உதவியாக.

கரன் ஏன் ராசா என்னோட பேசவில்லை, நேற்று முழுவதும். தனிப் பாசத்தைக் காட்டிய ராஜேஸ் கேட்ட போது, அதப்பா நீங்க அற்கோல் பாவித்திருந்தீங்க அப்ப நானும் பாவித்திருந்தால் தானே உங்கட கதையும் என்ர கதையும் தோதாக பொருந்தியிருக்கும் என்றான். நெருப்பள்ளிக் கொட்டினாற் போன்று உணர்வு ராஜேஸிற்கு. துசி கராத்தே, கரன், அற்கோல் மாறி மாறி பயம் தொட்டது. விழிப்போடு வளரும் வித்துக்கள். இந்துவோடு இதைக் கதைக்க கூச்சமாக இருந்தது. வேலையிருந்த வேளை பார்த்து வீட்டிற்கு போன் பண்ணினான். உனது வாரிசுகள் சரியான வழியில் தலை எடுக்கின்றனர். அன்றோடு அவர்கள் வீடு அமைதியான அலாதியான குடும்பமாகியது. இது சமூகத்திற்கு தேவை. ஆமாம் அந்த நோபல் பரிசு ........ அதில் ஒரு மாற்றம். அது யாருக்கு என்பது? என்னில் ஒரு மாற்றம் இந்து, கரனுக்கும் துசிக்கும் தான் இங்க நோபல் பரிசு ஏகமனதாக நிறைவேறியது.

**க. துஸ்யந்தி**

**தரம் 11.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னால் மறக்க முடியாத சம்பவம்

நான் ஒரு செல்லப்பிராணியை வளர்த்து வந்தேன். செல்லப்பிராணி என்றதும் கிளி, மைனா, பூனை, நாய் இவற்றைத் தான் கூறுவார்கள். ஆனால் என்னுடைய செல்லப்பிராணியோ அணில்க்குஞ்சு. எனக்கு ஐந்து வயதாக இருந்த பொழுது அண்ணாவும் நானும் ஒரு நாள் விளையாடிக் கொண்டிருந்தோம். எங்கள் முற்றத்தில் நின்ற வேப்பமரத்திலிருந்து அணில் கூடு கீழே விழுந்தது. கூட்டிலிருந்து அணில்க்குஞ்சு ஒன்று கீச், கீச் என்று கத்தியபடி தத்தித், தத்தி ஓடியது. பக்கத்தில் நின்ற நாய் ஒன்று அதைப் பிடிக்கப் போனது. அணில்க்குஞ்சு தத்தித் தத்தி என்னுடைய காலில் ஏறியது.

நான் அதனை கைகளில் தூக்கினேன். பஞ்சுபோன்ற அதனுடைய மென்மையான மேனி என்னைக் கவர்ந்தது. நான் தடவிக் கொடுத்தேன். கீழே விட்டால் நாய் பிடித்து விடும் என்ற அச்சத்தால், அண்ணாவும், நானும் மாறி மாறி கைகளில் வைத்திருந்தோம். எங்கள் அம்மா அதனைக் கீழே விடுங்கள். அது தன் அம்மாவிடம் போகட்டும் என்று கூறினார். அணில்க்குஞ்சோ கீழே விட்டதும் ஓடி வந்து எனது சட்டையில் ஒட்டிக் கொண்டது.அன்றிரவு எனக்குப் பக்கத்தில் படுத்து உறங்கியது. காலையில் எழுந்தவுடன் ஓடி வந்து எனது தோளில் ஏறி விளையாடியது. நாட்கள் உருண்டோடின. அணில்க்குஞ்சு இப்பொழுது எங்களில் ஒருவராகி விட்டது. அண்ணாவும், நானும் செல்லமாக நிலான் என்று பெயர் வைத்தோம். நிலானின் உணவாக பலாப்பழம், கொய்யாப்பழம், தானியவகை என்பவற்றைக் கொடுத்தோம். பகல் முழுவதும் எங்களுடைய தலையிலும், கைகளிலும் தோள் மீதும் மாறிமாறி ஏறி விளையாடும். இரவாகியதும் எங்களது அறைக்குள் அம்மா மடித்து வைத்திருக்கும் உடுப்புப் பெட்டிக்குள் படுத்துறங்கும்.

ஒருநாள் கூட விளையாட்டுக்கேனும் உடுப்புகளை வெட்டியது கிடையாது. அண்ணாவும் நானும் நித்திரை விட்டெழுமுன், நிலான் எழுந்து ஓடிவந்து எங்கள் மீது ஏறி எங்களை எழுப்பும். ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு எமது உறவினரான தாத்தா ஒருவர் வந்திருந்தார். அவருக்கு நிலான் எங்கள் வீட்டில் இருப்பது தெரியாது. அவர் வந்திருந்தபோது இருட்டிவிட்டது. எங்களுடன் கொஞ்ச நேரம் கதைத்துக் கொண்டிருந்து விட்டு எல்லோருமாக இரவு நித்திரைக்குப் போய்விட்டோம். எங்களுககு முன்பே தாத்தா எழுந்து விட்டார். தன்னுடைய உடுப்புப் பையை நிலான் படுத்துறங்கும் பெட்டிக்குப் பக்கத்தில் வைத்திருந்த படியால் அதனை எடுக்கப் போன தாத்தா உடுப்புக்களுக்கு நடுவில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த நிலானைக் கண்டதும் சனியனே பிள்ளைகளின் சட்டைகளை நாசமாக்கி விட்டாயா? என்றபடி நிலானின் பட்டுடலில் கையினால் குத்தினார். நிலானின் உயிர் போய்விட்டது. அம்மா நித்திரை விட்டெழுந்ததும், தாத்தா அம்மாவிடம் தனது வீரசாகசத்தை பறைசாற்றினார்.

பிள்ளை, உடுப்புப் பெட்டிக்குள் அணில் ஒன்று இருந்தது. நல்ல காலம் உடுப்புக்களை வெட்டவில்லை. நான் கண்ட படியால் அடித்து எறிந்து விட்டேன் என்றார். அம்மாவிற்கு தலை சுற்றியது. படாரென அம்மா மயங்கி விழுந்து விட்டார். தாத்தா போட்ட சத்தத்தில் அப்பாவும், அண்ணாவும், நானும் எழும்பி ஓடினோம். அம்மாவைத் தூக்கி தண்ணீர் தெளித்த போது மயக்கம் தெளிந்து எழும்பிய அம்மா நிலான் எங்களை விட்டுச் சென்ற சோகச் செய்தியை அப்பாவிடம் கூறினார். அன்று முழுவதும் எல்லோருமே நடைப்பிணங்களாகவே உலாவினோம். அண்ணாவிற்கும், எனக்கும் ஒருவராலும் ஆறுதல் சொல்ல முடியவில்லை. அப்பா அண்ணாவையும், என்னையும் தடவிக் கொடுத்து கவலைப்படாதீர்கள். எங்களது கிணற்றுக்கருகில் கிடங்கு வெட்டி நிலானை அதனுள் வைப்போம். மேலே தேசிக்கன்று ஒன்றை வைப்போம். தேசி மரம் தழைத்தால் உயிருடன் நிலான் இருக்கின்றான் என்று அர்த்தம் என்றார்.

தேசிக்கன்றை நட்டு ஒவ்வொரு நாளும் நீருற்றினோம். நாட்கள் செல்ல தேசிக்கன்றும் பெரிய மரமாகிவிட்டது, ஆனால் நிலான் எங்களிடம் வரவேயில்லை. அந்தத் தேசிமரத்தைப் பார்க்கும்போதெல்லாம் நிலானின் நினைவு எங்களை வாட்டி வதைக்கிறது.

**பா. லாவண்யா**
**தரம் - 08.**

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி.சூ.சிவதேசினி
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை

உரையாடல்

# பிராணிகளிடம் மனிதன் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் நிறையவுள்ளன.

காடு ஒன்றில் வீட்டுத் தேவைக்காக மரம் வெட்டப் போனவர்களாகிய மாமாவும் வேலுவும் ஒரு மரத்தின் கீழ் களைப்பாறுகின்றனர். சிறிது நேரத்தில் திடீரென அம்மரத்தை அண்ணாந்து பார்த்த வேலுவிற்கு பல சந்தேகங்கள் எழுகின்றன.

**வேலு** : மாமா இவ்வளவு பெரிய காடு இப்படி பெரிய காட்டிற்கு நான் ஒரு போதும் வந்ததில்லை. வானத்தை பார்க்க முடியாதளவிற்கு குடை பிடித்து நிற்கிறது. பார்த்தீர்களா? என்ன அழகு!

**மாமா** : இயற்கை ஒரு தனியழகு இப்ப அது தெரிகிறது அல்லவா?

**வேலு** : ஆமாம் மாமா. அதோ இந்த மரத்தில் எண்ணிக்கையற்ற எவ்வளவு பறவைகள் இருக்கின்றன பார்த்தீர்களா?

**மாமா** : பார்த்தேன் இப்ப அதற்கென்ன?

**வேலு** : இல்லை மாமா, அப்பறவைகளைப் பாரத்தவுடன் எனக்கொரு யோசனை தோன்றுகிறது. எவ்வளவு ஒற்றுமையாக உல்லாசமாக மகிழ்ச்சியாக இருக்கின்றன. பறைவகளுக்குள்ள சுதந்திரம் போல் உலகில் எந்த ஒரு உயிரினத்திற்கும் இல்லை அப்படித்தானே மாமா?

**மாமா** : இந்தப் பறவைகளின் ஒற்றுமையைப்பார்த்தவுடன் சண்டையும் சச்சரவும் மனக் குழப்பமுமாக அல்லல்படுகிற மனித இனம் திருந்த வேண்டும். அது மாத்திரமன்று பறவைகள் உல்லாசமாக சுதந்திரமாக வாழ்வதைப் போல் வாழப்பழக வேண்டும். அதற்கான வழிவகைகளை எற்படுத்திக் கொள்ள வேண்டும். உழைக்க வேண்டும். மனிதனுக்குரிய பொறாமை எரிச்சல், பழிவாங்கும் மனப்பாங்கு, அடுத்தவருக்கு தொந்தரவு கொடுத்தல் போன்ற இன்னோரன்ன பழக்கவழக்கங்களை கைவிட்டு வான வீதியில் உலாவரும் பறவைகள் சந்தோசமான பூமியில் நடமாட வேண்டும்.

**வேலு** : மாமா உங்களுக்குத் தெரியுமா அன்றில் என ஒரு பறவை இருக்கிறதாம். அதுதன் சோடிப்பறவை மீது மிகுந்த அன்பு கொண்டதாம் அது உண்மையா மாமா?

**மாமா** : ஆமாம் பறவைகளிடம் மனிதர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் நிறையவிருக்கின்றன. அன்றில் எனும் பறவை அன்புக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. தனது சோடிப் பறவைக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்து உயிர் போய்விட்டால் மற்ற அன்றில் இறந்துவிடுமாம். அந்தளவு அன்பு கொண்ட பறவை என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை. அன்றில் பறவையிடம் இருந்து அன்பில்லா மனித உயிர் அன்பினைக் கற்றுக் கொள்ள முடியுமல்லவா?

**வேலு** : ஓம் .......... ஓம்............. நிச்சயமாக முடியும்.

**மாமா** : அடுத்து சில பறவைகள் உணவு தேடச் செல்லும் ஒழுங்கு உணவு உண்ணும் முறை கொடுத்து உண்ணும் மனப்பாங்கு போன்ற விடயங்களை கவனித்தால் பறவைகளிடமிருந்து பல அம்சங்களை மனிதர்கள் கற்றுக்கொள்ள வேண்டி இருக்கின்றது.

**வேலு** : இந்த நற்பழக்க வழக்கங்கள் பறவைகளிடம் மட்டுமா இருக்கின்றது.?

**மாமா** : யார் சொன்னது மிருகங்களிடமும் இருக்கின்றது. ஊர்வனவற்றில் எறும்பு போன்ற உயிரினங்களிடமும் இருக்கின்றது. எறும்பு எப்போதும் வரிசையாக செல்லும். கடின உழைப்பு மிக்க ஓர் உயிரினம். மாரிகாலத்திற்குத் தேவையான உணவை கோடை காலத்திலேயே சேர்த்துவிடும். எனவேதான் உழைப்பு, ஒழுங்கு, முயற்சி, சுறுசுறுப்பு, சேமித்தல் முதலிய நற்பழக்கவழக்கங்களை நாம் எறும்பிடம் இருந்து கற்றுக்கொள்ள முடிகிறது.

**வேலு** : மிருகங்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே மாமா?

**மாமா** : அதுவா? இனம் பிரிந்த மான் போல என்பார்கள். மான் ஒரு போதும் தன் இனத்தை விட்டுப் பிரியாது எனவே நாமும் இனத்துடன் சேர்ந்து தமிழனுக்குள் ஆயிரம் பிரிவினையின்றி வாழ மான் இனத்திடம் கற்க வேண்டியுள்ளது அப்படித்தானே சரி சரி கதைத்தது போதும் மரத்தை வண்டியில் ஏற்றுவோம் வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பும் பெரியார்

ஈழநாடு பெற்றெடுத்த பெரியோர்களுள் சேர்.பொன். இராமநாதனும் ஒருவர். இவரே நான் விரும்பும் பெரியார். இவரது பெருமை சொல்லுதற்கு அரிது.

கல்வி அறிவு, மதிநுட்பம், பேச்சுத்திறன், சைவப்பற்று, உயர் குணங்கள் ஆகிய அரிய பண்புகளால் சிறந்து விளங்கினார். இவரால் நமது நாடும் பெருமை பெற்றது. இவர் யாழ் மாவட்டத்தில் மானிப்பாய் என்னும் இடத்தில் பிறந்தார். தமது கல்வியை கொழும்பு நகரில் கற்றார். கல்லூரிப் படிப்பில் சிறந்து விளங்கினார். சட்டநூற் கல்வி பெற்று நியாயவாதியானார். வழக்குப் பேசும்திறமையில் முன்னணியில் திகழ்ந்தார். இவரது வாதத்திறன் மக்களைப் பெரிதும் கவர்ந்தது. தமிழ் மக்களதும் பிற மக்களதும் மதிப்புக்கு உரியவரானார்.

இலங்கை ஆட்சி முறையில் பல்வேறு சீர்திருத்தங்களை ஏற்படுத்த விரும்பினார். சட்ட நிருபண சபையில் படித்த இலங்கை மக்களின் பிரதிநிதியாகப் பதவி வகித்தார். தன் சொல் வல்லமையாலும் மதிநுட்பத்தாலும் ஒப்பற்ற தலைவனாக விளங்கினார்.

இவர் தம் வாழ்நாள் முழுவதும் சைவ சமய வளர்ச்சிக்காகவும் தமிழ் இனத்தின் நல்வாழ்வுக்காகவும் அரும்பாடுபட்டார்.

யாழ்ப்பாணத் தமிழ் மாணவர்கள் கல்வியைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பெற வேண்டுமென விரும்பினார். இதன் பொருட்டு இரு கல்லூரிகளை நிறுவினார். தமிழ்ப் பெண்களின் கல்வி விருத்திக்காகச் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியை ஸ்தாபித்தார். அதே போன்று ஆண் பிள்ளைகள் கல்வி பயிலப் பரமேசுவராக் கல்லூரியை ஆரம்பித்தார். இக் கல்லூரியே பின்னர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமாக மாறியது.

கொழும்பு நகரில் கொட்டாஞ்சேனையில் பொன்னம்பலவாணேசுவரர் சிவாலயத்தை அமைத்தவரும் இவரே. இவர் தாபித்த கல்லூரிகளும் எழுப்பிய கோவில்களும் இவர் ஆற்றிய தொண்டுகளும் இன்றும் இவரை நினைவூட்டிய வண்ணம் உள்ளன. இவரது ஒப்பற்ற சேவைகளைப் பாராட்டி இவருக்குச் "சேர்" பட்டம் வழங்கப்பட்டது.

சேர் பொன் இராமநாதனின் உருவச் சிலை கொழும்பு மாநகரில் பழைய பாராளுமன்ற கட்டட முன்றலில் இன்றும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. அவரது நாமம் இலங்கை மக்கள்தம் மனதில் என்றும் நிலை பெற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை. எனவே நான் விரும்பும் பெரியாராக சேர். பொன். இராமநாதன் அவர்கள் என்மனதில் முதலிடமாக வீற்றிருக்கின்றார்.

**போ. சுஜீத்**

**தரம் 06.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வன் யசோ-ஹரிராம்
தரம் 07
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பள்ளி

# அரக்க அரண்மனை

அந்த நாள் மார்கழி 01 ஆம் திகதி எனக்குப் பொழுது போகவில்லை. என்ன செய்யலாம்? என்று எண்ணிக் கொண்டிருந்தேன். கதைப்புத்தகங்களை வாசிக்கலாம் என்று எண்ணினேன். ஆனால் நான் முன்பே அந்தப் புத்தகங்களை வாசித்து முடித்திருந்தேன். பின்னர் சோம்பல் மிகுதியால் போய்ப்படுத்தேன்.

பின்னர் நான் கண்விழித்தபோது நான் ஒரு அரண்மனையில் இருப்பது தெரிந்தது. முதலில் அதைப்பார்த்த எனக்கு அச்சமும் ஆச்சரியமும் ஏற்பட்டன. நான் ஏன் இங்கு வந்தேன்.? யார் என்னை இங்கே கூட்டிக் கொண்டு வந்தார்கள்? என்ன காரணத்துக்காக கூட்டிவந்தார்கள்? எனக்குள் பலகேள்விகள் எழுந்தன.

திடீர் என்று ஒரு ஒளிவெள்ளம் என்மீது பாய்ந்தது. உடனே நான் அதிர்ச்சி அடைந்தேன். இருதயம் திக்கென்று அடித்துக் கொண்டது. அப்போது ஒரு அரக்கன் என்முன் தோன்றினான். நான் தைரியத்தை வரவளைத்துக்கொண்டு " நீ யார் " எனக் கேட்டேன். அதற்கு அவன் என் இடத்துக்கே வந்து என்னை மிரட்டிப் பார்க்கிறாயா? என்று கோபமாகவும் உரத்த குரலிலும் கேட்டான். அவன் அப்படிப் பேசியது எனக்கு அச்சத்தை தந்தது. மீண்டும் அவன் தொடர்ந்து பேசினான். நாங்கள் மார்கழி மாதம் 4 ஆம் திகதி இந்த நாட்டிற்கு எதிராக போரிட்டு நாட்டைக் கைப்பற்றி அரக்கர்களே ஆளப்போகிறோம். அதற்காக நாம் மக்களை சிறைபிடித்து அரக்கர்களாக மாற்றினால் எமக்கு ஆள்பலம் அதிகரிக்கும். அதனால் நாம் நாட்டை எளிதாக கைப்பற்றிவிடலாம். நீயும் நாளை இரவு அரக்கனாக மாறப்போகிறாய். நாம் வாள் மட்டும் வைத்திருக்கிறோம் என்று நினைக்காதே. எங்களிடம் நவீனரக துப்பாக்கிகளும் நிறைய இருக்கின்றன, என்று கோபமாக பேசிவிட்டு மறைந்தான்.

எப்படியாவது இங்கிருந்து தப்பிவிட வேண்டும் என்று நினைத்தேன். என்னைப் பாதுகாக்க ஒரு அரக்கனை அனுப்பியிருந்தான். அவனுடைய பெயரை கேட்கவே பயமாக இருந்தது. அவனுடைய பெயர் பிடாரி. இவனை வைத்து காரியத்தை சாதிக்க வேண்டும் என்று நினைத்தேன். இந்த அரண்மனையை சுற்றி காட்டுமாறு அவனிடம் கேட்டேன். அதற்கு அவன் சம்மதித்தான். அரண்மனையில் உள்ள எல்லா இடங்களையும் எனக்கு காட்டினான். ஓர் இடத்தைப் பார்த்த எனக்கு அதிர்ச்சியும் ஆச்சரியமும் ஏற்பட்டன. அங்கே என்னைப் போன்ற பல மனிதர்கள் சிறைப்பட்டுக்கிடந்தார்கள்.

உடனே எனக்கு ஒரு தைரியம் வந்தது. எனக்கு பாதுகாப்பாக நின்றவனின் தாடையில் ஒரு அடி கொடுத்தேன். எதிர்பாராத அடி என்பதால் அவன் திகைத்தான். எனது இரண்டாவது அடியில் அவன் மயங்கினான். பின்னர் நான் அவனுடைய துப்பாக்கியுடன் விரைந்து செயல்பட்டேன். ஒவ்வொரு பெட்டிகளையும் திறந்து ஆராய்ந்து பார்த்தேன். ஒரு பெட்டியில் ஒரு திறப்பு இருந்தது. அதை எடுத்துக் கொண்டு சிறையடிக்கு ஓடினேன்.

நான் அடித்து வீழ்த்திய அரக்கன் அப்போதும் மயக்கத்திலே இருந்தான். உடனே நான் அந்த திறப்பால் சிறையைத் திறந்தேன். அங்கிருந்த மக்களை மீட்டேன் அதில் அரண்மனையில் காணாமல் போன எனது நண்பனும் இருந்தான். பின்னர் நாங்கள் அரண்மனையைச் சோதனை போட்டோம். ஒரு இடத்தில் நிறைய துப்பாக்கிகளும், தோட்டாக்களும் இருந்தன. உடனே எல்லோருக்கும் நான் ஒவ்வொரு துப்பாக்கிகளை கொடுத்தேன். "நாம் அரக்கர்களுடன் போரிடுவோம்" என்று கூறினேன். அவர்களும் "ஆம்" என்றார்கள்.

பின்னர் நாங்கள் எல்லோரும் அரக்கர்களுடன் போரிட்டோம். முடிவில் நாம் அரக்கர்களைத் தோற்கடித்தோம். இனி எவ்வாறு இந்த அரண்மனையை விட்டு வெளியேறுவதுஎன்று நினைத்தேன். எல்லோரும் ஒன்றாக சென்று கொண்டிருந்தோம். ஓர் இடத்தில் பெரிய பொத்தான் ஒன்று இருந்தது.

உடனே நான் அதை தொட்டுப்பார்த்தேன். திடீர் என்று நிலம் அதிர்ந்தது. எல்லோரும் உடனே பயந்தோம் சிறிது நேரத்தில் எங்களுக்கு முன்னே இருந்த சுவர் பிளவுபட்டது. நாங்கள் அதில் இருந்த பாதைவழியே சென்று ஒரு மரத்தை அடைந்தோம். அந்த மரத்திலே ஒரு பலகை காணப்பட்டது. அதில் வட்டக்கச்சி இல.250 என்று போடப்பட்டிருந்தது. உடனே நாங்கள் வேகமாக நடந்து வந்து எமது கிராமத்தை அடைந்தோம். அங்கே உள்ள ஒரு பொலிஸ் நிலையத்திற்குச் சென்று நடந்தவற்றை கூறினோம். உடனே பொலிஸ்காரர் என்னை பாராட்டினார். நான் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தேன். மற்றவர்கள் எனது நம்பிக்கையையும் வீரத்தையும் பாராட்டினார்கள்.

எனக்கு மார்கழி மாதம் 6ம் திகதி பாராட்டுவிழா என்று கூறினர். நான் மகிழ்ச்சியில் வெற்றி என்று கத்தினேன். அப்போது அம்மா எழும்படா 6.50 ஆகுது என்றார். அப்பொழுது தான் நான் கண்டது கனவு என்று புரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரம் தவறாமை

குறித்த கருமத்தை குறித்த நேரத்தில் செய்தலே நேரம் தவறாமை எனப்படும். நேரத்துக்கு ஏற்ப எங்களை இசைவுபடுத்திக் கொள்ளவேண்டும். வாழ்க்கையின் வெற்றிகள் யாவும் இந்த நல்ல பழக்கத்திலேயே தங்கியுள்ளன.

எமது வாழ்நாள் மிகவும் குறுகியது. "வேதநூற் பராயம் நூறு" என்று தொண்டரடிப் பொடியாழ்வார் என்னும் பெரியார் திருவாய் மலர்ந்துள்ளார். எனினும் நூற்றாண்டு வாழ்வோர் மிகச் சிலரே. சராசரி ஒருவன் அறுபது ஆண்டுகள் வாழ்பவன் என்று வைத்துக் கொண்டாலும், நித்திரை, நோய், பாலப்பருவம் என்று வாழ்க்கையின் பெரும் பகுதி கழிந்து விடுகின்றது. எனவே எமக்குக் கிடைத்தற்கரிய ஆயுட் காலத்தை நாம் பயனுள்ளதாய்க் கழித்தல் வேண்டும். இதற்குக் காலத்தின் அருமையை நாம் நன்கு உணர்ந்து, குறித்த நேரத்திற்கு குறித்த கடமையைப் புரிதல் வேண்டும். காலை எட்டு மணிக்குப் பாடசாலையில் மாணவன் இருத்தல் வேண்டும் என்றால் அவன் அதிகாலையில் ஆறு மணிக்காவது துயிலெழுவதை ஒழுங்காகக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால் அவன் சோம்பற் பட்டு ஏழு மணிக்கு எழுந்தால், காலைக்கடன்களைச் சரிவரச் செய்தல் இயலாது. எல்லாம் அரை குறையாகவே அவனால் செய்யப்படும். நேரத்திற்குப் பாடசாலையைச் சென்றடைதல் இயலாது. அதிபரின் தண்டனையிலிருந்து தப்பினாலும், தனது படிப்பிலே பின்தங்க நேரிடுவது தவிர்க்க முடியாததாகும். இங்கு மாணவனுக்கு ஏற்படும் இடையூறுகள் போலவே உழவர் தொழிலாளர் உத்தியோகத்தார் அவரவர் நிலைக்கு ஏற்ற இழப்புக்கள் ஏற்படும் என்பது திண்ணம். நேரந்தவறிச் செயலாற்றுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. இவற்றுள்ளே தலையாயது சோம்பல் ஆகும். சுறுசுறுப்பின்மையாலே பலர் காரியங்களைப் பின்போட்டுத் தம் வாழ்விலே பல இழப்புக்களை அடைகின்றனர். கடமையுணர்வின்மை, பொறுப்பின்மை, அறியாமை, எதிலும் அலட்சியப் போக்கு, அளவுக்கு மீறிய தன்னம்பிக்கை என்பனவும், நேரம் தவறிச் செயல் புரிவதற்கான பிற காரணங்கள் எனலாம். இத்தகைய தீய பழக்கங்கள் அவற்றை கடைப்பிடிப்பவர்களுக்கு மட்டுமே தீமையாகின்றன என்று கூறல் இயலாது. அவர்கள் அங்கம் வகிக்கும் சமூகமும், இனமும், நாடும் பாதிப்பிற்கு இலக்காவது உண்டு. எனவே நேரம் தவறுதல் என்பதை ஒரு சமூக நோயெனக்கொண்டு சமூகத்திலுள்ள யாவரும் அந்நோயைப் போக்குவதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

இலங்கையராகிய நாம் நேரந் தவறிச் செயல் புரிவதிலே முன்னணியில் இருந்து வருகின்றோம். பொதுக் கூட்டம் நடக்கும் நேரத்தை அறிவித்தலில் அச்சடிப்பதிலே கூட எமது நேரம் தவறும் போக்குப் புலப்படும். பி.ப. 6.00 மணியளவில் என்று அச்சடிக்கப்படுவதன் பொருள் ஆறு மணிக்கு தொடங்காது என்பது தானே? இந்நேரம் கூட்டத்தோடு சம்பந்தப்பட்ட பலருக்கும் பலவகையிலே சிரமங்கள் ஏற்படும் என்பதைக் கூட்ட நிர்வாகிகள் உணர்வதே இல்லை. பரீட்சைக்கு நேரந்தவறிச் செல்லல், புகைவண்டி நிலையத்திற்குப் பிந்திச் செல்லல், அவசிய கடமைகளுக்குப் பிந்துதல் என்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நேரந் தவறுதல் எமக்கு இயல்பாகி விட்டது. இதன் தீய விளைவுகளை எவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இனியாவது நேரந்தவறாமையின் நற் பயன்களை நாம் சிந்தித்து நடப்போம். அப்போதுதான் நாடு சிறக்கும். பொருளாதாரம் தொடக்கம் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா வகை முன்னேற்றங்களுக்கும் நேரந்தவறாமை அவசியம் என்று உணர்வோம்.

**" நன்றும் இன்றே செய்க "**

**செ. பிரசாந்தி**

**தரம் - 11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய வாழ்விற் சமயம்

சமயமானது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றது. இச்சமயமானது உலகின் பல பாகங்களிலும் பரந்து விளங்கியுள்ளது. மனிதர்கள் அறிவு விளக்கம் பெற்று உறுதி இன்ப வாழ்வு அடைவதற்குச் சாதகமாயுள்ளது. சமய நம்பிக்கை மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது. சமய நம்பிக்கையானது மனிதனின் வாழ்க்கையில் ஓர் உயர்ந்த குறிக்கோளை அளிக்கின்றது. வாழ்க்கைக்கு சமய நம்பிக்கை ஒரு பற்றுக் கோடாகவும் அமைந்துள்ளது.

சமயத்தில் விதிக்கப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு இசைவாக வாழ்வதே சமய வாழ்க்கையாகும். மக்களைச் செல்நெறிப்படுத்தச் சமயம் உறுதுணையாகிறது. சமயம் மனிதனது வாழ்க்கையை மாத்திரம் அன்றி முழுச் சமுதாயத்தின் வாழ்க்கையையும் நெறிப்படுத்துகின்றது.

சமயக் கோட்பாடுகளுக்கு அமைய மக்கள் தமது வாழக்கையை அமைத்துக் கொண்டால் சமுதாயம் உயர்வடையும். இதனால் நாடே உயர்வடைகின்றது. மனித தர்மத்தின் அர்த்தமுள்ள வாழ்க்கையை காண சமயங்களே வழித்துணையாக அமைந்துள்ளன. பணத்தினால் எதனையும் சாதிக்க முடியாது என்பது உண்மை. பொன்னும் பொருளும் வாழ்க்கையின் உறுதிப்பொருட்கள் அல்ல என உணருபவன் எவனோ அவனே சமயி ஆகின்றான். "சமயம் இன்றேல் வாழ்க்கை இல்லை வாழ்க்கை இன்றேல் சமயம் இல்லை" என்பதற்கிணங்கவே சமயமானது மக்களால் போதிக்கப்பட்டு வந்துள்ளது. மனிதன், பொருள் என்ற பொருளாதார தேட்டத்தையும், அருள் என்ற ஆத்மிகத் தேட்டத்தையும் அடைய முயற்சிக்கும் சமயங்கள் காலந்தோறும் துணை நிற்கின்றன.

அறம், பொருள், இன்பம், வீடு. ஆகிய நான்கு படிநிலைகளிலும் சமயம் வளர்ச்சி பெற்றுள்ளது. அறத்தின் வழியிலே சமயத்தை கற்று அல்லது தெரிந்து பொருளைத் தேடி அதனூடாகவே இன்பத்தை களிக்க வேண்டும். இதுதான் சமயங்களின் இலக்கு. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கைக்கும் சமயம் இன்றியமையாததாகக் கொள்ளப்படுகின்றது.

மனித வரலாற்றை ஒரு கணம் திருப்பிப் பார்க்க வேண்டும். புராதன கலாச்சாரங்களில் இருந்து இன்றுவரை, மனித இனம் வளர்ந்து வந்த பாதையைப் பார்த்தால், சமயம் எவ்வளவு தூரம் வாழ்க்கை ஓட்டங்களில் ஒவ்வொரு கணத்தையும் பாதித்துள்ளது என்பதை உணர முடியும். மனித வரலாற்றையும் வாழ்க்கையையும் விளங்கிக் கொள்ளச் சமயங்களை விளங்கிக் கொள்வது அவசியமானதாகும். இன்றைய உலகில் சமயம் தான் வாழ்க்கையை நிர்ணயிக்கின்றது. உலக நாடுகள் ஒவ்வொன்றினதும் கோட்பாடுகள், நம்பிக்கைகள் சமய தத்துவங்கள் உயிர் நாடியாகப் பின்னிப் பிணைந்துள்ளது.

மனித வரலாற்றை சமயத்தினூடாகவும் அறிந்து கொள்ளலாம் "பணம் பாதாளம் வரையும் பாயும்" என்பர். இன்று பொன் பொருள் என்று தேடல் முயற்சியில் ஈடுபடுபவர்கள் எல்லோரும் சரியான பாதையில் செல்வதில்லை. பண ஆசைதான் சகல பாவங்களுக்கும் காரணமாகும். மனிதனுடைய பொருளாசை பல நிலைகளில் அகக்கண்ணை மறைத்து விடுகின்றது. மதம் மக்களின் போதை எனக் கால்மாக்ஸ் குறிப்பிடுகின்றார்.

சமயம் என்பது வாழ்க்கை நெறி. மாணவர்கள் சமுதாயத்தில் சீராக வாழ்வதற்கு வழிகாட்டியாக அமைவது சமயமாகும். மாணவர்கள் மாணவப்பருவத்திலேயே அறிவையும் பயிற்சியையும் பெற்றுக் கொள்ள வேண்டும். மாணவர்கள் மனிதர்களாகச் சமுதாயத்தில் வாழ்வாங்கு வாழ சமூகக் கட்டுப்பாடுகள், சமூக விழுமியங்கள், பண்பாடுகள் என்பவற்றை உணர்ந்து சமூகத்துடன் பொருந்தி வாழ்வதற்கு சமயம் உதவுகின்றது என்றால் தவறாகாது.

**கு. றஜீகரன்**
**தரம் 11.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலது குறைந்தோரும் சமுதாயத்தின் அங்கத்தினரே!

*"அரியது கேட்கின் வரிவடிவேலோய்*
*அரிது அரிது மானிடராதல் அரிது*
*மானிடராயினும் கூன் குருடு செவிடு*
*பேடு நீங்கிப் பிறத்தலரிது"*

ஔவையாரின் பாடலின் ஒரு பகுதியேயாகும். ஓர் மானிடத்தின் அருமையையும் ஊனமற்ற பிறப்பின் சிறப்பையும் கூறும் பகுதி இது எனினும், கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறவாதோரும் உண்டு. சில இயற்கைக் காரணிகளாலும் நோய்களாலும் விபத்துக்களாலும் ஊழ்வினைப்பயனாலும் பல்லாயிரம் மக்கள் வலு இழந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் சாதாரண மனிதர்களிலும் பார்க்க ஏதோ ஒரு வகையில் வல்லமை குறைந்தவர்களாயினும் மற்றைய மனிதர்களைப் போலவே பசியும் தாகமும் உடையவர்கள். "மண்ணில் நல்லவண்ணம் வாழ வேண்டும்" எனும் வேட்கை உடையவர்கள். அவர்கள் சமுதாயத்தின் அங்கமாக பலவகை இன்னல்களுக்கு ஆள்ப்பட்டு வாழ்கிறார்கள்.

எங்கள் நாட்டில் இத்தகைய மக்கள் பலர் பொதுவிடங்களில் பல்லெல்லாம் தெரியக்காட்டி தெருவில் பிச்சையெடுத்து வாழ்கின்றனர். அவர்களைக் காணும் போது சீச்சீ என்போரும் போடா என விரட்டுவோரும் சிலர் தாம் வளர்க்கும் ஆடு, மாடு நாய் போன்ற பிராணிகளிலும் பார்க்க இழிந்த பொருளாக ஒதுக்குகின்றனர். சிலர் நெஞ்சில் ஈரமின்றி மனிதாபிமானமின்றி சில சதங்களை வீசி எறிகின்றனர்.. பொதுவாக சமுதாயம் வலது குறைந்தவர்களை மனிதர்களாகவே மதிப்பதில்லை. இவ்வாறு அவமதிக்கப்படும்போது அவர்கள் மனம் எவ்வாறு பாதிப்புறும் என்பதை எண்ணுவதில்லை. மனிதாபிமானம் மடிந்து விட்ட இந்த நிலைமை நம் நாட்டில் மாத்திரமன்றி உலக நாடுகள் அனைத்திலும் நாம் காணக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு உள்ளவர்களுக்கு இறைவன் விசித்திரமான இயல்புகளைப் படைத்துள்ளான். இவர்களுக்கு வேறு சில ஆற்றல்களைக் கூர்மையாக்கியுள்ளான். குருடர்களுக்கு கேள்விப் புலனும் ஞாபக சக்தியும் கூர்மை பெற்று விளங்குகின்றது. இதற்கு உதாரணமாக தமிழக இரட்டைப் புலவர்களான முதுகரியன், இளம்கரியன் என்போரைக் குறிப்பிடலாம். இதில் முதுகரியனுக்கு கண் குருடு. இளம் கரியனுக்கு கால் முடம். இவர்கள் இருவரும் தமிழில் பாண்டித்தியம் பெற்ற புலவர்கள் ஆவர். வேறு சிலர் இசை மேதைகளாகவும் கவிஞர்களாகவும் மிளிர்கின்றனர். அவ்வகையினில் எமது தாயகமான தமிழீழத்தினிலே பல பேர் இவ்வாறு வல்லவர்களாகவும், வெல்பவர்களாகவும் திகழ்கின்றனர். இதற்கு உதாரணமாக கண்பார்வையற்ற தமிழீழ பாடகியான "தவமலர்" அவர்களின் இசையில் உள்ள ஆற்றலையும் திறமையையும் எடுத்துக் கூறலாம்.

இவ்வாறு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் ஒவ்வொருவரிடமும் கூர்மை பெற்ற ஆற்றல்கள் மண்ணுள் மறைந்துள்ள மணி போல ஒளிந்திருக்கிறது அந்த ஆற்றலென்னும் மணியை வெளிக் கொணர்ந்து தூய்மை செய்து பட்டை தீட்டி விட்டால் அது கூர்மை பெற்று பிரகாசிக்கும். அவ்வாறு செய்தலே சமுதாயத்தின் தலையாய பணியாகும். இப் பணிகளில் தொண்டர் ஸ்தாபனங்களும், அரசும் ஆர்வம் காட்டுதல் என்பது மிகவும் அவசியமாகும். அவ்வகையினில் நாடெங்கும் இந் நிறுவனங்கள் இவர்களுக்கு உதவி செய்து கொள்கின்றன. இவ்வாறு தமிழீழம் எங்கும் ஊனமுற்றோர் புனர்வாழ்வு நிலையங்கள் அமைத்து சேவை ஆற்றுவதனைக் குறிப்பிடலாம். மேலும் அவர்களின் திறமைக்கு ஏற்ப வேலை வாய்ப்பினையும் பெற்றுக் கொடுக்கின்றன. இவ்வகையில் துர்ப்பாக்கியசாலிகள் என கருதப்பட்டோரான வலது குறைந்தோருக்குப் அறநிலையங்களும், அரசும் ஆதரவு காட்டுமானால் அவர்கள் சாதாரண மக்களைப் போன்று தன்மானத்தோடு தலை நிமிர்ந்து நிற்பர். சமுதாயத்திலே வேண்டப்படாத உறுப்பினராகக் கருதப்படார். விருப்பத்தக்க உறுப்பினராக எல்லோராலும் மதிக்கப்படுவர் என்பது திண்ணம்.

**மா. காயத்திரி**
**தரம் 11.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் பாடல்

கற்பனைத் திறனும் கவிதை நயமும் கலையுணர்வும் கொண்ட கிராம மக்களின் உள்ளத்திலே பற்பல காரணங்களால் உணர்வு தரும் கற்பனைகள் தோன்றிக் கரைபுரண்டு எழுகின்றன. அப்பொழுதுதான் அவை பாடல்களாக வெளிவருகின்றன. இவை கிராமத்து பாமர மக்களின் உள்ளத்து உணர்ச்சியையே உயிராகக் கொண்டு அமையப் பெற்றுள்ளன. நாட்டார் பாடல்கள் சமுதாயத்தின் மிக முக்கியதொரு கலையாகக் கொள்ளப்படுவதோடு, பண்பாட்டின் இசை வளர்ச்சிக்கும் மூலாதாரமாக அமைந்து காணப்படுகின்றது.

நாட்டார் பாடல்களை பல சந்தர்ப்பங்களில் உருவகித்துப் பாடுகின்றனர். இவை தொழிற்பாடல்கள் என்றும், காதல் பாடல்கள் என்றும், வேடிக்கைப் பாடல்கள் என்றும் பல வகைப்படும். இவற்றுள் காதல் பாட்டாக

**"எருக்கலம் பட்டிக்கு**
**எருவு கொண்டு போற தம்பி**
**மச்சானைக் கண்டால் - உன்னை**
**மயில் வரட்டாம் என்று சொல்லு"**

என்று கணவனிடம் கூறும்படி மனைவி கூறுகின்றாள். இது எவ்வகையிலே எளிமையும் இனிமையும் பொருந்தி உள்ளது என்பதை நாம் கண்டு கொள்ளலாம்.

